216835

தமிழ்நாடு

சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு

29. ஏப்ரல் 1997 தொகுதி 35

எண் 2.

©

வெளியீடு 30-4-98 Issued 30-4-98

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT


செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 29, 1997 – தொகுதி 35 – எண் 2

**Tuesday the 29th April, 1997 – Volume 35 – No. 2**

*...ப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

**[Price Rs. 3.00**

# உள்ளடக்கம்

## 29-4-1997


| | பக்கங்கள் |
|---|---|
| 1. *வினாக்கள்-விடைகள்—* | 145-**185** |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | |
| 2. *சிறப்புக் கவன ஈர்ப்பு—* | |
| (அ) கண்டமனூர் பகுதியில் தேவர் சிலை சேதமடைந்ததைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள பதட்ட நிலை | 186-198 |
| (ஆ) மதுரை வில்லாபுரத்தில் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தினர் நடத்திய ஊர்வலத்தின் போது பொதுமக்களின் சொத்துக்கள் சேதமடைந்தது | 198-204 |
| 3. **பத்தாவது சட்டமன்றப் பேரவை நடவடிக்கைக் குறிப்புகளில் சில நீக்கங்கள், மாற்றங்கள் மற்றும் திருத்தங்கள் செய்யக் கோரி உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன் மற்றும் திரு. பரிதி இளம்வழுதி கொடுத்த கடிதங்களின்மீது பேரவைத் தலைவரின் தீர்ப்பு—** | 205-227 |
| 4. *அறிக்கைகள் அளித்தல்—* | |
| (அ) மதிப்பீட்டுக் குழு | 227 |
| (ஆ) பொதுக் கணக்குக் குழு | 227-228 |
| (இ) பொது நிறுவனங்கள் குழு | 228 |
| (ஈ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு | 228 |
| (உ) மனுக்கள் குழு | 228 |

பக்கங்கள்

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) தமிழ்நாடு கட்டாயத் தொடக்கக் கல்வி (திருத்த) சட்டமுன்வடிவு, 1997. — 229

(ஆ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1997 — 230

(இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு, 1997 — 231

(ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1997 — 232

6. அறிவிப்புகள்—

(அ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1997 (ஆஇ.) — 229

(ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு, 1997 (ஆஇ.) — 231

(இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1997 (ஆஇ.) — 232

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 1997 மாண்புமிகு திரு. ஆலடி அருணா — 233-234

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 1997 மாண்புமிகு திரு. ஆலடி அருணா — 235-236

(இ) தமிழ்நாடு தொழிலியல் நகரியப் பகுதி மேம்பாட்டு அதிகார அமைப்புச் சட்டமுன்வடிவு, 1997 — 236-246

மாண்புமிகு திரு. ஆலடி அருணா — 237, 242-246

திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன் — 237-242

216835
சென்னை-600 009



பக்கங்கள்

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) நீக்கறவுச் சட்டமுன்வடிவு, 1997 — 247-248

மாண்புமிகு திரு. ஆலடி அருணா — 242-248

(உ) தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப் படுத்துதல் சட்டமுன்வடிவு, 1997 — 249-256

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் — 250-252, 256

திரு. வி. அய்யலுசாமி — 250

(ஊ) தமிழ்நாடு சித்த மருத்துவ முறை (மேம்படுத்துதல் மற்றும் மருத்துவத் தொழிலாற்றுநர்கள் பதிவு செய்து கொள்ளுதல்) சட்டமுன்வடிவு, 1997. — 256-266

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி — 257-259

திரு. ப. மோகன் கந்தசாமி — 260-261

*திரு. கே. தங்கமணி — 267-269

(எ) தமிழ்நாடு மின் இயங்கேணிகள் சட்டமுன்வடிவு, 1997 — 267-269

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி — 267-269

(ஏ) தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் (நீக்கறவு) சட்டமுன்வடிவு, 1997 — 269

மாண்புமிகு திரு. கோ.சி. மணி — 269, 270-271

திரு. ரா. ஈஸ்வரன் — 270

(ஐ) தமிழ்நாடு சென்னைப் பெருநகர்ப் பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1997 — 272-275

மாண்புமிகு திரு. கோ.சி. மணி — 272, 275

(ஒ) குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்த) சட்டமுன்வடிவு, 1997 — 275-277

மாண்புமிகு திரு. கோ.சி. மணி — 275, 277

| | பக்கங்கள் |
|---|---|
| 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி. | |
| (ஓ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1997 | 277-279 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 277-279 |
| (ஔ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1997 | 279-283 |
| மாண்புமிகு திரு. கே.என். நேரு | 279-280<br>281-282<br>283 |
| *திரு. நா. பெரியசாமி | 280 |
| 8. அரசினர் தீர்மானம்— | |
| விதி 30-(3)ன்கீழ் நிகழ்ச்சி நிரலில் மாற்றம் | 249 |
| 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 283-284 |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 16, ஈஸ்வர - திருவள்ளுவர் ஆண்டு 2028**

**1997 ஏப்ரல் 29, செவ்வாய்க்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி."

ஒரு பக்கம் சாய்ந்து விடாமல் நாணயமான தராசு முள் போல இருந்து நியாயம் கூறுவதுதான் உண்மையான நடுவுநிலைமை என்பதற்கு அழகாகும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 721, திரு. இ.ஜி. சுகவனம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**721—**

### குவாரி சுரங்கங்களைக் கட்டுப்படுத்துதல்

***3263—திரு. இ.ஜி. சுகவனம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை குவாரி சுரங்கங்கள் மீதான வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன?

(ஆ) இதனால் அரசுக்கு ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பு எவ்வளவு?

(இ) இந்தக் குவாரி சுரங்கங்கள் அனைத்தையும் அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வர திட்டம் ஏதும் உள்ளதா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் பெருங்கனிமங்களைப் பொறுத்தவரையில் 124 இனங்களிலும், சிறு கனிமங்களைப் பொறுத்தவரையில் 561 இனங்களிலும், ஆக மொத்தம் 685 கனிமச் சுரங்கங்களின் வழக்குகள் நீதிமன்ற நிலுவையில் உள்ளன.

(ஆ) இழப்பு ஏதும் இல்லை. இருப்பினும் மேலே கூறிய வழக்குகள் காரணமாக பெருங்கனிமங்களைப் பொறுத்தமட்டில் 3,13,72,378 ரூபாயும், சிறு கனிமங்களைப் பொறுத்தவரையில் 4,58,63,573 ரூபாயும், ஆக மொத்தம் 7,72,35,951 ரூபாய் வசூலிக்க வேண்டி நிலுவையில் உள்ளது.

(இ) இல்லை.

**திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியாளர்கள் தங்களுக்கு வேண்டியவர்கள் எல்லாம் இந்தக் குவாரி சுரங்கத்தின் மூலமாக சம்பாதிப்பதற்காக நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளை எல்லாம் விசாரிக்காமல் விட்டுவிட்டார்கள். அதனால் கடந்த காலங்களில் அவர்களுக்கு வேண்டியவர்கள் பல கோடி ரூபாயை லாபமாகச் சம்பாதித்தார்கள். அதனால் அரசுக்குப் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இதனால் சென்ற ஆட்சியாளர்களுக்கு வேண்டியவர்கள் லாபம் அடைந்தார்களே ஒழிய, அரசுக்குப் பேரிழப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே, இந்தக் குவாரி சுரங்கங்கள் சம்பந்தமாக ஒரு தனி நீதிமன்றம் அமைத்து விசாரணை செய்து, அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தால் அதன் மூலமாக பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு இலாபம் வருகின்ற நிலை ஏற்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொழில் துறையில் சிறந்த அதிகாரிகளையும், டாமின் நிறுவனத்தில் நேர்மையாளர்களையும் இந்த ஆட்சி வந்த பிறகு அமர்த்தி.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. இ.ஜி. சுகவனம்:** செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் இதை உடனடியாக கவனித்து, இதன் மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அக்கறை கொண்டு, உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியிலே கொடுக்கப்பட்ட இந்த உரிமங்கள், அதனுடைய காலம் முடிவு அடையும் வரையிலே அவர்களுடைய அனுபோகத்தில் இருக்கும். அதற்குப் பிறகுதான் அவற்றை அரசு கையகப்படுத்த முடியும். இருந்தபோதிலும் கடந்த கால ஆட்சியிலே இருந்த கனிமக் கொள்கை மாற்றப்பட்டு இப்போது வேறு வகையிலே, பொதுவாக ஏலம் விட்டு அவைகளைத் தருவது என்ற முறையிலே அது இயங்குகிற காரணத்தால் முன்பு இருந்த அந்த கேடுபாடுகள் இப்போது விளைவதற்கு இடமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காகத் தனி நீதிமன்றம் ஒன்று தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த குவாரிகளுக்கான லைசென்ஸ் பெற்றவர்கள் எல்லாம் முறைகேடுகளைச் செய்துதான் உரிமங்களைப் பெற்றார்கள். கோடிக்கணக்கான ரூபாய் முறைகேடுகள் செய்யப்பட்டன. இன்னும் சொல்லப்போனால் புறம்போக்கு நிலங்களை எல்லாம் பினாமியாகக் கொடுத்திருக்கிறார்கள். ஒரு பர்மிட்டை வைத்துக்கொண்டு சில பேர் 100 கற்களைக்கூட எடுத்துக்கொண்டு போகிறார்கள். என்னுடைய தொகுதியிலேகூட குவாரிகளில் இதுபோன்ற ஏமாற்று வேலைகள் எல்லாம் செய்யப்பட்டு இருக்கின்றன. எங்களால் கணக்குகளைக் கொண்டுவர முடியவில்லை. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முறைகேட்டோடு நடந்து முடிந்த அந்த உரிமங்களை எல்லாம் ரத்து செய்து, புதிய உரிமங்களை இனிமேல் கொடுப்பதற்கு வழிவகை செய்வாரா என்றும், முறைகேடு செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்றும் நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிமங்களைப் புதுப்பிக்கின்ற காலகட்டம் என்று ஒன்று இருந்தாலும்கூட, உரிமம் பெற்றவர்கள் முறைகேடாக நடந்து கொள்வார்களேயானால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்த உரிமங்களை ரத்து செய்வதற்கான வழிவகை இருக்கிறது. இருந்தாலும் அப்படி ரத்து செய்யும்போது அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தடை ஆணை பெற்றுவிடுகிறார்கள். இதுதான் இப்போது இருக்கின்ற சிக்கல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

[1997 ஏப்ரல் 29

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நிலப் பகுதியில் புதைந்து கிடக்கும் கனிம வளங்கள் என்ன என்பதைக் கண்டறிவதற்கு அதிநவீன தொழில் நுட்ப ஆய்வினை மேற்கொள்ள அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்த யோசனை ஏற்கப்படும்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர் சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டத்தில், வேடசந்தூர் தொகுதியில், குஜிலியம்பாறை ஒன்றியத்தில் செட்டிநாடு சிமெண்ட் கார்ப்பரேஷன், அரசுக்கு சுமார் 10 முதல் 15 கோடி ரூபாய் வரையில் கடன் பாக்கி வைத்துள்ளது. அதனை அரசு வசூலிக்க நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தனி அக்கறையோடு, தனிக் கேள்வி போட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில், மேற்குத் தொடர்ச்சி மலையிலே, வைரக் கற்களை நிறைய மக்கள் திருடிக் கொண்டு இருக்கிறார்கள். அதனை முறைப்படுத்தி, அரசுக்கு வருமானம் வருகின்ற விதத்திலே, அரசே அந்த வைரக் கற்களை எடுப்பதற்கான முயற்சிகளைச் செய்யுமா? மேலும் மணலினை அள்ள முடியவில்லை, செங்கல்லுக்கு மண் அள்ள முடியவில்லை. பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் மண் அள்ளலாம் என்று சொன்னார்கள். ஆனால் இன்னும் அந்தச் சட்டம் வந்து அனுமதி கிடைக்கவில்லை. அதற்கான வழிமுறைகளையும் அரசு செய்யுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, திருடுகின்ற அளவிற்கு வைரக் கற்கள் அங்கே குவிந்து இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. விவரம் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் தனியாகத் தெரிவிப்பாரேயானால், அதைப் பற்றி உடனடியாக அரசு ஏற்ற நடவடிக்கை எடுக்கும்.



1997 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருப்புக்கற்கள், மணல் போன்றவைகளை லாரிகளிலும் மற்ற வாகனங்களிலும் கடத்துகிறார்கள். அந்த வாகனங்களைப் பறிமுதல் செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்ற நேரத்தில் வாகனங்களைப் பறிமுதல் செய்வதும் அந்த நடவடிக்கைகளிலே ஒன்றாகத்தான் இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில், பல இடங்களில், அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களில் எல்லாம் விலை மதிக்க முடியாத கற்கள் இருக்கின்றன. அதுபோல, தருமபுரி மாவட்டம், பர்கூர் தொகுதியிலே வைகுந்தம், பெத்தப்பள்ளி போன்ற பகுதிகளில் 'பாரடைசோ' கற்களே அரசு புறம்போக்கு நிலங்களிலே இருக்கின்றன. அதனைக் கடந்த கால ஆட்சியிலே, ஒரு தனியாருக்கு எந்த விதமான வருமானமும் அரசுக்கு இல்லாமல் குத்தகைக்கு விட்டுள்ளார்கள். இது நெ.1, நெ.2, தமிழ்நாடு கனிம நிறுவனத்தில் கடந்த ஆட்சிக் காலத்தில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், only No. 1 is allowed, (குறுக்கீடு) No, No.1, No. 2, No.3 என்று துணை வினாக்கள் கேட்டால் எப்படிப் பதில் வரும். துணை வினா ஒன்றுதான் கேட்க வேண்டும்.

**திரு. ப. ரங்கநாதன்:** கடந்த ஆட்சி காலத்தில் கனிம நிறுவனத்தில் பொறுப்பிலே இருந்தவர்களைப் பற்றியெல்லாம் பத்திரிகைகளில் செய்திகள் வந்திருக்கின்றன. பல கோடி ரூபாய்கள், ரூ. 1,000 கோடி என்று ஒரு பத்திரிகையிலே செய்தி வருகிறது. ரூ. 2,000 கோடி என்று எல்லாம் செய்திகள் வந்திருக்கின்றன. மொத்தமாக எவ்வளவு தொகையைக் களவாடியுள்ளார்கள் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே விளக்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, விழிப்புப் பணித் துறையின் மூலமாக, அந்தப் புலனாய்வு நடத்தப்பட்டு, அது தொடர்பாகவும் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த

வழக்கு நீதிமன்றத்திலே வர இருக்கின்ற காரணத்தினால், முன்கூட்டியே விவரங்களைச் சொல்ல என்னால் இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், முறைகேடாக மணல், கல் ஆகியவற்றைக் கடத்துகின்ற வாகனங்களின்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால், சில நேரங்களிலே, கடந்த ஆட்சி காலத்திலே, திருட்டுத்தனமாக மணலையும், கல்லையும் எடுத்துச் சென்றவர்கள் இப்போதும் எடுத்துச் செல்கிறார்கள். உதாரணமாக, செஞ்சிப் பகுதியிலே அந்த முறைகேடுகள் நடப்பதைப் பற்றி, நான் விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு சென்றேன். அப்படி ஒரு வாகனத்தினுடைய எண்ணையும் குறித்துக் கொடுத்தேன். ஆனாலும்கூட, மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி அதைக் கண்காணிக்கச் செல்கின்றபோது, முன்கூட்டியே தகவல் கொடுத்து விடுகிறார்கள். செஞ்சிப் பகுதியிலே இருக்கக்கூடிய வட்டாட்சியரும், அவருடைய அலுவலக உதவியாளராக இருக்கக்கூடியவரும் இப்படி கடத்துகிறவர்களுக்கு உடந்தையாக இருந்துகொண்டு அந்தத் தகவலைச் சொல்லி விடுகிறார்கள். அப்போது அவர்கள் கடத்துவதை நிறுத்தி விடுகிறார்கள். இப்படி அதிகாரிகளே சில இடங்களில் உடந்தையாக இருந்துகொண்டு கல், மணல் கடத்துகிறவர்களுக்கு உறுதுணையாக இருக்கிறார்களே, அவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதனைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இப்படி கடத்துகின்ற கயவர்களுக்கு, அதிகாரிகளும் சில இடங்களில் உடந்தையாக இருக்கின்றார்கள் என்பது ஒப்புக் கொள்ளப்பட வேண்டிய உண்மைதான். அப்படிப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்காது. ஏற்கெனவே இப்படிப்பட்ட சில அதிகாரிகள் மீது, ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக இருந்தாலும் கவலையில்லை என்ற அளவிற்கு நடவடிக்கை எடுத்த அரசுதான் இந்த அரசு என்பதையும், தொடர்ந்து அப்படிப்பட்ட நடவடிக்கைகளை நிச்சயமாக எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் ஏற்கெனவே, கல், மணல் அள்ளக்கூடாது, அப்படி எடுத்தால், கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கூறினார்கள். நான் சொல்வதெல்லாம், கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய சாதாரண மக்கள் வீடு கட்ட வேண்டுமென்றால் மணல் எடுக்க வேண்டிய நிலை இருக்கிறது என்பது ஒன்று. இரண்டாவது, குளங்களில் படிந்துள்ள சாதாரண வண்டல் கரம்பையை அள்ளிக் கொண்டு போனாலும், மணல் கடத்துவது மாதிரி கேஸ் போடப்படுகிறது. அதற்குப் பிறகு 15 நாட்கள் டிராக்டரைப் பிடித்து நிறுத்தி வைத்துவிடுகிறார்கள். பிறகு அபராதம் எல்லாம் கட்டி டிராக்டரை எடுத்துக்கொண்டு வருவதற்கு கிட்டத்தட்ட 10 ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவாகிறது. அதேபோல், அரசாங்கத்தினுடைய வேலைகளைச் செய்ய வேண்டுமென்றால்கூட, மணல் அள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இப்படி கிராமப்புறங்களிலே இருக்கிற சாதாரண மக்கள் வீடு கட்டுவதற்கு, பொதுக் கட்டிடம் போன்றவைகளைக் கட்டுவதற்கு மணல் எடுக்க வேண்டியிருக்கிறது. அதற்கு 'பெர்மிஷன்' வாங்க வேண்டுமென்றால் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஒரு சாதாரண விவசாயி கலெக்டரேட்டுக்குப் போய் அலைந்து திரிந்து, 'பெர்மிஷன்' வாங்குவதற்குள் பல கஷ்டங்கள் ஏற்பட்டு விடுகின்றன. வில்லேஜ் ஆபீசரிடம் கப்பம் கட்ட வேண்டியிருக்கிறது. தாசில்தாரிடம் கப்பம் கட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இந்த மாதிரி பல கஷ்டங்களை அவர்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர். வினாவை மட்டும் கேளுங்கள்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** ஆகவே, இதைத் தளர்த்திட வேண்டும். பொதுப் பணித் துறை குளங்களில் பல ஆண்டுகளாகத் தூர் வாராமல், மராமத்து செய்யாமல், வண்டல் படிந்து ஊறியிருக்கிறது. அந்த வண்டல் கரம்பையை அந்த மக்கள் எடுக்கும்போது, குளத்திற்கும் நல்லது ஏற்படுகிறது. ஆனால், விவசாயிகளால், கிராமங்களில் சொந்தமாக வீடுகள் கட்டுவதற்கோ, அல்லது அரசாங்கத்தின் சார்பில் வீடுகள் கட்டுவதற்கோ, மணல் எடுக்கப்படும் நேரங்களில், பல வண்டிகள்

தடுக்கப்பட்டு, அந்த வண்டிகளைக் கொண்டுபோய் தாலுக்கா அலுவலகங்களிலே வைத்திருக்கிறார்கள். இது பெரிய பிரச்சினையாக உள்ளது. இதற்கு முன்னால் தங்களுடைய ஆட்சியிலே இந்த மாதிரி நிலையிலே எல்லாம் விதி கொஞ்சம் தளர்த்தப்பட்டிருந்தது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஈஸ்வரன், நீங்கள் வினாவை மட்டும் கேளுங்கள் என்று சொன்னால், உரை நிகழ்த்தி, தொழில் துறை மானியக் கோரிக்கையிலே பேசுவது மாதிரி பேசிக் கொண்டிருக்கிறீர்களே, உங்களுடைய வினாவை மட்டும் கேட்டு உரையை முடித்துக்கொள்ளுங்கள். இல்லையென்றால் நான் உங்களை உட்கார வைத்துவிடுவேன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உண்மையிலே மணல் எடுக்கிறவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதுடன், சாதாரண விவசாயப் பெருங்குடி மக்கள் மணல் எடுப்பதற்கு கொஞ்சம் விதியைத் தளர்த்த முன்வருவார்களா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யானையைப் பிடிக்கச் சொன்னால், சில அதிகாரிகள் பூனையைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அது எனக்கு நன்றாகத் தெரியும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரன் அவர்களுடைய அந்தக் கருத்தை அரசு ஆலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பே.வே.. ஸ்ரீவெங்கடேசன்.

**திரு. பே. வே. ஸ்ரீ. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய காவேரிப்பட்டினம் தொகுதியிலே தட்டக்கல் கிராமத்திலே மிகவும் விலையுயர்ந்த `பாரடைசோ` கற்கள் இருக்கின்றன. அதை முன்னாளில் ஆட்சியிலிருந்த மூன்று அமைச்சர்களும், நான்கு சட்டமன்ற உறுப்பினர்களும் திருட்டுத்தனமாக அந்தக் கற்களை உடைத்து, போலி பெர்மிட் வைத்துக்கொண்டு வெளியிலே அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, கடந்த காலத்தில் நடைபெற்ற, குறிப்பாக, கனிம வளத் தொழிலில் நடைபெற்ற ஊழல்களைப் பற்றி அரசு இப்போது விசாரணை நடத்திக் கொண்டிருக்கிறது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 722, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**722—**

### சர்க்கரை ஆலையை அரசுடமையாக்குதல்

***3950—திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை சர்க்கரை ஆலை அரசுடைமையாக்கப்பட்டுள்ளதா?

(ஆ) அதன் அரவைத் திறன் நாள் ஒன்றுக்கு எத்தனை டன்?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். அரசுடைமையாக்கப்பட்டுள்ளது.

(ஆ) அரவைத் திறன் நாளொன்றுக்கு 1250 டன்களாகும்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த ஆலை தனியாரிடத்திலே இருந்தது. இப்போது அரவைத்திறன் நாளொன்றுக்கு 1250 டன்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறுகின்றார்கள். அங்கு கரும்புகளை அனுப்பினால் மூன்று அல்லது நான்கு நாட்கள் காயவைத்துவிட்டு, பிறகு மெஷின் வேலை செய்யவில்லை, தொழிலாளர்கள் தகராறு என்றெல்லாம் சொல்கிறார்கள். நானும் கரும்பு அனுப்பும் விவசாயிதான். இப்படிப் பிரச்சினைகள் இருப்பதால் கரும்பை அங்கே கொண்டுபோய் போடுவதற்கே பயமாக இருக்கிறது. எனவே, அந்த ஆலைக்கு நல்ல மெஷின்கள் வாங்கிக் கொடுக்கப்படுமா? அந்த ஆலையை அரசாங்கமே ஏற்றுக்கொண்ட பிறகு விவசாயிகளுக்குத் தொல்லையில்லாமல், தொந்தரவு இல்லாமல் இருப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில் பல்வேறு வகையில் மறுபரிசீலனை தேவைப்படுகிற ஒன்றாக இருக்கிறது. இந்தச்

சர்க்கரை ஆலை அரசுடைமையாக்கப்பட்ட ஆண்டு 1983. அதற்குப் பிறகு இந்த ஆலை 1989-90-ஆம் ஆண்டைத் தவிர, மற்ற எல்லா ஆண்டுகளிலும் நட்டத்திலேதான் இயங்கி வருகிறது. இந்த ஆலை அரசுடைமையாக்கப்பட்ட 1983-84-ஆம் ஆண்டில் 55 இலட்சம் ரூபாய் நட்டம். 1984-85-இல் 2 கோடியே 39 இலட்சம் ரூபாய் நட்டம்; 1985-86-இல் 98 இலட்சம் ரூபாய் நட்டம்; 1986-87-இல் 112 இலட்சம் ரூபாய் நட்டம்.

முற்பகல் 9-45

1987-88-ல் 157 இலட்சம் ரூபாய் நஷ்டம்; 1989-90-இல் 3 கோடியே 41 இலட்சம் ரூபாய் லாபம்; 1990-91-இல், 32 இலட்சம் ரூபாய் நஷ்டம்; 1991-92-இல், 104 இலட்சம் ரூபாய் நஷ்டம்; 1992-93-இல், 34 இலட்சம் ரூபாய் நஷ்டம்; 1993-94-இல், 48 இலட்சம் ரூபாய் நஷ்டம்; 1994-95-இல் 70 இலட்சம் ரூபாய் நஷ்டம்; 1995-96-இல் 1 கோடியே 62 இலட்சம் ரூபாய் நஷ்டம்; இப்படி நஷ்டத்திலேயே இயங்கிக் கொண்டிருக்கிறது. அதுமாத்திரம் அல்ல, ஒவ்வொரு சர்க்கரை ஆலையிலும் அதன் அரவைத் திறன் 2500 டன்னாக இருக்கும்போது, இந்த ஆலையிலே அரவைத் திறன் 1250 டன்னாகத்தான் இருக்கிறது. இவைகளையெல்லாம் யோசிக்கும்போது, அந்த வட்டாரத்திலுள்ள விவசாயிகள், இதை மீண்டும் தனியாருக்கே கொடுத்துவிடுங்கள் என்றெல்லாம்கூட சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். அரசு இதைப் பற்றித் தீவிரமாக ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தங்கள் பதிலிலே 1989-90-ல் நல்ல லாபம் என்று குறிப்பிட்டார்கள். அப்போது, இன்றுள்ள முதல்வர் அவர்கள்தான் ஆட்சியிலிருந்தார்கள். அவர்கள் இருக்கும்போது லாபம் வந்தது அப்போதெல்லாம் நாங்கள் 8 ஏக்கருக்கு கரும்பு விளைவித்து, கரும்புகளை ஆலைக்கு அனுப்பிக் கொண்டிருந்தோம். ஆனால் இன்றைக்கு இவ்வளவு மோசமாக இருக்கிற காரணத்தினால், தனியாருக்கே விட்டுவிட வேண்டுமென்று அரசு முடிவு எடுத்திருப்பதாகவும் தெரிகிறது. அதை நான் வரவேற்றாலும்கூட மீண்டும் தனியாருக்கே விடுகின்றபோது சில பிரச்சினைகள் இருக்கின்றன. கரும்புக்கு ரெக்கவரியை மிகக் குறைவாக கொடுக்கக் கூடிய அளவுக்கு, 8.5 சதவிகிதத்திற்கும்கூட குறைவாகக் கொடுக்கக் கூடிய அளவுக்கு சில தனியார்கள் செய்கின்றார்கள். அப்படியில்லாமல் ரெக்கவரிக்குத் தகுந்த பணம் கொடுக்கக்கூடிய வகையில் இருக்க வேண்டும். இந்த மில்



உருவாவதற்குக் காரணமாக இருந்தவர் திரு. பி.டி.ஆர். அவர்கள் என்று கருதுகிறேன். நான் பேரவைத் தலைவர் அவர்களைச் சொல்லவில்லை. எனக்கு அந்த பி.டி.ஆர். ஐயாதான் வேண்டியவர். (சிரிப்பு) என்னை யார் என்று தெரியாமலேயே, எனக்காக வந்து ஓட்டுக் கேட்டவர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னைக் கொஞ்சம்கூட நீங்கள் மதிப்பதில்லை என்று எனக்கு நன்றாகத் தெரியும் (சிரிப்பு).

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுரண்டல் இல்லாமல், விவசாயிகளின் வயிற்றில் மண்ணடிக்காமல் அவர்களுக்கு ரெக்கவரிக்குத் தகுந்த பணம் கொடுத்து, லாபத்திலே விவசாயிகளுக்கு பங்கு கொடுக்கக்கூடிய அளவுக்கு யார் ஆலையை நடத்த முன் வருகின்றார்களோ அவர்களுக்குக் கொடுப்பதற்கான முயற்சியை எடுத்துக்கொள்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாருக்குக் கொடுப்பது என்று இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை. இருந்தாலும் இந்த நஷ்டக் கணக்கைப் பார்க்கும்போது அரசே தொடர்ந்து நடத்தி இந்த நஷ்டத்தை ஏற்க இயலுமா என்பதை யோசிக்க வேண்டியிருக்கிறது. இருந்தாலும் தீர ஆலோசித்த பிறகுதான் எந்த முடிவும் எடுக்கப்பட இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 723, திரு. டி. இராஜேந்தர், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**723—**

### உயர்நிலைப் பள்ளிகளை அதிகப்படுத்தல்

***2515—திரு. டி. இராஜேந்தர்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, பூங்கா நகர்ப் பகுதியில் உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அத்தகைய தேவை தற்போது இல்லை. தேவை ஏற்படின், நடவடிக்கை எடுக்கப்படும்.

[1997 ஏப்ரல் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. இராஜேந்தர், இருக்கையில் இல்லை.

வினா எண் 724, திரு. எல். சந்தானம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

724—

**பெண்கள் கல்லூரி அமைத்தல்**

***7364—திரு. எல். சந்தானம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதியில் அரசு பெண்கள் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற எல்லா தொகுதிகளிலும் நிறைய கல்லூரிகள் இருந்தாலும்கூட, எங்களது சோழவந்தான் பகுதியில் கல்லூரி இல்லை என்ற நிலை இருக்கிறது. அங்கே இருக்கின்ற பெண்கள் எல்லாம் மிக ஆர்வத்தோடு கல்வி கற்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தால், அங்கே பெண்கள் மேல்நிலைப்பள்ளிகள் இருக்கின்ற அதே நேரத்தில், கல்லூரி இல்லையே என்ற ஆதங்கம் இருக்கிறது. எனவே, வருகின்ற காலத்திலாவது, அரசு பரிசீலனை செய்து மதுரைக்கு அருகாமையில் இருக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதியிலே ஒரு கல்லூரியை ஏற்படுத்தினால், பெண்கள் கல்விக்கு ஊக்கப்படுத்துவதுபோல அமையும் என்கிற காரணத்தால், கல்லூரி ஒன்றை அமைக்க அரசு முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி தொகுதியாகவோ, அல்லது வட்டமாகவோ பார்க்கிறபோது பல இடங்களில் கல்லூரி இல்லை என்கிற கருத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய உப கேள்வி மூலம் தெரிவிக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆனாலும் கல்லூரிகளை மட்டும்



அதிகப்படுத்துவதன் மூலம் அதிக பயன் ஏற்பட்டுவிடாது என்ற ஒரு நிலைமை உள்ளது. கல்வி வளர்ச்சிக்கு தனியார் ஈடுபாடு இருந்தால்தான், அதற்குரிய செலவை ஈடுகட்ட முடியும் என்ற நிலைமை இருக்கிற காரணத்தால், தனியார் முன்வருவார்களேயானால், சுய நிதிக் கல்லூரி என்ற முறையில் அதுபற்றி ஆலோசிக்கப்படும்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 725, டாக்டர் ஆ. ஞானசேகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

725—

**மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தைச் செயல்படுத்துதல்**

***1708—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள அணுவியல் மருத்துவ ஆராய்ச்சி நிலையம் மீண்டும் செயலாக்கம் பெற அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அணுவியல் மருத்துவ ஆராய்ச்சி நிலையம் அரசு பொது மருத்துவமனையிலோ அல்லது சென்னை மருத்துவக் கல்லூரியிலோ ஏற்படுத்தப்படவில்லை. ஆனால், அணுக்கதிர் மருந்தியல் துறை பல காலமாக பணியாற்றி வருகிறது.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அயல்நாடுகளில் இந்த நவீன அணுவியல் மருத்துவத் துறை இந்த காலகட்டத்தில் பிரபலம் ஆகிவருகிறது. நம்முடைய இந்திய அளவில் மும்பையில் 5 மாணவர்கள் பயிலுகின்ற வகையிலும், பெங்களூரில் 3 மாணவர்கள் பயிலுகின்ற வகையிலும் இன்று இருந்து வருகின்றது. நம்முடைய தமிழகத்தில் 'நியுகிளியர் மெடிசின்' என்கிற இந்தத் துறையை வளர்க்கின்ற வகையில்—பல நோய்களைக் கண்டுபிடிக்கின்ற வகையிலும், சில நோய்களைக் குணப்படுத்துகின்ற வகையிலும் இந்தத் துறையை வளர்க்கின்ற வகையில்—நம்முடைய சென்னை பொது

மருத்துவமனையில் மாணவர்கள் பயிற்சி பெறுகின்ற வகையில் பட்டப் படிப்பை உருவாக்க நம்முடைய அரசு பரிசீலனை செய்து ஆவன செய்யுமா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மருத்துவக் கல்லூரியில் பெர்னார்ட் அணுக்கதிரியல் மற்றும் ஆங்காலாஜி நிலையத்தில் அணுக்கதிர் மருந்தியல் துறை, நியுகிளியர் மெடிசின் டிபார்ட்மெண்ட் இயங்குகிறது. அதிலே ஒரு பேராசிரியர், ஐசோடோப் பேராசிரியர், உதவிப் பேராசிரியர், ரேடியோகிராபர்-போன்ற இவர்கள் எல்லாம் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல பட்ட மேல் படிப்பு படிப்பதற்கான வசதி இப்போது தமிழகத்திலே இல்லை. இருந்தாலும்கூட, இதுபற்றி எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்திலே இந்த பாடங்களை, மேல் பட்டப் படிப்பு படிப்பதற்கான பாடங்களை உருவாக்குவதற்கும், அதற்குரிய பாடத் திட்டங்களை உருவாக்குவதற்கும், வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மும்பையில் உள்ள பாபா நுண்ணணுப் பிரிவு 75 லட்ச ரூபாயை நியுகிளியர் மெடிசினுக்காக, அந்த ஆராய்ச்சி நிலையத்தைத் துவங்குவதற்காக வழங்கி இருப்பதாகச் சொல்கிறார்களே, அது உண்மையா?

அதைப் போல 'ஓர்ல்டு ஹெல்த் ஆர்கனைசேஷன்' வாஷிங்டன், ஜப்பான் பைப்லைன், ராக்பெல்லர் பவுண்டேஷன் போன்ற 8 எல்.பி. சென்டர்ஸ்களிடமிருந்து தமிழகத்திலே உள்ள மருத்துவமனைகள் உதவி பெறுவதாகச் சொல்கிறார்களே? அதுவும் குறிப்பாக ஜப்பான் பைப்லைன் நிறுவனம் தடுப்பு நோய்களுக்கு உதவி செய்வதாகக் கூறுகிறார்கள். சமீபத்திலேகூட ஹெல்த் செக்ரடரி. வாஷிங்டனில் ஓர்ல்டு ஹெல்த் ஆர்கனைசேஷன் கான்பரன்ஸுக்கு சென்று வந்து இருக்கிறார்கள். ஆகவே, இந்த உதவிகள் எல்லாம் பெறப்படுமா? ஹெல்த் செக்ரடரி இந்த உதவியைப் பெற்று வந்து இருக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மும்பையில் 75 லட்ச ரூபாய் நிதி வசதி ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது என்ற செயற்குறிப்பு என்னிடத்திலே இல்லை. ஆனால், உலக வங்கி மூலமாக இந்தியாவுக்கு இந்த ஆண்டு ஆயிரம் கோடி ரூபாயும், அடுத்த ஆண்டு ஆயிரம் கோடி ரூபாயும் வழங்குவதற்கான உறுதிமொழி வழங்கப்பட்டதாக மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலாளர் அவர்கள் சுற்றுப் பயணத்தின்போது கிடைத்த தகவலை இங்கே தெரிவித்து இருக்கிறார்கள். தமிழ்நாட்டுக்கு ஏதாவது கிடைக்குமா என்று கேட்டார்கள். உலக வங்கி மூலமாக 20 கோடி ரூபாய் நம்முடைய தமிழ்நாட்டுக்குக் கொடுப்பதாக அவர்கள் வாக்குறுதி தந்து இருக்கிறார்கள்; அதற்கான உத்தரவுகள் உடனடியாக வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மற்ற நிறுவனங்கள் உதவி செய்ய முன்வருகிறதா, ஏதாவது நிதி வந்து இருக்கிறதா என்றெல்லாம் கேட்டார்கள். அப்படிப்பட்ட பல நிறுவனங்களில் இருந்து நிதி உதவி பெறுவதற்காகத்தான் சென்னை மருத்துவக் கல்லூரியை ஒரு அட்டானமஸ் கல்லூரியாக நாம் அறிவித்து இருக்கின்றோம். அதை யுனிவர்சிட்டியாக ஆக்கியதற்குப் பிறகு அந்த உதவிகள் எல்லாம் வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 726, திரு. பா. வேல்துரை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**726—**

### பெண் மருத்துவர்கள் தங்கி சிகிச்சையளித்தல்

***3341—திரு. பா. வேல்துரை:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேருராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரவு நேரங்களில் பெண் மருத்துவர்கள் தங்குவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1997 ஏப்ரல் 29

(அ) மற்றும் (ஆ): சேரன்மகாதேவி பத்தமடை பேரூராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்தில் 4 மருத்துவர் பணியிடங்கள் உள்ளன. இரண்டு ஆண் மருத்துவர்கள் சுகாதார நிலையத்தில் உள்ள இரண்டு குடியிருப்பில் தங்கி பணிபுரிகின்றனர். மற்றும் இரண்டு மருத்துவர்கள் ஆரம்ப சுகாதார நிலையம் அமைந்துள்ள பத்தமடையில் தங்கி பணிபுரிகின்றனர். இவர்களில் ஒரு பெண் மருத்துவர் பத்தமடையில் தங்கிப் பணிபுரிகின்றார்.

முற்பகல் 9-55

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றுகூட தொலைபேசி மூலம் நான் இதுகுறித்துத் தொடர்பு கொண்டு கேட்டபோது, இரவில் பெண் மருத்துவர் அங்கே தங்குவதில்லை என்ற தகவல் எனக்குக் கிடைத்துள்ளது. எனவே உடனடியாக பெண் மருத்துவர் அங்கே தங்கி, பெண்களுக்குப் பிரசவம் பார்க்கின்ற பணியைச் செய்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடந்த 15 தினங்களுக்கு முன்பாக அந்த ஆஸ்பத்திரிக்கு எக்ஸ்ரே வழங்கவேண்டுமென்று கேட்டிருந்தேன். கெமிக்கல் வேண்டுமென்று கேட்டிருந்தேன். உடனடியாக அமைச்சர் அவர்கள் எக்ஸ்ரே வழங்கிவிட்டார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கெமிக்கல் இன்னும் வழங்கப்படவில்லை. அதையும் உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அங்கே உள்ள படுக்கைகள் பெண்ட்- ஆகிக் கிடக்கின்றன...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எத்தனை கேள்விகள்தான் கேட்பீர்கள்? எக்ஸ்ரேக்கு நன்றி சொல்லி விட்டீர்கள். பெண் மருத்துவர் தங்குவது பற்றி அமைச்சர் பதில் சொல்வார்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே ஒரு பெண் மருத்துவர்—டாக்டர் எஃப் டோரஸ் என்ற பெண் மருத்துவர்-இரவு நேரங்களில் தங்கி பணி புரிகிறார் என்ற குறிப்பு எனக்கு வந்திருக்கிறது. ஆனால் உறுப்பினர் அவர்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கேட்டபோது அப்படி பெண் மருத்துவர் தங்கவில்லை என்று தகவல் கிடைத்ததாகச் சொல்கிறார். அதுகுறித்து நிச்சயமாக விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே கெமிக்கல்ஸ் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அதை உடனடியாக அனுப்பி வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். 'பெட்' எல்லாம்



1997 ஏப்ரல் 29]

பெண்ட் ஆகியிருப்பதாகச் சொன்னார். பெண்ட் ஆகாத பெட் வாங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 727. திரு. டி. நடராஜன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**727—**

## கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணி

***2780—திரு. டி. நடராஜன்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி-அனந்தபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணியில் தாமதம் ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்தின் சோதனை ஓட்டம் மேற்கொள்ள மின்சாரம் தொடர்ந்து கிடைக்காததால் தாமதம் ஏற்பட்டது. தற்போது மின்சார வாரியத்தால் தனி உயர் அழுத்த மின்பாதை அமைக்கப்பட்டு, போர்க்கால அடிப்படையில் சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது. இக்கேள்வி கேட்கப்பட்டது 1-8-1996-ல். அப்போது தயாரிக்கப்பட்ட விடையில் 1996-ஆம் வருடம் செப்டம்பர் இறுதிக்குள் இத்திட்டம் முடிவடையும் என்று அறிவித்திருந்தார்கள். திரும்பவும் இக்கேள்வியை எடுத்து, நடவடிக்கை எடுக்கப்பட்டபோது, இத்திட்டம் 23-1-1997-ல் பயனுக்கு கொண்டுவரப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. மறுபடியும் அதிலே பழுது ஏற்பட்டு போதுமான மின் அழுத்தம் இல்லாததால், பொதுக்குழாய் மூலம் 23-1-1997 முதல் மூன்று நாட்களுக்கு ஒரு நாள் வீதம் தண்ணீர் விநியோகிக்கப்பட்டது. ஆனால் இடையில் ஏற்பட்ட மின் தடங்கல் காரணமாக ஏழு நாட்களுக்கு முன்பு குடிநீர் வழங்குவதில் தடை ஏற்பட்டது. இந்நிலையில் 27-4-1997 அன்று தனி மின் பாதை ஏற்படுத்தி, தடங்கல் சீர்செய்யப்பட்டு, குடிநீர் விநியோகிக்க, மேல்நிலைக் குடிநீர்த் தேக்கத் தொட்டியில் தண்ணீர் ஏற்றப்பட்டு வருகிறது. அதில்

அடிக்கடி பழுது ஏற்படுவதால் தற்போது சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது. மீண்டும் 5 கோடி ரூபாய் இதற்காகச் செலவாகியிருக்கிறது. எனவே இன்னும் சில நாட்களில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு மக்களுக்குப் பயன் அளிக்கிற வகையில் முடிவடையும்.

**திரு. டி. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. செஞ்சி-அனந்தபுரம் கூட்டுக் குடிநீர் திட்டம் 1989-90-ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்ட திட்டமாகும். செஞ்சிக்கு ஏதாவது நன்மை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு தொடங்கப்பட்டது இத்திட்டம். கடந்த ஆட்சியாளர்களால் இத்திட்டம் கிடப்பில் போடப்பட்டு, மறுபடியும் நமது ஆட்சியில் நமது முதல்வர் அவர்கள் வந்தபிறகு நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் சீரிய கவனிப்பால் மறுபடியும் அங்கே தண்ணீர் கிடைத்தது. அவர்கள் கூறியதைப்போல பலமுறை தண்ணீர் வந்தும், இப்போது மின் பற்றாக்குறையால் தண்ணீர் கிடைக்காத நிலை இருக்கிறது. மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் இதில் தனிக்கவனம் செலுத்தி எங்கள் தொகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையான இத்திட்டத்திற்குத் தேவையான மின்சாரத்தைத் தந்து இந்தக் குறையைப் போக்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இது நமது முதல்வர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்ட திட்டம். அதிகாரிகள் இதன்பால் சரியாக கவனம் செலுத்தாமல் இருக்கிறார்கள். காரணம் கேட்டால் அவர்களுக்கு சரியான ஜீப் கிடைக்கவில்லை என்கிறார்கள். அங்கே அதிகாரிகள் யாரும் சரியாக வருவதும் இல்லை. அதனால் அந்தத் திட்டம் மறுபடியும் கிடப்பில் போடப்பட்டு தற்போது எந்த முன்னேற்றமும் இல்லாமல் இருக்கிறது. அதனால் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இதன்பால் மறுபடியும் கவனம் செலுத்தி அந்த மக்களின் குறையைத் தீர்க்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். முதல்வர் அவர்களின் திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்ட இத்திட்டத்தை மீண்டும் அவர்களே வந்து தொடங்கி வைக்க வேண்டுமென்றும் நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி-அனந்தபுரம் கூட்டுக் குடிநீர் திட்டம் 4-12-1989-ல் ரூபாய் நான்கு கோடியே 98 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டது. இடையில் அது விடுபட்டுப்போய், மறுபடியும் 1991-ல் துவங்கப்பட்டு,





மறுபடியும் அது விடுபட்டுப் போயிருக்கிறது. அதற்குப் பிறகு தற்போதுதான், எதனால் அத்திட்டத்திலே இந்த நிலை ஏற்பட்டது என்பதை ஆய்ந்து அறிக்கை தயாரிக்கப்பட்டு, 23-1-1997-ல் தான் மீண்டும் வேலைகள் துவங்கப்பட்டன. அப்படித் துவங்கப்பட்டபோது மின் அழுத்தம் காரணமாகத்தான் அடிக்கடி தடை ஏற்படுகிறதென்பதைத் தெரிந்து அதுவும் இப்போது சீர் செய்யப்பட்டு வருகிறது. இந்த நிலையில், அதிகாரிகள் இத்திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்தி வருகிறார்கள். இருந்தாலும் நான் இந்தத் திட்டத்தின் மீது எப்படி கவனம் செலுத்தியிருக்கிறேன் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இன்றைக்குக்கூட அதிகாரிகள் அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அழுத்தமாகச் சொல்லிக் கொள்கிறேன். சோதனை ஓட்டம் ஏன மேற்கொள்ளப்படுகிறது என்றால்— இப்படி அடிக்கடி பழுது ஆவதால்தான் நான், அதைக் கண்டிப்பாக, பரிட்சார்த்தமாக ஓட்டி-மக்களுக்குத் தடையில்லாமல் தண்ணீர் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுங்கள் என்று சொன்னேன்- அதன் காரணமாகத்தான் இன்றைக்குச் சோதனை ஓட்டம் நடக்கிறதே தவிர, வேறில்லை. அப்படிச் செய்யாவிட்டால், தண்ணீரை எடுத்து மககளுக்கும் விநியோகித்திருக்கலாம். இன்னும் இரண்டொரு நாட்களில் அந்தப் பணி முடிந்து மக்களுக்குத் தண்ணீர் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 728, திரு. கு. ரவி அருணன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**728—**

**குற்றாலத்தில் வாகன நிறுத்துமிடங்களை விரிவுபடுத்துதல்**

***6820—திரு கு. ரவி அருணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், குற்றாலம் நகராட்சிப் பகுதிகளில் போதுமான வாகன நிறுத்துமிடம் இல்லாததால் சீசன் நாட்களில் குறிப்பாக சனி, ஞாயிறு அன்றும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஒவ்வொரு அருவிப் பகுதியிலும் வாகன நிறுத்துமிடங்களை விரிவுபடுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) குற்றாலம் நகராட்சிப் பொறுப்பில் பெரிய அருவி, ஐந்தருவி, புலியருவி ஆகியவை உள்ளன. பெரிய அருவிக்கு வரக்கூடிய வாகனங்களும் நிறுத்துமிடத்தில் சுமார் 50 பேருந்துகள் நிற்பதற்கு இட.வசதி உள்ளது. அதிக அளவில் வரும் வாகனங்கள் நிறுத்துவதற்குப் போதுமான இடவசதி இல்லை. இவ்விடத்தினை விரிவுபடுத்தத் திட்டம் ஏதுமில்லை. ஐந்தருவி அருகில் சீசன் காலங்களில் இடவசதி போதுமானதாக இல்லாததால் தனியார் காலியிடங்களை ஆர்ஜிதம் செய்து ரூ. 10/- லட்சம் செலவில் வாகன நிறுத்துமிடம் அமைக்க நகராட்சியில் நடவடிக்கை எடுக்கப்படும். புலியருவி அருகில் கார் நிறுதத போதுமான இடவசதி உள்ளது.

**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றாலத்தில் சீசன் காலத்தில், குறிப்பாக சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆயிரக்கணக்கான வாகனங்கள் வந்து செல்கின்றன. அங்கே போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால், சுற்றுலாப் பயணிகள்கூட திரும்பிச் செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஐந்தருவிக்கருகில் மட்டும் வாகனங்கள் நிறுத்துமிடங்களை விரிவுபடுத்துவதாகத் தெரிவித்திருக்கின்றார்கள். அங்கே மட்டும் விரிவுபடுத்தினால் போதாது. பெரிய அருவிப் பகுதியிலும் விரிவுபடுத்த வேண்டும். அங்கே அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலங்கள் இருக்கின்றன. வனத் துறைக்குச் சொந்தமான நிலங்களும் இருக்கின்றன. ஆகவே, அவைகளைக் கையகப்படுத்தி அங்கே போக்குவரத்து நெரிசலை எவ்வாறு கட்டுபடுத்துவது என்பதை ஆராய ஒரு குழு அமைத்து, அந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அஙகே போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனியாகக் குழு ஒன்று அமைக்க வேண்டிய



அவசியம் இல்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களே அதற்கான யோசனைகளை வழங்கினால், அதிகாரிகளிடத்திலே அந்த யோசனைகளை தெரிவித்துப் போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். தற்போது பராமரிக்கப்பட்டு வரும் இடங்களில் 50 பேருந்துகள் நிறுத்துவதற்கான இடவசதிதான் உள்ளது. சனி, ஞாயிற்றுக் கிழமைகளில்தான் அதிகமான பேருந்துகள் மற்றும் வாகனங்கள் வருகின்றன. அதற்காகத் தனியாக இடம் ஒதுக்கீடு செய்வதற்கு, அதிகமான இடம் தேவைப்பட்டாலும் ஒரு சிறிய இடம்கூட அங்கே கிடைக்கவில்லை என்ற தகவல்தான் எனக்கு வந்திருக்கிறது. ஆனால் 100 வாகனங்கள் ஐந்தருவியின் பக்கத்திலே நிறுத்தலாம். அதைவிட புலியருவிப் பக்கத்தில் போதுமான இடவசதி தற்போதைய கார் நிறுத்துமிடத்தில் இருக்கிறது. இருந்தாலும் பழைய குற்றால அருவியின் பக்கத்திலுள்ள பகுதி நகராட்சி எல்லைக்குட்பட்டதல்ல என்ற காரணத்தினால் அந்தப் பகுதியிலேயுள்ள கார் நிறுத்துமிடம் பொதுப் பணித் துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் குற்றாலம் நகர்ப் பகுதியில் திருக்குற்றாலநாதஸ்வாமி தேவஸ்தானத்திற்கென்று தனியாக இட ஒதுக்கீடு செய்து வாகனம் நிறுத்துமிடம் ஒன்று பராமரிக்கப்பட்டு வருகிறது. தற்சமயம் இந்த ஏற்பாடு ஓரளவுக்கு பரவாயில்லை என்ற நிலை நிர்வாகத்திற்குத் தெரிந்திருக்கிற காரணத்தால், அதை ஒட்டிய வேறு பகுதிகளில் ஏதாவது இடம் இருக்கிறதா என்பதைப் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவ்வளவு விளக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னதற்குப் பிறகும் இன்னும் என்ன கேட்கப் போகிறீர்கள்? உங்களுக்கு என்ன கருத்து இருக்கிறதோ அதை எழுதிக் கொடுங்கள், பரிசீலிக்கிறேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிவிட்டார்கள். அதற்கப்புறமும் என்ன அடுத்த கேள்வி?

**திரு. கு. ரவி அருணன்:** இது வேறு கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு கேள்வியா?

**திரு. கு. ரவி அருணன்:** குற்றாலம் சம்பந்தமானதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, கேளுங்கள்.

[1997 ஏப்ரல் 29

**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றால அருவிப் பகுதியில், இரவு நேரங்களில் செயின் திருட்டு போன்ற குற்றங்கள் நடைபெறுகின்றன. ஆகவே, அதைத் தடுக்கும்பொருட்டு வருகின்ற சீசன் காலத்திற்கு முன்பாக அங்கே, ஒளி விளக்குகள் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அங்கே ஒளி விளக்குகள் பொருத்தப் பட்டிருக்கின்றன. அது போதுமானதாக இல்லையென்றால் நிச்சயமாக ஒளிவிளக்குகள் எந்தெந்த பகுதிகளுக்குப் பொருத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எனக்குத் தகவல் தருகிறார்களோ உடனடியாக நடவடிக்கையெடுத்து ஒளிவிளக்குகள் அமைப்பதற்கான ஏற்பாட்டை நான் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 729, திரு. அ. வ. அப்துல் நாசர், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**729—**

**கொள்ளிடம் ஊற்று நீர்த் திட்டம்**

***1189—திரு. அ. வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் கொள்ளிடம் ஊற்று நீர்த் திட்டப் பணிகள் எப்போது தொடங்கும்?

(ஆ) இத்திட்டத்தினால் பயனடையும் விளைநிலங்கள் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இத்திட்டப் பணிகளுக்காக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டு ஜனவரி 1997-ல் பணிகள் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

(ஆ) தற்போது கொள்ளிடத்தில் ஊற்று நீராகக் கிடைக்கும் சுமார் 115 கன அடி நீரை கான்சாகிப் வாய்க்காலுக்குத் திருப்புவதால் ஏற்கனவே பாசனம் பெறும் 9,327 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி உறுதி செய்யப்படும். இரண்டாம் போகம் பயிர் செய்ய வசதியும் கிடைக்கும்.



1997 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 730, திரு. சுப. தங்கவேலன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**730—**

**வைகை அணை தண்ணீரின் அளவு**

***2209—திரு. சுப. தங்கவேலன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

22-12-1953-ல் வைகை அணை கட்டுவதற்கு முன் கிடைத்த தண்ணீரின் அளவு கிடைக்க வழிவகை செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1959-ஆம் ஆண்டு வைகை அணை கட்டப்பட்ட பின் வைகை மற்றும் பெரியாறு தண்ணீரை முறையாகப் பிரித்து பாசன மற்றும் குடிநீர்த் தேவைகளுக்கு வழங்குதல் தொடர்பான விதிமுறைகள் பொதுப் பணித் துறையினரால் வகுக்கப்பட்டு, அதன்படி தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை-பெரியாறு பற்றி எங்கள் பகுதி மக்களுடைய கருத்தைப் பிரதிபலிக்க விரும்புகிறேன். தேக்கடியிலிருந்து லோயர் கேம்ப்பிற்கு மின் உற்பத்திக்காக குழாய்கள் மூலம் கொண்டு வருகிற தண்ணீர்தான் பெரியாறு தண்ணீர். எல்லா ஆறுகளும் ஏற்கனவே வைகையில் தான் கலந்தன. 22-12-1953 என்ற நாளானது இதே பேரவையில் பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையில் வைகை அணை கட்டுவதற்காக திட்டமிடப்பட்ட நாளாகும். எங்களுடைய கோரிக்கை என்பது குழாய்கள் மூலம் தேக்கடியிலிருந்து லோயர் கேம்ப்பிற்கு—மின் உற்பத்திக்காக கொண்டு வருகிற தண்ணீரை பெரியாறு கணக்கிலே வைக்கவேண்டுமேயொழிய, பழனிசெட்டிப்பட்டியில் ரீடிங் எடுக்கிற முறை தவறானது என்று எங்கள் பகுதி மக்கள் கருதுகிறார்கள். இதை இந்த அரசு பரிசீலித்து உரிய நீர்ப் பங்கிட்டைத்தர நான் ஏற்கனவே கேட்டுக் கொண்டதைப் போல—மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1997 ஏப்ரல் 29

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியாறு தண்ணீரை பழனிசெட்டிப்பட்டியில் அளப்பதில் எந்தவிதமான சிரமமும் இருக்காது. காரணம் நீங்கள் பைப்பில் தண்ணீர் கொண்டு வந்தாலும் சரி, வேறு வகையில் கொண்டு வந்தாலும் சரி. வைகை ஆற்றுக்கு மேலே பெரியாறு தண்ணீர் உள்ளே வருகிறபோது, அந்த இடத்திலே நிறுத்தி பழனிசெட்டிப்பட்டியில் எவ்வளவு தண்ணீர் பெரியாறிலிருந்து வருகிறது என்று அளக்கிறார்கள். அந்த அளவிலே எந்தவிதமான சந்தேகமும் இதுவரையில் ஏற்படவில்லை. எனவே, அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தாக இருப்பது ஆச்சரியமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை என்பது எங்களுக்கு விவசாயத்திற்கு மட்டுமல்லாமல், இராமநாதபுரம், பசும்பொன், காமராஜர் ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் குடிதண்ணீருக்கும் பயன்படக்கூடிய ஒரே ஆறு வைகை ஆறு தான். இந்த வைகை ஆற்றில் கேரளாவிலிருந்து தண்ணீரைப் பெற்று விவசாயத்திற்கு கிடைக்காவிட்டாலும்கூட, குடிதண்ணீருக்காகவாவது ஒரு ஏற்பாடு செய்ய நம்முடைய அரசு முன்வர வேண்டும். ஏற்கனவே நம்முடைய தலைமைச் செயலாளராக இருந்த திரு.டி.வி. அந்தோணி அவர்களிடம் ஒரு நாள் நான் பேசிக்கொண்டிருந்தபோது அவர் சொன்னார். விவசாயத்திற்கு என்று நீங்கள் கேரளாவில் தண்ணீரைக் கேட்டால் நிச்சயமாக அவர்கள் கொடுக்கமாட்டார்கள். குடிதண்ணீருக்காகவாவது நீங்கள் கேட்டு வாங்குகிற முயற்சியில் தீவிரமாக ஈடுபடுங்கள் என்று சொன்னார். அந்த அடிப்படையில் நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கேரள அரசோடு பேசி, வைகை ஆற்றில் நிரந்தரமாக குறைந்தபட்சம் இரண்டு டி.எம்.சி. தண்ணீராவது கிடைக்கிற வகையில் செய்து, அதன்மூலம் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நம்முடைய அரசு முன்வருமா, அமைச்சர் அவர்கள் அதற்கு முன் முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு நோக்கி பாயும் ஆறுகளிலிருந்து தண்ணீரைத் திருப்பி முதலில் பாசனத்திற்கும் குடிதண்ணீருக்கும் கேட்டோம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல, குடிதண்ணீருக்காகவாவது தர வேண்டுமென்ற இந்த அரசின் குறைந்தபட்சக் கோரிக்கையை எடுத்துக் கொண்டுதான் மத்திய அரசிலே



1997 ஏப்ரல் 29]

இருக்கிற நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களை—சென்ட்ரல் வாட்டர் போர்டு கமிஷன் சேர்மென் அவர்களை-நான் சமீபத்தில் சென்று பார்த்தேன். அவர்களிடத்தில் நான் வைத்த கோரிக்கை இதுதான். எங்களுக்கு ஒரு லட்சம் ஏக்கர் பாசனத்திற்கு இந்த மேற்கு நோக்கி பாயும் தண்ணீரிலிருந்து கிடைக்கிறது என்றாலும், அதுகூட எங்களுக்குத் தேவையில்லை. உயிர்த் தண்ணீர் கொடுங்கள் - தண்ணீர் குடிப்பதற்கு மட்டும் போதும். வேண்டுமானால் நான் எழுதியேகூட கொடுக்கிறேன்- பாசனத்திற்கு அல்ல நாங்கள் கேட்பது, குடிதண்ணீருக்குத்தான் என்று நான் சொன்னேன். அது நியாயம் என்று அவர் உணர்ந்தார். அதுகுறித்து பேசுவதற்கு கேரள அரசுக்கு அவர்கள் கடிதம் எழுதினார்கள். கேரள அரசிடத்தில் பேசுவதற்கு இன்னும் அவர்கள் ஒப்புதல் அளிக்கவில்லை. இருந்தாலும், இந்தச் சட்டமன்றக் கூட்டம் முடிந்ததற்குப் பிறகு மீண்டும் மத்திய அமைச்சர் அவர்களை வற்புறுத்தி அந்தப் பேச்சுவார்த்தைக்கு கேரள அரசை இணங்கச் செய்வதற்கு இந்த அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளும்.

முற்பகல் *10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்.

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தெளிவான விடைதான் தருவார்கள். ஆனால் இன்றைக்குக் கேட்டிருக்கிற இந்தக் கேள்வியில் அவர் **22-12-1953-ஆம் ஆண்டு வைகை அணை கட்டுவதற்கு முன்பு கிடைத்த அளவு தண்ணீர் மதுரை, பசும்பொன், இராமநாதபுரம் மாவட்ட வைகைப் பாசனப் பகுதிகளுக்குக் கிடைக்குமா என்பதுதான் கேள்வி. 1953-ல் கிடைத்த தண்ணீரைவிட, இப்போது பாதி அளவுகூட வைகைப் பாசனத்திற்குக் கிடைக்கவில்லை என்பதுதான் உண்மை. எனவே அந்தப் புள்ளிவிவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், நிலத்தடி நீரும் வைகைப் பகுதியில் அதிகமாக எடுக்கப்படுகிறது. மதுரை, திருபுவனம், சிவகங்கை, கடலாடி, அருப்புக்கோட்டை, இராமநாதபுரம், மானாமதுரை ஆகிய எல்லா நகரங்களுக்கும் வைகையிலே இருந்துதான் தண்ணீர் எடுக்கப்படுகிறது. எனவே நிலத்தடி நீரும் உறிஞ்சப்பட்டு வருகிறது. இவைகளை சமப்படுத்துவதற்கும், சரிப்படுத்துவதற்கும் மேலும் வைகையில், பெரியாறு பாசனத்தில் இருந்து, பெரியாறு அணைக்கட்டிலிருந்து, தண்ணீர் வைகைப் பாசனத்திற்கு விட்டு ஒருபோகச் சாகுபடியாவது வைகைப் பாசன

**உறுப்பினர் திரும்பப் பெற்றுக் கொண்டதால் அகற்றப்பெற்றது.

விவசாயிகளுக்குக் கிடைக்க உறுதியளிக்கின்ற வகையில் ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கு முன்னால், அமைச்சர் பதில்** என்று சொன்னீர்கள். வினாவில் இல்லாததை நீங்கள் மட்டும் கேட்டுக்கொண்டு இருக்கிறீர்கள். பழைய இராமநாதபுரம் மாவட்டம் என்று வினாவில் எங்கு இருக்கிறது? அதை நீங்களாகவே நினைத்துக் கொள்வதா? அந்த வினாவில் என்ன இருக்கிறது என்பதை நீங்கள் படியுங்கள். இராமநாதபுரம் மாவட்டத்தைப் பற்றி ஒன்றுமில்லை. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருட்டிணன் அவர்களுடைய ஒட்டுமொத்தமான கேள்வியை ஒரு வரியில் அடக்கலாம். அதாவது நாங்கள் வைகை பாசனதாரர்கள், இருந்தாலும் பெரியாறு தண்ணீரை எங்களுக்குக் கொடுக்க வேண்டும் இதைத்தான் அவர் கோடிட்டுக் காட்டினார். ஆனால் அதைப் பெரியாறு பாசனக்காரர்கள் உடனே மறுப்பார்கள், எங்கள் தண்ணீரைக் கொண்டுபோய் நீங்கள் கொடுக்கக்கூடாது என்று. ஆனால் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். வைகைத் தண்ணீரை எடுத்து பெரியாறு பாசனத்திற்கோ, பெரியாறு பாசனத்திற்கு உரிய தண்ணீரை எடுத்து வைகைப் பாசனத்திற்கோ இந்த அரசு தராது. அவரவர்களுக்கு உரிய பங்கை அவரவர்களுக்குத் தரும். உங்களுக்குச் சேரவேண்டியது. சேராமல் இருக்கிறது என்று சுட்டிக்காட்டினால், அதுகுறித்து அரசு நடவடிக்கை எடுக்கும். அதைத்தான் இந்த அவையிலே 4-வது முறையாக இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்லிக் கொண்டு இருக்கிறேன். ஆனால் எந்த ஆண்டும் இல்லாமல் சென்ற ஆண்டு, 77 நாட்களுக்கு வைகையிலே தண்ணீரை விட்டது கலைஞர் அவர்களுடைய அரசுதான். உங்களுக்கு அதிலே சந்தேகம் இருக்கக்கூடாது. ஒரு சொட்டுத் தண்ணீர்கூட வைகை பாசனத்திற்கு உரிய தண்ணீரை பெரியாற்றுப் பாசனத்திற்குத் தர இந்த அரசு ஒருபோதும் சம்மதிக்காது. அதைப்போல பெரியாற்றுப் பாசனத்திற்கு உரிய தண்ணீரை வைகைப் பாசனத்திற்கு எடுத்துக் கொடுக்க முடியாது. அவரவர்களுக்கு உரிய பங்கை அவரவர்களுக்குத் தரும். இதில் இந்த அரசு ஒரு முடிவோடு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்** என்று கூறியதைத் திருப்பப்பெற வேண்டும்.

** உறுப்பினர் திரும்பப் பெற்றுக் கொண்டதால் அகற்றப்பெற்றது.





**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1953-ல் இருந்து இதுவரையில் குறைந்து கொண்டு வருகிறது. அந்தப் புள்ளிவிவரங்கள் தரப்படவில்லை என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்று கூறியதைத் திரும்பப் பெறுங்கள்.

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை, பெரியாறிலிருந்து இராமநாதபுரம் பகுதிக்கு, வறண்ட பகுதிக்கு பாசனத்திற்கோ, குடிதண்ணீருக்கோ கொடுப்பதற்கு நாங்கள் ஒன்றும் மறுப்புச் சொல்லவில்லை. கட்டாயம் கொடுக்க வேண்டியதுதான். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் கிருட்டிணன் அவர்கள் தண்ணீர் குறைந்து கொண்டு வருகிறது என்று கூறினார். அதற்கு என்ன காரணம் என்றால், அந்த ஆறு வரும்போது பக்கத்தில் உள்ளவர்களை நாம் கவனிப்பதில்லை. அந்த வேஸ்ட் சைட் லேண்ட்-ஐ நாம் பார்த்துக் கவனிப்பதில்லை. அவர்களுக்குத் தண்ணீர் கொடுப்பதில்லை. ஆகையினால், அவர்கள் எல்லாம் ஆற்றுக்குள்ளேயே ஆயில் எஞ்சின் வைத்து அவர்கள் இஷ்டத்திற்குப் பாசன வசதி செய்து கொண்டிருக்கிறார்கள். இதை மாற்றக்கூடிய அளவில் இப்போது நீங்கள் கால்வாய் வெட்டக்கூடிய பகுதிகள் எல்லாம் நிலக்கோட்டை தொகுதிதான். நிலக்கோட்டை தொகுதிதான் சார், உங்களுக்கு இடம் கொடுக்கிறது. நிலக்கோட்டை தொகுதி மக்கள்தான் சார், உங்களுக்கு இடத்தை விட்டுக்கொடுக்கிறார்கள். ஆகையினால், அந்தப் பக்கத்தில் இருக்கிற சில ஆயிரம் ஏக்கருக்காவது பாசன வசதி செய்வதற்கு, நீங்கள் அந்தப் பக்கம் கொண்டு போகிற தண்ணீரின் மூலம் இவர்களுக்கும் பாசன வசதி செய்து கொடுக்கிற நிலையை ஏற்படுத்த வேண்டும். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் எல்லா வகையிலும் திறமையானவர்கள். இதையும் பார்த்து, பரிசீலித்து அந்தப் பகுதி மக்களுக்கு, குடிநீருக்கும், பாசனத்திற்கும் தண்ணீர் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அப்போதுதான் தண்ணீர் குறையாமல் அங்கே சென்று அடையும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

** உறுப்பினர் திரும்பப் பெற்றுக் கொண்டதால் அகற்றப்பெற்றது.

[1997 ஏப்ரல் 29

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. குடிதண்ணீரைப் பொறுத்தவரையில், எப்போதெல்லாம் மக்களிடம் இருந்து கோரிக்கை வருகிறதோ, அப்போதெல்லாம் இந்த அரசு அனுதாபத்தோடு அதைக் கவனித்து ஆவன செய்திருக்கிறது. குறிப்பாக வைகை அணையிலிருந்து பேரணைக்கு பை-பாஸ் வழியாக தண்ணீர் போவதை நிறுத்தி கீழே தண்ணீர் போதவில்லை என்று சொன்னபோதுகூட வைகை ஆற்றிலிருந்து குடிதண்ணீருக்கு நாங்கள் விட்டிருக்கிறோம்.

முற்பகல் 10-15

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னார்கள், தண்ணீர் குறைந்து கொண்டே வருகிறது என்று. அதற்குப் பல காரணங்கள் உண்டு. பருவ மழை குறைந்து வருகிறது; பாசனப் பகுதிகள் ஆங்காங்கே பெருகிக் கொண்டேதான் போகின்றன. வைகையினுடைய மொத்தப்பாசனம் 1 லட்சத்து 36 ஆயிரம் ஏக்கர்தான். ஆனால் இன்றைக்கு அவ்வளவு இருக்கிறதா என்றால் இல்லை. அந்தந்தப் பகுதிகளுக்குப் போய்க் கொண்டிருக்கிறது. ஆயக்கட்டுக்கு உட்படாதவர்கள்கூட ஆயில் என்ஜின் வைத்து இறைத்துக் கொண்டு போகிறார்கள். பல ஊர்களுக்குக் குடிநீர் கொடுக்க வேண்டி இருக்கிறது. எனவே, இவற்றை எல்லாம் வைத்துப் பார்க்கிறபோது, கொஞ்சம், கொஞ்சமாக கீழே வருகிற தண்ணீர் குறைந்து கொண்டு வருகிற நிலைமை உருவாகி இருக்கிறது. வருகிற தண்ணீரை நாங்கள் ஏதாவது குறைத்துக் கொடுத்தோம் என்றால், அதைத்தான் நீங்கள் கேள்வி கேட்கவேண்டும். எனவே, இருக்கிற தண்ணீரை நாங்கள் எவ்வளவு நியாயமோ, அந்த நியாயத்தின் அடிப்படையிலே பிரித்துக் கொடுக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த வினாவைப் பொறுத்தவரையில் **என்று சொல்வது—இந்த சட்டமன்றத் துறையினர் இந்த வினா விளக்கமாக இல்லாத நிலையில் எப்படி அனுமதித்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இதை இனிமேல் பார்த்துக் கொள்ள வேண்டும். தண்ணீர் போதிய அளவு கிடைக்க வழிவகை செய்யப்படுமா என்றால் எந்த இடத்திற்கு என்றே குறிப்பிடவில்லை. அதன்பிறகு எப்படி மாண்புமிகு உறுப்பினரிடம் விளக்கம் பெறாமல் துறையினர் இந்த வினாவை அனுமதித்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

வினா எண்கள் 731 மற்றும் 732 ஒத்திவைக்கப் பெறுகின்றன.

---

**உறுப்பினர் திரும்பப் பெற்றுக் கொண்டதால் அகற்றப்பெற்றது.



1997 ஏப்ரல் 29]

வினா எண் 733, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**733—**

**பெருந்துறை வட்டத்தில் கிடங்கு கட்டுதல்**

*5814—**திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பெரியார் மண்டலத்தில், பெருந்துறை வட்டத்தில் கிடங்கு கட்ட நிலம் வேண்டி அரசுக்குக் கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் கூட்டுறவு மண்டலத்திற்காக பெருந்துறை கிராமம் க.ச.எண். 381/7-ல் ஒரு நிலத்திற்கு முன்மொழிவு அனுப்பப்பட்டு இருப்பதாகவும், அனுப்பப்பட்ட முன்மொழிவுக்கு மேலே இன்னமும் அனுமதி கிடைக்கவில்லை என்பதாகவும் சொல்லப்படுகிறது. இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எழுதி, மாவட்ட ஆட்சியர் மூலமாக புறம்போக்கு நிலம் இருந்தால், அதை நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குத் தாருங்கள் என்று கேட்டபோது அவர்களிடம் இல்லாது, டாசிட்டிற்குச் சொந்தமான 381/7-ல் இரண்டரை ஏக்கர் நிலம் இருக்கிறது என்று சொல்லி, அதை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு

ஒதுக்குமாறு முன்மொழிவு அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்களும் இசைந்து இருக்கிறார்கள். விரைவில் ஒதுக்கப்பட்டவுடன், அந்த வேலை தொடங்கப்படும என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 734, திரு. டி. மணி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**734—**

**பெண் தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. திட்டம்**

***1074—திரு. டி. மணி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் முந்திரி ஆலைகளில் வேலை செய்யும் 40,000 பெண் தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. திட்டம் அமலாக்கப்பட்டுள்ளதா?

(ஆ) இல்லையெனில் இத்திட்டம் எப்போது அமலாக்கப்படும்?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) குமரி மாவட்டத்தில் மார்த்தாண்டம் பகுதியில் நித்திரவிளை, இடைக்கோடு, குழித்துறை ஆகிய இடங்களில் உள்ள முந்திரி ஆலைத் தொழிலாளர்களுக்கு, (ஆண்-பெண் அனைவருக்கும்) தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தை அமல்படுத்த ஒவ்வொரு இடத்திலும் ஒரு மருத்துவர் கொண்ட மருந்தகம் அமைக்க அரசு ஆணை வெளியிட்டுள்ளது; பெண் தொழிலாளர்களுக்கென தனி மருந்தகம் ஏதும் மாநிலத்தில் இல்லை.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்திரி ஆலையில் பணிபுரிகின்ற-தொழிலாளர்களுக்கு, பெண்களுக்கு தனி மருத்துவமனை இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் தந்திருக்கிறார்கள். அதை மீண்டும் அமைக்க, ஒரு ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா? அதேபோன்று மத்திய அரசு ஏற்கனவே இந்த இ.எஸ்.ஐ. திட்டத்திற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னாலே





அனுமதி தந்தது. இப்போது நம்முடைய செயலாளர் அளவிலே அது நிற்கிறதே தவிர. அடிமட்டத்திலே இந்த மருத்தகத்தை அமைக்க இன்னும் எவ்வளவு மாதங்கள் ஆகும்? எனவே, இதை விரைவாக அமல்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. குமரி மாவட்டத்தில் உள்ள நித்திரவிளை, இடைக்கோடு, குழித்துறை ஆகிய இந்த இடங்களில் தனித்தனியாக மூன்று இ.எஸ்.ஐ. டிஸ்பென்சரி துவங்குவதற்கு ஏற்கனவே அரசு உத்தரவிட்டுவிட்டது. இப்போது ரென்டட் பில்டிங் கிடைக்க வேண்டும். அதனால்தான் காலதாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது. இது அனைத்துத் தொழிலாளர்கள், ஆண், பெண் தொழிலாளர்கள். முந்திரித் தொழிற்சாலையிலே வேலை பார்க்கிற தொழிலாளர்களுக்குத்தான். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், இது ஏற்கெனவே நடைமுறையில் இருந்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 735, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு தொழிலாளர் நலந் துறை அமைச்சர்.

**735—**

**வேலையிழந்த தொழிலாளர்களைப் பணியமர்த்துதல்**

***5870—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர், புகளூர் சர்க்கரை ஆலையில் வேலையிழந்துள்ள தொழிலாளர்கள் மீண்டும் வேலைகோரி அரசுக்கு முறையீடு செய்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அவர்களை மீண்டும் பணியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இப்பிரச்சினையில், சுமுகமான உடன்பாடு ஏற்படாத நிலையில் அரசு நிறுவன மாற்றம் தொடர்பான பிரச்சினையையும் அதன்தொடர்பாக தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட வேலை இழப்புப் பிரச்சினையையும், தொழில் தீர்ப்பாயத்திற்கு அனுப்ப அரசாணை எண் 318, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை: நாள், 30-4-1993-இன் மூலம், ஆணை பிறப்பித்தது. இந்த அரசாணையை எதிர்த்து ஈ.ஐ.டி. பாரி (இந்தியா) லிமிடெட் நிர்வாகம், உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு எண் 11407/93 தாக்கல் செய்துள்ளது. இந்த ரிட் மனு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில் அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ள வாய்ப்புகள் தற்போது இல்லை.

முற்பகல் 10-20

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே இந்தப் பிரச்சினை ஒரு துயரமான பிரச்சினை. 700 தொழிலாளர்கள் வேலை செய்து வந்திருந்தார்கள். லாபகரமாக இயங்கிக்கொண்டிருந்த அந்தத் தொழிற்சாலை, ஈ.ஐ.டி. பாரி கம்பெனி கடந்த கால அரசாங்கத்தினுடைய முழு ஒத்துழைப்போடு கைப்பற்றிக்கொண்டது. கைப்பற்றிய முறையே சட்டரீதியாக முறைகேடானதாகும். அப்படி கைப்பற்றிக்கொண்ட அந்த நிர்வாகம் தொழிலாளர்களை—ஏமாற்றி காலனிகளிலிருந்து காலி செய்து விட்டால், அதேபோல் அவர்களுடைய சட்டரீதியான தொகைகளைப் பெற்றுக்கொண்டால்—மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்வதாக விண்ணப்பங்கள் எல்லாம் பெற்று, ஏமாற்றி காரியத்தை முடித்துக்கொண்டார்கள். இப்போது 400 தொழிலாளர்கள் வெளியிலே இருக்கிறார்கள். அதேபோல் தங்களுடைய சட்டரீதியான உரிமையை நிலைநாட்டிக்கொள்வதற்கு டிரிப்யூனலுக்கு ரெஃபர் செய்ததற்குப் பின்னரும்கூட, அதன்மீது ரிட் பெட்டிஷன் போட்டு தடுத்து நிறுத்துகிற முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். எனவே மாநில அரசு தன்னுடைய முழு செல்வாக்கைச் செலுத்தி, நியாயமற்ற முறையில் வெளியிலே வேலையிழந்து இருக்கிற அந்தத் தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுக்க தன் செல்வாக்கைப் பயன்படுத்துவதோடு—அந்த தொழிலாளர்களில் மூன்று பேர் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார்கள். 90 பேரின்மீது 307 பிரிவின்கீழ் கொலை வழக்கு இன்றைக்கும் பெண்டிங்கில் இருக்கிறது. எனவே அந்த வழக்கையும் வாபஸ் பெற்று, அந்தத் தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்குச் செல்வதற்குரிய உத்தரவாதத்தை ஏற்படுத்த அரசுமுன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதே அவையில் 29-8-1996 அன்று அந்தத்



தொகுதியின் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் வாசுகி முருகேசன் அவர்கள் குறுகிய கால வினா ஒன்றை எழுப்பி அதற்கு விளக்கமாக, துப்பாக்கிச் சூடு சம்பந்தமாக, வழக்கு சம்பந்தமாக பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் இந்தக் கேள்வியை மீண்டும் எழுப்பியிருக்கிறார்கள். இந்த அரசு தொழிலாளர் நலத்திலே அக்கறை உள்ள அரசு. ஏற்கெனவே நவபாரத பியூரோ அண்டு அலாய்ஸ் லிமிடெட் என்ற கம்பெனி ஈ.ஐ.டி. பாரிக்கு அதை அக்ரிமெண்ட் விற்பனை மூலமாகக் கொடுத்துவிட்டார்கள். கொடுக்கிறபோதே கிளாஸ் 7-லே ஒரு ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள்.

"It is expressly agreed that the transferee will not be liable to employ or retain the services of any work-man—employees of the transferee"

என்று ஏற்கெனவே இருக்கக்கூடிய உரிமையாளர் அதை வேறு ஒருவருக்கு விற்பனை செய்கிறபோது நிலத்தை, அதைப்போலவே அங்கு இருக்கக்கூடிய பொருள்களை மட்டும் எடுத்துக்கொண்டார்களே தவிர, தொழிலாளர்கள் பிரச்சினை குறித்து அதிலே அவர்கள் குறிப்பிட்டிருப்பது அவர்கள் சர்வீஸ் சம்பந்தமாக எந்த மாறுதலும் இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பயன்படுத்தித்தான் நம்முடைய தொழிலாளர் வர்க்கத்தைச் சார்ந்தவர்கள் இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லி கன்சிலியேஷனுக்கு வந்தார்கள். அரசு அதைப் பரிசீலித்தது. பரிசீலித்ததோடு மட்டுமல்லாமல் தீர்ப்பாயத்தற்கு அனுப்பி, இந்த க்ளாஸ் இருந்தாலும்கூட, அக்ரிமெண்ட் இருந்தாலும்கூட, தீர்ப்பாயம் அதைப் பரிசீலித்து, இதில் நியாயப் பூர்வமாக தீர்ப்பாயம் தீர்ப்பு வழங்கவேண்டுமென்று தொழிலாளர்கள் நலனிலே அக்கறை உள்ள காரணத்தினாலேதான் அதை அனுப்பி வைத்திருக்கிறது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயிர் இல்லாத மெஷினையும், உயிர் இல்லாத நிலத்தையும், உயிர் இல்லாத கட்டிடங்களையும் மட்டும் ஈ.ஐ.டி. பாரி எடுத்துக்கொண்டது. உயிர் உள்ள தொழிலாளர்களை எடுத்துக்கொள்ள மறுப்பது என்பது எந்தவகைப்பட்ட நியாயம் என்று எனக்குத் தெரியவில்லை. எனவே இந்த மாநில அரசு தன்னுடைய அதிகாரத்தை நுட்பமான வழிகளிலே பயன்படுத்தி, அந்தத் தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுக்க வைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று மீண்டும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நேரங்களில், law and Justice do not go together.

சட்டப்படியாக தொழிலாளர்கள் குறித்து அந்த விற்பனைப் பத்திரத்திலே இது கோடிட்டுக்காட்டப்பட்டிருக்கிறது. மாறாக நீதிமன்றத்திற்கு அல்லது வேறு தீர்ப்பாயத்திற்கு அரசு நியாயம் கேட்க அனுப்பி வைத்ததிலும். ரிட் மனு மூலமாக அவர்கள் 'ஸ்டே' வாங்கி இருக்கிறார்கள். 'ஸ்டே' வாங்கிய நிலையில், அரசு தொழிலாளர்களை பாதுகாக்கும் உரிமை உள்ள அரசாக இருந்தாலும், சட்டரீதியாக தலையிட முடியாது. இதுதான் நிலைமை. ஆனாலும் தொழிலாளர் உரிமை முறையாக பாதுகாக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வாசுகி முருகேசன்.

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட எவ்வளவோ பொய் வழக்குகளை நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் வாபஸ் பெற உத்தரவிட்டுள்ளார். அதுபோல் இந்தத் தொழிலாளர்கள் மீதும் போடப்பட்டுள்ள வழக்குகளை வாபஸ் பெறுவதுகுறித்து மாண்புமிகு அமைச்சரவர்கள் எந்தப் பதிலும் கூறவில்லை. அதுபற்றி விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலே விஸ்கோஸ் தொழிலாளர்கள் நடத்திய போராட்டத்தில் சட்டம் ஒழுங்கு சம்பந்தமாக கிரிமினல் வழக்கு போட்ட நோக்கில், மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் எழுந்து கேட்ட நேரத்திலே, அந்த வழக்கைத் திரும்பப் பெறுகிறேன் என்று முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். இந்த வழக்கையும் விசாரித்து, நம்முடைய முதல்வர் அவர்கள் நிச்சயமாக அதை ஆலோசித்து நல்ல தீர்ப்பு வழங்குவார்கள். உறுப்பினருடைய கோரிக்கை கவனத்தில்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கை மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 736, திரு. சி. ஞானசேகரன். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**736—**

**வேலூரில் சட்டக் கல்லூரி துவங்குதல்**

***4260—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) வேலூரில் அரசு சட்டக் கல்லூரி துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதெல்லாம் பிரச்சினைகள் ஏராளமாக வளர்ந்து வரக்கூடிய காலகட்டத்தில் வழக்கறிஞர்கள் அதிகமாகத் தேவைப்படுகிறார்கள். நல்ல வழக்கறிஞர்களை உருவாக்குவது அரசினுடைய கடமை. அதற்காக அரசு சட்டக் கல்லூரிகளை அமைக்க வேண்டும். இப்போது சென்னை மற்றும் பெரிய நகரங்களிலே சட்டக் கல்லூரிகள் இருக்கின்றன. எங்களுடைய வேலூர் பெரிய நகரமாக வளர்ந்து வரக்கூடிய இந்தக் காலகட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும் கருணை கூர்ந்து எங்களுடைய வேலூர் மாநகரிலே சட்டக்கல்லூரி அமைக்க முன்வருவார்களா? ஏற்கெனவே வேலூரில் நிறைய இடங்களும், நல்ல நீதிமன்ற வளாகங்களும் இருக்கின்றன. ஆகவே, அந்த இடத்தில் சட்டக் கல்லூரியை அமைக்க, மீண்டும் இதை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலூரிலா? சத்துவாச்சாரியிலா? (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழக அரசு 5 சட்டக் கல்லூரிகளை நடத்துகிறது. அவற்றில் ஆண்டு ஒன்றுக்கு 2,047 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இப்பொழுது, புதியதாக டாக்டர் அம்பேத்கர் திருப்பெயரில் ஒரு பல்கலைக்கழகத்தை அமைக்கின்ற பணியில் அரசு தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. அதற்கு குடியரசுத் தலைவருடைய அனுமதியும் மிக விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதற்காக, பெரிய நிதி ஒதுக்கீடு எல்லாம் தேவைப்படுகிறது. அந்தப் பணி முடிந்த பிறகு, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்து பரிசீலிக்கவிருக்கிறோம் என்பதை அவருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

[1997 ஏப்ரல் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் தெளிவாகப் பதில் சொல்லிவிட்டார். இதிலே இரண்டாவது கேள்விக்கு இடமே இல்லை.

வினா எண் 737, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

**737—**

**கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாக்குதல்**

***2800—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திரும்புறம்பியம் ஊராட்சி கால்நடை மருந்தகத்தைக் கால்நடை மருத்துவமனையாக உயர்த்தி கால்நடை மருத்துவர்களை நியமனம் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பாபநாசம் தொகுதி, திறப்புறம்பியம் ஊராட்சி கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருத்துவமனையாக உயர்த்தி, கால்நடை மருத்துவர்களை நியமனம் செய்ய, செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்புறம்பியம் ஊராட்சியிலே சுமார் 10,000 மக்கள் தொகை உள்ளதாகவும், அதைச் சுற்றியுள்ள கொண்டேத்தி, கொந்தகை, குருவாஞ்சி, கொத்தங்குடி, ஆலமரக்குறிச்சி, தட்டுமால் போன்ற பகுதிகளில் எல்லாம் உள்ள மக்கட்தொகை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அங்கு கால்நடைகளும் அதிகமாக இருக்கின்றன. மனிதனுக்கு உடல்நிலை சரியில்லை என்றால் வேறு வாகனங்களில் அழைத்துக் கொண்டு மருத்துவமனை இருக்கின்ற இடங்களுக்குச் செல்லலாம். ஆனால், ஆடு, மாடுகளைப் பொறுத்தவரையில், அவைகளுக்கு உடல்நலம் சரியில்லை என்றால் அங்கேயே பார்க்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருப்பதால், அந்தப் பகுதியிலேயே பல்லாயிரக்கணக்கான கால்நடைகள் இருக்கின்ற காரணத்தினால், அதை மருத்துவமனையாக உயர்த்திக் கொடுக்க, மீண்டும் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தில், திருப்புறம்பியம் கிராமத்தில் கால்நடை கிளை மருத்துவ நிலையம் இப்பொழுது செயல்பட்டு வருகிறது. இந்த ஒன்றியத்தில் சுவாமிமலை, பம்பைப்படையூர், கொத்தங்குடி ஆகிய 3 இடங்களில் கால்நடை மருந்தகங்கள் இயங்கி வருகின்றன. பொதுவாக, கால்நடை மருந்தகங்கள் கிராமங்களில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கையை கருத்திற்கொண்டும், அந்த ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே செயல்பட்டு வரும் மற்ற கால்நடை நிலையங்களை கருத்திற்கொண்டும், கால்நடை மருந்தகங்கள் துவக்கப்பட உள்ள கிராமத்திற்கும், ஒன்றியத்தில் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்ற கால்நடை கிளை நிலையங்களுக்கும் இடையே உள்ள தூரத்தைக் கருத்திற்குகொண்டு துவங்கப்படுகின்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை வருங்காலத்தில் முன்னுரிமை அடிப்படையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1997 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு காட்டில் உள்ள வன விலங்குகளின் கணக்கு எடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய 4 மாநிலங்களிலும் நேற்றும், இன்றும் ஒரே நேரத்தில் 4 மாநிலங்களைச் சேர்ந்த வனத்துறை அதிகாரிகள் மற்றும் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த நண்பர்கள், கல்லூரி மாணவர்கள் ஆகியோர் உதவியுடன் இந்த வன விலங்கு கணக்கு எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 738, திரு.வி. கோவிந்தன், மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

**738—**

**காட்டு யானைகளின் தொல்லைகளைத் தடுத்தல்**

***4450—திரு. வி. கோவிந்தன்:**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரணாம்பட்டு தொகுதி, சாரங்கல், அரவட்லா, மோர்தானா, மாதகடப்பா போன்ற மலைப்பகுதி கிராமங்களில் காட்டு யானைகளின் தொல்லைகளைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

[1997 ஏப்ரல் 29

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வடாற்காடு-அம்பேத்கர் மாவட்டம், பேரணாம்பட்டு தொகுதி, சாரங்கல், அரவட்லா, மோர்தானா, மாதகடப்பா போன்ற பகுதிகளில் யானைகளின் நடமாட்டம் பற்றி தகவல் அறிந்ததும் சிறப்புக் காவலர்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு அவை கிராமங்களுக்குள் வாராதவண்ணம், பள்ளங்கள் வெட்டியும், பட்டாசு வெடித்தும், டமாரம் அடித்தும் விரட்டப்படுகின்றன.

**திரு. வி. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு தொகுதியில் உள்ள சாரங்கல், அரவட்லா, மோர்தானா, மாதகடப்பா ஆகிய மலைப் பகுதிகளில் பெரும் அளவில் விவசாயப் பெருமக்கள் வாழ்கிறார்கள். அவர்களுடைய நிலத்தில் விளையும் கரும்பு, வாழை, நெல் போன்ற பயிர்களை எல்லாம் காட்டு யானைகள் புகுந்து நாசப்படுத்தி விடுகின்றன. கடந்த ஆண்டுகூட 10-ஆம் வகுப்பு மாணவியை காட்டு யானை கொன்றுவிட்டது. ஆகவே மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை நிலையை அறிந்து இந்த காட்டு யானைகள் எல்லாம் வராமல் தடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 739, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**739—**

### சத்துணவுக் கூடங்களில் முட்டைகள் வழங்குவதை முறைப்படுத்துதல்

***6695—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாகளுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவுக் கடன்களில் மாதத்தில் இரண்டாவது முறை வழங்கப்படுகின்ற முட்டைகள் கெட்டுவிடுகிறது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இவற்றை முறைப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1997 ஏப்ரல் 29]

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் மூலம் பள்ளிக் குழந்தைகளுக்கு மாதத்திற்கு 2 முறை வழங்கப்படுகின்ற முட்டைகளைப் பொறுத்தளவில் மாவட்டம் முழுவதும் அல்லது 2 மாவட்டம், 3 மாவட்டங்களுக்காகச் சேர்த்து முட்டை விநியோகம் செய்கின்றவர்கள் அதை கான்ட்ராக்ட்டிற்கு எடுத்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். கோழிப் பண்ணையிலிருந்து அந்த முட்டைகளை மொத்தமாக அவர்கள் கொள்முதல் செய்து ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கொண்டு வந்து, அங்கிருந்து அதைத் திரும்பவும் சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு விநியோகம் செய்கின்ற காரணத்தால் அந்த முட்டைகள் போய்ச் சேருகின்றபோது காலதாமதம் ஏற்படுகிறது. இதனால் இரண்டாவது முறை வழங்கப்படுகின்ற முட்டை கெட்டு அரசுக்கு பெரிய இழப்பும் அதே நேரத்திலே குழந்தைகளுக்கு முறையாக முட்டைகள் போய்ச் சேராமலும் இருக்கின்றன. எனவே அருள்கூர்ந்து இரண்டாவது முறையாக முட்டை வழங்கும்போது ஏற்படுகின்ற காலதாமதத்தைத் தவிர்க்க முன்கூட்டியே சேதம் ஆகாத முட்டை, பள்ளிக் குழந்தைகளுக்குச் சேர்கின்ற அளவிலே அதை வழங்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல அழுகிய முட்டைகள் வழங்கப்பட்டால் அதைத் திருப்பித் தரவேண்டும் என்ற நிபந்தனை ஒப்பந்தத்திலே இருக்கிறது. இருந்தாலும் இனிமேல் குறிப்பிட்ட நாளிலே ஒன்றியத்திலும், இருக்கக்கூடிய நிலையங்களிலும் முன்கூட்டியே வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. அமரமூர்த்தி.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு ஊழியர்களுக்குக் கொடுப்பதே மிகக் குறைவான சம்பளம், அவர்களுக்கு பில் பாஸ் செய்கின்ற நேரத்தில் சத்துணவு மேலாளர்கள்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி முட்டையைப் பற்றியது.

**திரு. டி. அமரமூர்த்தி:** தலைவர் அவர்களே, முட்டையும் சத்துணவுதான், அந்த சத்துணவு மேலாளர்கள் 15 சதவீதம் கமிஷன் கேட்கிறார்கள். ஆகவே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முட்டையைப் பற்றிக் கேள்வி இல்லையென்றால் உங்களுக்கு அனுமதி கிடையாது. திரு. வ. அன்பழகன்.

[1997 ஏப்ரல் 29

**திரு. வ. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களில் இரண்டாவது வாரம் வழங்கப்படுகின்ற முட்டைகள் கெட்டுவிடுகின்ற காரணத்தால்—நாங்கள் எல்லாம் படிக்கிற காலத்திலே பால் பவுடர் கொடுத்தார்கள்—அதைப்போல ஒரு வாரம் முட்டை, இரண்டாவது வாரம் பால் பவுடர் அல்லது பால் கொடுக்கின்ற திட்டத்தை நம்முடைய அரசு அமல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே முட்டை வழங்குகின்ற திட்டத்திலேதான் இந்த ஆண்டும் டாப்கோ நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப் பட்டிருக்கிறது. ஆக முட்டை, பால் பவுடர் வழங்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கோரிக்கையை எதிர்காலத்திலே பரிசீலிக்கலாம்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் பத்மா.

**டாக்டர் பத்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அழுகிய முட்டைகள் திருப்பித் தரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய காரணத்தால்—தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள தாலுக்காவாக நன்னிலம் தாலுக்கா இருப்பதால் அங்கு கோழி முட்டை வளர்ப்புத் தொழிலை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோழி முட்டை வளர்ப்பு என்று கோழி வளர்ப்பைப் பற்றிச் சொன்னார்கள். அது கால்நடைத் துறை சம்பந்தப்பட்டது. என்னுடைய துறை சம்பந்தப்பட்ட கேள்வி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினா எண் 740, திரு. கு. மனோகரன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**740—**

### காது கேளாதோர் பள்ளிக்குக் கூடுதல் வசதி

***6180—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, இலக்கியம்பட்டி அருகேயுள்ள அரசு காதுகேளாதோர் பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டிடங்களும், தங்கும் விடுதியும் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?



1997 ஏப்ரல் 29]

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நிதிநிலைக்குட்பட்டு புதிய கட்டிடம் எழுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தங்கத்திலே ஒரு குறை இருந்தாலும் தரத்தினில் குறைவது உண்டோ' என்றார் ஒரு கவிஞர். காது இருந்தும் செவிடர்களாய், வாய் இருந்தும் ஊமைகளாய் உள்ள தர்மபுரி அரசு காதுகேளாதோர் பள்ளியில் உள்ள மாணவர்கள் இட நெருக்கடியால் மிகுந்த அவதிப்படுகிறார்கள். அந்தப் பள்ளியிலே படித்துக் கொண்டும், இரவிலே அதே பள்ளியிலே தூங்கிக் கொண்டும், ஆடு, மாடுகளைப் போல் மிகுந்த கஷ்டமான சூழ்நிலையில் இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட நேரில் அந்தப் பள்ளிக்கு வந்திருந்தார்கள். ஆகவே, வாய் பேச முடியாத அந்த ஊமைகளின் நலனில் அக்கறை கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே அந்தப் பள்ளிக்கு ஒரு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து புதிய பள்ளிக் கட்டிடத்தையும், விடுதி கட்டிடத்தையும் கட்ட அவசியம் ஆவன செய்யவேண்டும். ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே இந்தக் கட்டிடம் எழுப்ப வேண்டும் என்பதற்காக பொதுப்பணித் துறையைச் சேர்ந்த பொறியாளர்களிடமிருந்து தகவல் பெறப்பட்டபோது 70 லட்சம் ரூபாய்க்கு அவர்கள் மதிப்பீடு செய்திருந்தார்கள். அது அதிகமான தொகை என்ற காரணத்தால் அதை பகுதி-2 திட்டத்தில் சேர்க்கலாமா என்பதற்கான கேள்வி எழுப்பப்பட்டபோது மாநிலத் திட்டக் குழு அந்தத் தொகை மிக அதிகமான தொகை என்று கூறி நிராகரித்து விட்டார்கள். கடந்த 13—2—1997 ஆம் நாள் அன்று அனைத்துத் தலைமை ஆசிரியர்கள் கூட்டம் நடைபெற்றபோது இதற்கான முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்தப் பள்ளியினுடைய தலைமை ஆசிரியரிடமிருந்து பொதுப்பணித் துறைப் பொறியாளர்கள் மூலமாக கட்டிடத்திற்கான மதிப்பீடு, வரைபடம் பெறப்படும் என்று சொன்னால் அது குறித்து பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[1997 ஏப்ரல் 29

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) கண்டமனூர் பகுதியில் தேவர் சிலை சேதமடைந்ததைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள பதட்ட நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறப்புக் கவன ஈர்ப்பு. கண்டமனூர் பகுதியில் தேவர் சிலை வைப்பதில் ஏற்பட்ட மோதல் குறித்து கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள். திரு. பெ. ஆசையன். திரு. பி. என். வல்லரசு, திரு. எல். சந்தானம், திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள். திரு. சி. ஞானசேகரன், திரு. ப. ரங்கநாதன், திரு. சி. வேலாயுதன், டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. பி.ஆர். சுந்தரம், திரு. டி. மணி, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. இ. கணேசன். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் திரு. ப. ரங்கநாதன் அவர்களை முதலில் அழைக்கிறேன்.

•

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 234 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கின்ற இந்த மாமன்றத்திலே பல்வேறுபட்ட சமுதாயத்தினர் இந்த அவையிலே அங்கம் வகிக்கிறார்கள். குறிப்பாக தமிழ்நாடு உட்பட அகில இந்திய ரீதியில் மகாத்மா காந்தி. டாக்டர் அம்பேத்கர், தமிழகத்தை எடுத்துக்கொண்டால், முத்துராமலிங்கத் தேவர், பெருந்தலைவர் காமராஜர், பெரியார், அண்ணா, எம்.ஜி.ஆர். போன்ற இந்த நாட்டுக்காக உழைத்த தலைவர்களுக்கும், இந்த நாட்டுக்காக அரும்பணி ஆற்றிய தலைவர்களுக்கும் சிலை வைப்பது என்று அந்தந்த தலைவர்கள் சார்ந்த கட்சியில் இருக்கின்ற தோழர்கள் எண்ணி தமிழகத்திலுள்ள அனைத்து பகுதிகளிலும் பல்வேறு தலைவர்களின் சிலைகளை நிறுவி இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பார்த்தோமானால், 23ஆம் தேதி தேனி அருகிலே கண்டமனூர் பகுதியிலே தேவர் சிலை உடைக்கப்பட்டதாகச் சம்பவம். அந்தச் சம்பவத்தையொட்டி ஒரு தரப்பினர் அதைப் பெரிதுபடுத்தி, பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான அரசு வாகனங்களை நொறுக்கி உள்ளதோடு, கடைகளுக்கும் தீ வைத்துள்ளார்கள். பொது மக்களுக்கு பல்வேறு சங்கடங்களையும், சிரமங்களையும் ஏற்படுத்தி உள்ளார்கள்.



முற்பகல் 10-40

அதையொட்டி. 25ஆம் தேதி ஒரு பிரச்சினை, மற்றொரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், அதை எதிர்த்து அங்கே தாக்குதலிலே ஈடுபட்டுள்ளார்கள்.

அதையொட்டி, 28ஆம் தேதி நேற்றைக்கு தேனி கண்டமனூர் சம்பவத்தையொட்டி உசிலம்பட்டியிலே மிகப் பெரிய கலவரத்தை உண்டாக்கி, அரசுக்குச் சொந்தமான பி.ஆர்.சி.யின் 6 பேருந்துகளை அடித்து நொறுக்கியதோடு அல்லாமல், பொது மக்களையும் தாக்கியதோடு, காவல் துறையினரையும் தாக்கி உள்ளார்கள். அங்கே ஒரு பதட்டமான சூழ்நிலை உருவாகி உள்ளது.

ஆக, ஒட்டுமொத்தமாக இந்த 3 நிகழ்வுகளையும் பார்க்கின்றபொழுது குறிப்பாக அரசியல் கட்சியிலே அங்கம் வகிக்கின்ற தலைவர்களும், சமுதாயத்திற்கு நான்தான் தலைவர் என்று சொல்லிக் கொள்கின்ற அந்தப் பகுதியிலே இருக்கிற தலைவர்களும், இப்படி நிகழ்வுகள் ஏற்படுகிற நேரத்தில், பொது மக்களுக்குப் பங்கம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பொதுச் சொத்துக்குச் சேதாரம் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் இந்தச் சமுதாயத் தலைவர்களுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் உண்டு.

ஆனால், அதற்கு மாறாக, அங்கே கலவரத்தைத் தூண்டி விடுவது, ஏதோ ஒரு 15 பிள்ளைகள் தெளிவு இல்லாமல் உணர்ச்சி வசப்படுகின்ற நேரத்தில், அந்தப் பகுதியிலே இருக்கின்ற சமுதாயத் தலைவர்களும் — அது எந்தச் சமுதாயமாக இருந்தாலும் அல்லது அரசியல்வாதிகளும், உள்ளூர் அரசியல்வாதிகள்—பல்வேறுபட்ட அரசியல்வாதிகளும் ஒன்றாக இணைந்து இதை நாம் பேசித் தீர்த்துக் கொள்வோம், அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு செல்வோம் என்று நினைக்காமல், கலவரத்தைத் தூண்டுவதிலே ஒரு சில குறிப்பிட்ட சமுதாயங்கள் ஈடுபட்டுள்ள காரணத்தினால் அங்கே சிறுபான்மை மக்கள் பெரிய இன்னல்களுக்கு நாள்தோறும் ஆளாகின்றார்கள், இது ஒன்று.

அதேநேரத்தில், சிலைகளை அமைக்கின்ற நேரத்தில் ஒருவர் வெண்கலச் சிலையை அமைப்பார். ஒருவர் சிமெண்ட் சிலையை அமைக்கிறார், ஒருசில பகுதியில். அது தானாகவே. ஒருசில ஆண்டுகள் கழிந்தபிறகு இந்த சிமெண்ட்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறப்புக் கவன ஈர்ப்பு என்றால் ரொம்பச் சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

[1997 ஏப்ரல் 29

**திரு. ப. ரங்கநாதன்:** சுருக்கமாகத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இப்பொழுது சுருக்கமாகச் சொல்வது மாதிரி எனக்குத் தெரியவில்லை. இன்னும் கொஞ்சம் சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** தேவர் சிலை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது எந்தச் சிலையாக இருந்தாலும் அதை உடைப்பது தப்பு.

**திரு. ப. ரங்கநாதன்:** முக்கியமான பிரச்சினை. இதிலெல்லாம் கொஞ்சம் விரிவாகப் பேச வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, சிறப்புக் கவன ஈர்ப்பு என்றால் விரிவாகப் பேசக்கூடாது. நீங்கள் சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** சரி, தலைவரே, சிமென்ட் சிலைகளையும் வைக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவர் என்று சொல்ல வேண்டும். 'தலைவரே' என்று சொல்லக்கூடாது.

**திரு. ப. ரங்கநாதன்:** பேரவைத் தலைவரவர்களே, சில பேர் பணம் அதிகமாக வசூலாகிவிட்டால் வெண்கலச் சிலைகளை வைக்கிறார்கள். ஆனால் பணம் குறைவாக வசூல் ஆகின்ற நேரத்தில் சிமென்டினாலும் சிலைகளை வைக்கிறார்கள். களிமண்ணிலேயும் சிலைகளை வைக்கிறார்கள். பிள்ளையார் சிலையெல்லாம் பிளாட்பாரத்திலே களிமண்ணிலேயே வைப்பார்கள். இப்படிப் பல்வேறு சிலைகள்.

இந்தச் சூழ்நிலையில் அந்தச் சிலை 25ஆம் தேதி தானாகவே உடைந்தும் விழுந்திருக்கலாம். அதைப் பெரிதுபடுத்தி அங்கே ஒரு கலவரத்தை உண்டுபண்ண, தூண்ட, நினைப்பவர்கள் இந்த ஆட்சிக்கு—இந்த ஆட்சிக் காலத்திலே கலவரத்தை உண்டுபண்ண வேண்டுமென்று ஒரு சதித் திட்டம் நடக்கிறதோ என்று தோன்றுகிறது.

ஆகவே, இதை முழுமையாக இந்த அரசு விசாரிக்க வேண்டும். அதேநேரத்தில் இப்படிச் சிலைகளை உடைப்பதும் கலவரங்களைத் தூண்டுவதும், அது யாராக இருந்தாலும், எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் பாரபட்சமின்றி மிகக் கடுமையான நடவடிக்கையை



1997 ஏப்ரல் 29] [திரு. ப. ரங்கநாதன்]

எடுக்க இந்த அரசு தயங்கக் கூடாது என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை-வீரன் அழகுமுத்துக் கோன் மாவட்டத்தில் இருக்கக்கூடிய தேவர் சிலை சில சமூக விரோதிகளால் அடித்து நொறுக்கப்பட்டிருக்கிறது. ஒரு சமுதாயத்தினுடைய வளர்ச்சிக்காகவும், ஒரு சமுதாயத்தினுடைய மேம்பாட்டுக்காகவும் அந்தச் சமுதாயத்தில் இருக்கக்கூடிய தலைவர்களுக்கு மரியாதை நிமித்தமாக சிலை வைப்பது தமிழ்நாட்டில் வாடிக்கையாக இருக்கிறது. ஒரு மாபெரும் தலைவருடைய சிலை இரவு நேரத்திலே சமூக விரோதிகளால் உடைக்கப்பட்டிருப்பதால் அந்தப் பகுதியில் மிகவும் பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால், வாயில்லாத ஜீவன்கள், ஆடு, மாடுகள் எல்லாம் தீயில் கருகியிருக்கின்றன. பல மோட்டார் சைக்கிள்கள், பல வீடுகள் தீயிலே கருகியிருக்கின்றன. இந்தச் சமூக விரோதிகளை அரசு அடையாளம் கண்டு ஒரு சிறிய பொறியாக இருக்கும்போதே உடனடியாக அவர்களைக் கைது செய்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுபோல ஒரு நிகழ்ச்சி தமிழ்நாட்டிலே எங்குமே நடைபெறாத அளவுக்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாயில்லாத ஜீவன் ஆடு, மாடுகளை தீயிலேயிட்டுக் கொளுத்திய அந்தச் சண்டாளர்களை அரசு உடனடியாகக் கைது செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்த அவையினுடைய கவனத்தை ஈர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். சந்தானம்.

***திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பல தடவை இந்த அவையிலே குறிப்பிட்டுக் காட்டியதுபோல, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் என்பவர் ஒரு இனத்திற்கு மட்டும் சொந்தக்காரர் அல்ல, இந்த நாட்டிற்கு, இந்த தேசத்திற்குச் சொந்தக்காரர் என்கிற நிலையை எடுத்துச் சொன்னதுபோல, இன்றைக்கு அவருடைய சிலை கண்டமனூரில் சில விஷமிகளால் உடைக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக அங்கே பல விளைவுகள் நடந்து கொண்டிருக்கின்றன. அங்கே நேரில் சென்று காண்கின்ற நேரத்திலே வீரணன் என்பவர் ஒரு சாராருக்கு, சார்புடையவர்களுக்கு தலைமை தாங்குகின்ற பொறுப்பினை ஏற்றிருக்கின்றவர், கடந்த காலங்களில், நமது அரசு

[திரு. எல். சந்தானம்] [1997 ஏப்ரல் 29

பொறுப்பேற்றிருந்த காலத்திலே, 17-9-1989ஆம் நாள் கூட அவர் இந்த இனக் கலவரத்தைத் தூண்டுகின்ற நோக்கத்தோடு ஏறக்குறைய ஆயிரம் பேரை அன்றைக்கு அந்தக் காவல் நிலையத்திற்கு, கண்டமனூர் காவல் நிலையத்திற்குக் கூட்டிச் சென்று அங்கே பெரிய கிளர்ச்சியை உண்டு பண்ணி காவல் நிலையத்தைத் தாக்கி, அங்கே இருக்கின்ற காவலர்களையெல்லாம் தாக்குகின்ற முயற்சியிலே ஈடுபடுகின்ற நேரத்திலே, அங்கு நடந்த துப்பாக்கிச் சூட்டின் காரணமாக 5 பேர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அதே நபர்தான் இன்றைக்கும் இந்தக் கலவரத்தை தூண்டுகின்ற நோக்கத்தோடு அவருடைய தலைமையில்தான் அங்கே வைத்திருந்த தேவர் திருமகனாருடைய சிலை உடைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சிலை உடைக்கப்பட்ட உடனே அங்கிருந்த அனைத்து இனத்தைச் சார்ந்த மக்களும் ஒன்றுகூடி அதை உடனடியாகத் திரும்பவும் வைக்க வேண்டுமென்று ஆர்வத்தோடு, நோக்கத்தோடு, அந்தச் சிலையை மீண்டும் தயார் செய்து வைத்திருக்கிறார்கள். அந்தச் சிலை வைக்கப்பட்ட இடம் என்பது ஒருவருக்குச் சொந்தமான இடம். அது பொதுவான இடம் இல்லை. ஒருவருக்குச் சொந்தமான இடத்திலே அங்கு முத்துராமலிங்கத் தேவர் பெயரால் படிப்பகம் வைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பட்டா நிலத்திலே அந்தப் படிப்பகம் அமைந்திருக்கின்ற இடத்திலே அந்தப் படிப்பகத்தினுடைய வாசலிலேதான் அந்தச் சிலை நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. நேற்றைக்கு நான் அங்கு சென்று அமைதியை ஏற்படுத்த வேண்டும், மீண்டும் மோதல்கள் வந்துவிடக் கூடாது. இன்றைக்கு நம்முடைய தோழமைக் கட்சியினுடைய ஆட்சி சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது.

முற்பகல் 10-50

இந்த ஆட்சிக்கு எந்தவிதமான களங்கமும், ஊறும் வந்துவிடக்கூடாது என்ற நோக்கத்தோடு, நான் அங்கு அமைதியை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் சென்றிருந்தபோது, அங்கிருந்த பாதிக்கப்பட்ட மக்களெல்லாம் அழுது புலம்புகின்ற நிலையைக் காண முடிந்தது. அங்கு சிறுபான்மையினராக இருக்கின்ற இனத்தவர்களை, பெரும்பான்மை இனத்தவர்கள் ப்ழி தீர்க்கின்ற கொடுமையைக் கண்டபோது, மனத்தை மிகவும் உருக்குவதாகவும், வருந்தக்கூடிய நிலையாகவும் தென்பட்டது. கான்கிரீட்டினால் கட்டப்பட்ட வீடுகளைக்கூட பெட்ரோல், மண்ணெண்ணெய் ஆகியவற்றை ஊற்றிக் கொளுத்துகின்ற காட்சியைக் காண முடிந்தது.



1997 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 25 பேர்களின் மோட்டார் பம்ப்செட்டுகள் கழற்றப்பட்டிருக்கின்றன. நேற்றையதினம் நான் அந்த மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளரைச் சந்தித்து, 'ஒவ்வொரு வீட்டிலும் அபாயகரமான ஆயுதங்கள், பெட்ரோல் குண்டுகள் போன்றவைகளெல்லாம் இருக்கின்றன. அவைகளை வைத்திருக்கும் இருசாராரிடத்திலும் அவர்கள் யாராக இருந்தாலும், அவர்களிடமிருந்து அந்த ஆயுதங்களைக் கைப்பற்றி அவர்கள்மீது நீங்கள் வழக்குத் தொடருங்கள். அதற்கு யாரும் இடையூறாக இருக்கமாட்டார்கள்' என்று சொல்லிவிட்டு வந்தேன். அதன்பிறகு அங்கிருந்த மக்களெல்லாம் அமைதியடைந்து, என்னை தேவர் சிலைக்கு மாலை அணிவிக்கச் சொன்னதன் அடிப்படையில், நானும் அவரை என்னுடைய தலைவராக ஏற்றுக்கொண்டிருக்கிற காரணத்தால், அதற்கு மாலை அணிவித்ததற்காக, அங்கிருந்த எஸ்.பி. அவர்கள் என்னைப் பார்த்து, 'உன்னைச் சுட்டுவிடுவேன்' என்று சொன்னார்கள். ''நாங்கள் நேதாஜி, தேவர் வழிகளில் வந்தவர்கள். சுடுவதற்கெல்லாம் பயந்தவர்கள் அல்ல, எப்படி தலைவர் கலைஞர் அவர்கள் சிறைக்குச் செல்லும்போது, அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தீக்குளித்துச் சாகிறார்களோ, எந்த அளவுக்கு அவர்களுடைய தலைவர் மேல் விசுவாசம் வைத்திருக்கிறார்களோ, அதுபோல நாங்களும் எங்களுடைய தலைவர் மேலே விசுவாசம் வைத்திருக்கிறோம். அவருக்காக எங்கள் உயிரே போனாலும், கவலைப்படமாட்டோம், மகிழ்ச்சியடைவோம்'' என்று நான் அந்த எஸ்.பி.யிடம் சொல்லிவிட்டு வந்தேன். அங்கிருக்கிற காவல் துறை அதிகாரிகள்தான் ஒரு சாராருக்கு ஆதரவாக இருந்துகொண்டு, அந்த மக்களை ஒடுக்குவதற்கான அத்தனை முயற்சிகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் இவ்வளவு தூரம் சொல்லியும்கூட, நேற்று இரவு பல வீடுகளின்மீது பெட்ரோல் குண்டுகள் வீசப்பட்டு பழனிச்சாமி மற்றும் இன்னொருவருடைய வீடும் காலை 8-00 மணியிலிருந்து எரிந்து கொண்டிருக்கின்றது என்ற தகவல்கள் கிடைக்கப்பெற்றன. எனவே, அங்கே மாவட்ட அதிகாரிகள் சரியாகச் செயல்படவில்லை என்ற காரணத்தால், டி.ஐ.ஜி. அவர்களே நேரில் அங்கு சென்று முகாமிட்டு இருந்தபோது, அவரிடம் சொல்லிவிட்டு வந்தேன். 'இங்கே இருக்கிற மாவட்டக் காவல் துறை அதிகாரிகள் சரியாகச் செயல்படவில்லை' என்று சொல்லிவிட்டு வந்தேன்.

[1997 ஏப்ரல் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் விரைவில் பேசி முடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். நீங்கள் என்னைப் பார்க்காமலேயே பேசிக் கொண்டு இருக்கிறீர்கள். சீக்கிரமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே டிஐஜி. அவர்கள்தான் முகாமிட்டு இவைகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, சமூகவிரோதிகள் யாராக இருந்தாலும், தயவுதாட்சணியம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கக்கூடிய இந்த அரசு, அவர்கள் மீது உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். அந்த மாவட்டப் பொறுப்பிலே இருக்கின்றவர்கள் இதுபோன்ற நிகழ்ச்சிகளைத் தூண்டுகின்றவர்களாக செயல்படுகின்ற காரணத்தால், அவர்கள்மீதும் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே வீரணன் என்பவன் ஏற்கெனவே கலவரங்களைத் தூண்டும் விஷயத்தில் ஏ-1 குற்றவாளியாக இருந்தவன். அவன்தான் இந்தக் கலவரங்களையெல்லாம் தூண்டிக் கொண்டிருக்கிறான். அவன்மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி,

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவர் சிலை உடைப்பு சம்பந்தமாக கடந்த 23, 25 மற்றும் 28 ஆகிய தேதிகளில் அந்தப் பகுதியில் ஏற்பட்ட படுமோசமான சூழ்நிலைகளைப் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே பேசியிருக்கிறார்கள். நடைபெற்ற நிகழ்ச்சியின் பின்னணியைப் பார்க்கும்பொழுது, காவல்துறை இந்தச் சம்பவம் பற்றி சிறந்த கண்ணோட்டத்தோடு செயல்பட்டதா, உரிய நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறதா என்று கேட்டால், இல்லையென்றுதான் சொல்லவேண்டும். ஏதோ ஒரு சாராருக்கு ஆதரவாகச் செயல்படுவது போலவும், அதன் காரணமாக நிலைமைகள் கட்டுக்கடங்காமல் போய்விட்டது போலவும் தோன்றுகிறது. எனவே, நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதெல்லாம், இந்தச் சம்பவம் மேலும் வளராமல் தடுப்பதற்கு, அதிகப்படியான காவல்துறைப் பணியாளர்களை அமர்த்தி இதைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்வதுதான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழியாக இருக்கும். எல்லாச் சமூகத்தினரையும் சேர்த்து, ஒரு அமைதிக் குழுவை ஏற்படுத்தி அதன் மூலமாக இங்கே பரவி வருகின்ற இந்தத் தீய செயல்களைத் தடுத்து





நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பிரச்சினைகள் தமிழகத்தில் ஆங்காங்கே கொஞ்ச காலமாக நடந்து கொண்டிருக்கின்றன. இதுபோன்று சிலை உடைக்கும் பழக்கம் தமிழகத்தில் உள்ளதைப் போல மற்ற மாநிலங்களில் உள்ளதா என்பது சந்தேகமாக இருக்கிறது. இந்தச் சிலை உடைப்புச் சம்பவங்களைக் குறைப்பதற்கு ஏதாவது வழியிருக்கிறதா என்பதை அரசு சிந்திக்க வேண்டும். ஆங்காங்கே உருவாகக்கூடிய தலைவர்கள் தன்னுடைய செல்வாக்கை அந்தப் பகுதியில் பதித்துக் கொள்ள, ஜாதித் தலைவர்களுக்கு சிலை அமைப்பது, அதில் அவர்களுடைய பெயரை வைத்துக் கொள்வது என்பது பழக்கமாகிவிட்ட காரணத்தால் இதுபோன்ற சம்பவங்கள் நடக்கின்றன. எந்த இடத்தில் சிலை வைத்தால் பாதுகாப்பாக இருக்கும் என்பதையும், ஒரு இடத்தில் சிலை அமைக்கப்பட்டால் அதனால் பின்னால் ஏதேனும் பிரச்சினைகள் வருமா என்பதையும் முற்றிலுமாக நீண்டகால நோக்கோடு அரசு ஆராய்ந்து அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக ஜாதி அடிப்படையில் பிரச்சினைகள் வருகின்றன. ஒவ்வொருவருக்கும் அவருடைய ஜாதி பெரியது. எந்த ஜாதியைச் சேர்ந்த தலைவர்களானாலும், தன்னுடைய பேச்சுகளின் மூலம், செயல்பாடுகளின் மூலம், ஒற்றுமையாக இருக்கக்கூடிய சமுதாயத்தை பிளவுபடுத்தக்கூடாது, பிரச்சினை வரக்கூடாது என்ற அளவில் ஆலோசனை செய்து, ஒற்றுமை ஏற்படுத்தக்கூடிய ஒரு சிந்தனையோடு நடந்துகொண்டால் இதுபோன்ற பிரச்சினைகள் வராது. என்னுடைய ஊரில் சமீபத்தில் இப்படிப்பட்ட ஒரு பிரச்சினை நடந்தது. உடனே அமைதிக் குழுவைக் கூட்டினோம். இரண்டு தரப்புகளிலிருந்தும்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விரைவிலே பேசி முடியுங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** இனிமேல் இதுபோன்ற பிரச்சினைகள் உங்களுடைய பகுதியில் வந்தால், இதுபோல், யாராவது உங்களுடைய பகுதியில் செய்தால், அரசாங்கத்திற்கு யார் அவர் என்று நீங்கள் சுட்டிக்காட்ட வேண்டுமென்று சொன்னோம். இல்லாவிட்டால் இந்த

[திரு. சி. வேலாயுதன்] [1997 ஏப்ரல் 29

ஊரில் பஸ் ஓடாது என்று முடிவு செய்தோம். யார் என்று சுட்டிக்காட்ட முடியாத பட்சத்தில், அந்த அமைதிக் குழுவைச் சேர்ந்தவர்கள் பஸ் சேதத்திற்குண்டான பணத்தைக் கட்டியதற்குப் பிறகு பஸ் ஓடியது. எனவே, இதுபோன்ற பிரச்சினைகள் வந்தவுடனே, அரசாங்கத்தினுடைய சொத்தை உடைப்பது என்று சொல்லக்கூடிய ஒரு பழக்கம் நம்முடைய மாநிலத்தில் ஒரு கெட்ட பழக்கமாக இருக்கிறது. இதைத் தடுப்பதற்கு அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து இழப்பிற்குண்டான பணத்தை வசூல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 23-ஆம் தேதியன்று, மதுரை மாவட்டம் கண்டமனூரில் நடந்த தேவர் சிலை உடைப்பைத் தொடர்ந்து அங்கே பதட்டமும், துப்பாக்கிச் சூடும் நடந்து அங்கே இருவர் படுகாயம் அடைந்தும் இருக்கிறார்கள். இதிலே நான் என்னுடைய கருத்தாகச் சொல்லிக்கொள்ள விரும்புவது, ஜாதித் தலைவர்களுடைய சிலைகளை உடைப்பதால் எந்த ஜாதிக்கும் பலன் கிடையாது. எந்த ஜாதியினுடைய நலனும் பாதுகாக்கப்படுவதும் கிடையாது. ஆனால் சில சமூகவிரோத சக்திகள், ஒவ்வொரு ஜாதியிலும், உள்ள பண பலம் மிக்கவர்கள் மற்றும் உள்ளூர் அரசியல்வாதிகளால் தூண்டப்பட்டு, இந்த மோசமான செயல்களைச் செய்வதற்கு ஆளாகின்றனர். எனவே இதுபோன்ற சிலை உடைப்புச் சம்பவங்கள் தமிழகத்திலே பல இடங்களில் நடந்து கொண்டிருக்கின்றன. பாலக்காட்டிலே அம்பேத்கர் சிலை உடைக்கப்பட்டிருக்கிறது. சூரணாம்பட்டிலே அம்பேத்கர் சிலை உடைக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இதில் வேதனை தரக்கூடிய விஷயம் என்னவென்றால் இந்தச் சிலை உடைப்பு சம்பவங்களில் ஈடுபட்ட குற்றவாளிகள் உடனடியாக கைது செய்யப்படுவது கிடையாது. இந்தச் சிலை உடைப்புச் சம்பவங்கள் எதிர்காலத்திலே தேவையற்ற பிரச்சினைகளையும், தேவையற்ற சமூக மோதல்களையும் உருவாக்க வழிவகுக்கும். சரியான குற்றவாளிகளைக் கண்டுபிடித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்ய வேண்டும். அதுமட்டுமல்லாமல் அரசியல் கட்சிகளும் முழுமையான மனதோடு, பகுத்தறிவு மனதோடு பங்குகொண்டு, தேவையற்ற சமூக மோதல்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



1997 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-00

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை-வீரன் அழகுமுத்து மாவட்டத்தில் கண்டமனூரில் தேவர் சிலை சேதம் அடைந்ததைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த சிறப்புக் கவன ஈர்ப்பில், தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. ரங்கநாதன் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் திரு. இ. கணேசன் அவர்களும், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் திரு. சந்தானம் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. மணி அவர்களும், பாரதீய ஜனதா கட்சியின் சார்பில் திரு. வேலாயுதன் அவர்களும், தேவேந்திரர் சங்கத்தின் சார்பில் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும் இங்கே உரை நிகழ்த்தியிருக்கிறார்கள். இது பற்றிய விவரக் குறிப்பை இந்த அவையின் முன் வைப்பது சிறப்புடையது என்று நான் கருதுகின்றேன்.

வைகை-வீரன் அழகுமுத்து மாவட்டம், கண்டமனூரில் தேவர் பேரவை சமுதாயக் கூடத்தின் எதிரில் தேவர் சிலை ஒன்று சில மாதங்களுக்கு முன் நிறுவப்பட்டு, அது இன்னும் திறக்கப்படாமல் உள்ளது. பட்டா நிலத்தில் அந்தச் சிலை வைக்கப்பட்டிருந்தபோதிலும் கூட, அந்தச் சிலையை நிறுவுவதற்கு உள்ளூரில் ஒரு பிரிவினர் எதிர்ப்புத் தெரிவித்து வந்திருக்கின்றார்கள். இந்நிலையில், 23-4-1997 அன்று காலை இந்தச் சிலையின் இரண்டு கைகளும் சேதமடைந்திருந்தன. இதையடுத்து, கண்டமனூரில் இரு பிரிவினருக்கும் இடையே பதட்ட நிலை ஏற்பட்டது. பேச்சுவார்த்தை நடத்தப்பட்டபின், சேதமடைந்த சிலைக்குப் பதிலாக புதிய சிலை ஒன்று அதே இடத்தில் 24-4-1997 அன்று காலை வைக்கப்பட்டது. காலை 11.00 மணிக்கு தேவர் பேரவையைச் சேர்ந்த சிலர், சிலைக்குப் பக்கத்திலுள்ள 150 அடி உயரமான 'மைக்ரோ வேவ்' கம்பத்தில் தேவர் பேரவையின் கொடியை ஏற்றினார்கள். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கூடிய சுமார் 500 பேர்களும், அவர்களுக்கு எதிராகக் கூடிய சுமார் 800 பேர்களும் வன்முறையில் ஈடுபட்டார்கள். சுமார் 100 பேர் மேலத் தெருவில் நாட்டு வெடிகுண்டுகளை வீசியதோடு, இரண்டு வீடுகளுக்குத் தீயும் வைத்தனர். சேதத்தின் மதிப்பு இரண்டு இலட்சம் ரூபாய் ஆகும். மற்றொரு கும்பல், தெற்குத் தெருவில் வீடு ஒன்றுக்கும், வைக்கோல் போர் ஒன்றுக்கும் தீ வைத்ததில் 50,000 ரூபாய்

மதிப்புள்ள பொருட்கள் சேதமடைந்தன. ஆண்டிப்பட்டி தாசில்தாரின் ஆணையின் பேரில் கும்பலைச் சட்டவிரோதமான கும்பல் என அறிவித்து, கலைந்து செல்ல, கண்டமனூர் காவல்துறை ஆய்வாளர் உத்தரவிட்டும், கலையாமல் வன்முறையில் ஈடுபட்டதால், ஒரு ஆய்வாளருக்கும், 8 காவலர்களுக்கும் காயம் ஏற்பட்டது. வன்முறையில் தொடர்ந்து ஈடுபட்டவர்களைக் கலைக்க காவல் துறையினர் கண்ணீர் புகைக் குண்டுகளை உபயோகித்தும், தடியடி நடத்தியும் பலன் இல்லாததால், துப்பாக்கிச் சூடு நடத்தியதில், கண்டமனூரைச் சேர்ந்த 25 வயதுடைய முருகன் மற்றும் டி. மீனாட்சிபுரத்தைச் சேர்ந்த வேலுச்சாமி என்ற சின்ன வேலுச்சாமி ஆகிய இருவரும் காயமடைந்தார்கள். காயமடைந்த முருகன், மதுரை அரசு மருத்துவமனையிலும், வேலுச்சாமி என்ற சின்ன வேலுச்சாமி ஆண்டிப்பட்டி அரசு மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். வன்முறைச் சம்பவங்கள் குறித்து இரு வழக்குகளும், துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து ஒரு வழக்கும் கண்டமனூர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. வழக்குகள் புலன் விசாரணையில் உள்ளன. சம்பவ இடத்தில் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நிலைமை கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இந்தச் சிலை வைப்பதில் ஏற்பட்ட கலவரத்தைப் பொறுத்தவரையில், முதல் நாள் இந்தச் சிலையின் கைகள் உடைக்கப்பட்டு, மறுநாளே, அங்கு வேறு சிலை வைக்கப்பட்டது என்பதைப் பார்க்கும்போதே, அது வெண்கலச் சிலையாகவோ அல்லது கருங்கல் சிலையாகவோ அமைக்கப்படவில்லை என்பதை நாம் யூகிக்க வேண்டியிருக்கிறது. தெளிவாக அது எனக்குத் தெரியாது; அப்படி யூகிக்க வேண்டியிருக்கிறது. இங்கே உறுப்பினர்கள் எடுத்துக்காட்டியதைப் போல, நம்முடைய ரங்கநாதன் அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல, பெரிய தலைவர்களுக்குச் சிலை வைக்கத் துவங்கும்போது, அது என்றும் நிலைத்து நிற்கக்கூடிய சிலையாக, ஒன்று கருங்கல்—கருங்கல்கூட, கல் பட்டால் அல்லது உளி பட்டால், இரும்புத் துண்டுகள் பட்டால் அதனுடைய உடலிலே உள்ள அவயவங்கள் ஊனமுறக்கூடும்—ஆகவே வெண்கலச் சிலைகள் நிறுவுவதுதான் ஏற்புடையது; சாலப் பொருத்தமுடையது. என்னைக்கூடப் பல பேர் அழைப்பார்கள்: அண்ணா சிலை திறக்க வரவேண்டுமென்று அழைப்பார்கள். அப்படி அழைக்கின்ற நேரத்திலே, என்ன சிலை என்று கேட்பேன். அது பொம்மைச் சிலையாக இருந்தாலோ அல்லது 'ப்ளாஸ்டர் ஆஃப் பாரிஸ்' என்று சொல்வார்களே, அதிலே செய்யப்பட்ட சிலையாக இருந்தாலோ நான் அதற்கு ஒப்புதல் தருவதில்லை. வெண்கலச் சிலையாக இருந்தால் மாத்திரம்தான், அல்லது ஒருவேளை கருங்கல் சிலையாக இருந்தால் மாத்திரம்தான் ஒப்புதல் தருவது வழக்கம். இல்லாவிட்டால், அந்தச் சிலைகள் எந்த கதிக்கும் ஆளாகலாம் என்ற நிலையில் அவைகளுக்கெல்லாம் நான் ஒப்புதல் தருவதில்லை. இப்பொழுது, சிலைகள் வைப்பது என்பது நண்பர் வேலாயுதன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தமிழ்நாட்டில் ஏராளமாகப் பெருகிக் கொண்டிருக்கிறது என்பதை மறுக்கவில்லை. பெரிய தலைவர்களுக்கு, நம்முடைய மனம் நிறைந்த தலைவர்களுக்கு, நாம் என்றைக்கும் போற்றுகிற தலைவர்களுக்கு, நமக்கு வழிகாட்டிகளாக வருகிற தலைவர்களுக்கு, சிலை வைப்பதிலே தவறில்லை. ஆனால், 'அளவிற்கு மீறினால் அமிர்தமும் நஞ்சாகும்' என்கிற அந்தப் பழமொழியையும் நாம் மறந்துவிடக்கூடாது. அப்படி அளவுக்கு மீறுகிற காரணத்தினால்தான், இப்படி, இப்போது, அமிர்தம் எல்லாம் கூட நஞ்சாகிக் கொண்டு வருகிறது, சிலை வைக்கிற விவகாரத்திலே.



முற்பகல் 11-05

சிலை வைப்பது, ஒரு சாரார் அதை உடைப்பது, இன்னொரு சாரார் உடனே போர்க் கொடி பிடிப்பது, இருசாராருக்கும் இடையிலே ஒரு களம் அமைவது, அந்தக் களத்திலே இரத்தம் சிந்துவது, இப்படிப்பட்ட வன்முறைச் சம்பவங்கள், இன்றைக்குத் தமிழகத்திலே பல இடங்களிலே நடைபெறுவதைக் காணும்போது மிகுந்த வேதனையாக இருக்கிறது. எனவே, அரசினுடைய அனுமதி இல்லாமல், அரசுத் துறையிலே உள்ளவர்களுடைய அனுமதி இல்லாமல், எங்கேயும் சிலை வைக்கக் கூடாது; நாம் அத்தகைய அனுமதியைப் பெற்றுத்தான், சிலை வைக்க வேண்டுமென்ற ஒரு ஏற்பாட்டை, சிலை வைக்கிறவர்கள், தங்களுக்குள்ளாகவே வகுத்துக் கொள்வார்களேயானால், இத்தகைய அசம்பாவிதங்களுக்கு, விரும்பத்தகாத சம்பவங்களுக்கு இடமே ஏற்படாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொதுச் சொத்துக்களுக்கு ஊனம் விளைவிப்பது, சேதம் விளைவிப்பது என்பது, இன்றைக்குச் சர்வசாதாரணமாகி விட்டது. எந்த ஒரு சம்பவமாக இருந்தாலும், ஒருவர் கொலை செய்யப்பட்டார் என்ற வதந்தியைக் கிளப்பி விட்டால்கூட, அது உண்மையா, அல்லவா என்று தெரிந்து கொள்ளாமலேயே, நெல்லை மாவட்டத்தில், சில பஸ்கள் உடைக்கப்பட்டு, நொறுக்கப்பட்டு, தீயிடப்பட்ட செய்தியெல்லாம் அண்மையிலே வெளி வந்தது. சாலை மறியல் என்பது—எதற்கெடுத்தாலும் இப்போது சாலை

மறியல், ஒரு 'ஃபேஷன்'—ஆகவே ஆகிவிட்டது. நியாயத்திற்காகச் சாலை மறியல் நடந்தால், அதிகாரிகள் சென்று, அவர்களைச் சமாதானப்படுத்தி, அந்தச் சாலை மறியலுக்கான காரணங்களை உணர்ந்து, அந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும். ஏதோ எடுத்ததற்கெல்லாம் சாலை மறியல் என்று இன்றைக்குச் செய்கிறார்கள். இந்தச் சாலை மறியலில் ஈடுபடுகிறவர்கள் பெரும்பாலும் பொதுமக்கள் அல்லர்; சில கட்சிக்காரர்கள்; இந்த அரசுக்கு விரோதமான கட்சிக்காரர்கள்தான் இந்தக் காரியங்களிலே ஈடுபடுகிறார்கள். அதுபோலவே, சிலை வைக்கிற இந்த நிகழ்ச்சியிலும்கூட, ஏதாவது ஒரு கலவரம் வரவேண்டுமென்று—நண்பர் திரு. ரங்கநாதன் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல—இத்தகைய சதிவேலைகளிலே சிலபேர் ஈடுபடுகிறார்கள். இதற்கெல்லாம், ஒரு ஒழுங்குமுறையை. ஒரு வரையறையை உருவாக்க வேண்டுமென்று அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. அது சாலை மறியலானாலும் அல்லது சிலை வைப்பது போன்றவைகளில் ஏற்படுகின்ற குழப்பங்களானாலும், இதற்கெல்லாம் ஒரு ஒழுங்குமுறை வேண்டும். சட்டத்தால் மாத்திரம் ஒழுங்குமுறையைக் கொண்டு வரமுடியாது. சமுதாயத்தை மேம்படுத்த வேண்டும், சீர்த்திருத்த வேண்டும், ஒழுங்குபடுத்த வேண்டுமென்று எண்ணுகின்ற, அந்தந்தப் பகுதியிலேயுள்ள பெரிய தலைவர்கள், அந்தத் தலைவர்களுக்குக் கீழே இன்றைக்குப் பணியாற்றுகின்ற தலைவர்கள், முன்னோடிகளாக இருப்பவர்கள் முன்வந்து, ஒரு அமைதியான சூழ்நிலையைத் தமிழகத்திலே தொடர்ந்து காப்பாற்றிட முன்வர வேண்டுமென்று, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமாக நினைவுபடுத்தி அமைகின்றேன். வணக்கம்.

## (ஆ) மதுரை வில்லாபுரத்தில் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தினர் நடத்திய ஊர்வலத்தின்போது பொதுமக்களின் சொத்துக்கள் சேதமடைந்தது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 28-4-1997 அன்று, மதுரை வில்லாபுரத்தில், இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தினர் நடத்திய ஊர்வலத்தின்போது, பொதுமக்களின் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தது குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வ. வேலுசாமி, திரு. எம். முத்துராமலிங்கம், திரு. கோ. தளபதி, திரு. பி.என். வல்லரசு, திரு. எல். சந்தானம் ஆகியோர், மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் திரு. வ. வேலுசாமி அவர்களைப் பேச அழைக்கிறேன்.



**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம், மதுரை மாநகராட்சியினுடைய 59-வது வட்ட உறுப்பினர் லீலாவதி அவர்களுடைய கொலைக்குக் கண்டனம் தெரிவித்து, இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தினர், அதனுடைய மாநிலச் செயலாளர் திரு. ரவீந்தரன் என்பவருடைய தலைமையிலே, ஊர்வலத்தை ஆரம்பித்திருக்கிறார்கள்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

அது, மதுரை, நேதாஜி சிலையிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு, மேலமாசி வீதியிலே வரும்போது, அங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ஒருவரது கடை சூறையாடப்பட்டிருக்கிறது. பின்பு, அது ஜெய்ஹிந்த்புரம் வழியாக வரும்போது, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முன்னாள் வட்டச் செயலாளர் திரு. விஜயன் அவர்களுடைய வீடும் அடித்து உடைக்கப்பட்டிருக்கிறது. பின்பு, வில்லாபுரத்திலே, திரு. சங்கரய்யா, மாநிலச் செயலாளர் அவர்களுடைய தலைமையிலே கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போது, அங்கிருந்து ஒரு கூட்டம் சென்று, முத்துராமலிங்கம் என்பவருடைய வீட்டை அடித்து நொறுக்கி, அங்கே இருக்கக்கூடிய பீரோ, கிரைண்டர், டெலிவிஷன் பெட்டி, இப்படி அனைத்துப் பொருள்களையும் வெளியே எடுத்துச் சூறையாடிச் சென்று, அந்த வீட்டிற்கு தீ வைத்துக் கொளுத்தியிருக்கிறார்கள். பின்பு அங்கிருந்து சுமார் 1½ பர்லாங் தூரத்திலே இருக்கக்கூடிய மீனாட்சிபுரத்திற்குச் சென்று, அங்கே அவருடைய உறவினரான காளியம்மாள் என்பவரது வீட்டை அடித்து, அதற்கும் தீ வைத்துக் கொளுத்தி, பின்பு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த கண்ணுசாமி அவர்களுடைய வீட்டிற்குச் சென்று, அங்கேயும் அடித்து நொறுக்கியிருக்கிறார்கள்.

முற்பகல் 11-10

ஜனநாயக வாலிபர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் திரு. ரவீந்திரன் அந்த ஊர்வலத்திலே கலந்துகொண்டிருக்கிறார். வில்லாபுரத்திலே திரு. சங்கரய்யா அவர்கள் கலந்து கொண்ட பொதுக்கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போது இப்படிப்பட்ட ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. இதிலே திருமதி லீலாவதி அவர்களின் கொலைக்குப் பின்பாக எங்களுக்குக் கிடைத்த தகவலின்படி, அவர்களை எதிர்த்துப் போட்டியிட்ட திருமதி வள்ளி அவர்களுடைய தம்பி ஒருவரால தான் அந்தக் கொலையே நடந்து இருக்கிறது. ஆனால் நம் நாட்டினுடைய சட்ட அமைப்பு ஒருவர் என்றாலும் அவருக்குப் பின்னணியில்

இருக்கக்கூடிய முக்கியமான நபர்களின்மீது எல்லாம் வழக்கினைக் கொடுத்துவிடக்கூடிய காரணத்தினால் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டுவிடக்கூடிய நிலையில் இருக்கிறது; எங்களுடைய கட்சியில் இருக்கக்கூடிய முக்கியமான நபர்களின்மீது எல்லாம் வழக்கு தொடரப்பட்டு அவர்கள் அனைவருமே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 6 பேர் மீது வழக்குத் தொடுக்கப்பட்டு, 6 பேருமே கைது செய்யப்பட்டுவிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னவுடன் காவல் துறையினர் உடனடியாகச் செயல்பட்டிருக்கிறார்கள். அதற்குப் பின்பாக இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டு அந்தக் கொலை சம்பவம் நடந்ததையொட்டி மிகப் பெரிய ஊர்வலத்தை நடத்தி பல பேருந்துகளை அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். 16 பேருந்துகளுக்கு மேலாக அடித்து நொறுக்கப்பட்டிருக்கின்றன. சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன. இப்போதுகூட என்னுடைய ஜூனியர் வழக்கறிஞர் திரு. சொக்கர் என்பவர் கட்சியின் சார்பாக நடந்து கொண்டார் என்பதற்காக ம.தி.மு.க.வினர் கடலூரிலே அவரை வெட்டிக் காயப்படுத்தி அவருடைய கால்கூட எடுக்கப்பட வேண்டிய சூழ்நிலையிலே இருக்கிறது. அந்த நிகழ்ச்சி சம்பந்தமாகக்கூட 5 பேரை கைது செய்துவிட்டு மீதமுள்ளவர்களைக் கைது செய்யவில்லை. அந்தச் சூழ்நிலையில்.......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிரச்சினையைச் சுருக்கமாக முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள்.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆகவே அனைவர் மீதும் நடவடிக்கை எடுத்த பின்பும் ஒரு வன்முறைச் செயலை அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். காவல் துறையினர் ஊர்வலத்திலே அவர்களுடன் சென்றிருக்கிறார்கள். பொதுக்கூட்டம் நடக்கும்போதும் காவல் துறையினர் அங்கே இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கு முன்பாக இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. எனவே உடனடியாகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.என். வல்லரசு.

***திரு. பி. என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 23-4-1997-ஆம் நாள் மதுரையில், மதுரை மாநகராட்சி பெண் உறுப்பினர் திருமதி லீலாவதி என்பவர் கொலை செய்யப்பட்டார்கள். அன்றையதினம் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்





அவர்கள் இதே சட்டமன்றத்தில் கொலை செய்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், யாராக இருந்தாலும் அரசு நடுநிலையோடு செயல்பட்டு அவர்களைக் கைது செய்து நடவடிக்கை எடுக்கும் என்று இந்த மாமன்றத்திலே மிகத் தெளிவாகத் தெரிவித்தார்கள். அப்படிக் கூறியபடியே நடவடிக்கையும் எடுத்து லீலாவதியைக் கொலை செய்தவர்களான முத்துராமலிங்கம், அண்ணாதுரை போன்ற 5 பேர்களைக் கைது செய்து இப்போது 6-வது நபராக மருது என்பவரையும் கைது செய்து சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் சொல்லியபடி இந்த மாமன்றத்திலே, இந்தச் சட்டமன்றத்திலே சொல்லியபடி நடவடிக்கை எடுத்த பிறகும்கூட நேற்று கண்டனக் கூட்டம் என்ற ஒரு நிலையை உருவாக்கியிருக்கிறார்கள் ஒரு அரசியல் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். மதுரை நேதாஜி சிலையிலிருந்து கண்டன ஊர்வலம் புறப்பட்டு மேலமாசி வீதி வழியாகச் செல்கிறபோது ஒரு பிரபல இட்லிக் கடை அங்கே அடித்து நொறுக்கப்பட்டிருக்கிறது. அதற்கடுத்து அந்த ஊர்வலம் ஜெய்ஹிந்த்புரம் வழியாகச் செல்கிறபோது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முன்னணித் தலைவர் திரு. என்.ஆர். விஜயன் என்பவருடைய வீடு கல்வீசித் தாக்கப்பட்டிருக்கிறது.

அதேபோன்று அந்த ஊர்வலம் வில்லாபுரம் சென்றடைகிறபோது முத்துராமலிங்கம் என்பவருடைய, பூட்டிக் கிடந்த வீடு உடைக்கப்பட்டு, அங்கே இருக்கக்கூடிய பீரோ, டி.வி., கிரைண்டர், குடங்கள் அத்தனையும் அடித்து நொறுக்கப்பட்டு, பொருட்கள் சூறையாடப்பட்டிருக்கின்றன.

அதற்கடுத்து வில்லாபுரம், மீனாட்சிபுரம் நகரில் உள்ள காளியம்மாள் என்பவருடைய வீட்டைத் தாக்கி அங்கே உள்ள பொருட்களை எல்லாம் சேதப்படுத்தி, தீ வைக்கப்பட்டிருக்கிறது.

அதற்கடுத்து கண்ணுச்சாமி என்பவருடைய வீடு தாக்கப்பட்டு இருக்கிறது. அரசியல் கட்சிகளுடைய கொடிக் கம்பங்கள் தாக்கப்பட்டிருக்கின்றன. முதலமைச்சருடைய வால்போஸ்டர் கிழிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப் பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் அங்கே நிகழ்த்தப்பட்டு 16 பேருந்துகள் சேதப்படுத்தப்பட்ட சூழ்நிலை உருவாகி இருக்கிறது. அங்கே பதட்ட நிலை நிலவுகிறது. எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து அங்கே அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்க்கின்றேன்.

[1997 ஏப்ரல் 29

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-15

*** மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரையில் நடைபெற்றுள்ள அசம்பாவித நிகழ்ச்சி குறித்து, வன்முறை நிகழ்ச்சி குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் திரு. வேலுசாமி அவர்களும், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் திரு. பி.என். வல்லரசு அவர்களும், இந்த இரண்டு பேர் மட்டுமே ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பினை இங்கே தந்து அதன்மீது சில விளக்கங்களைக் கூறியிருக்கிறார்கள்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

நடைபெற்ற நிகழ்ச்சிகளை எல்லாம் அவர்களே கோர்வையாக இங்கே சொல்லிவிட்ட காரணத்தால் அவற்றை விரிவாக நான் சொல்ல வேண்டும் என்கின்ற தேவை எனக்கு இல்லை.

23-4-1997 அன்று மதுரை மாநகராட்சி மன்ற உறுப்பினர் லீலாவதி அவர்கள் கொலை செய்யப்பட்டது குறித்து இந்த அவையிலே 16 சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்திருந்த கவன ஈர்ப்பின்போது நான் பேசியபோது கொலைக்குக் காரணமானவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கும் என்று கூறி, நானே அன்றைக்கு வெளிப்படையாகவே இந்தக் கொலையைச் செய்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதையும் இந்த மாமன்றத்திலே எடுத்துக்கூறி, 24 மணி நேரத்திற்குள்ளாக அவர்கள் ஒவ்வொருவராகக் கைது செய்யப்பட்டு, 6-வது நபரும் கைது செய்யப்பட்டு விட்டார் என்ற செய்தி இன்று காலையிலே ஏடுகளிலே வந்திருக்கிறது. இதைவிட ஒரு அரசு எப்படி பாரபட்சம் அற்ற முறையிலே நடந்து கொள்ள முடியும் என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நண்பர்கள்தான் எனக்குச் சொல்ல வேண்டும். நடுநிலையிலே உள்ள மற்ற அரசியல் கட்சிகளினுடைய தலைவர்களும், நண்பர்களும்தான் எனக்குச் சொல்ல வேண்டும்.

ஒரு கொலை நடந்தது. அந்தக் கொலைக்கான காரணங்கள் எவை, எவை என்பதை எல்லாம், எப்படி நடந்தது, ஏன் நடந்தது என்ற



1997 ஏப்ரல் 29] [கலைஞர் மு. கருணாநிதி]

செய்திகள் எல்லாம் விசாரணை மன்றத்திலே வர இருக்கின்றன. அதற்கிடையிலே குற்றவாளிகள் என்று சுட்டிக்காட்டப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வேலுசாமி கூடச் சொன்னார். "கொலை செய்தவர் ஒருவர்தான், இருந்தாலும் 6 பேர் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள்" என்று சொன்னார். சட்டப்படி எடுக்க வேண்டிய நடவடிக்கையை, தயவுதாட்சண்யம் இல்லாமல் இந்த அரசு எடுத்திருக்கிறது. போலீசாருடைய கைகள் கட்டிப் போடப்படாமல், மேலே இருக்கிறவர்கள் சொல்லுகிற ஆணையின்படிதான் நடக்க வேண்டும் என்ற பழைய கால நிலை இல்லாமல் போலீசார் சுதந்திரமாகச் செயல்பட்டு, ஆளும்கட்சியைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகும் ஒரு ஊர்வலம் என்கிற பெயரால் மதுரை நகர் மாவட்ட ஜனநாயக வாலிபர் சங்கத்தின் சார்பாக, அந்தப் பகுதியிலே அவர்கள் போலீசாருடைய அனுமதியைப் பெற்றோ, பெறாமலோ சென்று — ஊர்வலம் சென்றதன் நோக்கம், மறைந்துவிட்ட அம்மையாருக்கு மௌன அஞ்சலி செலுத்துவது என்பது அல்லாமல், குற்றம் சாட்டப்பட்டு சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழர்களுடைய வீடுகளை எல்லாம் சூறையாடுவது என்கின்ற முறையிலே சூறையாடப்பட்டிருக்கிறது. குற்றம் சாட்டப்பட்ட முத்துராமலிங்கம் என்கின்ற அவருடைய வீட்டிலே புகுந்து அங்கே இருந்த பொருட்களை எல்லாம் சூறையாடி, கடப்பாறை, கம்பு, அரிவாள் கொண்டு தாக்கி வீட்டுக்குள்ளே இருந்த ரூ. 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மதிப்புள்ள எவர்சில்வர் பாத்திரங்கள், தொலைக்காட்சிப் பெட்டி, கிரைண்டர், பீரோ ஆகியவற்றை எல்லாம் சேதப்படுத்தி இருக்கிறார்கள். முத்துராமலிங்கத்தினுடைய சகோதரி காளியம்மாள் இல்லத்திலே நுழைந்து கம்பி மற்றும் கட்டைகளால் எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும் மின் விசிறி ஆகியவற்றை அடித்து சேதப்படுத்தியிருக்கிறார்கள். செல்லுகின்ற வழியிலே எல்லாம் இருந்த படங்கள் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன. குறிப்பாக என்னுடைய படத்தின் மீதும், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய படத்தின் மீதும், பேராசிரியர் அவர்களுடைய படத்தின் மீதும் தார் ஊற்றி அசிங்கப்படுத்தியிருக்கிறார்கள். ஊர்வலத்தைத் தொடர்ந்து, கொலை செய்யப்பட்ட லீலாவதியின் வீட்டுக்கு அருகே பொதுக்கூட்டம் நடைபெற்றிருக்கிறது.

[கலைஞர் மு. கருணாநிதி] [1997 ஏப்ரல் 29 முற்பகல் 11-20

இந்தக் கொலை வழக்கிலே சம்பந்தப்பட்ட ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுடைய இல்லங்கள், அவர்களுடைய உற்றார். உறவினர்களுடைய இல்லங்கள் எல்லாம் சூறையாடப்பட்டிருக்கின்றன. நான் கேட்க விரும்புவது, இத்தகைய செயல் புரிந்தவர்களைக் கேட்க விரும்புவது, குற்றவாளிகள் அடையாளம் காட்டப்பட்டு, அவர்கள் ஆளும்கட்சி என்றாலும்கூட அதைப்பற்றிக் கவலைப்படாமல் உரிய நடவடிக்கையை, கடுமையான நடவடிக்கையை இந்த அரசு எடுத்த பிறகும் இந்த அரசை எதிர்த்து கோஷங்களும், கண்டனங்களும் எழுப்புவது முறைதானா, நியாயம்தானா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். 'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி' என்பார்கள். இதேபோல ஒரு கொலை கடந்த கால ஆட்சியில் குடவாசலில் நடைபெற்றது. தங்கையன் என்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய, அந்த வட்டாரத்திலே ஒரு பெரும் சக்தியாக விளங்கிய தோழர் கொல்லப்பட்டார். அப்போது நாமும் சேர்ந்து அதற்கு அனுதாபம் தெரிவித்திருக்கிறோம், கண்டித்திருக்கிறோம். ஆனால் முக்கியக் குற்றவாளிகள் யாரையும் அன்றைக்கு இருந்த அரசு தொடக்கூட இல்லை. அதுமாத்திரம் அல்ல, அவர்களைப் பாதுகாப்பதற்கும் அரசு அன்றைக்கு முற்பட்டது. அதுவும் எல்லோருக்கும் தெரியும். ஆனால், அப்பொழுதெல்லாம் வராத ஆத்திரம், குமுறல், அன்றைக்கு வெடிக்காத பூகம்பம் இன்றைக்கு வெடிக்க முன்வருகிறது என்றால், நான் சொன்னேனே, 'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி' என்று, அதைப்போலத்தான் எண்ணிக்கொண்டு, இந்த அரசை எந்த வகையிலும் சீர் குலைக்கலாம் என்ற எண்ணத்தோடு சிலர் செயல்பட்டு வருகின்றார்கள். ஆண்டி ரொம்ப நாள் சாதுவாக இருக்க மாட்டான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் 'சாது மிரண்டால் காடு கொள்ளாது' (மேசையைத் தட்டும் ஒலி) என்ற அந்தப் பழமொழியையும் வன்முறையாளர்களுக்கு ஞாபகப்படுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்து, சட்டப்படி எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும், சட்டத்தை மீறி அல்லது சட்டத்தைத் தவிர்த்து எந்த நடவடிக்கையும் இருக்காது என்பதையும் குற்றம் செய்தவர்கள் யாராக இருந்தாலும். அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், முறைப்படி நடவடிக்கை எடுக்கின்ற இந்த அரசு, இந்த விஷயத்திலும் பாரபட்சம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கும் என்பதைக் கூறி அமைகிறேன்.



1997 ஏப்ரல் 29] முற்பகல் 11-20

**3. பத்தாவது சட்டமன்றப் பேரவை நடவடிக்கைக் குறிப்புகளில் சில நீக்கங்கள், மாற்றங்கள் மற்றும் திருத்தங்கள் செய்யக் கோரி உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன் மற்றும் திரு. பரிதி இளம்வழுதி கொடுத்த கடிதங்களின்மீது பேரவைத் தலைவரின் தீர்ப்பு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அடுத்து, 10-வது சட்டமன்றப் பேரவையின் நடவடிக்கைக் குறிப்பில், முன்னாள் ஆளுநர் அமரர் டாக்டர் எம். சென்னா ரெட்டி அவர்கள்மீது களங்கம் கற்பித்துச் செய்யப்பட்ட தரக்குறைவான விமர்சனங்களை நீக்க முடியுமா என பேரவைத் தலைவர் பரிசீலனை செய்ய வேண்டுமென, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விடுத்த வேண்டுகோள் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களைப் பற்றிப் பதியப்பெற்ற உண்மைக்குப் புறம்பான கருத்துக்களை நீக்கக் கோரியும், தாங்கள் அவையில் தெரிவித்து, நீக்கப்பட்ட உண்மைகளைச் சேர்க்கக் கோரியும், உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. பரிதி இளம்வழுதி ஆகியோர் கொடுத்த கடிதங்களின்மீது என் தீர்ப்பை அளிக்க இருக்கிறேன்.

இந்தத் தீர்ப்பை வாய்மொழியாகச் சொல்லமுடியும் என்றாலும்கூட, இந்தத் தீர்ப்பின் மூலமாக நம்முடைய சட்டமன்றப் பேரவை விதிகளைத் திருத்த வேண்டுமென்ற ஒரு கருத்தை நான் இதிலே குறிப்பிட விரும்புவதால், இந்தத் தீர்ப்பை எழுதிப் படிக்கின்றேன். சற்று நேரமானாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் பொறுத்தருள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

27-1-1997 அன்று ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது பேசுகையில் வேலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் முந்தைய பேரவையில் 19-4-1995 அன்றும், 26-4-1995 அன்றும் முன்னாள் ஆளுநர் அமரர் டாக்டர் எம். சென்னா ரெட்டி அவர்களைப் பற்றிய கீழ்த்தரமான, தரக்குறைவான விமர்சனங்கள் பேரவை நடவடிக்கைக் குறிப்புகளில் பதியப்பட்டுள்ளன எனச் சுட்டிக்காட்டி, அத்தகைய குறிப்புகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்.

2. அதோடு 21-4-1993 அன்று பேரவையின் மேற்குப்புற லாபியில் நடந்த சம்பவங்களை விவரித்து, தானும், திரு. பரிதி இளம்வழுதி அவர்களும் பேரவைக் காவலர்களைத் தாக்கியதாக உண்மைக்கு மாறாக நடவடிக்கைக் குறிப்பின் பணித்துறை வெளியீட்டில் (Official Report of Proceedings) பதிவு செய்யப்பட்டதாகவும், பேரவை வளாகத்திற்குள்

நடந்ததாகக் கூறப்பட்ட அந்தத் தாக்குதலுக்காகக் குற்றவியல் நடவடிக்கைக்குத் தாங்கள் ஆட்படுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

3. மேலும் சில சம்பவங்களைக் குறிப்பிட்டு, அச்சம்பவங்களின் போது தாங்கள் தாக்குதலில் ஈடுபட்டதாகச் சித்தரிக்கும் வகையில் நடவடிக்கைக் குறிப்புகளில் உண்மைக்கு மாறான குறிப்புகள் பதியப்பட்டுள்ளன என்றும் தெரிவித்து, அவற்றையும் நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

4. திரு. சி. ஞானசேகரன் தெரிவித்த கருத்துக்களுக்கு ஆதரவாக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரும், எழும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் தனது கருத்தைத் தெரிவித்தார். கடந்த பேரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை முன்வைக்க அனுமதிக்கப்படவில்லையென்றும், உண்மையில் தாங்கள் பேரவைக் காவலர்களால் தாக்கப்பட்ட நிலையிலும், தாங்கள் காவலர்களைத் தாக்கியதாகச் சித்தரித்து நடவடிக்கைக் குறிப்புகள் தயார் செய்யப்பட்டன என்றும் குறிப்பிட்டார்.

5. இன்னும் சில சம்பவங்களைக் குறிப்பிட்டு, தாங்கள் கூறிய விளக்கங்களும், கருத்துக்களும் பலமுறை நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்கப்பட்டதோடு, பல்வேறு நேரங்களில் தாங்கள் பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

6. இதையடுத்துப் பேசிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த இரண்டு உறுப்பினர்கள் எழுப்பிய பிரச்சினை, பெரிய பிரச்சினை எனக் குறிப்பிட்டு, மறைந்த டாக்டர் எம். சென்னா ரெட்டி அவர்கள் தமிழகத்தை நேசித்தவர். தமிழ் மக்களால் பெரிதும் பாராட்டப்பட்டவர், விரும்பப்பட்டவர், ஆந்திரம் வேறு, தமிழகம் வேறு என்று கருதாமல், தமிழகத்து நன்மையையே சிலாகித்துப் பேசியவர். செயலிலும் காட்டமுற்பட்டவர். எனவே, அவருக்கு நாம் காட்டும் மரியாதையாக, தமிழ்நாட்டு மக்களுடைய கலாச்சாரத்திற்கு, பண்பாட்டிற்கு எடுத்துக்காட்டாக, அவர்மீது சுமத்தப்பட்ட களங்கங்களைப் போக்குவதற்கு இரு உறுப்பினர்கள் பேச்சின் அடிப்படையில், அந்நிகழ்ச்சிகளை நீக்கிவிட முடியுமா என்று நீங்கள் யோசித்து ஆவன செய்ய வேண்டும் என்று என்னைக் கேட்டுக் கொண்டார்கள்.

முற்பகல் 11-25

7. நடவடிக்கைக் குறிப்புகளில் திரு. சி. ஞானசேகரன் தெரிவித்தவாறு திருத்தங்கள் செய்ய எனக்கு எந்த விதியின்கீழ் அதிகாரம் இருக்கிறது



என்று நான் அவரைக் கேட்டபோது, ஒன்பதாவது பேரவையின் 25-3-1989-ஆம் நாளிட்ட நடவடிக்கைக் குறிப்புகளைப் பின்னர் 26-3-1992 அன்று திருத்தி முன்பிருந்த சபாநாயகர் முன்னோடியினைக் காட்டியுள்ளார்கள் என அவர் தெரிவித்தார்.

8. அதையடுத்து, எந்தெந்தப் பகுதியை நீக்க வேண்டும் என்று சொல்கிறீர்களோ, அதை எழுதிக் கொடுங்கள், அதற்குப் பின்னாலே தீர்ப்பைச் சொல்கிறேன் என்று திரு. சி. ஞானசேகரன் மற்றும் திரு. பரிதி இளம்வழுதி ஆகியோரிடம் நான் தெரிவித்தேன். அதற்கேற்ப 31-1-1997 அன்று அவர்கள் விவரங்களை எழுதி, எழுத்து வடிவில் கொடுத்துள்ளார்கள்.

9. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆதாரத்துடன் கூடிய குற்றச்சாட்டுகளைக்கூட முன்வைக்க அனுமதிக்கப்படவில்லை, தங்களது கருத்துக்கள் நீக்கப்பட்டன என்றும், அதே நேரத்தில் தங்களுக்கு எதிராகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள், அவதூறுகள் ஆகியவை நடவடிக்கைக் குறிப்பில் இடம்பெற அனுமதிக்கப்பட்டன என்றும், அவர்கள் தங்கள் கடிதங்களிலே தெரிவித்து, அதற்கு ஆதரவாகப் பல நாட்களில் நடைபெற்ற நிகழ்வுகளை எடுத்துக்காட்டியுள்ளனர். மேலும் பல நாட்களில் தங்களது மறுப்புகள் இடம் பெறாமல் வெறும் "(குறுக்கீடுகள்)" என்று மட்டுமே பதியப்பட்டுள்ளன என்றும், தாங்கள் தாக்குதலில் ஈடுபட்டதைப் போன்று சித்தரிக்கும் வகையில் அன்றைய பேரவைத் தலைவரும், மற்றவர்களும் தெரிவித்த கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டன என்றும், அவையெல்லையினுள் நடைபெற்றதாகக் கூறப்பட்ட சம்பவங்களில்கூட தங்கள்மீது பொய் வழக்குகள் போடப்பட்டன என்றும் தங்களது கடிதங்களில் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

10. குறிப்பாக, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக, பிரபட்சமான முறையில் பேரவை நடத்தப்பட்டது என்பதை விளக்க, சில உதாரணங்களைச் சுட்டிக்காட்டியுள்ளதோடு, அன்றைய ஆளுநரைப் பற்றியும், தங்களைப் பற்றியும் தெரிவிக்கப்பட்ட தரக்குறைவான, உண்மைக்கு மாறான குறிப்புகளை பத்தாவது பேரவையின் நடவடிக்கைக் குறிப்புகளின் பணித்துறை வெளியீட்டிலிருந்து நீக்க வேண்டுமென்றும், தாங்கள் கடந்த பேரவையில் பேசி நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட உண்மைகளைச் சேர்க்க வேண்டும் என்றும் உறுப்பினர்கள் தங்களது கடிதங்களில் வேண்டியுள்ளனர்.

11. 25-3-1989 அன்று அவையில் நடந்த சம்பவங்கள் பற்றி அடுத்து வந்த பத்தாவது பேரவையில் 25-3-1992 மற்றும் 26-3-1992 ஆகிய நாட்களில் இவை, இவைதான் அன்று பேரவையில் நடந்தன என்று தெரிவிக்கப்பட்ட கருத்துக்களையும் மற்றும் தனது தீர்ப்பினையும் அடிக்குறிப்புடன் இணைப்பாகக் கொண்டு, 25-3-1989 அன்றைய நடவடிக்கைக் குறிப்பின் மறுபதிப்பு ஒன்று மீண்டும் அச்சிடப்படும் என 26-3-1992 அன்று முந்தைய பேரவைத் தலைவர் ஆணையிட்ட நிகழ்வை முன்னோடியாகக் கொள்ள வேண்டுமென்றும் உறுப்பினர்கள் தங்கள் கடிதங்களில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

12. உறுப்பினர்களின் வேண்டுகோளினை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர், அவ்வாறு முந்தைய அவையின் அச்சிட்ட நடவடிக்கைக் குறிப்புகளை நீக்கவோ அல்லது அவற்றில் மாற்றம் அல்லது திருத்தம் செய்யவோ எனக்கு அதிகாரம் உள்ளதா என்றும் அவர்கள் தெரிவித்த முன்னோடியைப் பின்பற்ற முடியுமா என்றும் முதலில் கவனிக்க வேண்டிய அவசியம் எனக்குள்ளது.

13. எனவே, இவ்வாறு முந்தைய அவையின் ஒப்புதலளிக்கப்பட்ட, அதிகாரபூர்வமான நடவடிக்கைக் குறிப்பை, அடுத்து அமைக்கப்பட்ட அவை மாற்றுவதற்கு, திருத்துவதற்கு அல்லது நீக்குவதற்கு விதிகளோ, முன்னோடிகளோ வேறெங்காவது உள்ளதா என அறியும் பொருட்டு மக்களவைச் செயலகத்துடனும், பிற மாநிலச் சட்டமன்றப் பேரவைச் செயலகங்களுடனும் தொடர்பு கொள்ளப்பட்டது. மக்களவைச் செயலகத்திலிருந்தும், 25 மாநிலச் சட்டமன்றப் பேரவைகளிலிருந்தும் பதில்கள் வரப்பெற்றுள்ளன. மக்களவையிலும், மேற்கு வங்காளம் நீங்கலாக மற்ற சட்டமன்றப் பேரவைகளிலும் இதற்கு விதிகளோ முன்னோடிகளோ இல்லை என்று அவர்கள் தகவல் தெரிவித்துள்ளனர்.

14. மேற்கு வங்காளச் சட்டமன்றப் பேரவை விதிகளில் இதற்கு இடமில்லையென்றாலும், இரண்டு முன்னோடிகள் உள்ளன என்று அச்செயலகம் தெரிவித்துள்ளது.

15. ஒரு நேர்வில், 30-9-1986 அன்று அவையில் முன்மொழியப்படாத தீர்மானம் ஒன்று ஒத்த பொருளுடைய மற்ற உறுப்பினர்களது தீர்மானங்களோடு சேர்த்து விவாதிக்கப்பட்டு வாக்கெடுப்புக்கும் விடப்பட்டது. இம்முறைகேடு பின்னர் கண்டுபிடிக்கப்பட்டு, அடுத்த கூட்டத் தொடரில் 28-3-1987 அன்று, இவ்வாறு முன்மொழியப்படாத தீர்மானம் தொடர்புடைய நடவடிக்கைக் குறிப்புகள் மட்டும் நீக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் பேரவைத் தலைவரால்



முன்மொழியப்பட்டது. போவை அத்தீர்மானத்தை நிறைவேற்றிய பின்னர், முன்மொழியப்படாத தீர்மானம் தொடர்புடைய பகுதிகள் நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்கப்பட்டன.

அதாவது ஒரு தீர்மானத்தை முன்மொழியாமலேயே விவாதத்தை முடித்து, தீர்மானம் நிறைவேறி விட்டதாக அறிவித்து விட்டார்கள். அது பின்னால் கண்டுபிடிக்கப்பட்டது. ஆகவே, அது செல்லாது என்ற காரணத்தால் அதை அவையின் முழு அனுமதியோடு பேரவைத் தலைவர் பின்னால் நீக்கி இருக்கிறார்.

முற்பகல் 11-30

16. மற்றொரு நேர்வில் ஒரு தலைவரின் மறைவு குறித்து 28-2-1987 (ஒன்பதாவது பேரவை) அன்று அவையில் வாசிக்கப்பட்ட இரங்கல் குறிப்பில் தவறான தகவல் (Factual Error) ஒன்று உள்ளது என்பது பின்னர் கவனிக்கப்பட்டு, முந்தைய பேரவையின் நடவடிக்கைக் குறிப்புகளில் தேவையான திருத்தத்தைச் செய்யலாமெனவும், அன்னாரின் குடும்பத்தாருக்கு வருத்தம் தெரிவிக்கலாமெனவும், அடுத்து வந்த பத்தாவது பேரவையின் தலைவர் 10-3-1988 அன்று தெரிவித்தபோது பேரவை அதை ஏற்றுக்கொண்டது.

இரங்கற் குறிப்பிலே இறந்தவரைப் பற்றி ஒரு தவறான செய்தி தெரிந்தோ, தெரியாமலோ குறிப்பேட்டிலே ஏறிவிட்டது. அது பின்னால் கண்டுபிடிக்கப்பட்டு, அந்தத் தவறைத் திருத்துவதற்கும், சரியான செய்தியை இரங்கற் குறிப்பிலே சேர்ப்பதற்கும், இறந்தவர் குடும்பத்திடம் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அந்தத் தவறு திருத்தப்பட்டது.

இந்த இரண்டு நேர்வுகளிலுமே, அவையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் தொடர்பாக எந்தச் சர்ச்சையும் இல்லை. மேற்கு வங்காளச் சட்டமன்றப் பேரவையின் தலைவர் பாரபட்சமாகச் செயல்பட்டார் என்ற குற்றச்சாட்டும் இல்லை.

எனவே இதற்கும், 25-3-1989 அன்று அவையில் நடந்தது இவை இவைதான் என அடுத்து வந்த பேரவையில் 25-3-1992 மற்றும் 26-3-1992 ஆகிய நாட்களில் தெரிவிக்கப்பட்டு அப்பகுதிகள் அடிக்குறிப்புடன் இணைப்பாகச் சேர்த்து மறுபதிப்பு அச்சிடப்பட்டதற்கும் எவ்வித ஒற்றுமையும் இல்லை.

17. இவ்வாறு மாற்றம். திருத்தம் அல்லது நீக்கம் செய்வதற்கு முன்னோடி எதுவுமில்லை என மக்களவைச் செயலகமும் தெரிவித்துள்ளது. முந்தைய அவையின் பரிசீலனைக்குட்பட்ட உரிமைப் பிரச்சினையை, அடுத்து அமைக்கப்பட்ட அவை மறுபரிசீலனை செய்து மாற்றம் செய்தது குறித்த முன்னோடி ஏதாவது உள்ளதா என நான் அலசியபோது கவுல் மற்றும் ஷக்தர் எழுதிய 'பாராளுமன்ற நடைமுறைகள்' எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்க்காணும் நேர்வு என் கவனத்திற்கு வந்தது :

"முந்தைய மக்களவைக் காலத்தின்போது, அவையில் ஒரு வினாவுக்கு விடையளிக்க சில தகவல்களைச் சேகரித்த அதிகாரிகளை அச்சுறுத்தியதற்காகவும், இடையூறு செய்ததற்காகவும், தொல்லை கொடுத்ததற்காகவும், அவர்கள் மேல் பொய் வழக்குகள் தொடர்ந்ததற்காகவும் முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் மற்றும் அவரோடு சேர்ந்த சிலர்மீது கொடுக்கப்பட்ட அவை உரிமை மீறல் மற்றும் அவை அவமதிப்புப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பலாம் என்ற தீர்மானம் 18 நவம்பர் 1977 அன்று மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.

அவையில் ஒரு வினாவுக்கு விடையளிக்க தகவல்களைச் சேகரித்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அச்சுறுத்தி, இடையூறு செய்து, அவர்களுக்குத் தொல்லை கொடுத்து அவர்கள் மேல் பொய் வழக்குகள் போட்டதன் மூலம், திருமதி இந்திரா காந்தி அவர்கள் அவை உரிமையை மீறியுள்ளார்கள் எனவும், அவை அவமதிப்புக் குற்றம் புரிந்துள்ளார்கள் எனவும் உரிமைக் குழு முடிவு செய்தது. இந்தக் கடுமையான அவை உரிமை மீறலுக்காகவும், அவை அவமதிப்புக் குற்றத்திற்காகவும், திருமதி இந்திரா காந்தி அவர்கள் தண்டனைக்கு ஆளாக வேண்டியவர் எனவும், அதற்கு எத்தகைய தண்டனை அளிப்பது என்பதை ஒட்டுமொத்தமாக அவையின் விவேகத்திற்கே (Wisdom) விட்டுவிடலாம் எனவும் அக்குழு பரிந்துரை செய்தது.

திருமதி இந்திரா காந்தி அவர்கள் புரிந்த கடுமையான அவை உரிமை மீறலுக்காகவும், அவை அவமதிப்புக் குற்றத்திற்காகவும் அவரை மக்களவையின் அக்கூட்டத்தொடர் இறுதி செய்யப்படும் வரையில் (Prorogation of the House) சிறையில் வைக்கலாம் எனவும், மக்களவை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கலாம் எனவும் 19 டிசம்பர் 1978 அன்று தீர்மானம் ஒன்றை மக்களவை நிறைவேற்றியது.



ஆறாவது மக்களவையால் 19 டிசம்பர் 1978 அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை 7 மே 1981 அன்று கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியதன் மூலம் ஏழாவது மக்களவை தள்ளுபடி செய்தது.

ஆறாவது மக்களவை 19 டிசம்பர் 1978 அன்று நிறைவேற்றிய தீர்மானத்தின் மூலம் அவை உரிமைக் குழுவின் பரிந்துரைகளையும், தீர்ப்புகளையும் ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படையில் திருமதி இந்திரா காந்தி, திரு. ஆர்.கே. தவான் மற்றும் திரு. டி. சென் ஆகியோர் அவை உரிமை மீறல் குற்றம் புரிந்துள்ளார்கள் எனக் கருதி, இயற்கை நீதிக் கோட்பாட்டிற்கு மாறாக அவர்களுக்கு அதிகபட்சத் தண்டனையை வழங்கியது.

எனவே, இப்போது இந்த அவை கீழ்க்கண்டவாறு தீர்மானித்து பிரகடனம் செய்கிறது:—

(அ) மக்களவை மற்றும் அதன் குழுவின் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைக் குறிப்புகள் பாராளுமன்ற உரிமைகளைப் பொறுத்தவரை (Law of Parliamentary Privileges) ஒரு முன்னோடியாக அமையாது;

(ஆ) குழுவின் தீர்ப்பும், அவையின் முடிவும் பாராளுமன்ற உரிமைகளைப் பொறுத்து ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகளுக்கும் அரசமைப்புச் சட்டத்தில் அனைவருக்கும் உறுதியளிக்கப்பட்டுள்ள அடிப்படைப் பாதுகாப்புகளுக்கும் முற்றிலும் முரணாக, அவற்றை மீறியதாக உள்ளன; மேலும்

(இ) திருமதி இந்திரா காந்தி, திரு. ஆர்.கே. தவான் மற்றும் திரு. டி. சென் ஆகியோர்மீது தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளைப் பொறுத்தவரை அவர்கள் குற்றமற்றவர்கள் ஆவர். அதற்கிணங்க 19 டிசம்பர் 1978 அன்று ஆறாவது மக்களவையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இந்த அவை தள்ளுபடி செய்கிறது".

முற்பகல் 11-35

18. இந்த நேர்வில்கூட, திருமதி இந்திரா காந்தி அவர்கள் குற்றமற்றவர் எனத் தெரிவித்ததோடு அவரைச் சிறைக்கு அனுப்பவும், மக்களவை உறுப்பினர் பதவியைப் பறிக்கவும் ஆறாவது மக்களவை நிறைவேற்றிய தீர்மானத்தினை, அடுத்து வந்த ஏழாவது மக்களவை மற்றொரு தீர்மானத்தின் மூலம் தள்ளுபடி செய்ததே தவிர, முந்தைய அவையின் நடவடிக்கைக் குறிப்புகளை நீக்கவோ, மாற்றவோ, திருத்தவோ

முயற்சிக்கவில்லை. எனவே இதை ஒரு முன்னோடியாகக் கருத இயலாது என்று தெளிவாகத் தெரிகின்றது.

19. பத்தாவது பேரவையில் 25-3-1992 அன்று உறுப்பினர் திரு. டி.எம். ரங்கராஜன் அவர்கள் ஒன்பதாவது பேரவையின் 25-3-1989 அன்றைய நடவடிக்கைக் குறிப்புகளின் பணித்துறை வெளியீட்டில் சில நிகழ்ச்சிகள் தவறாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அப்பகுதிகளை அன்றைய நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டுமென்று பேரவைத் தலைவரைக் கேட்டுக் கொண்டார். இவர் ஒன்பதாவது பேரவையில் உறுப்பினராக இடம் பெறாதவர். 25-3-1989 நாளிட்ட நடவடிக்கைக் குறிப்பை இணைப்புடன் மறுபதிப்பாக அச்சிட ஆணையிட்ட முந்தைய பேரவைத் தலைவரும் ஒன்பதாவது பேரவையில் உறுப்பினராக இல்லை.

20. அவர், முன்னாள் பேரவைத் தலைவர் தனது தீர்ப்பில் "மே-யின் பாராளுமன்ற நடைமுறை" (May's Parliamentary Practice) என்ற நூலையும் "ஹால்ஸ்பரியின் இங்கிலாந்து சட்டங்கள்" (Halsbury's Laws of England) என்ற நூலையும் மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

என்னுடைய கருத்துப்படி, இவற்றை மேற்கோளாகக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில், இவை பிரிட்டிஷ் அரசமைப்புச் சட்டத்தின்கீழ் அமைந்த பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திற்கே பொருந்தும். பிரிட்டிஷ் அரசமைப்புச் சட்டம் எழுதப்படாத ஒன்று என்பதும், அங்கே அனைத்துமே முன்னோடிகளையும், நடைமுறைகளையும், மரபுகளையும் அடிப்படையாகக் கொண்டே செய்யப்படுகின்றன என்பதும் நீங்கள் அனைவரும் அறிந்ததே. In British Parliament, everything is based on practices, conventions and precedents; there are no written laws. மேற்குறிப்பிட்ட அந்தப் புத்தகங்களில்கூட ஒரு அவையின் நடவடிக்கைக் குறிப்புகளை, அடுத்து அமைக்கப்பட்ட அவை மாற்றுவதற்கு எந்த வழிவகையும் குறிப்பிடப்படவில்லை.

21. என்னைப் பொறுத்தவரையில் இவையெல்லாம் பொருத்தமானவை அல்ல. ஏனென்றால் இந்தியாவின் மற்ற மாநிலச் சட்டமன்றங்களைப் போன்றே தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளிலும் நடவடிக்கைக் குறிப்புகள் பற்றித் தனியே விதிகள் உள்ளன.

"பேரவை நடவடிக்கைகள் பணித்துறை வெளியீடு ஒன்று செயலாளரின் மேற்பார்வையில் வெளியிடப்பெறும். மேலும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் அது கிடைக்குமாறு செய்யப்பெற வேண்டும்."

என்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 280 தெரிவிக்கிறது.



"அம்மாதிரியான வெளியீடுகள் பேரவை விதி 283-ன்கீழ் பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைப்படி வெளியிடப்பட்டதாகவே கருதப்படும்."

என்றும் தெளிவாக அவ்விதி குறிப்பிடுகிறது.

முந்தைய பேரவைத் தலைவரால் ஒப்புதலளிக்கப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளில் மாற்றம்/திருத்தம் செய்ய அல்லது நீக்க எந்தப் பேரவைத் தலைவருக்கும் நமது விதிகளின்படி அதிகாரம் கிடையாது. இன்னும் சொல்லப்போனால், ஒரு நாளின் நடவடிக்கைக் குறிப்புகளுக்கு ஒப்புதலளித்தபின் அந்தப் பேரவைத் தலைவரேகூட அதைப் பின்னர் மாற்ற இயலாது என்பது என் கருத்து.

இன்று பேரவைத் தலைவர் என்ற முறையில் நான் ஒரு நாளின் நடவடிக்கைக் குறிப்புக்கு ஒப்புதலளித்து, கையெழுத்துப் போட்ட பிறகு, பின்னாளில் அந்தக் குறிப்பை மாற்றுவதற்கு எனக்கே அதிகாரம் இல்லை என்பது என்னுடைய கருத்து.

22. ஒவ்வொரு நாளும் நடவடிக்கைக் குறிப்புகளின் பகுதிகள், தொடர்புடைய அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு அனுப்பப்படுகின்றன. உரையில் உள்ள கருத்தை மாற்றாமலும், கூட்டிக் குறைக்காமலும், சொற்பிழைகள் எவையேனும் இருந்தால் அவற்றை மட்டும் திருத்தியனுப்ப 3 நாள் அவகாசம் கொடுக்கப்படுகிறது. அவ்வாறு 3 நாட்களுக்குள் நடவடிக்கைக் குறிப்புப் பகுதிகள் திரும்ப வரப்பெறவில்லையென்றால், உரைநடை மரபுக்கேற்ற மாற்றங்களை மட்டும் செய்தபின், பேரவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆணை பெற்று, இறுதியான நடவடிக்கைக் குறிப்புகள் அச்சிட்டு, வெளியிடப்பட்டு உறுப்பினர்களுக்கும், தலைமைச் செயலகத் துறைகளுக்கும், பல்கலைக்கழகங்களுக்கும், மற்றவர்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன. இது தவிர, ஒவ்வொரு நாள் நடவடிக்கைக் குறிப்பின் திருத்தப்படாத நகல் ஒன்று சட்டமன்ற நூலகத்தில் உறுப்பினர்களின் பார்வைக்கு அடுத்த நாளே வைக்கப்படுகிறது. அவற்றில் ஏதாவது வேறுபாடு இருப்பதாக அறிந்தால், விதிகளுக்கு உட்பட்டு அதை உறுப்பினர்கள் உடனே அவையில் எழுப்பலாம். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர், துணைத் தலைவர் ஆகியோரது ஒப்புதல் பெற்று நடவடிக்கைக் குறிப்புகள் அச்சிட்டு வெளியிடப்பட்ட பின்னர் அந்தப்

பணித்துறை வெளியீட்டில் மாற்றம், திருத்தம் அல்லது நீக்கம் செய்வது என்ற சிந்தனைக்கே இடமில்லை.

23. நீதிமன்றத்திலே, ஒரு குறிப்பிட்ட வழக்கு, விசாரணை செய்யும் நீதிபதியின் ஆதிக்கத்திற்கு அல்லது அதிகார வரம்புக்குட்பட்டதல்ல என முதல் நோக்கில் (Prima facie) தெரிய வந்தாலே, அந்த வழக்கின் கூறுகள் வலுவாக இருந்தாலும் அவற்றுக்குள் செல்லாமல், நீதிபதியின் ஆதிக்கம் மற்றும் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டது என்று தெரிவித்து நீதிமன்றம் அவ்வழக்கைத் தள்ளுபடி செய்கிறது. அந்தக் கூற்று இதற்கும் பொருந்தும்.

முந்தைய அவையின் நடவடிக்கைக் குறிப்புகளை மாற்றவோ, திருத்தவோ, நீக்கவோ பேரவைத் தலைவருக்கு அதிகாரம் இல்லாத நிலையில், இந்தப் பிரச்சினைக்குள் நுழைந்து அவ்வாறு மாற்றியதற்கு ஏதாவது நியாயமான காரணம் இருக்கிறதா, இல்லையா என்று ஆராய்வது பயனற்ற முயற்சியாகும்.

முற்பகல் 11-40

24. பேரவைத் தலைவர் என்ற முறையில், ஏற்றுக்கொள்ளப்பட்ட சில உண்மைகளைக்கூட என்னால் சம்பந்தப்பட்ட நாட்களின் நடவடிக்கைக் குறிப்புகளில், இப்போது சேர்க்க முடியாது. எடுத்துக்காட்டாக, பத்தாவது பேரவையில் 1-7-1991 அன்று பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டபின், பெரும்பாலான உறுப்பினர்கள் பேரவையில் முன்னாள் முதலமைச்சரின் காலில் விழுந்து வணங்கினர். 3-7-1991 அன்று அப்போதைய பேரவைத் தலைவரும், துணைத் தலைவரும்கூட தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் பேரவையிலேயே முதல்வரது காலில் விழுந்து வணங்கிய பின்னர்தான், தங்கள் இருக்கையிலே அமர்ந்தனர். அனைத்துப் பத்திரிகைகளிலும் இத்தகவல் வெளி வந்திருந்ததை நான் கண்டேன். கடந்த சட்டமன்றத்திலே இருந்த பெரும்பாலான உறுப்பினர்கள் இதை உண்மை என்றே ஏற்றுக்கொண்டனர். இதை உறுப்பினர்கள் மட்டுமல்லாது, அப்போதைய பேரவைத் தலைவரேகூட மறுக்கவில்லை. ஏற்றுக்கொள்ளப்பட்ட இவ்வுண்மைகள், வெளியிடப்பட்ட அப்போதைய நடவடிக்கைக் குறிப்புகளில் இடம் பெறவில்லை. எனவே, அவை உண்மையான விவரங்களைக் கொண்ட குறிப்பேடுகள் அல்ல என்று என்னால் உறுதியாகக் கூறமுடியும். இருப்பினும், இவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மைகள் நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறாத நிகழ்விலேகூட,



அடுத்துவரும் பேரவைத் தலைவர், முந்தைய பேரவைத் தலைவரால் ஒப்புதலளிக்கப்பட்ட அந்த நடவடிக்கைக் குறிப்புகளில், அவ்வுண்மைகளைச் சேர்க்க முயற்சி எடுக்க முடியாது என்பதே எனது கருத்தாகும். முன்னாள் பேரவைத் தலைவர், முன்னாள் முதலமைச்சர் காலில் விழுந்த பிறகுதான் இந்த இருக்கையிலே அமர்ந்தார்கள் என்று அவரே ஏற்றுக்கொண்டதை அவைக் குறிப்பிலே இல்லை என்பதற்காக நான் இப்போது சேர்க்க முடியாது. அதற்கு எனக்கு அதிகாரம் கிடையாது என்பது என்னுடைய கருத்து.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு அதைப்போன்ற அதிகாரம் இல்லையென்றாலும்கூட, இப்போது ஒரு தீர்ப்பின் மூலமாக அதை நீங்கள் படித்து அதைப் பதிவு செய்துவிட்டீர்கள். எனவே அது உங்கள் தீர்ப்பின் மூலமாக இந்தப் பேரவையில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதை உங்கள் நினைவுக்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுவாகத் தீர்ப்பளிக்கும்போது குறுக்கிடக்கூடாது. இருந்தாலும் திரு. அழகிரியின் தகுதியை நான் பாராட்டாமல் இருக்க முடியாது.

25. 25-3-1989 அன்று பேரவையில் இருந்த திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் அன்றைய நிகழ்வு பற்றி 25-3-1992 அன்று நடந்த விவாதத்தில் தன் கருத்தைக் கூற எழுந்தபோது, அவர் அனுமதிக்கப்படவில்லை என்பதும், அவர் தெரிவித்த கருத்துக்கள் ஏறக்குறைய 10 இடங்களில் "(குறுக்கீடுகள்)" என்று மட்டுமே நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெற்றுள்ளன என்பதும், அவர் அன்று பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்டார் என்பதும் அன்றைய நடவடிக்கைக் குறிப்புகளின் பணித்துறை வெளியீட்டிலிருந்து தெரிய வருகிறது.

**26. 25-3-1989 அன்று பேரவையில் உண்மையில் நடந்த விவாதங்கள் அல்லது சம்பவங்களை அந்நாளைய நடவடிக்கைக் குறிப்புகள் பிரதிபலிக்கவில்லை என்று வைத்துக் கொண்டாலும்கூட, அந்தப் பேரவையின் தலைவர், இப்போது அமைச்சராக இருக்கிற மாண்புமிகு திரு தமிழ்க்குடிமகன் அவர்கள் ஒப்புதல் அளித்த நடவடிக்கைக் குறிப்புகளில் மாற்றம் செய்யவோ, திருத்தம் செய்யவோ அல்லது நீக்கம் செய்யவோ, பத்தாவது பேரவையின் தலைவருக்கு அதிகாரம் இல்லை என்று இந்தத் தீர்ப்பின் மூலமாக நான் கூறுகிறேன்.**

27. சட்டமன்றம் மற்றும் நாடாளுமன்ற நடவடிக்கைக் குறிப்புகள் ஜனநாயகத்திற்கு உயிராதாரமானவை. பெருமதிப்புப் பெற்றவை என்பதால், அவற்றிற்கு உயரிய மரியாதை அளிக்கப்பட வேண்டுமென உறுதியாகக் கருதுபவன் நான். அடுத்து வருகின்ற பேரவைத் தலைவர்கள், முந்தைய பேரவைத் தலைவரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளை மாற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்களேயானால், சட்டமன்றம் மற்றும் மாநிலங்களவை நடவடிக்கைக் குறிப்புகளுக்குள்ள புனிதத் தன்மை பொருளற்றதாகிவிடும்.

**28.** அரசமைப்புச் சட்டத்தின்கீழ் வகுக்கப்பட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளில், முந்தைய பேரவையின் நடவடிக்கைக் குறிப்புகளை, அடுத்து அமைக்கப்படும் பேரவை, மாற்றம் அல்லது திருத்தம் செய்வதற்கோ, நீக்குவதற்கோ வழிவகை இல்லாததால், **26-3-1992** அன்று முந்தைய பேரவைத் தலைவரின் ஆணைப்படி வெளியிடப்பட்ட, **25-3-1989** அன்றைய நடவடிக்கைக் குறிப்புகளின் மறுபதிப்பில் உள்ள இணைப்பை ரத்து செய்ய நான் இப்போது ஆணையிடுகிறேன்.

**29.** அப்போதைய பேரவைத் தலைவரின் **26-3-1992** ஆணைப்படி, இணைப்புடன் மறுபதிப்பாக வெளியிடப்பட்ட **25-3-1989** அன்றைய நடவடிக்கைக் குறிப்புகளின் பிரதிகள் அனைத்தையும் திரும்பப் பெறுவது என்பது நடைமுறையிலே சாத்தியமில்லை என்பதால், ஏற்கெனவே அனுப்பி வைக்கப்பட்ட அந்தப் பிரதிகளைத் திரும்பப்பெற வேண்டியதில்லை. இப்பேரவைச் செயலகத்திலே உள்ள அளவில் இப்பேரவையைப் பொறுத்த பிரதிகளிலும் அந்த இணைப்பை அழித்துவிட வேண்டுமெனவும், அம்மறுபதிப்பில் உள்ள உடுக்குறி மற்றும் அடிக்குறிப்புகளை அடித்திட வேண்டும் எனவும் நான் ஆணையிடுகிறேன்.

முற்பகல் 11-45

**30.** முந்தைய பேரவைத் தலைவரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளை அடுத்து வரும் பேரவைத் தலைவர் மாற்ற முடியாது என்று தீர்ப்பளித்து விட்டு, நீங்களே **25-3-1989**-ன் நடவடிக்கைக் குறிப்பில் சேர்க்கப்பட்ட இணைப்பை இப்போது அழிப்பது என்பது எப்படிச் சரியாக அமையும் என்று கேட்கக்கூடும். ஏற்கெனவே நான் தெரிவித்தபடி இவ்வாறு மாற்றியமைத்ததற்கு நமது நாடாளுமன்றத்திலோ, சட்டப் பேரவைகளிலோ எந்த முன்னோடியும்



*இல்லை. எனவே, மரியாதைக்குரிய இம்மாமன்றத்தின் தலைவர் என்ற முறையில், இப்பேரவைக்கோ அல்லது இந்தியாவின் பிற மாநிலச் சட்டமன்றங்களுக்கோ, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை தவறான ஒரு முன்னோடியை வகுத்துக் கொடுக்கக்கூடாது என்றே நான் கருதுகிறேன். எனவே, மிகத் தீவிரப் பரிசீலனைக்குப் பின்னரே, இவ்வாறு* **25-3-1989** *அன்றைய நடவடிக்கைக் குறிப்புகளில் சேர்க்கப்பட்ட அனைத்துப் பகுதிகளையும் எடுக்க நான் ஆணையிட்டுள்ளேன்.*

*எனவே, நான் முந்தைய பேரவையின் நடவடிக்கைக் குறிப்புகளில் நீக்கம், மாற்றம் அல்லது திருத்தம் எதுவும் செய்ததாக யாரும் கருதிவிடக்கூடாது. அவ்வாறு செய்ய எனக்கு அதிகாரம் இல்லை.* **25-3-1992** *அன்றும்,* **26-3-1992** *அன்றும் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் அந்நாட்களின் நடவடிக்கைக் குறிப்புகளில் அப்படியே இருக்கும். விதிகளுக்குப் புறம்பாக மாற்றப்பட்ட* **25-3-1989** *நாளிட்ட நடவடிக்கைக் குறிப்புகளை முன்பிருந்த நிலைக்குத்தான் கொண்டு சென்றிருக்கின்றேன். எந்தக் குறிப்பையும் நான் நீக்கப் போவதில்லை.* **1989**-*லே நடந்ததை* **1992**-*லே விவாதம் செய்தார்கள். அது, அந்நாள் பேரவைக் குறிப்பிலே அப்படியே இருக்கும். ஆகவே* **1992**-*லே விவாதம் செய்து* **25-3-1989** *அன்றைய நடவடிக்கைக் குறிப்போடு இணைப்பாகச் சேர்த்ததை மட்டும் நான் ரத்து செய்திருக்கின்றேன். ஆகவே, எந்த விவாதத்தையும் நான் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கவில்லை.*

**31.** *இத்தகைய விரும்பத்தகாத நிகழ்வுகள் பிற்காலத்தில் நடப்பதைத் தவிர்க்கும் நோக்கத்தில், ஒருமுறை ஒப்புதல் அளிக்கப்பட்டு பேரவைத் தலைவரின் ஆணைப்படி வெளியிடப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளை, பின்வரும் பேரவைத் தலைவர்கள் மட்டுமல்லாது, அந்தப் பேரவையின் தலைவரேகூட பின்னாளில் மாற்றம் செய்யவோ, திருத்தவோ, நீக்கவோ முடியாது என்ற வகையில் ஒரு விதியைத் தனியே தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளில் சேர்க்கலாம் என்ற யோசனையை நான் நமது பேரவை விதிகள் குழுவிற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

32. *மறைந்த முன்னாள் ஆளுநர் டாக்டர் எம். சென்னா ரெட்டி அவர்கள் பற்றி பதியப்பட்ட தரக்குறைவான விமர்சனங்களை அவைக் குறிப்பேட்டிலிருந்து நீக்க வேண்டுமென இந்த இரண்டு உறுப்பினர்களும் கேட்டுக் கொண்டுள்ளார்கள். நான் ஏற்கெனவே குறிப்பிட்டவாறு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், ஆளுநர் மீது சுமத்தப்பட்ட களங்கங்களைப் போக்குவதற்கு அந்நிகழ்ச்சிகளை நீக்கிவிட முடியுமா*

என்று பேரவைத் தலைவர் யோசித்து ஆவன செய்ய வேண்டுமென 27-1-1997 அன்றே கேட்டுக் கொண்டார்கள். 19-4-1995, 26-4-1995 ஆகிய நாட்களில் பேரவை விதிகளைத் தளர்த்தி அன்றைய ஆளுநருக்குக் களங்கம் கற்பிக்கும் வகையில் கீழ்த்தரமான விமர்சனங்கள் இப்பேரவையில் செய்யப்பட்டுள்ளது. உள்ளபடியே வெட்கப்படக் கூடியதாகும், வேதனைக்குரியதாகும். நமது சட்டமன்றப் பேரவை வரலாற்றில் முதல்முறையாக விதி 287-ஐப் பயன்படுத்தி, ஆளுநர் நடத்தை பற்றிப் பேசக்கூடாது என்ற விதி 92 (vii) தளர்த்தப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக எந்த அளவுக்கு இந்த அவையின் மாண்பு கீழே தள்ளப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்ட அவ்விமர்சனங்களிலிருந்து சில வரிகளை மேற்கோளாகக் காட்டலாம் என்றுகூட நான் முதலில் எண்ணியிருந்தேன். எனினும், அந்தத் தரக்குறைவான வார்த்தைகள் அவைக் குறிப்பிலே மீண்டும் இடம் பெறுவதை நான் விரும்பாததால் அதைக் கைவிட்டுவிட்டேன்.

33. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 154-ன்படி, ஆளுநர் இம்மாநிலத்தின் தலைமையை ஏற்றுள்ளவர். பிரிவுகள் 174, 175, 176 ஆகியவற்றில் பேரவைக் கூட்டத்தைக் கூட்ட அழைப்பாணை விடுக்கவும், கூட்டத் தொடரினை இறுதி செய்யவும், பேரவையைக் கலைக்கவும், பேரவையில் உரையாற்றவும், பேரவைக்குச் செய்தியுரை அனுப்பவும் ஆளுநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சட்டமன்றத்திற்கான பொதுத் தேர்தல் ஒவ்வொன்றுக்குப் பிறகும் நடைபெறும் முதல் கூட்டத் தொடரின் தொடக்கத்திலும், ஒவ்வொரு ஆண்டின் முதல் கூட்டத் தொடரின் தொடக்கத்திலும் சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரையாற்றுவார். சட்டமன்றத்தின் ஓர் அங்கமாக அவர் விளங்குகிறார்.

ஆளுநர் பதவி என்பது அரசமைப்புச் சட்டத்திலே இடம் பெற்ற ஒரு பதவி. அது ஒரு அடையாளச் சின்னம். அதற்கு நல்ல உதாரணம் சொல்ல வேண்டுமென்றால் நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரை, கடந்த ஐந்து மாதங்களிலே மூன்று ஆளுநர்கள் இருந்துள்ளார்கள். இந்தக் கூட்டத் தொடருக்கு நம்மையெல்லாம் அழைத்தவர் மறைந்த ஆளுநர் டாக்டர் எம். சென்னா ரெட்டி அவர்கள். ஆளுநர் உரை நிகழ்த்தியவர் ஆளுநர் திரு. கிருஷண் காந்த் அவர்கள். இப்போது அந்த உரைக்காக நன்றி பெற்றவர் ஆளுநர் செல்வி பாத்திமா பீவி அவர்கள். ஆகவே, ஆளுநரை ஒரு சின்னமாகத்தான் நாம் கருத வேண்டுமேயன்றி ஒரு தனிப்பட்ட நபராகக் கருதக் கூடாது.



34. ஆளுநருக்கும் முதலமைச்சருக்குமிடையே சுமுகமான உறவு இல்லாவிடினும் ஆளுநர் பதவிக்குரிய அனைத்து மதிப்பும் மரியாதையும் காட்டப்பெற வேண்டும். அப்போதைய முதலமைச்சருக்கும் ஆளுநருக்குமிடையே இருந்த கருத்து வேறுபாடு குறித்து நான் விவாதிக்க விரும்பவில்லை. ஆனால், தனது பதவிக் காலத்தில் நடுநிலையுடனும், அரசியல் சார்பின்றியும் செயல்பட வேண்டிய பேரவைத் தலைவரைத் தலைமையாகக் கொண்டு நடுநிலைமையுடன் இயங்க வேண்டிய பேரவைச் செயலகம், திட்டமிட்டே ஆளுநரைப் பல நேரங்களில் அவமதித்துள்ளது, புறக்கணித்துள்ளது என்பதை வருத்தத்துடன் நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஆளுநருக்கும், அரசுக்குமிடையே எத்தகைய வேறுபாடுகள் இருப்பினும் சட்டமன்றம் நடுநிலையுடன் திகழ வேண்டும். பேரவைத் தலைவர், பேரவையிலோ, பேரவைச் செயலகத்தை நிர்வகிப்பதிலோ அரசின் பக்கம் சாயக் கூடாது. ஆனால் கடந்த பேரவையில், அப்போதைய பேரவைத் தலைவர், ஆளுநரைப் பற்றி அவையில் விமர்சிக்க விதிகளைத் தளர்த்த அனுமதித்ததோடு மட்டுமல்லாமல், அலுவலக நிர்வாகத்திலும் அத்துமீறல்களை அனுமதித்துள்ளார். சட்டமன்றப் பேரவைச் செயலகத்தைப் பொறுத்தவரை, குறிப்பிட்ட சில பதவி உயர்வுக் கோப்புகளில் ஆளுநரின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னர்தான் பதவி உயர்வு அளிக்கப்பட வேண்டுமென்று சட்டமன்றப் பேரவைச் செயலகப் பணி விதிகளில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தும்கூட, குறைந்தது 19 நேர்வுகளில் வேண்டுமென்றே கோப்புகள் ஆளுநருக்கு அனுப்பப்படாமலே பதவி உயர்வு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன என நான் அறிகிறேன். அதற்காக நான் நிர்வாக நடவடிக்கைகள் எடுத்தால், இப்போது பல அதிகாரிகளும், பணியாளர்களும் பதவி இறக்கம்கூட அடைய நேரிடும். ஆனால், மனிதாபிமானம் கருதி நான் அதைச் செய்ய விரும்பவில்லை.

முற்பகல் 11-50

35. இவையனைத்திற்கும் மேலாக அன்றைய பேரவைத் தலைவரின் வருத்தத்திற்குரிய, துரதிர்ஷ்டவசமான செயல் என்னவென்றால், 1993-ஆம் ஆண்டுக்கான சட்டமன்ற நாட்குறிப்பு பைண்ட் செய்யப்பட்ட பிறகு, அதில் இடம் பெற்ற ஆளுநரின் புகைப்படத்தை எடுக்க ஆணையிட்டதேயாகும். ஆளுநரின் புகைப்படம் அரசாங்க நாட்குறிப்பிலும், சட்டமன்ற நாட்குறிப்பிலும் இடம் பெறுவது வழக்கமாக இருந்தபோதிலும், அதையடுத்து 1994, 1995, 1996 ஆகிய ஆண்டுகளில் அவரது புகைப்படம் சட்டமன்ற நாட்குறிப்பில் இடம் பெறவில்லை.

சட்டமன்ற நாட்குறிப்பில் இவ்வாறு ஆளுநரின் புகைப்படம் இடம் பெறாமல் செய்தது முற்றிலும் பொறுப்பற்ற, பழிவாங்கும் நடவடிக்கையே ஆகும்.

**36.** அடுத்து அமைக்கப்பட்ட பேரவையின் தலைவர் என்ற முறையில் முந்தைய பேரவையின் நடவடிக்கைக் குறிப்பில் மாற்றம், திருத்தம் அல்லது நீக்கம் செய்ய எனக்கு அதிகாரம் இல்லையென்பதால், ஆளுநரைப் பற்றிய தரக்குறைவான குறிப்புகள் இடம் பெற்றிருந்தாலும்கூட அத்தகைய பகுதிகளை நீக்க நான் ஆணையிட முடியாது.

**37.** இதற்கு ஒரு தீர்வாக, சென்ற பேரவையில் ஆளுநருக்கு எதிராக தரக்குறைவான, கீழ்த்தரமான விமர்சனங்கள் பதியப்பட்டதற்கு எதிர்ப்பும், கண்டனமும், வருத்தமும் தெரிவிக்கும் வகையில் ஒரு தீர்மானத்தினை இந்தப் பேரவை விரும்பினால் நிறைவேற்றலாம். இந்திய நாட்டின் மாதிரிச் சட்டமன்றங்களுள் ஒன்றாக விளங்கும் நமது பேரவையின் புகழுக்கு, முந்தைய பேரவையின் இந்நடவடிக்கை அழியாக் களங்கத்தைச் சேர்த்துள்ளது என்றும் அத்தீர்மானத்தில் குறிப்பிடலாம்.

**38.** வருங்காலத்தில் ஆளுநருக்கு எதிராக இவ்வாறு அரசியலமைப்பை மீறிய, நல்லொழுக்கத்திற்கு அப்பாற்பட்ட, கீழ்த்தரமான விமர்சனங்கள் பேரவையில் செய்யப்பட்டு பதிவாவதைத் தடுக்கும் வகையில் "எந்தச் சூழ்நிலையிலும், மாநிலத்தின் தலைமையாகவும், பேரவையின் பகுதியாகவும் விளங்குகிற ஆளுநரின் நடத்தையைப் பற்றி விதி 92 (vii)-ஐத் தளர்த்தி விவாதித்தல் கூடாது" என்ற ஒரு புதிய விதியை நமது பேரவை விதிகளில் சேர்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

39. தங்களைத் தாக்குதலில் ஈடுபடுபவர்களாகத் தவறாகச் சித்தரிக்கும் நடவடிக்கைக் குறிப்புகளின் பகுதிகளை உரியவாறு மாற்ற வேண்டுமென உறுப்பினர்கள் இருவரும் கேட்டுக் கொண்டுள்ளார்கள். நான் நடவடிக்கைக் குறிப்புகளையும், மற்ற ஆவணங்களையும் பார்த்தபோது, இத்தகைய ஒரு கருத்தை ஏற்படுத்தும் வகையில் 21-4-1993 அன்று பேரவையின் மேற்கு லாபியில் காவலர்களைத் தாக்கியதாக இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவுகள் 332 மற்றும் 34-ன்கீழ் இவ்விரு உறுப்பினர்கள் மீதும் குற்றவியல் வழக்குகள் போடப்பட்டுள்ளன என்பது தெரிய வந்தது. ஆனால், அவர்களுக்கு எதிராக, வலுவான அடிப்படை



எதுவும் முன்வைக்கப்படவில்லை என்று நான் அறிகிறேன். பேரவைக் காவலர்களைத் தாக்கியதன் மூலம் அவ்வுறுப்பினர்கள் குற்ற நடவடிக்கை புரிந்துள்ளார்கள் என அப்போதைய பேரவைத் தலைவர் நம்பியிருப்பினும், பேரவையின் சுவர்களுக்குள்ளே நடைபெற்றதாகக் கூறப்படும் இச்சம்பவத்திற்கு, தானே ஒழுங்கு நடவடிக்கை எடுத்திருக்க முடியும் அல்லது இதற்கு அவையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியோ, குற்றம் நிரூபிக்கப்படுமாயின், எத்தகைய தண்டனை இதற்கு வழங்கப்படலாம் என்பதற்காக இப்பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பியோ நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆனால், பேரவையில் நடைபெற்றதாகக் கூறப்பட்ட இச்சம்பவத்திற்கு அன்றைய பேரவைத் தலைவர், காவல் துறை ஆணையரை நடவடிக்கை எடுக்கக் கோரியதன் மூலம் தனது அதிகாரத்தை அரசாங்கத்திற்கு விட்டுக் கொடுத்துள்ளார். அதன் பிறகு, அந்த இரண்டு உறுப்பினர்களும் அன்று மாலையே கைது செய்யப்பட்டு, குற்றவியல் நீதிபதியின்முன் நிறுத்தப்பட்டபோது, அவர்கள் ஜாமீன் கேட்காதபோதும்கூட, அவர்களைக் காவலில் வைக்க அவர்களுக்கு எதிராக சரியான ஆதாரங்கள் இல்லையென நீதிபதி அவர்கள், அவர்களை விடுவித்துள்ளார்கள். இது பேரவைக்கும், பேரவைத் தலைவருக்கும் ஏற்பட்ட அவமதிப்பாகும். எனவே, எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பெயரைக் களங்கப்படுத்தவே இவ்வழக்கு புனையப்பட்டது என்று எண்ணத் தோன்றுவது இயற்கை. அதே அரசாங்கம் பதவியில் இருந்த நிலையிலும், 3 ஆண்டுகள் முடிந்த பிறகும்கூட, இவர்கள்மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பேரவையில் உறுப்பினர்கள் நடந்து கொண்ட முறைக்கு அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை இந்தப் பேரவை, காவல் துறைக்கு விட்டுக் கொடுத்தது அதுவே முதல் முறையாகும்.

40. அப்போதைய பேரவைத் தலைவரின் வழிகாட்டுதலின்பேரில் பதியப்பட்ட புகார், இவ்வாறு குற்றவியல் நீதிபதி ஒருவரால் அவமதிப்புக்கு உள்ளாக்கப்பட்டிருப்பது உள்ளபடியே வருத்தத்தையளிக்கிறது. எனினும் புகாரை வலியுறுத்த, போதுமான ஆதாரங்கள் இல்லையென கற்றறிந்த அந்நீதிபதி சரியான முடிவையே எடுத்துள்ளார்.

முற்பகல் 11-55

**41.** எனக்குக் கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையிலும், கடந்த 40 ஆண்டுகளாக குற்றவியல் வழக்கறிஞனாக நான் பெற்ற

அனுபவத்தின் அடிப்படையிலும் பார்க்கும்போது, உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. பரிதி இளம்வழுதி ஆகியோர், அப்போதைய பேரவைத் தலைவரின் ஆணையின்பேரில் காவல் துறைக்குக் கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் இந்தக் குற்றவியல் வழக்கில் வேண்டுமென்றே சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும், அவர்களுக்கு எதிராக அடிப்படை எதுவும் முன்வைக்கப்படவில்லை என்றும் அவர்கள் குற்றமற்றவர்கள் என்றும், நான் தெளிவாகக் கூற விரும்புகிறேன்.

42. இதேபோன்று, 30-3-1995 அன்று பேரவை மேற்கு லாபியில் தங்களை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தாக்கியதாக பேரவைக் காவலர்கள் கொடுத்த புகாரை மேல் நடவடிக்கைக்காக காவல் துறை அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளதாக அப்போதைய பேரவைத் தலைவர் 31-3-1995 அன்று மற்றொரு தீர்ப்பினை வழங்கியுள்ளார்.

பேரவை மாடத்திலிருந்து துண்டுப் பிரசுரங்களை வீசுதல் அல்லது கோஷம் எழுப்புதல் ஆகிய செயல்களுக்காக பார்வையாளர்கள்மீது நடவடிக்கை எடுக்கும்போதுகூட தீர்மானம் ஒன்று பேரவையில் நிறைவேற்றப்படுகிறது. ஆனால், பேரவையின் உறுப்பினர்களே சம்பந்தப்பட்ட இவ்விரு நேர்வுகளில், புகார்களை குற்றவியல் நடவடிக்கை எடுக்க காவல் துறையிடம் ஒப்படைப்பதற்கு முன்னர் தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. தங்களது நிலையினை விளக்கிக்கூற இரண்டு உறுப்பினர்களுக்கும் அவையில் வாய்ப்பு அளிக்கப்படவில்லை. இதிலிருந்தே, நடந்ததாகக் கூறப்படும் சம்பவத்திற்கு எவ்வித அடிப்படையும் இல்லையென்பது விளங்கும். லாபியில் நடந்த தாக்குதலை பேரவைத் தலைவர் இருக்கையிலிருந்து, தானே பார்த்ததாகப் பேரவைத் தலைவர் தெரிவித்துள்ளார். இந்த இருக்கையிலிருந்து மேற்குப்புற லாபியையோ அல்லது கிழக்குப்புற லாபியையோ என்னால் பார்க்க முடியவில்லை என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

43. இவற்றில் முதல் தகவல் அறிக்கை (F.I.R.) பதியப்பட்டதே தவிர, குற்றப்பத்திரிகை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என அறிகிறேன். எனவே இவை குறித்து மேலும் நான் எதுவும் தெரிவிக்க விரும்பவில்லை. இந்த வழக்குகள் திரும்பப் பெறப்பட்டதாக நான் கருதுகின்றேன். திரும்பப் பெறப்படவில்லையென்றால், இவை என்னுடைய செயலகத்திலிருந்து கொடுத்த புகார் என்ற அடிப்படையில் இந்த வழக்கைத் திரும்பப் பெற வேண்டுமென்று நான் உத்தரவிட இருக்கின்றேன்.



44. தங்களுக்கு எதிராக உண்மைக்கு மாறாகத் தெரிவிக்கப்பட்ட அவதூறுகளை நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்க வேண்டுமென்றும், எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கருத்துக்களை மறைக்கும் வகையில் வேண்டுமென்றே முன்பு நீக்கப்பட்ட பகுதிகளை, மீண்டும் சேர்க்க வேண்டுமென்றும் இந்த மாண்புமிகு உறுப்பினர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

45. பேரவை நடவடிக்கைக் குறிப்புகளையும், இதர ஆவணங்களையும் பார்க்கும்போது, உறுப்பினர்கள் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு உண்மையிலேயே அடிப்படை உள்ளது என்று நான் உணர முடிந்தது. பல நேர்வுகளில், குறிப்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் மட்டும் நீக்கப்பட்டு, அவர்களுக்கு எதிராகத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் நடவடிக்கைக் குறிப்புகளில் இடம் பெற அனுமதிக்கப்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டாக, 28-4-1994 அன்று நடந்த விவாதத்தில் நம்முடைய மூத்த உறுப்பினர் திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்கள், தனது ஜாதிப் பெயரைக் குறிப்பிட்டபோது அது நீக்கப்பட்டது. ஏற்கெனவே அப்போதைய முதலமைச்சர் அதுபோன்று தம் ஜாதிப் பெயரைக் குறிப்பிட்டது நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெற அனுமதிக்கப்பட்டுள்ளது என அவர்கள் சுட்டிக்காட்டியதும் சேர்த்து நீக்கப்பட்டது. எனினும், தனது ஜாதியின் பெயர் பற்றி 24-9-1991 அன்று அன்றைய முதல்வர் குறிப்பிட்டது இன்னமும் நடவடிக்கைக் குறிப்புகளில் இருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதேபோன்று, 15-3-1995 அன்று எதிர்க்கட்சி ஒன்றினைப் பற்றி அமைச்சர் ஒருவர் தெரிவித்த குற்றச்சாட்டு, நடவடிக்கைக் குறிப்பில் உள்ளது. எனினும், உடனே பதில் மொழியாக, ஆளுங்கட்சிக்கு எதிராகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டு மட்டும் நீக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, 19-4-1993, 21-4-1993, 11-4-1994, 4-11-1994, 15-3-1995, 10-4-1995, 2-5-1995, 3-5-1995, 28-2-1996 போன்ற நாட்களின் நடவடிக்கைக் குறிப்புகளைப் பார்க்கும்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களும், மறுப்புகளும் "(குறுக்கீடுகள்)" என்று மட்டுமே காட்டப்பட்டுள்ளன என்பது தெரிய வருகிறது.

குறிப்பாக, 21-4-1993 அன்றைய நடவடிக்கைக் குறிப்பில், அப்போதைய பேரவைத் தலைவரின் கருத்துக்கள் தொடர்ச்சியாக 10 அச்சிட்ட பக்கங்களில் இடம் பெற்றுள்ளன. ஆனால், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் ஏறக்குறைய 110 இடங்களில் "(குறுக்கீடுகள்)" என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன. எனினும், பல்வேறு நாட்களில்

எதிர்க்கட்சி உறுப்பினர்களைப் பற்றி அவதூறான குறிப்புகள், உறுப்பினர்களால் மட்டுமல்லாது பேரவைத் தலைவராலேயே தெரிவிக்கப்பட்டு, குறிப்பேட்டில் இடம் பெற்றுள்ளன.

நண்பகல் 12-00

**46.** உறுப்பினர்கள் தெரிவித்துள்ள இக்குற்றச்சாட்டுகளுக்கு அடிப்படை இருந்தாலும், தங்களைப் பற்றி உண்மைக்கு மாறாகவும், தரக்குறைவாகவும் பதியப்பட்ட குறிப்புகளை நீக்க வேண்டுமெனவும், எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கருத்துக்களை மறைக்க வேண்டுமென்று நீக்கப்பட்ட சில பகுதிகளைச் சேர்க்க வேண்டுமெனவும் அவர்கள் விடுத்துள்ள நியாயமான கோரிக்கைகளை என்னால் நிறைவேற்ற இயலாது என்பதைத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் நான் முன்னரே தெரிவித்தவாறு, நமது விதிகளின்கீழ் முந்தைய பேரவைத் தலைவரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகள் எதையும் மாற்றவோ, திருத்தவோ அல்லது நீக்கவோ எனக்கு எந்த அதிகாரமும் இல்லை.

47. 23-5-1996 அன்று பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் நான் தெரிவித்த கருத்துக்களை இங்கே நினைவு கூர்கின்றேன் :

"இந்த அவையின் காவலன் நான். இந்த அவையின் முதல் ஊழியன் நான். ஆகவே, இந்த அவை எந்த முடிவை எடுக்கின்றதோ அதுதான் என்னுடைய முடிவு. எனக்கு வானளாவிய அதிகாரம் கிடையாது. என்னுடைய அதிகாரம், இந்தக் கூரை அளவுக்குத்தான் உண்டு. அந்த அதிகாரத்தை நான் இந்த அவையை முறையாக நடத்தப் பயன்படுத்துவேன்" என்று நான் தெரிவித்துள்ளேன்.

48. மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரும் அளித்துள்ள கடிதங்கள் @ இன்றைய நடவடிக்கைக் குறிப்பின் பகுதியாகவும் அமையும். நான் தமிழில் எனது தீர்ப்பினை அளித்திருந்தாலும், அதனுடைய ஆங்கில வடிவமும் @@ இன்றைய நடவடிக்கைக் குறிப்பின் பகுதியாக அமையும் என்று தெரிவித்து, என் தீர்ப்பை முடிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய தீர்ப்பைப் பற்றி எந்தக் கருத்தும் நான் கூற முன்வரவில்லை. ஆனால் தங்களுடைய தீர்ப்பில் உள்ளடங்கிய

@ 285 முதல் 309 வரையிலான பக்கங்களில் இணைப்பு 1 மற்றும் 2-ஆக அச்சிடப்பெற்றுள்ளன.
@@ 311 முதல் 324 வரையிலான பக்கங்களில் இணைப்பு 3-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



ஒரு நிகழ்ச்சி அல்லது செய்தியைப் பற்றி மாத்திரம் சில வரிகளில் இந்த அவையில் நினைவூட்ட விரும்புகின்றேன்.

1989-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25-ஆம் நாள் இந்த அவையிலே நிதிநிலை அறிக்கையை, முதலமைச்சர் என்ற முறையிலே நான் முன்வைத்தபோது ஏற்பட்ட சில சம்பவங்கள், அவைகளை எல்லாம் தாறுமாறாகத் திருத்துகின்ற வகையில், 25-3-1992 அன்று சில திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு, மாற்றப்பட்டு, தங்களுடைய தீர்ப்பிலே குறிப்பிடப்பட்டிருப்பதைப் போல, அவைகளின் வேறு பதிப்புகள் எல்லாம்கூட வெளியிடப்பட்டன. அப்படி வெளியிடும்போது எல்லோரும் பதைத்தார்கள், இப்படிச் செய்கிறார்களே என்று. ஆனால் நான் மாத்திரம் ஆறுதலாக இருந்தேன். என்ன காரணம் என்றால், இதை எல்லாம் மாற்றியவர்கள் 25-3-1989-க்கும், 25-3-1992-க்கும் இடையில் 23-1-1991—1991 ஜனவரி 23-ஆம் தேதி—இதே அவையில் திருநாவுக்கரசு அவர்கள் பேசிய பேச்சை மாற்ற மறந்துவிட்டார்கள். அதிலே எல்லாமே அடங்கி இருக்கிறது. 25-3-1989 அன்று என்ன நடந்தது என்பதை 23-1-1991 அன்று நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் வெகு விளக்கமாக — இது 5, 6 பக்கங்கள் இருக்கின்றன, அதிலே ஒரு பக்கத்தை மாத்திரம் படித்துக்காட்ட விரும்புகிறேன். திருநாவுக்கரசு அப்போது பேசுகிறார். கேளுங்கள். அவர் சொல்கிறார்:

"முதல் பட்ஜெட் கூட்டத்தொடர் நடந்தபோது சட்டமன்ற உறுப்பினர்களை, அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த செல்வி ஜெயலலிதா அவர்கள், தன்னுடைய வீட்டிற்கு அழைத்திருந்தார். நாங்கள் அனைவரும் போய் இருந்தோம். நான் போவதற்கு முன்னாலேயே திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். போய் இருந்தார். திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்களைப் பார்த்து, 'முதலமைச்சர் (அதாவது அப்போது இருக்கிற முதலமைச்சரைக் குறிப்பிடுகிறார் அன்றைய எதிர்க்கட்சித் தலைவர்) எழுந்து பட்ஜெட் படிக்க ஆரம்பித்த உடனேயே, பின்னாலே உட்கார்ந்து இருக்கிற நீங்கள் எழுந்து முதலமைச்சர் கையிலே இருக்கிற பட்ஜெட் காப்பியைப் பறித்து, தாக்கிவிடவேண்டும்' என்று அவர்களிடத்திலே ஜெயலலிதா அவர்கள் தனியாகச் சொல்லியிருக்கிறார்கள். காரணம், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்களிடத்திலே சொன்னால் அவர் உடனே முரட்டுத்தனமாக ஒத்துக்கொண்டு செய்துவிடுவார் என்ற நம்பிக்கை. ஆனால் கே.கே.எஸ்.எஸ்.ஆர். பார்ப்பதற்கு மீசையோடு தோன்றலாமே தவிர, அவர் ஒன்றும் முரடரும் அல்ல, சொல்வதை எல்லாம் கேட்கிற முட்டாளுமல்ல. எனவே அவர் நிதானமாக மறுத்துவிட்டு, கட்சியினுடைய துணைத் தலைவர் திருநாவுக்கரசு வரட்டும், இரண்டு

பேரும் கலந்து சொல்கிறோம் என்று ஜெயலலிதாவிடத்திலே சொல்லிவிட்டார். என்னிடத்திலே தனியாகச் சொன்னால், ஒப்புக்கொள்ள மாட்டேன் என்று நினைத்து செல்வி ஜெயலலிதா அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் உட்கார வைத்துக் கொண்டு, 'நான் பிரதான எதிர்க்கட்சித் தலைவர், நான் பிடித்து இழுத்தால் நன்றாக இருக்காது, எனவே என் பக்கத்திலே இருக்கிற நீங்கள் முதலமைச்சருடைய கையிலே இருக்கிற பட்ஜெட்டை, அதன் காப்பியைப் பிடித்து இழுத்து—நீங்கள்தான் இழுத்து—அடிக்கவேண்டும் என்று என்னிடத்திலே சொன்னார்கள். நான் உடனே மிகுந்த வேதனையோடு சொன்னேன், 'தெரிந்தோ தெரியாமலோ புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் எங்களை 10 ஆண்டு காலம் கௌரவமான பதவியிலே வைத்துவிட்டுப் போய் இருக்கிறார். தயவுசெய்து, எங்களை அடியாட்களாக மாற்றாதீர்கள், அதற்கு என்னுடைய மனசாட்சி இடம் தரவில்லை, இரண்டாவது, இதுபோன்ற சம்பவம் வேண்டாம்' என்று நான் வாதாடினேன். இது எல்லோருக்கும் தெரியும். இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, அங்கேயிருந்த மூத்த தலைவர்கள் அத்தனை பேர்களுக்கும் தெரியும்.

பிற்பகல் 12-05

நாங்கள் எல்லாம் 'ரிசப்ஷன் ஹாலிலே' உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தபோது மூத்த தலைவர்கள் எல்லாம் டைனிங் ஹாலில் அடைக்கப்பட்டுக் கிடந்தார்கள். அப்போது இருந்த மூத்த தலைவர்களை எல்லாம் கூப்பிட்டு—அவர்கள் எல்லாம் ஜெயலலிதாவினுடைய டைனிங் ஹாலிலே உட்கார்ந்து இருந்தார்கள். 'இது வேண்டாம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய இரண்டு கட்சிகளுக்கிடையே விரோதம் இருக்கலாம். முதலமைச்சர் நமக்குப் பிடிக்காதவராகக் கூட இருக்கலாம். அது வேறு விஷயம். ஆனால் அவரைத் தலைவராக ஏற்றுக்கொண்டிருக்கின்ற, அவருக்குப் பின்னால் நிறைய சட்டமன்ற உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கின்றார்கள். தோழமைக் கட்சியினர் எல்லாம் இருக்கிறார்கள். அவர்கள்மீது கை வைக்கிறபோது பின்னாலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் உணர்ச்சி வசப்படுவார்கள். அங்கு நிச்சயமாக அடிதடி நடக்கும், ரகளை உருவாகும், வன்முறை நடக்கும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இருக்கும்பொழுது எவ்வளவோ பிரச்சினைகள் நடந்திருக்கின்றன. அவருக்குப் பக்கத்திலே யாராவது போனால்கூட நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம், தாக்கியிருப்போம். அதுபோல இன்றைய முதலமைச்சருக்குப் பின்னாலே



அவரைத் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் கண்டிப்பாகத் தாக்குவார்கள். அசம்பாவிதம் நடக்கும், அசிங்கமாகப் போய்விடும்' என்று சொன்னேன். நான் முடியாது என்று சொன்னவுடனே, ஜெயலலிதா சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்து, 'சரி, அவா மாட்டேன் என்று சொல்கிறார். உங்களில் யாருக்கு வசதிப் படுகிறதோ—உங்களில் யாருக்கு வசதிப்படுகிறதோ, அவர்கள் போய் முதலமைச்சர் படிப்பதைப் பிடுங்கிக் கிழியுங்கள்' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்" என்று திருநாவுக்கரசு அப்பொழுதே சொல்லியிருக்கிறார். எனவே, அவர்கள் இதை மறைத்தாலும்கூட, மறைக்கமுடியாத ஒன்று இடையிலேயே இங்கு பேசப்பட்டு, இந்த அவைக் குறிப்பிலே ஏறியிருக்கிறது என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

## 4. அறிக்கைகள் அளித்தல்

### (அ) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்.

**திரு. என். எஸ். ராஜ்குமார் மன்றாடியார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகிய நான், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் நான்காவது—"சாலைகளும் பாலங்களும்", ஐந்தாவது—"நுகர்பொருள் வழங்கல்" மற்றும் ஆறாவது—"நொய்யல், ஒரத்துப்பாளையம் அணை நீர் மாசுத் தன்மை மற்றும் குடிநீர் ஆதாரம் பாதிப்பு" ஆகிய மூன்று அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

### (ஆ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-97-ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 42 முதல் 54 வரையிலான 13 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன். இந்த அறிக்கைகளை அச்சிட்டு பேரவைக்கு அளிப்பதற்கு போதிய கால அவகாசம் இல்லாததால் இவ்வறிக்கைகளின் 'படி எடுத்த நகல்கள்'

[திரு. ச. அழகிரி] [1997 ஏப்ரல் 29

சட்டமன்ற நூலகத்தில் உறுப்பினர்களின் பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளன. இவ்வறிக்கைகள் அச்சடிக்கப்பட்டு கிடைக்கப்பெற்றவுடன், உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (இ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் திரு. சுப. தங்கவேலன்.

**திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக குழுவின் 27 முதல் 33 வரையிலான 7 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன். மேற்படி அறிக்கைகளில், 30 முதல் 33 வரையிலான நான்கு அறிக்கைகள், போதிய அவகாசம் இல்லாமையால் அச்சடிக்கப்பட்ட பிரதிகளுக்குப் பதிலாக படி எடுத்த பிரதிகளாக அளிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகளின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சடிக்கப்பட்ட பிரதிகள் கிடைத்தவுடன், அவை பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்படும்.

## (ஈ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். குழுவின் தலைவர் திரு. ம. சண்முகம்.

***திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1996-97-ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஆறாவது மற்றும் ஏழாவது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## (உ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். குழுவின் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன்.

**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-97-ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் ஐந்தாவது மற்றும் ஆறாவது அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கின்றேன்.



1997 ஏப்ரல் 29]

# 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

## (அ) தமிழ்நாடு கட்டாயத் தொடக்கக் கல்வி (திருத்த) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவுகள்— அறிமுகம் செய்தல். 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாயத் தொடக்கக் கல்வி (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாயத் தொடக்கக் கல்வி (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

# 6. அறிவிப்புகள்

## (அ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1997 (ஆ.இ)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஆ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1997.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள்—அறிமுகம் செய்தல்—தொடர்ச்சி. 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

பிற்பகல் 12-10

***மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.





## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு, 1997 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள்—அறிமுகம் செய்தல்—தொடர்ச்சி. 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1997 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள்—அறிமுகம் செய்தல்—தொடர்ச்சி. 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)



ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள்—ஆய்வு செய்தல். 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/1997), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/1997), @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் 3, இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் 3, இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 28-4-1997-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது

[பேரவைத் தலைவர்] [1997 ஏப்ரல் 29

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/1997) நிறைவேற்றப் பெறவேண்டும்''
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



1997 ஏப்ரல் 29]

## (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/1997), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/1997), @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் 3, இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் 3, இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

---

@ 28-4-1997-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது

[பேரவைத் தலைவர்] [1997 ஏப்ரல் 29

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/1997) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 12-15

## (இ) தமிழ்நாடு தொழிலியல் நகரியப் பகுதி மேம்பாட்டு அதிகார அமைப்புச் சட்டமுன்வடிவு 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நகரியப் பகுதி மேம்பாட்டு அதிகார அமைப்புச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/1997), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.



1997 ஏப்ரல் 29]

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நகரியப் பகுதி மேம்பாட்டு அதிகார அமைப்புச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/1997) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் தம் கருத்தைக் கூற விரும்பினால் கூறலாம். திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சட்டமுன்வடிவின்மீது பேசக்கூடிய வாய்ப்புக் கிடைத்தமைக்கு எனது மகிழ்ச்சியையும், வணக்கத்தையும் தெரிவித்து, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று ஒருசில கருத்துக்களை இந்த அவையின் முன்னாலே வைக்க விரும்புகிறேன். தொழிலியல் நகரியப் பகுதி மேம்பாட்டு அதிகார அமைப்பின் மூலமாக தொழிற்சாலைகளை புதிதாகத் துவங்குவதற்கு ஏற்ற வகையில் அதன் சுற்றுப் பகுதியிலே இருக்கக்கூடிய தொழில் துறை மேம்படுவதற்காக ஒரு அதிகார அமைப்பை ஏற்படுத்தி உள்ளாட்சி மன்றங்களுக்கு எந்தெந்த அதிகாரங்கள் இருக்கின்றனவோ, எப்படிப்பட்ட வேலைகளைச் செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கின்றதோ, அதைப்போலவே இந்த அதிகார அமைப்புக்குத் தேவையான தலைவர்களை, உறுப்பினர்களை எல்லாம் நியமித்துக்கொண்டு விரைவாகத் தொழிலைத் துவங்குவதற்கு ஏற்ற வகையிலேயும், அதைப்போல தொழிலைத் துவங்கக்கூடியவர்களுக்கு ஏதுவாக, சுலபமாக இருக்கக்கூடிய வகையில் சிங்கிள் விண்டோ கிளியரன்ஸ் என்பதைப் போல ஒரே இடத்திலே தேவையான அனுமதிகள் எல்லாம் வழங்கி சுலபமாக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கும் நோக்கத்தோடு இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கின்ற காரணத்தினால் முழுமையாக வரவேற்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

இன்று தமிழகத்திலே ஒரு சிறந்த தொழில் மேம்பாட்டை, சுற்றுச்சூழல் மாசினைக் கட்டுப்படுத்தி எதிர்காலத்திலே சிறப்பாகக் கொண்டுவர வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்ததற்காக மனமார மகிழ்ந்து பாராட்டுகின்றேன்.

தமிழகம் தொழில் துறையிலே மீண்டும் நல்ல நிலைக்கு வர வேண்டும், முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தோடு பல திட்டங்களை

@ 28-4-1997-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்] [1997 ஏப்ரல் 29

யெல்லாம் இன்று இருக்கக்கூடிய அரசு தீட்டி இருக்கிறது. இன்று வெளிநாட்டில் இருக்கக்கூடியவர்கள், தென் கொரிய நாட்டில் இருக்கக்கூடியவர்கள், இங்கிலாந்து நாட்டிலே இருக்கக்கூடியவர்கள், மற்ற மேலை நாடுகளிலே இருக்கக்கூடியவர்களையெல்லாம் வைத்து, கார் தொழிற்சாலைகளாக இருந்தாலும், டயர் தொழிற்சாலைகளாக இருந்தாலும், கண்ணாடித் தொழிற்சாலைகளாக இருந்தாலும், தேங்காயைப் பதப்படுத்தி வெளிநாட்டுக்கு அனுப்பக்கூடிய சூழ்நிலையிலும், மாட்டு இறைச்சிகளை வெளிநாட்டுக்கு அனுப்பக்கூடிய சூழ்நிலையிலும் பல தொழிற்சாலைகளை ஏற்படுத்தி 7,000 ஏக்கருக்கு மேலே கையகப்படுத்தி, அதன்மூலமாக இரசாயனப் பூங்காவை அமைத்து அதன்மூலமாக வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய ஒரு வாய்ப்பினை எதிர்காலத்திலே பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு பல்வேறு திட்டங்களையெல்லாம் தீட்டி, ஒரு நேர்மையான, தூய்மையான, வெளிப்படையான முறையில் அரசாங்கத்தின் மூலமாக நிர்வகிக்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறது.

பாராளுமன்றத்தினுடைய தலைவர் மாண்புமிகு சங்மா அவர்கள் 250 பொதுத்துறை நிறுவனங்களிலே 67 நிறுவனங்கள் நஷ்டத்திலேயும், அதேபோல 39 நிறுவனங்கள் ½ சதவீதத்திலிருந்து 1 சதவீதம் அளவிற்கு லாபத்திலேயும், மற்றவைகள் ஓரளவுக்கு 3 சதவீதத்திலிருந்து 7 சதவீதம் என்ற அளவிலேயும், 10 நிறுவனங்கள்தான் நல்ல லாபத்திலேயும் இயங்குவதாகக் கூறியிருக்கின்றார்கள். மேலும், தனியார் நிறுவனங்களை ஊக்குவித்து, அதற்குத் தேவையான வாய்ப்பு வசதிகளைச் செய்தால்தான் எதிர்காலத்திலே தொழில் வளர்ச்சியும், அதன் மூலமாக நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சியும் ஏற்படும் என்று நம்பிக்கையோடு கடந்த ஒரு மாதத்திற்கு முன்னால் பேசுகின்றபோது அவர்கள் கூறியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையின் காரணமாக இந்திய அரசும் 1991-ஆம் ஆண்டு எடுத்த கொள்கையின் காரணமாக, தாராளமயக் கொள்கையின் காரணமாக, எதிர்காலத்திலே தனியாரையும் ஊக்குவித்து எல்லா வாய்ப்பு வசதிகளையும் செய்து கொடுத்தால்தான் நாட்டினுடைய பொருளாதாரம் முன்னேறும் என்ற அடிப்படையில் தொழில் துறையினுடைய கொள்கை அறிவிப்பிலே இங்கே எண்ணூர் துறைமுகத்திலேயிருந்து, தாம்பரத்திற்காக இருந்தாலும் வேறு இடத்திற்கும் விரைவாக பாதைகளை அமைத்து, தனியாரிடத்திலே ஒப்படைத்து, அங்கே செல்லக்கூடிய வாகனங்களிடத்திலே சுங்க வரியாக வசூலித்து



1997 ஏப்ரல் 29] [திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்]

அந்தச் செலவை ஈடுகட்டக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள்.

பிற்பகல் 12.20

ஆகவே, இன்று தொழிற்சாலைகளை ஆரம்பிக்கின்றபோது குறிப்பாக (மணியடிக்கப்பெற்றது) இப்போதுதான் ஆரம்பித்தேன், அதற்குள் மணி அடிக்கிறீர்களே. தொழிற்சாலைகளை எல்லாம் ஆரம்பிக்கின்றபோது அனுமதி கொடுத்து, அன்று நாட்டினுடைய பொருளாதாரம் வளரவேண்டும், தொழில்கள் எல்லாம் முன்னேறவேண்டும் என்ற நோக்கத்தோடு அனுமதி கொடுத்தார்கள். சிறப்பான முறையில் தொழில்களை எல்லாம் துவக்கினாலும் இன்று அந்தத் தொழில்கள் எல்லாம் மிக மோசமாக இருக்கக்கூடிய சூழ்நிலையில்—உயர்நீதி மன்றத்திலும், உச்சநீதிமன்றத்திலும் தடை விதித்திருக்கின்ற காரணத்தால்—இன்று சாயப் பட்டறைகள், டையிங் தொழிற்சாலைகள்—அது திருப்பூராக இருந்தாலும் சரி, பவானி தொகுதியில் இருக்கக்கூடிய பல பகுதிகளாக இருந்தாலும் சரி, தோல் தொழிற்சாலைகள்—இப்படி பல்வேறு பகுதியிலும் இருக்கக்கூடிய தொழிற்சாலைகள் எல்லாம் இன்று கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்போடு நான் கேட்டுக்கொள்வது எல்லாம், உச்சநீதிமன்றத்திற்குத் தனியாக ஸ்பெஷல் பெட்டிஷன் போட்டு காலக்கெடுவை 2 ஆண்டுகளுக்காவது எதிர்காலத்தில் நீட்டித்துக் கொடுத்தால்தான் அவர்கள் முழுமையாக சுற்றுச் சூழலைப் பாதுகாக்கக் கூடிய அளவில் கழிவு நீரைச் சுத்தப்படுத்தி, ஒழுங்குபடுத்தக்கூடிய நிலையை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். அவர்களுடைய வாழ்வு எதிர்காலத்தில் சிறப்பாக இருப்பதற்கு, தமிழகத்தினுடைய பொருளாதாரம் மேலும் வளர்வதற்கு, வெளிநாட்டுக்கு ஏற்றுமதிகளை ஊக்கப்படுத்தக்கூடிய அளவிலே அந்தச் சுற்றுச் சூழல் மாசினைக் கட்டுப்படுத்தக்கூடிய அளவிலே இங்கே தமிழக அரசு முழு அக்கறை எடுத்து உச்ச நீதிமன்றத்தில் ஸ்பெஷல் பெட்டிஷன் என்ற அளவிலே போட்டு காலக் கெடுவை 2 ஆண்டுக்கு நீட்டித்துக் கொடுத்து அதற்குள்ளாக கழிவு நீரை சுத்தம் செய்து கொடுக்கவேண்டும் என்ற ஒரு முடிவினை, தீர்வினை, கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்து கொடுக்கவேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, தமிழக அரசு பல்வேறு துணைத் தொழில் நிறுவனங்கள் மூலமாக, சிப்காட் மூலமாக, டாசிட் மூலமாக, டிட்கோ மூலமாக, பல தொழில் நிறுவனங்களை வைத்து, இன்று

புதிதாக தொழில் துவங்கக்கூடியவர்களுக்கு வாய்ப்பு வசதிகளைச் செய்து கொடுத்து வருகிறது. இன்று தொழில் சிறப்பாக இருக்கவேண்டும் என்றால், நில வளம் வேண்டும், நீர் வளம் வேண்டும், மின்சாரம் வேண்டும். அதேபோல் சுற்றுச் சூழல் ஒழுங்காக இருக்கவேண்டும். சாலை வசதிகள் வேண்டும், அஞ்சலகம் வேண்டும், அதேபோல் தொலைத் தொடர்புத் துறை ஒழுங்காக இருக்கவேண்டும், துறைமுகம் இருக்கவேண்டும், ரயில் பாதைகள் வேண்டும், இப்படி எல்லா வாய்ப்பு, வசதிகளையும் சிறப்பாக ஏற்படுத்திக் கொடுத்தால்தான் தொழில் துறை மேலும், மேலும் வளர்வதற்கு ஏற்ற வகையில்—தொழிலில் முதலீடு செய்யக்கூடிய முதலாளிகள் வரக்கூடிய வாய்ப்பு கிடைக்கும். அந்த நிலையில் எதிர்காலத்தில் சிறப்பாகச் செயல்படுவதற்கு துறைமுகங்களை எல்லாம் விரிவுபடுத்தவேண்டும், தண்ணீர் இல்லாத சூழ்நிலையை மாற்றக்கூடிய வகையில் கழிவு நீரை சுத்தப்படுத்தி மீண்டும் நல்ல நீராகப் பயன்படுத்தக்கூடிய அளவிலே திட்டங்களை எல்லாம் தீட்டி செயல்படுவதாக கொள்கைக் குறிப்பில் கூறியிருக்கிறீர்கள். ஆகவே, தொழில் துவங்கக்கூடியவர்களுக்கு நிதி நிறுவனங்கள் மூலமாக மிகச் சுலபமாக நிதி கிடைக்கக்கூடிய அளவிலே நடவடிக்கை எடுக்கவேண்டும். அங்கே இருக்கக்கூடியவர்களுக்கு அதிக அதிகாரம் கொடுத்து உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக அவர்களுக்குத் தேவையான வசதி, வாய்ப்புகளைச் செய்து கொடுத்து, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்களுக்கு ஏற்ற வகையில் தொழில் நிறுவனங்களைத் துவங்கக்கூடியவர்களுக்கு அந்த அதிகார அமைப்பின் மூலமாகவே எல்லா வசதி, வாய்ப்புகளையும் செய்து கொடுக்கக்கூடிய அளவிலே அந்த அமைப்பு சிறப்பாக, ஏற்ற வகையில் இருந்தால்தான் எதிர்காலத்திலே தொழில் வளர்ச்சி அடைய முடியும்.

குறிப்பாக, தொழில்கள் துவங்குகின்ற இந்தக் காலக்கட்டத்திலே கிராமப் பகுதியில் அதிக அளவில் தொழில்களைத் துவங்கவேண்டும் என்று அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, சென்னை, சென்னையைச் சுற்றியிருக்கக்கூடிய 50 கிலோ மீட்டர், 100 கிலோ மீட்டருக்கு உள்ளாக இருக்கக்கூடிய பகுதிகளில்தான் இன்று பெரிய, பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் வரக்கூடிய நிலையைப் பார்க்கிறோம். இந்த நிலையை எல்லாம் மாற்றி, தேசப் பிதா காந்திஜி கண்ட கனவை நினைவுகூரத்தக்க வகையில் தொழில்களை எல்லாம் கிராமப் பகுதிகளில் அமைத்தால்தான் நகர்ப் பகுதியிலிருந்து கிராமப் பகுதிகளுக்கு மக்கள் செல்லக்கூடிய நிலையை நீங்கள் எதிர்காலத்தில் ஏற்படுத்திக் கொடுத்தால்தான் நல்லது. கிராமப் பகுதியில் இருக்கக்கூடிய





மக்கள் அத்தனைபேரும் நகர்ப் பகுதிக்கு வந்து, அதனால், இங்கே குடிநீர், பற்றாக்குறை ஏற்படும் சூழ்நிலை, குடியிருப்பு இல்லாத சூழ்நிலை எல்லாம் உருவாகுவதற்குப் பதிலாக நகர்ப் பகுதியிலிருந்து கிராமப் பகுதிக்கு மக்கள் எல்லாம் செல்லக்கூடிய அளவிலே தொழில் துறை வேகமாக வளர்வதற்கு ஏற்ற வகையில் தொழிற்சாலைகளை எல்லாம் கிராமப் பகுதிகளில் சிறப்பாக அமைக்கவேண்டும்.

குறிப்பாக இன்று மின்னணுத்துறையில் 16 நிறுவனங்களின் மூலமாக 9 ஆயிரத்து 500-க்கு மேற்பட்ட மெகா வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதாக மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இன்று கூறியிருக்கிறார்கள். ஆனால் அதை 1999-ஆம் ஆண்டில்தான் துவங்குவதற்கு முடியும் என்று கூறியிருக்கிறார்கள், அதை முன்னிலைப்படுத்தி, விரைவாக சூன் 1997-லேயோ, அல்லது 1998-லேயாவது ஆரம்பிப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்து கொடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

ஆகவே, இங்கே எந்தவித இடர்ப்பாடுகளும் இல்லாமல், கடந்த கால அரசு செய்த தவறுகளையெல்லாம் செய்யாமல், தொழில் முனைவோர்களுக்கு இங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் அத்தனைபேரும், கீழ்நிலையிலே இருக்கக்கூடிய அதிகாரிகளும், அரசாங்கத்திலே இருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்கள் அத்தனைபேரும் உதவிக்கரமாக இருக்கவேண்டும். நாடு முக்கியம், தேசம் முக்கியம், நாட்டினுடைய பொருளாதாரம் மேன்மேலும் வளர்வதற்கு ஒரு தூய்மையான நிர்வாகத்தைக் கொடுப்பதற்கு எல்லோரும் ஆதரவாக இருக்கவேண்டும்.

குறிப்பாக, இங்கே இருக்கக்கூடிய அதிகாரிகளை அன்போடு நான் கேட்டுக் கொள்வது, இங்கே மேல்நிலையிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் சிறப்பாகப் பணியாற்றினாலும், கீழ்நிலையிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் அத்தனைபேரும் தொழில் முனைவோர்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு கொடுத்து, அவர்கள், அவர்களைத் தேடி வர வேண்டுமென்ற எண்ணம் இல்லாமல், தொழில் முனைவோர்கள் அவர்களைத் தேடி வராத சூழ்நிலையிலே அதிகாரிகள் அவர்களைத் தேடிச் சென்று ஊக்கமும், ஆக்கமும் கொடுத்து, எதிர்காலத்திலே தமிழகம் தொழில் துறையிலே தலைமையிடத்திலே இருக்கக்கூடிய சூழ்நிலைக்கு வந்தது என்ற பெருமையை இந்த அரசுக்கு ஏற்படுத்திக் கொடுக்க

வேண்டுமென்று கேட்டு, இந்தத் சட்ட முன்வடிவின் மீது பேசியதற்கு என்னுடைய மகிழ்ச்சியையும், நன்றியையும், தெரிவித்து, நிறைவு செய்கின்றேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு மிகவும் முக்கியமானது. தமிழகத்தினுடைய முன்னேற்றத்திற்கு முதுகெலும்பாக விளங்கக்கூடியது என்பதை இந்த மாமன்றம் நன்கு அறியும் என்று நான் கருதுகிறேன்.

தமிழகத்தைப் பேரறிஞர் அண்ணாவின் வழியிலே வழி நடத்திச் செல்கின்ற டாக்டர் கலைஞர் அவர்கள், நிதிநிலை அறிக்கையினுடைய விவாதத்தின்போது ஒரு கருத்தை மிகத் தெளிவாக, திட்டவட்டமாகச் சொன்னார்கள். அவர்கள் குறிப்பிடும்பொழுது, தொழில்கள் தொடங்கப்படுவதற்குத் தேவையான உரிமங்கள் அனைத்தும் ஒரேயிடத்திலே வழங்கிட வகை செய்யும் ஒற்றைச் சாரளம், Single window Clearance குறித்து மசோதா ஒன்று ஏற்கெனவே சட்டப் பேரவையிலே வைக்கப்பட்டுள்ளது. இந்த மசோதா சட்டமான பின், தொழில் மையங்கள் அனைத்திலும் தொழில் நகரியம் Industrial Townships ஏற்படுத்தப்படும். அந்தத் தொழில் நகரியங்களை நிர்வகிக்க நிர்வாக ஆணையங்கள் Executive Authority ஏற்படுத்தபடும். நிர்வாக ஆணையங்கள் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா உரிமங்களையும் உடனுக்குடன் வழங்குவதற்கு அதிகாரம் உள்ள ஒரு அமைப்பாகச் செயல்படும் என்று டாக்டர் கலைஞர் அவர்கள் - நம்முடைய முதல்வரவர்கள் திட்டவட்டமாகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

அதன் அடிப்படையில்தான், இந்தச் சட்ட முன்வடிவு இப்பொழுது நிறைவேற இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் உலகம் எங்கும் liberalisation பொருளாதார தாராள மயக் கொள்கை எல்லா முன்னேறிய நாடுகளிலும் பின்பற்றப்படுகிறது. எங்கெல்லாம் தொழில் வளர்ச்சிக்கு அரசு தாராளமயக் கொள்கையைத் பின்பற்றுகிறதோ அந்த நாட்டை நோக்கி, அந்த மாநிலத்தை நோக்கி,



நாட்டுப் பற்று என்ற அடிப்படையில் இல்லாமல், தொழில் முன்னேற்றம் வேண்டும் என்ற அடிப்படையில், தொழில் முதலீட்டாளர்கள், தொழில் உரிமையாளர்கள் முன் வருகிறார்கள்.

எனவே, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு நாமும் நம்முடைய மாநிலத்தை முன்னேற்றியாக வேண்டும்; தொழில் வளத்தை உண்டாக்கி ஆக வேண்டும்; தனி நபர் வருமானத்தைப் பெருக்கியாக வேண்டும்; வேலைவாய்ப்பை அதிகரிக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடுதான் இந்த Tamil Nadu Industrial Township Development Area Authority என்ற சட்ட முன்வடிவு இங்கே இன்றைக்கு ஆய்வுக்கு எடுக்கப்பட்டிருக்கிறது.

நான் இங்கே பெருமையோடும், மகிழ்ச்சியோடும் தெரிவித்துக்கொள்கிறேன். டாக்டர் கலைஞர் அவர்களின், தமிழ்த் திருநாட்டை ஒரு Detroit ஆக, சென்னை நகரம் விளக்க வேண்டும்; ஒரு Lancashire ஆக மற்றப் பகுதிகள் விளங்க வேண்டும், எங்கு பார்த்தாலும் தொழில்மயம் இருக்க வேண்டும்; அதற்கு அரசினுடைய எல்லா ஒத்துழைப்பையும் தடையின்றி, தயக்கமின்றி வழங்க வேண்டும் என்ற இலட்சியத்தோடு இந்தச் சட்ட முன்வடிவு இங்கே இப்பொழுது ஆய்வுக்கு எடுக்கப்பட்டிருக்கிறது.

கடந்த காலத்தில் தொழில் உரிமத்தைப் பெறுவது என்றால் அதற்கு எத்தனையோ வழிமுறைகளை, தவறான வழிமுறைகளை, ஊழல் வழிம்றைகளை, சட்ட விரோத வழிமுறைகளை, அதிகார துஷ்பிரயோகங்களையெல்லாம் பயன்படுத்தித்தான் அவர்களெல்லாம் தொழில் உரிமைகள் பெற வேண்டிய பரிதாபகரமான நிலையிருந்தது. அதனாலே தமிழகத்தினுடைய தொழில் முன்னேற்றம் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாடு நன்கு அறியும்.

பிற்பகல் 12-30

ஆனால், இன்றையதினம் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, 4-வது முறையாக நாடாளுகின்ற நல்ல வாய்ப்பைப் பெற்ற பிறகு தொழில் முன்னேற்றத்திற்கு யார் வருபவர்களாக இருந்தாலும் உதவுகின்ற முன்னணியில் நின்று இன்றையதினம் இந்த அரசு செயல்படுகிறது.

எத்தகைய உதவிகளைக் கேட்டாலும் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது. அதை வாயளவிலே சொன்னால் மட்டும் போதாது, தனியாருக்குக் கொடுக்கும்போது, நாம் அவர்களுக்கு உதவி அளித்தால்

மட்டும் போதாது. இதற்கு அமைப்பு ரீதியாக, நல்ல நிர்வாக அமைப்பு ஏற்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில்தான் இந்தத் தொழிலியல் நகரியம் அமைக்கப்படுகிறது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நகரியம் அமைக்கப்பட்டுவிட்டால், அந்த நகரியத்திலே அங்கம் வகிப்பவர்கள், ஒருவேளை அந்த நகரியம் தமிழ்நாடு வளர்ச்சி நிறுவனம், டிட்கோ பகுதியாக இருந்தால், அதிலே இருப்பவர் ஒருவர் அந்த நகரியத்திற்குத் தலைவராக இருக்கலாம்; அல்லது சிப்காட் பகுதியாக இருந்தால், அதிலே இருப்பவர் வருகிறார்; அல்லது தமிழ்நாடு அடிப்படை வசதி மேம்பாட்டு வாரியப் பகுதியாக இருந்தால், அதனுடைய உறுப்பினர் அதற்குச் சேர்மனாக வருகிறார். நிரந்தரமாக ஒரு Chief Executive Officer வேறு இருக்கிறார். பிறகு ஒவ்வொரு துறையிலே உள்ளவர்களும் அந்தப் பகுதிக்கு உறுப்பினராக அந்தக் குழுவிற்கு உறுப்பினராக வருகிறார்கள். அரசு எந்தப் பகுதியையெல்லாம் Industrial Township Area என்று சொல்கிறதோ, அந்தப் பகுதிகளில் எல்லாம் இந்தக் குழு அமைக்கப்படுகிறது. இந்தக் குழு அமைக்கப்பட்டு, ஒவ்வொரு துறையைச் சார்ந்த அதிகாரிகளும் இந்தக் குழுவிலே இடம் பெறுகிறார்கள். இதனாலே எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஒரே நேரத்திலே தீர்வு காணப்படுகிறது.

இன்றையதினம் சென்னையையொட்டி இருக்கின்ற நகரத்திலோ அல்லது சென்னையிலோ ஒருவர் தொழில் துவக்க வேண்டுமென்றால், மின்சாரத்திற்கு மின்சார வாரியத்திற்குச் செல்ல வேண்டும்; தண்ணீர் வேண்டுமென்றால் குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் செல்ல வேண்டும். இன்னும் மாசுக்கட்டுப்பாடு வாரியம் என்றால் அதற்குச் செல்ல வேண்டும்; நிதி வேண்டுமென்றால் அதற்குரிய Investment Authority-க்குச் செல்ல வேண்டும். இப்படி ஒவ்வொரு துறைக்கும் அவர்கள் தனித்தனியாகச் செல்ல வேண்டும். Fire Service என்றால், அதற்குச் செல்ல வேண்டும். இனிமேல் அப்படிப்பட்ட நிலையே கிடையாது. எல்லோருமே ஒரு மையத்திற்கு வருகிறார்கள். அடிக்கடி கூடுகிறார்கள், முடிவு எடுக்கிறார்கள்; உடனுக்குடன் தீர்வு காணுகிறார்கள். எனவே, Red-Tapism சிவப்பு நாடா என்பதே ஒழிக்கப்படுகிறது.

அதுமட்டுமல்ல, அமைக்கப்படுகிற இந்த நகரியம் அதிகாரம் படைத்ததாக இருக்கும். வெறும் ஆலோசனை கொடுப்பதோடு மட்டும் அமையாமல், எந்தப் பகுதிகள் எல்லாம் தொழில் நகரியப் பகுதி என்று அறிவிக்கப்படுகிறதோ அந்தப் பகுதிகளை எல்லாம் நிர்வகிப்பதற்கான முழு உரிமையும் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அந்தப் பகுதிகளில்,





ஊராட்சியோ அல்லது பேரூராட்சியோ அல்லது நகராட்சியோ, யாரும் அதிகாரம் செலுத்த முடியாது. அந்தப் பகுதிகள் முழுக்க முழுக்க இந்தத் தொழில் மையத்தின் நகரியத்திற்கே வந்து விடுகின்றன. எனவே, முழு உரிமை படைத்ததாக அது மாறிவிடுகிறது. இவற்றிற்கு அரசு அதிகாரிகளே நியமிக்கப்படுகிறார்கள். எனவே, தொழில் முன்னேற்றத்திற்கு தங்குதடையின்றி செயல்படக்கூடிய இந்த அமைப்பு இருக்கிறது. இதை ஒவ்வொரு நகரத்தையொட்டியும், அல்லது ஒவ்வொரு பகுதிக்கும் எங்கெல்லாம் வாய்ப்பு இருக்கிறதோ அங்கெல்லாம் அரசு துவங்க இருக்கிறது. எனவே, தொழில் புரட்சிக்கு இன்றைக்குக் கொடி கட்டிவிட்டோம் என்று நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தொழில் துறையில் எவ்வளவு கவனம் செலுத்தும் என்பதை இந்த மாமன்றம் நன்கு அறியும். ஒரு காலத்தில், தூத்துக்குடியினுடைய துறைமுகத்தை விரிவுபடுத்த மத்திய அரசு தயங்கிய நேரத்தில் எழுச்சி நாள் கொண்டாடி, இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருகிறீர்களா, இல்லையா என்று மக்களை, எழுச்சி நாளைக் கொண்டாட வைத்த பெருமை திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு உண்டு என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே போன்று, இன்றைக்கு எங்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி, இந்த நாட்டை வளப்படுத்த, தொழில்மயமாக்க, என்னென்ன சாத்தியக்கூறுகள் இருக்கின்றதோ அவைகளையெல்லாம் கலைஞருடைய அரசு முனைப்போடு செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு ஒத்துழைப்பு தருகின்ற இந்த மாமன்றத்திற்கு நன்றி கூறி, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித்தர வேண்டுமென்று அன்புடன் வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 26 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 26 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நகரியப் பகுதி மேம்பாட்டு அதிகார அமைப்புச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 24/1997) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.





பிற்பகல் 12-35

## (ஈ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) நீக்கறவுச் சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) நீக்கறவுச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/1997). மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) நீக்கறவுச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/1997) @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தம் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 23-4-1997-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1. முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) நீக்கறவுச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/1997) நிறைவேற்றப்பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.





## 8. அரசினர் தீர்மானம்

### விதி 30 (3)-ன்கீழ் நிகழ்ச்சி நிரலில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்றைய நிகழ்ச்சி நிரலில் மாற்றம் செய்யப்பட வேண்டியது குறித்த தீர்மானத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மொழிவார்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 30 (3)-ன்கீழ், இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 4-ல் உள்ள உள் இனம் 7, உள் இனம் 4-க்குப் பிறகு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க

மறுப்போரே இல்லையென்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (உ) தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1997). மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1997)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் யாராவது இதில் கருத்து தெரிவிக்க விரும்பினால் தெரிவிக்கலாம். திரு. லி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்தும்பொழுது, அந்த நிலத்தின் சொந்தக்காரர் நீதிமன்றத்திற்குச் செல்ல முடியாத அளவுக்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்குப் பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட சூழ்நிலையில், சாதாரணமாக ஒரு ஏக்கர், ஐந்து ஏக்கர், பத்து ஏக்கர் என்று நிலம் வைத்திருக்கக் கூடிய விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். ஏனென்று சொன்னால், வெளி மார்க்கெட்டில் அதிகமான விலைக்கு அந்த நிலம் போகக் கூடிய சூழ்நிலையில் நமது அரசு நிர்ணயிக்கக் கூடிய விலைக்கு அந்த நிலத்தை விற்றுவிட்டால், அவர்கள் சட்டத்தின் மூலமாக, கோர்ட் மூலமாக அதிகத் தொகை பெறுவதும் தடுக்கப்படுகின்றது. ஆகவே, வெளி மார்க்கெட்டிலுள்ள விலையை நிர்ணயித்து அவர்களுக்கு உதவ ஆவன செய்யப்படுமா, அந்த மாதிரி ஒரு நிலை உருவாக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தின் முக்கியக் கோட்பாடுகள் பற்றி விளக்கிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. லி. அய்யலுசாமி அவர்களுடைய சந்தேகம் இதன் மூலம் நீங்கும் என்று நான் நம்புகிறேன். மைய அரசுத் திட்டத்தில் நிலம் தேவைப்படுகிறது என்று அறிக்கை வெளியிட்டபின், நில உரிமையாளர்கள் அல்லது அந்த நிலத்தின் மீது அக்கறை கொண்டவர் இசைவு அல்லது மறுப்பு பெறப்படுகிறது. அதற்குப் பிறகு முறையான

@25-4-1997-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



தொடர் நடவடிக்கை மேற்கொண்டு, சட்டத்தின் 6-வது பிரிவின் கீழ் இறுதி அறிக்கை வெளியிடப்படவேண்டும். ஆனால் தற்போதைய சட்டத்தின்கீழ் நில உரிமையாளர் முதலிலேயே தொடர்பு கொள்ளப்பட்டு, அதன் பின்னர் அறிக்கை வெளியிடப்படுகிறது. நில உரிமையாளர் தெரிவிக்கும் கருத்துக்களைப் பரிசீலனை செய்தவுடன் ஆணை பிறப்பிக்க இயலும். இவ்வாறு அரசிதழில் வெளியிடப்பட்ட நாள் முதல் மேற்பட்ட நிலம் அரசின் வசம் அமையப்பெறும். அவ்வாறு அரசு ஆணையிட்டவாறு நிலத்தை ஒப்படைக்க நில உரிமையாளர் மறுத்தால், தேவைப்படும் அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்நிலத்தை மாவட்ட ஆட்சியர் தன் வசம் எடுத்துக்கொள்ளலாம். இதன் காரணமாக ஒருசில மாதங்களுக்குள்ளாகவே நிலத்தைக் கையகப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகிறது.

பிற்பகல் 12-40

தற்போதைய நடைமுறையில் உள்ளதைப்போல நிலத்தை கையப்படுத்தும் நடவடிக்கைகள் வருடக் கணக்கில் நடைபெற வேண்டிய அவசியம் இல்லை. காலவிரயம் தவிர்க்கப்பட்டு, உடனடியாக நிலம் அரசின் வசம் வருவதற்கு இச்சட்டம் வழிவகை செய்கிறது. இவ்வாறு கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கான இழப்பீடு, அரசுக்கும், நில உரிமையாளருக்கும் ஏற்படக்கூடிய ஒப்பந்தத்தின் வாயிலாக நிர்ணயிக்க தற்போதையச் சட்டம் வழிவகை செய்கிறது. அரசுக்கும், நில உரிமையாளருக்கும் எவ்வித ஒப்பந்தமும் ஏற்படாமல் போனால், நிலத்தின் மதிப்பை மாவட்ட ஆட்சியர் நிர்ணயிப்பார். இருப்பினும் மேற்படி தொகையை இறுதியாக்குவதற்கு முன்னர் நில உரிமையாளருக்கு, அவருடைய வாதத்தை எடுத்துரைக்க ஒரு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சியரும் ஏற்கெனவே உள்ள நில எடுப்புச் சட்டத்தில் கண்டுள்ளவாறு நிலத்திற்கான ஈட்டுத் தொகையை நிர்ணயித்துக் கொள்ளலாம். தேவைப்பட்டால் நிபுணர் கருத்தை அறிவதற்கான வாய்ப்பு இந்தச் சட்டத்தில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கும் தொகை நில உரிமையாளருக்கு ஏற்பளிப்பு இல்லாமல் இருந்தால், நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்வதற்கும் மாவட்ட ஆட்சியரை நில உரிமையாளர் கோரலாம். ஆகவே ஈட்டுத் தொகை நிர்ணயிப்பதில் மாவட்ட ஆட்சியர் அல்லது நீதிமன்றத்தின் முடிவே [illegible] நிர்ணயிக்கப்பட்ட ஈட்டுத் தொகையை, நிலத்தை எடுத்துக் கொள்வதற்கு [illegible] கொடுக்க இயலாமல் போனால், நிலம் எடுக்கப்பட்ட நாளிலிருந்து தொகை

216835 D
N97.35.2

வழங்கப்படும் நாள் வரை உள்ள காலத்திற்கு 4 சதவீதம் வட்டி வழங்கவும் தற்போதைய சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை மேற்கொள்வது அல்லது நிலத்தில் நுழைவது போன்ற செயல்களிலே ஈடுபடும் அரசு அலுவலரை எவரேனும் தடுத்தால், அவருக்கு 6 மாதம் சிறைத் தண்டனையோ ஆயிரம் ரூபாய் அபராதமோ அல்லது இரண்டுமே விதிக்க இச்சட்டத்தில் வழிவகுக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள பொருள் குறித்து அரசோ, மாவட்ட ஆட்சியரோ தீர்மானிப்பதற்கு எதிராக முடிவெடுக்க உரிமையியல் நீதிமன்றங்களுக்கு அதிகார வரம்பில்லை. அதன்மீது தடைகள் வழங்க அந்த நீதிமன்றங்களால் இயலாது. இச்சட்டத்தில் செய்யப்பட்டுள்ள மற்றொரு புதிய வழிவகைகளில் இதுவும் ஒன்று. மேலும் நல்லெண்ணத்துடன் மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அலுவலர் எவர் மீதும் வழக்கு அல்லது சட்ட நடவடிக்கைகள் எடுக்க இயலாது. தொழிற்சாலைகளின் பயன்களுக்காகவே தேவைப்படும் நிலங்கள் இந்தச் சட்டத்தின் வரை முறைகளுக்குட்பட்டு மட்டுமே இனி கையகப்படுத்த இயலும். மேலே சொல்லப்பட்ட விளக்கமான காரணங்களுக்காக சட்டமுன்வடிவை வரவேற்று, தமிழகத்தினை தொழில்மயமாக்க இந்த அரசு மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளித்து, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நல்லெண்ணத்தோடு அவர்கள் இதை ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.



பிரிவு 2. திருத்தம் இல்லை.

பிரிவு 2. சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

**பிரிவு - 3**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிரிவு-3, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வெங்கடசாமி அவர்கள் தன்னுடைய திருத்தத்தை மொழியலாம்.

பிற்பகல் 12.45

*THIRU B. VENKATASAMY: Hon. Deputy Speaker, Sir, I move the following amendments standing in my name, namely:—

"After clause 3 (3), the following sub-clauses shall be inserted namely:—

"(4) the Government shall stipulate the actual industrial undertaking for which land is required and the extent of land so required.

(5) the land so acquired shall be used only to locate the said industrial units or undertakings.

(6) the land shall not be used to construct and locate the administrative offices of any such industrial units/undertakings.

(7) When the land so acquired has not been used for the purpose for which the land has been acquired, all efforts shall be taken to restore the land to the previous owners only and in case if the owners are not interested in the lands only, alternate steps can be/shall be taken either to use or dispose the lands.

(8) No residential quarters and lands attached to these residential quarters shall be acquired under this Act.'

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

பிரிவு 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 4, திருத்தம் இல்லை.

பிரிவு 4, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

## பிரிவு 5

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிரிவு 5, திரு. பி. வெங்கடசாமி, தம் திருத்தத்தை மொழியலாம்.

***THIRU B. VENKATASAMY:** Hon. Deputy Speaker, Sir, I move the following amendment standing in my name, namely:—



"For Clause 5, the following proviso shall be inserted, namely:—

'Provided that every effort shall be taken to get public opinion for the need to acquire the proposal land for the proposed industrial units/ undertakings and the Government shall act only on basis of such public opinion'.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருத்தம் வலியுறுத்தப் படுகின்றதா என அறிய விரும்புகிறேன். திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

பிரிவு 5, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவுகள் 6 முதல் 26 வரை, திருத்தங்கள் இல்லை.

*பிரிவுகள் 6 முதல் 26 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1997) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஊ) தமிழ்நாடு சித்த மருத்துவ முறை (மேம்படுத்துதல் மற்றும் மருத்துவத் தொழிலாற்றுநர்கள் பதிவு செய்து கொள்ளுதல்) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு சித்த மருத்துவ முறை (மேம்படுத்துதல் மற்றும் மருத்துவத் தொழிலாற்றுநர்கள் பதிவு செய்து கொள்ளுதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1997), மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு சித்த மருத்துவ முறை (மேம்படுத்துதல் மற்றும் மருத்துவத் தொழிலாற்றுநர்கள் பதிவு செய்து கொள்ளுதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1997)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதாக இருந்தால் தெரிவிக்கலாம். திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சித்த மருத்துவச் சட்டமுன்வடிவை மகிழ்ச்சியோடு வரவேற்கும் முகத்தான் ஒருசில கருத்துக்களைக் கூற விழைகிறேன். நமது நாட்டிலுள்ள தொன்மையான மருத்துவம் இந்த சித்த மருத்துவம். அதிலும் குறிப்பாக, அகத்தியர், தேரையர், திருமூலர் போன்ற மிகப் பெரிய சித்தர்களும், பெரியவர்களும் இந்த மருத்துவத்தை நமக்குக் கொடுத்துச் சென்றிருக்கிறார்கள். 'திருநீறில் மருந்து இருக்கு தெரியுமா' என்ற பாடலை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அந்த முறையிலே நமக்கு சித்த மருத்துவத்தைக் கொடுத்துச் சென்றிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-50

நாம் நெற்றியிலே அணிகின்ற திருநீற்றிலே கூட, அற்புதமான சித்த மருத்துவம் இருக்கிறது. நமது நெற்றியிலே இருக்கிற துர்நீரை அது எடுத்து விடுகிறது. ஆக, நமக்கு ஒவ்வொரு வகையிலேயும், சித்த மருத்துவத்தை, நம்முடைய முன்னோர்கள் புகுத்திவிட்டுப் போய் இருக்கிறார்கள். ஏராளமான சித்த வைத்தியர்கள், கிராமங்களிலேயும், இன்னும் தமிழ்நாட்டின் மூலைமுடுக்குகளிலெல்லாம் இருந்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு மிகச் சிறந்த சித்த வைத்தியர்களை அங்கே பார்க்கலாம். குறிப்பாக, பாம்புக் கடி போன்ற விஷக் கடிக்குக்கூட சிகிச்சை செய்ய முடியும். இன்றைக்குக்கூட, பல்லடத்தின் பக்கத்திலே ஒரு வைத்தியர் இருக்கிறார்; அவர் ஒரு சாதாரண கிராம விவசாயி. எங்கேயோ போய், ஒரு தழையைப் பறித்து வருகிறார். அதை ஒரு

@ 23-4-1997-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

பக்கெட்டிலே போட்டு, கடித்த இடத்திலே வைக்கும்போது, குபுகுபு என்று இரத்தம் வெளியிலே வருகிறது; கூடவே விஷமும் வெளியே வருகிற காட்சியையெல்லாம் நான் பார்த்திருக்கிறேன். நான் அதைக் கண்ணாரப் பார்த்ததுடன், நானும் அனுபவித்திருக்கிறேன். ஆகவே, இன்றைக்கு நம்முடைய அரசு அவற்றையெல்லாம் முறைப்படுத்தி, ஒரு அருமையான திட்டத்தை இங்கே கொடுப்பதற்கு இருக்கிறது என்பதை நினைக்கும்போது, நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன்.

பரவலாக, எங்கெங்கேயோ மறைத்து வைக்கப்பட்டிருக்கிற, மர்மமாக வைக்கப்பட்டிருக்கிற சித்த வைத்திய முறையை ஒருங்கிணைத்து சித்த வைத்திய மாமன்றம் என்ற அமைப்பின்கீழ், அவற்றையெல்லாம் முறைப்படுத்தி, அதற்காக ஒரு சட்டம் இயற்றுகிறோம் என்று சொன்னால், அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு பல்வேறு தமிழ்ப் பாடல்களிலும், நிறைய மருந்துகள் புதைந்து கிடக்கின்றன. தீராத வியாதியாக இருக்கிற எய்ட்ஸுக்குக்கூட, மருந்து இருப்பதாக சித்த வைத்தியத்திலே நாம் அறிகிறோம். இன்றைக்குக்கூட, கிராமப் பகுதியிலே இருக்கிற அந்த வைத்தியர்கள், நம்முடைய நாடியைப் பிடித்துப் பார்த்து, 10 நிமிடங்களிலே பலன் சொல்லி உடனே வைத்தியம் செய்து கொடுப்பதற்குத் தயாராக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இன்றைக்கு மறைக்கப்பட்டு, மறுக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் ஒருங்கிணைத்து, இன்றைக்கு நாட்டிலே ஒரு நல்ல பணியைச் செய்வதற்காக, நம்முடைய அமைச்சர் அவர்கள் முயன்று இருப்பது, எங்களைப் போன்றவர்களுக்கெல்லாம் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

கிராமப்புறத்திலே மட்டுமல்ல; பல்வேறு இடங்களிலேயும் சித்த வைத்தியர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் ஒன்றுபடுத்தி, அந்த மன்றத்தின் வாயிலாக நல்ல வைத்தியம் கொடுப்பதற்கு—பழைய காலத்திலே இருந்து வருகிற அந்த முறை இருக்கிறதே, அது மிகச் சிறந்த முறை; அதைக் கொடுப்பதற்கு—இன்றைய அரசு முன்வரும்போது, அதற்காக மகிழ்கிறோம்.

அதேபோல், மனிதனின் உடம்பிலே இருக்கிற ஒவ்வொரு உறுப்புக்கும், ஒவ்வொரு பகுதிக்கும் அந்த வைத்தியர்களால் மருந்து சொல்ல முடியும்; கொடுக்க முடியும். நெற்றியிலே பொட்டு வைக்கிறோம் என்று சொன்னால், அது ஏதோ இறைவனுடைய சின்னம் மட்டுமல்ல; அந்த இடத்திலே இருக்கிற மிகச் சிறந்த நெற்றிக்கண் என்று சொல்வோமே,



அது ஒரு முக்கியமான இடம்; ஆகவே, அதைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக, குங்குமத்தை அங்கே வைக்கிறார்கள். குங்குமம் ஒரு சிறந்த மருந்து. குங்குமத்தை, பெண்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அது அவர்களுடைய அணிகலன் மட்டுமல்ல; மஞ்சளால் செய்யப்பட்ட அந்தக் குங்குமத்திலே ஒரு சிறந்த மருத்துவ முறை இருக்கிறது.

அதேபோல, பதார்த்த குண சிந்தாமணி என்ற ஒரு நூலை நாமெல்லாம் பார்த்திருக்கிறோம். அந்த நூலிலே, இல்லாத மருந்துகளே இல்லை என்று சொல்லலாம். நம்முடைய முன்னோர்கள், அறுசுவை என்று வைத்தது, ஒவ்வொரு சுவையும், சுவைக்காக உணவை உண்பதற்கு மட்டுமல்ல; இன்றைக்கு அதுகுறித்து மேல் நாடுகளிலேகூட, அதைக் கண்காணித்து ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள்; ஒவ்வொரு சுவையும், உடலுக்கு ஏற்றவாறு அமைகின்ற தன்மையால்தான் அறுசுவை உணவு வைக்கப்பட்டது என்று அந்த பதார்த்த குண சிந்தாமணி என்ற நூல் சொல்கிறது. அதன் ஒவ்வொரு பாட்டிலேயும், ஒவ்வொரு மருந்தும் புதைந்து கிடக்கிற காட்சியை நாம் பார்க்க முடியும். அதுமட்டுமல்ல; சித்த மருத்துவம் படிக்கக்கூடிய மாணவர்களுக்குச் சரியான முறையிலே நாம் உதவி செய்து, அவர்களுக்கு 'ஸ்டைபண்ட்' போன்றவற்றையெல்லாம் கொடுத்து, அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். ஏராளமான நூல்கள் இன்றைக்குப் புதைந்து கிடக்கின்றன. நம்முடைய தமிழக அரசு, மருத்துவத் துறைக்கென்று ஒரு அமைச்சகத்தை ஏற்படுத்தி, அதற்கென்று ஒரு அமைச்சரும் இருக்கிறார். இன்றைக்குப் பல ஏட்டுச் சுவடிகள், கிராமங்களிலேயும், தஞ்சை போன்ற இடங்களிலேயும் புதைந்து கிடக்கின்றன; அவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து, கொண்டுவந்து சிறந்த மருந்துகளை மக்களுக்குக் கொடுப்பதற்காக, அதை முறைப்படுத்தி, அந்த மருந்துகளையெல்லாம் நம்முடைய நாட்டு மக்களுக்கு அளிக்க வேண்டும். அந்தக் காரியத்தைச் செய்வதற்காகத்தான், இந்த சித்த வைத்திய மருத்துவ சட்டமுன்வடிவு வருகிறது. எனவே அதை நான் வரவேற்று அமைகிறேன்.

பிற்பகல் 12-55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர். (குறுக்கீடு)

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மஞ்சள் காமாலை பற்றி.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மஞ்சள் காமாலை, காச நோய் பற்றியெல்லாம் பிறகு பேசலாம். இப்போது நேரமில்லை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கோயம்புத்தூர்காரர்கள் ஒரு முடிவோடு வந்திருக்கிறீர்கள் போலிருக்கிறது.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எப்போதுமே சட்டங்களை அவசரத்தில் இயற்றக்கூடாது. ஆழ்ந்து ஆய்வு செய்து பரிசீலித்துத்தான் இயற்ற வேண்டும். எனவே போதுமான வாய்ப்பு கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இவ்வளவு நேரம் ஆழ்ந்த கருத்துக்களை உறுப்பினர் திரு. மோகன் கந்தசாமி அவர்கள் சொல்லியிருக்கிறார். அதற்குப் பிறகுதான் நான் அமைச்சர் அவர்களை அழைத்திருக்கிறேன். (குறுக்கீடு) திரு. கே. தங்கமணி.

***திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவத்தை மேம்படுத்தவும் மருத்துவ தொழிலாற்றுநர்கள் பதிவு செய்து கொள்வதை முறைப்படுத்துவதற்காகவும் இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வரப்படுவதை நான் வரவேற்கிறேன்.

இன்றைக்கு உலகத்தையே பயமுறுத்திக் கொண்டிருக்கக்கூடிய 'எய்ட்ஸ்' போன்ற கொடிய நோயைக்கூட இந்த சித்த மருத்துவ முறையினால் குணப்படுத்தமுடியும் என்ற நிலை இருக்கிறது. அதைப்போல புற்றுநோயையும் குணப்படுத்தக்கூடிய தன்மைகள் சித்த வைத்தியத்தில் இருக்கின்றன. இப்பேர்ப்பட்ட சித்த மருத்துவத்தை அரசே மிகுந்த கவனம் செலுத்தி அதை மேம்படுத்த வேண்டும். இதில் முக்கியமானது என்னவென்றால், சித்த மருத்துவம் என்பது பக்க விளைவுகளை ஏற்படுத்தாது. அதுமட்டும் அல்ல. ஆங்கில மருத்துவம் ஒரு நோயை ஒரே நிலையிலேயே நிறுத்தி வைக்கும். ஆனால் சித்த வைத்தியம் என்பது முழுமையாகக் குணப்படுத்தக்கூடிய ஒரு வைத்தியம். எனவே சித்த வைத்தியத்தை மேம்படுத்த வேண்டும். மாவட்ட அளவில் இன்றைக்கு சித்த வைத்திய மருந்துகள் கிடைக்கின்றன. அதை வட்ட



அளவிலும், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அளவிலும் கிடைக்கக்கூடிய விதத்தில் அந்த மருத்துவத்தைக் கொண்டு செல்ல வேண்டும்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு முக்கியமான மூலிகைகள் எல்லாம் இல்லாமல் போய்விட்டன. அண்ணா சித்த வைத்திய மூலிகைப் பண்ணையில்கூட அதிக அளவில் மூலிகைகள் இல்லை. அங்கு மூலிகைகளை அதிக அளவில் உற்பத்தி செய்வதற்கு ஏற்ற வகையில் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய எல்லா மூலிகைகளையும் கொண்டு வந்து அங்கு வைத்து உற்பத்தி செய்ய வேண்டும். எனக்கு முன்னால் பேசியவர்கள் சொன்னார்கள், பாம்புக் கடி போன்ற மிகப் பெரிய கொடிய விஷங்களைக் கூட வேப்பிலையிலேயே குணப்படுத்தக்கூடிய நிலையெல்லாம் தமிழ்நாட்டிலே இருந்திருக்கின்றன. எனவே அந்த மருத்துவத்தை மேம்படுத்த வேண்டும்.

இன்னும்கூட, காய்ச்சல், அம்மை போன்ற நோய்களுக்கு வேப்பிலையிலே படுக்க வைத்துக் குணப்படுத்தக்கூடிய நிலைகள் எல்லாம் இருந்திருக்கின்றன. அதையெல்லாம் கொண்டுவர வேண்டும். அதேசமயத்தில் மூலம், பவுத்திரம் போன்ற நோய்களுக்கு, நோயாளிக்கு சர்க்கரை வியாதி இருக்கிறதா என்றுகூட பார்க்காமல் ஆபரேஷன் பண்ணி நோயாளிகளைப் பலவீனப்படுத்தக்கூடிய போக்குகள் எல்லாம் ஆங்கில மருத்துவத்தில் இருக்கின்றன. இப்பேர்ப்பட்ட வைத்தியர்கள்மீது நடவடிக்கை எடுத்து சித்த மருத்துவத்தை மேலு, மேலும் ஊக்குவிக்க வேண்டும். சித்த மருத்துவத்திற்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும். சித்த மருத்துவத்திற்கு அரசு அதிகமான மானியம் வழங்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) எல்லா அரசு மருத்துவமனைகளிலும் சித்த மருந்துகள் கிடைக்க வழிசெய்ய வேண்டும். இந்தக் கீழாநெல்லி மூலமாக......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கீழாநெல்லி.

**திரு. கே. தங்கமணி:** அந்தக் கீழாநெல்லியினுடைய வேர் மிக முக்கியமானது. அது மஞ்சள் காமாலை நோயைக் குணப்படுத்துகிறது. எவ்வளவு ஆங்கில வைத்தியங்கள் இருந்தாலும் கிராமங்களில் இருக்கும் கீழாநெல்லிச் செடி தான் மஞ்சள் காமாலையைக் குணப்படுத்துகிறது. இப்பேர்ப்பட்ட முக்கியமான வைத்தியங்கள் எல்லாம் இருக்கின்றன. எனவே கிராம வைத்தியர்களைத் தேடிச் சென்று அவர்களிடம் இருக்கக்கூடிய அந்த அரிய மருந்துகளுக்கு அரசே மானியம் கொடுத்து, பெற்று மேலும் மேலும் அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. தமிழ்நாடு சித்த மருத்துவ முறையை மேம்படுத்துவதற்காகவும், மருத்துவ தொழிலாற்றுநர்கள் பதிவு செய்து கொள்வதற்காகவும், அதைப்போலவே தமிழ்நாடு சித்த மருத்துவ மன்றம் ஒன்றை அமைத்து அதை முறைப்படுத்துவதற்காகவும் கொண்டு வரபபட்டிருக்கிற இந்தச் சட்டத் திருத்தத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. மோகன் கந்தசாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கமணி அவர்களும் சில கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட உடனேயே மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு இட்ட கட்டளை நம்முடைய இந்த ஆட்சிக் காலத்திலே எப்படியாவது சித்த மருத்துவத்தை மேம்படுத்த வேண்டும், அதற்காக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் நான் ஒதுக்கித் தருகிறேன் என்று சொன்னார்கள். அதைப்போலவே, கடந்த ஆண்டும் நிதியை ஒதுக்கினார்கள். இந்த ஆண்டும் கூடுதலாக 6 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கி சித்த மருத்துவ முறையை மேம்படுத்துவதற்கான திட்டங்களை அளித்திருக்கிறார்கள். இதிலே வேடிக்கை என்னவென்றால், சித்த மருத்துவர் என்று சொல்லிக்கொண்டு சிலபேர் அவர்களுடைய பெயர்களுக்குப் பின்னாலே பட்டயங்களைப் போட்டுக் கொண்டு மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் சித்த மருத்துவத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. நாளேடுகள், வார இதழ்களை எல்லாம் பார்த்தால் சிலபேர் விளம்பரம் கொடுத்தே லட்சக் கணக்கிலே பணத்தை ஏமாந்த மக்களிடமிருந்து பெற்றுக்கொண்டிருப்பது தெரியும். இதை எல்லாம் கட்டுப்படுத்துவதற்கு நம்மிடத்திலே சட்டம் இல்லை. எனவேதான் சித்த மருத்துவம் பயின்றவர்கள், அதேபோல் கிராமப் பகுதிகளிலே பல ஆண்டு காலமாக பரம்பரை பரம்பரையாக இந்த வைத்தியத்தைச் செய்பவர்கள் எல்லாம் பதிவு செய்து கொண்டு முறையாக இந்தத் தொழிலை நடத்துவதற்கும், போலிகளை நாம் கண்டுபிடித்துத் தண்டிப்பதற்கும் இந்தச் சட்டத்திலே நாம் வகை கண்டிருக்கிறோம். எனவே இந்தச் சட்டம் வந்ததற்குப் பின்னாலே சித்த மருத்துவ முறையை யாரும் தவறாகக் கையாள முடியாது. போலியாக யாரும் இந்த வைத்தியத்தைச் செய்ய முடியாது. படித்தவர்களாக இருந்தாலும், பதிவு செய்யாமல் யாராவது இருப்பார்களானால் அவர்களும் தண்டிக்கப்படுவார்கள். எனவே பதிவு



செய்வது என்பது கட்டாயப்படுத்தப்படுகிறது. எனவே, இப்படிப்பட்ட ஒரு நல்ல சட்டத்தை இந்தியாவிலே முதன் முதலாக நாம்தான் கொண்டு வந்திருக்கிறோம்.

பிற்பகல் 1-00

இந்தச் சட்டம் கொண்டு வரப்படுவதன் மூலமாக நம்முடைய மருத்துவர்கள், சித்த மருத்துவத்திலே தேர்ச்சி பெற்ற மருத்துவர்கள் பதிவு செய்துகொள்ள ரூ. 250 என்ற கட்டணத்தை நாம் நிர்ணயித்திருக்கிறோம். அது 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மறுபடியும் புதுப்பிக்கப்பட வேண்டும். அதற்கு 25 ரூபாயைக் கட்டணமாக வைத்திருக்கிறோம். அதுபோலவே, பெயர் மாற்றம் செய்யவோ அல்லது கூடுதலாகப் பட்டங்கள், பி.ஜி. போன்ற பட்டயங்கள் எல்லாம் பெற்றதற்குப் பிறகு மறுபடியும் அதை பதிவு செய்ய வேண்டுமென்றால் அதற்காக 100 ரூபாயைச் செலுத்தி பதிவு செய்து கொள்ளலாம் என்று தெரிவித்திருக்கிறோம். எந்தக் காலத்திலாவது அவர்களுடைய பட்டங்கள், பட்டயங்கள் எரிந்து விட்டாலோ அல்லது தொலைந்து விட்டாலோ, அவற்றை திரும்பப் பெற்றுக் கொள்வதற்காக 50 ரூபாய்க் கட்டணம் செலுத்தினால் அவைகள் வழங்கப்படும்.

அதுமட்டுமல்ல, *பதிவு செய்யாமல் யாராவது சித்த மருத்துவர் என்று பெயர் போட்டுக்கொண்டு நாட்டிலே தொழில் செய்தால் அவர்களுக்கு ஓராண்டு சிறைத் தண்டனையும், ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படும். அதேபோல், வேற்று நபர் எவரேனும் பட்டமோ, பட்டயமோ வழங்கினால் — பட்டங்கள் வழங்குவது பல்கலைக் கழகங்கள் அல்லது கல்லூரிகள்தான் அந்த இரண்டும் இல்லாமல் — போலியாக யாராவது பட்டங்கள் வழங்குவதாக அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வந்தால் முதல் கட்டமாக அவர்களுக்கு 1,000 ரூபாய் அபராதம் விதிக்கப்படும். தொடர்ந்து யாராவது இப்படிப்பட்ட பணிகளில் ஈடுபடுவார்களானால் அவர்களுக்கு 6 மாத சிறைத் தண்டனையும், 2 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கக்கூடிய வகையிலே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

அதேபோல், தவறான பட்டங்களைப் பொறுத்தவரையில், சிலபேர் டிகிரிகளை தவறாக எழுதிக்கொள்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். பட்டப்படிப்பு படித்திருப்பார்கள், ஆனால் மக்களைக் கவருவதற்காக மேல் பட்டப்படிப்பு படித்ததாக விளம்பரம் செய்து கொள்வார்கள். இப்படிப்பட்ட தவறுகளைச் செய்வார்களானால்

அவர்களுக்கு 500 ரூபாய் அபராதம் விதிக்கப்படும். தொடர்ந்து அவர்கள் அந்தத் தவறைச் செய்து கொண்டே இருப்பார்களானால் அவர்களுக்கு 6 மாத கால சிறைத் தண்டனை அல்லது 1000 ரூபாய் அபராதம் என்ற வகையிலே தண்டிப்பதற்கான சட்டம் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது.

அதேபோல, பதிவு பெற்ற மருத்துவ தொழிலாற்றுநர்களாக தொழில் பகட்டு காட்டுவதன் மூலம் ஏமாற்றுவார்கள். ஏமாற்றுவதற்காகவே சிலபேர் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள், தொழிலில் ஈடுபடுவார்களானால் அவர்களுக்கு முதல் கட்டமாக ரூ. 300 அபராதமும், இரண்டாவது தடவையாக அந்தத் தவறை செய்வார்களானால் 1,000 ரூபாய் அபராதம் அல்லது 6 மாத சிறைத் தண்டனை வழங்கும் வகையில் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதற்குக் காரணம் நாட்டிலே போலிகள் அதிகமாகிவிட்டார்கள் அந்தப் போலிகளிடத்திலே மக்கள் ஏமாறக்கூடாது என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையிலும், சித்த மருத்துவத்தின் தரத்தை மேம்படுத்துவதற்காகவும், மருத்துவர்களுடைய எண்ணிக்கையை உயர்த்துவதற்காகவும், இதிலே மக்களுக்கு ஒரு அக்கறையை ஏற்படுத்துவதற்காகவும் இந்தச் சட்டத்தைத் தமிழ்நாட்டிலே நாம் கொண்டு வந்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் மோகன் கந்தசாமி அவர்கள் நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதேபோல் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்கள் இந்த சித்த மருத்துவத்தை தாலுக்கா அளவிலே, ஆரம்ப சுகாதார நிலையங்கள் அளவிலே கொண்டு செல்ல வேண்டுமென்று இங்கே வேண்டுகோள் வைத்திருக்கிறார்கள். இந்த அரசு வந்த உடனே இந்த ஆண்டோடு எல்லா தாலுக்கா மருத்துவமனைகளிலும் நம்முடைய சித்த மருத்துவ டாக்டர்களை நியமித்து விட்டோம். எங்காவது விடுபட்டு இருந்தால், அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் முதல் கட்டமாக மாவட்ட, வட்ட அளவிலே சித்த மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள். அங்கே அவர்களுக்கு எல்லாவிதமான வசதிகளும் செய்து தரப்படும். அடுத்த கட்டமாக, நாம் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அதை விரிவுபடுத்த இருக்கிறோம். இந்த ஆண்டே 10 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு விரிவுபடுத்தி இருக்கிறோம். விரைவிலே தமிழ்நாட்டில் உள்ள 24 மணி



நேர ஆரம்ப சுகாதார நிலையங்களிலேயும் இந்தத் திட்டத்தை அமல்படுத்த இருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

இன்னொரு கருத்தினை, மாண்புமிகு உறுப்பினர் திரு. மோகன் கந்தசாமி அவர்கள் சொன்னார்கள். அதாவது, கிராமப் பகுதியிலே இன்னமும் இந்த மருத்துவத்திற்கு இருக்கக்கூடிய மகிமையைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இந்த மருத்துவம் சிறந்தது என்பது மட்டும் அல்ல, நம்முடைய மூதாதையர்கள் எதை எதை எழுதி வைத்தார்களோ அவற்றில் பல அழிந்து விட்டன. இன்னும் சில ஏடுகளிலே இல்லை, அவைகள் எல்லாம் ஓலைகளிலே இருக்கின்றன. அதையெல்லாம், தமிழ்நாடு சித்த மருத்துவ மன்றம் தொகுத்து புத்தகங்களாக ஆக்கி, அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, உலக அளவிலே சித்த மருத்துவத்தின் பெருமையை எடுத்துச் சொல்லக்கூடிய வகையிலே, இந்த மன்றம் பணியாற்றும் என்பதையும் நான் தெரிவித்துக் கொண்டு, இன்னும் பல்வேறு பிரிவுகள் இந்த மருத்துவத்தின் மேம்பாட்டிற்காகக் கொண்டு வந்திருக்கிறோம். எனவே, இந்த நல்ல சட்டத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 42 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 42 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு சித்த மருத்துவ முறை (மேம்படுத்துதல் மற்றும் மருத்துவத் தொழிலாற்றுநர்கள் பதிவு செய்து கொள்ளுதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1997)' நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



## (எ) தமிழ்நாடு மின் இயங்கேணிகள் சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் இயங்கேணிகள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/1997), மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் இயங்கேணிகள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/1997)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் யாரேனும் கருத்து தெரிவிப்பதாக இருந்தால், தெரிவிக்கலாம்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசப் போகிறீர்களா?

**திரு. ரா. ஈஸ்வரன்:** ஆமாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இந்த மின் இணைப்பு சம்பந்தமாக, தமிழ்நாட்டிலே சுமார் 4 இலட்சம் முதல் 5 இலட்சம் வரை விவசாயிகள் மின் இணைப்புக்காக பதிவு செய்து....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது மின் இயங்கேணிகள் பற்றிய சட்டமுன்வடிவு. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு மின் இணைப்பு கொடுப்பது பற்றியல்ல, மின் இயங்கேணிகள், அதாவது கட்டிடங்களிலே 'லிஃப்ட்' பொருத்துகிறார்களே அது பற்றிய சட்டம்.

---

@ 28-4-1997 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

[1997 ஏப்ரல் 29

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 23 வரை. திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 23 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,



1997 ஏப்ரல் 29] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் இயங்கேணிகள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/1997) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஏ) தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் (நீக்கறவு) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் (நீக்கறவு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/1997). மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

பிற்பகல் 1-10

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் (நீக்கறவு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/1997)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் யாராவது கருத்துத் தெரிவிப்பதாக இருந்தால் தெரிவிக்கலாம். திரு. ரா. ஈஸ்வரன்.

---

@ 22-4-1997 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றங்களில் மாவட்ட வளர்ச்சி மன்றக் குழுக் கூட்டங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்வது வாடிக்கையாக இருந்தது. இப்போது நீங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் வளர்ச்சி மன்றக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளக்கூடாது என்று சொல்லி இப்போது அது கலைக்கப் பட்டிருக்கிறது. ஆனால், மத்திய, மாநில அரசுகள் கொடுக்கக்கூடிய நிதியை எந்தெந்தத் திட்டங்களுக்குச் செலவு செய்யலாம் என்று பரிசீலனை செய்வதற்கு அனைத்துத் துறைகளின் அதிகாரிகளும் கலந்து கொள்ளக்கூடிய அந்தக் கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டால்தான், திட்டங்களைப் பற்றியும், அதிகாரிகள்மீது குற்றம் குறை இருந்தால் அவற்றைப் பற்றியும் பேசுவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். அது இப்போது கலைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் திட்டப் பணிக் குழு என்று இப்போது புதிதாக அமைக்கப்பட்டிருப்பதாக இங்கே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஏற்கெனவே இருந்த வளர்ச்சி மன்றக் குழுவில் கலந்து கொண்டது போலவே இதில் கலந்து கொள்ளும் வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கிறதா என்றும், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு என்னென்ன அதிகாரங்கள் இருக்கிறதென்பதைத் தங்கள் வாயிலாக அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே இருக்கிற வளர்ச்சி மன்றக் குழுவை ரத்து செய்வது. அதற்குப் பிறகு நீங்கள் இப்போது குறிப்பிட்ட மாவட்ட திட்டப் பணிக் குழுவை உருவாக்க இதே அவையில் இப்போதே சட்டம் வருகிறது. அதைப் பற்றிப் பிறகு பேசுகிறேன். எனவே, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டும் எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தம் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் (நீக்கறவுச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/1997) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஐ) சென்னைப் பெருநகர்ப் பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1997 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர்ப் பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/1997), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர்ப் பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/1997)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் யாராவது கருத்துத் தெரிவிப்பதாக இருந்தால் தெரிவிக்கலாம். திரு. ப. ரங்கநாதன்.

---

@ 22-4-1997-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.



**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமமும் தமிழகத்தில் இருக்கிற.... (குறுக்கீடு) இதில் சென்னை நீங்கலாக என்றுதான் போட்டிருக்கிறது....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ரங்கநாதன், இது சென்னைப் பெருநகர்ப் பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு. நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

### பிரிவு 2

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிரிவு 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வெங்கடசாமி தம் திருத்தத்தை மொழியலாம்.

**THIRU B. VENKATASAMY:** Hon'ble Deputy Speaker, Sir, I move the following amendment to standing in my name, namely:—

"In Clause 2, the following proviso may be added:

'Provided, that no such permit or fee is required and no fee shall be collected from persons who are disabled or ex-servicemen and who are in full occupation of the area, site, building, premises, etc.' "

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் தம் திருத்தத்தை வலியுறுத்துகிறாரா என்று அறிய விரும்புகிறேன். திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

பிற்பகல் 1-15

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவுகள் 3 முதல் 5 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 3 முதல 5 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,



"1997-ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர்ப் பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/1997) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஒ) தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்த) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்த) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1997), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1997)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் யாராவது தம் கருத்தைக் கூற விரும்பினால் கூறலாம். திரு. பி.என். வல்லரசு.

---

@ 22-4-1997-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. பி. என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய உசிலம்பட்டி தொகுதியில், உசிலம்பட்டி நகரில் கடுமையான குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு கவன ஈர்ப்பும் கொடுத்திருந்தேன். எனவே, உசிலம்பட்டி நகரின் குடிநீர்ப் பஞ்சத்தை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல, செல்லம்பட்டி யூனியனில் கருமாத்தூர் கூட்டுக் குடிநீர் திட்டம் உள்ளது....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் சட்டமுன் வடிவைப் படித்துவிட்டு, அதன்மீது பேச வேண்டும். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.



ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1997) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன் வடிவு ஏற்கப்பட்டது.

## (ஓ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/1997), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/1997)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

---

@24-4-1997 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் ஏதாவது கருத்தைக் கூற விரும்பினால் கூறலாம். எவருமில்லை. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒன்றை நான் குறிப்பிடுகிறேன். ஏற்கெனவே உறுப்பினர்கள் எழுப்பிய வினாவிற்கு இந்தச் சட்டத்தில் இடம் இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்தத் திட்டக் குழுவில் கலந்து கொள்ளலாம், வாக்களிக்கலாம் என்பதும் இந்தச் சட்டத்தில் வருகிறது என்பதைத் தெரிவித்து, இதை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் 1-20

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/1997) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஔ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1977.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/1997). மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/1997)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

@**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு அமைப்புகளின் தனி அதிகாரிகளுடைய கால அவகாசத்தை மேலும் ஒரு 6 மாத காலத்திற்கு நீட்டிக்கக்கூடிய இந்த சட்டத் திருத்த சட்டமுன்வடிவை, தேர்தல் நடத்த வேண்டும், அதுவும் முழுமையாக நடத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு இங்கே முன் வைத்து இருக்கிறார்கள். ஏற்கெனவே சென்னை உயர்நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யப்பட்டு இருந்த பல்வேறு வழக்குகளில் தீர்ப்புகள் வெளியாகி, எல்லா பிரதம, தொடக்க நிலை கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேர்தல் நடந்து முடிந்து இருக்கிறது. பால் கொள்முதல் செய்யப்படுகின்ற பிரதம கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேர்தல் நடந்து முடிந்து இருக்கிறது. இந்த நிலையில் மைய, உச்சநிலை அமைப்புகளுக்கு தேர்தல் நடத்த வேண்டியது மிக மிக அவசியமாகும். இருந்தாலும், 1988-ஆம் ஆண்டைய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களுக்கான விதிகளில் கண்டுள்ள இரண்டாம் பட்டியலில் உள்ள 20 வகையான சங்கங்களோடு, மேலும் 3 வகையான சங்கங்களை இணைக்க வேண்டிய ஒரு அவசியம் இருப்பதாகவும், அதற்கான சட்டத் திருத்தத்தைக் கொண்டு வர வேண்டிய நெருக்கடி இருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் இங்கே முன்மொழிந்து விளக்கிக் கூறி அதற்கான கால அவகாசமும் தேவை என்று வலியுறுத்தி இருக்கிறார்கள். இதையெல்லாம் உள்ளடக்கிய வகையில் இப்போது இந்தக் கால அவகாசத்தை எடுத்துக்கொண்டாலும், இந்த 6 மாத காலத்திற்குள் இந்த மைய நிலை, உச்ச நிலை கூட்டுறவு அமைப்புகளுக்கான தேர்தலை கட்டாயமாக நடத்திவிட வேண்டும்; அப்படி நடத்துவதற்கான ஏற்பாட்டோடு கால அவகாசத்தை நீட்டிக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்து வலியுறுத்தி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

@22-4-1997 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 20 ஆண்டுக்காலமாக— நடுவிலே ஒரு 6 மாத காலம் மட்டுமே தொடக்க கால கூட்டுறவு அமைப்பு சங்கங்களின் தலைவர்களாக இருந்தார்களே தவிர-தொடர்ந்து 1976-ஆம் ஆண்டு, என்றைக்கு கூட்டுறவுச் சங்கங்கள் கலைந்தனவோ, அன்றிலிருந்து 20 ஆண்டுக்காலம் 10 மாதம், இதுவரை மையச் சங்கங்களுக்கோ, உச்ச நிலைச் சங்கங்களுக்கோ தேர்தல் நடைபெறவில்லை. அதற்கென்று போடப்பட்ட சட்டங்கள் அப்படியே இருக்கின்றன. ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் வருவதற்கு முன்பாகவே போடப்பட்ட சட்டங்களைத் திருத்தக்கூடிய ஒரு சூழ்நிலையும் இன்றைக்கு வந்து இருக்கிறது. அதற்காகத்தான், இந்த அவகாசம் வேண்டும் என்று முதலிலே கோருகிறேன்.

இங்கு உயர்நீதிமன்றம் நமக்கு ஒரு தீர்ப்பு அளித்து இருக்கிறது. 18-5-1997-க்குள்ளாக அனைத்துத் தொடக்க நிலையில் இருக்கின்ற சங்கங்களினுடைய தேர்தல்களை முடித்துவிட்டு, அதற்குப்பிறகு மையச் சங்கங்கள், உச்ச சங்கங்கள் என்ற அளவிலே தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்று நமக்கு நீதிமன்றம் உத்தரவிட்டு இருந்தாலும், இடையிலே ஏற்பட்ட பல்வேறு சிரமங்களின் காரணமாக, சென்ட்ரல் சொசைட்டீஸ் 98-ம், அதேபோல தொடக்கச் சங்கங்கள் 124, அபெக்ஸ் சொசைட்டீஸ் 24—மொத்தம் 246 சங்கங்களுக்கு இனி தேர்தல் நடைபெற வேண்டும். இங்கு இருக்கின்ற தொடக்கச் சங்கங்களின் தேர்தல் முடிந்து மைய சங்கங்கள், உச்ச சங்கங்கள் தேர்தல் நடைபெற வேண்டும் என்றால், இந்தச் சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட வேண்டும்.

பிற்பகல் 1-25

சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்டு அது ஏற்கப்பட்டால்தான் மைய, உச்ச நிலைச் சங்கங்களுக்குத் தேர்தல் நடைபெறுகின்ற வாய்ப்பு ஏற்படும் என்பதால்தான், மேற்கொண்டு ஒரு ஆறு மாதம் - ஆறு மாதம் மட்டுமே, இந்தத் தனி அலுவலர்களின் நியமனத்திற்காக இன்றைக்குச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இதை ஏற்றுக்கொண்டு, ஆறு மாத கால அவகாசம் தருவீர்களேயானால், உச்ச நிலை அபெக்ஸ் சொசைட்டிகளுக்கும், மையச் சங்கங்களுக்கும், மாவட்ட அளவில் இருக்கின்ற சங்கங்களுக்கும், தேர்தல்களை நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படமுடியும். அதற்கான முயற்சிகள் இன்றைக்கு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்தக் கால அவகாசத்திற்குள் தேர்தல்

நடத்தி முடிக்கப்படும் என்று தெரிவித்து, இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு, அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தம் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,



"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/1997) நிறைவேற்றப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (30-4-1997) காலை 9-30 மணிக்கு கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-26 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறையான விதிகளும், ஆணைகளும்

157. நாட்டுடமையாக்கப்பட்ட மற்றும் அட்டவணையிடப்பட்ட வங்கிகள் அவைகளின் வாடிக்கையாளர்களுக்கு காசோலைகள் விற்பனை செய்யப்படும் வகையில் செலுத்தப்படவேண்டிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 6-2-1997-ஆம் நாளிட்ட 47-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5)-ஆம் பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

158. 1981-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் திருத்தங்கள் செய்வது குறித்து மது விலக்கு மற்றும்

ஆயத் தீர்வைத் துறையின் 29-01-1996-ஆம் நாளிட்ட 37-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

194. உள்ளாட்சி மன்றங்களுக்கான மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் சுருக்கம் (தொகுதி-1) (தமிழ், ஆங்கிலம்).

195. உள்ளாட்சி மன்றங்களுக்கான மாநில நிதி ஆணையம் அறிக்கை (தொகுதி-2) (தமிழ், ஆங்கிலம்).

196. மாநில நிதி ஆணையம் 1996-ஆம் ஆண்டு நவம்பர் 29-ஆம் நாளன்று ஆளுநருக்கு அளித்த அறிக்கையில் அடங்கிய பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளின் விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்)

197. மதிப்பீட்டுக் குழுவின் நான்காவது அறிக்கை, 1996-97.

198. மதிப்பீட்டுக் குழுவின் ஐந்தாவது அறிக்கை, 1996-97.

199. மதிப்பீட்டுக் குழுவின் ஆறாவது அறிக்கை, 1996-97.

200. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்திரெண்டாவது முதல் ஐம்பத்தி நான்காவது வரையிலான அறிக்கைகள், 1996-97 (13 அறிக்கைகள்)

201. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தேழாவது அறிக்கை, 1996-97.

202. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தெட்டாவது அறிக்கை, 1996-97.

203. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தொன்பதாவது அறிக்கை, 1996-97.

204. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பதாவது முதல் முப்பத்தி மூன்றாவது வரையிலான அறிக்கைகள், 1996-97 (4 அறிக்கைகள்)

205. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஆறாவது அறிக்கை, 1996-97.

206. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஏழாவது அறிக்கை, 1996-97.

207. மனுக்கள் குழுவின் ஐந்தாவது அறிக்கை, 1996-97.

208. மனுக்கள் குழுவின் ஆறாவது அறிக்கை, 1996-97.



## இணைப்பு 1

**(224-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)**

திரு. சி. ஞானசேகரன், வேலூர் தொகுதி பேரவை உறுப்பினர், 31-1-1997 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு அளித்த கடிதத்தின் நகல்.

பெறுநர்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள், சட்டமன்றப் பேரவை, சென்னை-9.

மாண்புமிகு ஐயா அவர்களுக்கு, வணக்கம்.

ஆளுநர் உரை மீதான விவாதத்தில் 27-1-1997-ஆம் நாளன்று நான் பேசும்போது பத்தாவது பேரவையில், பேரவை விதிகளை 2 நாட்கள் தளர்த்தி, அன்றைய ஆளுநர் பற்றி கீழ்த்தரமான விமர்சனங்கள் செய்து பதிவேட்டில் பதியப்பட்டுள்ளன என்பதைக் கூறி அவற்றை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். மேலும், சென்ற பேரவையில் என் மீதும், திரு. இளம்வழுதி போன்றோர் மீதும் காவலர்களைத் தாக்கியதாக, உண்மைக்குப் புறம்பாகக் கூறி பதிவு செய்து எங்கள் மீது கிரிமினல் வழக்கு போடப்பட்டது பற்றியும், நாங்கள் உறுப்பினர்களைத் தாக்குவதை வழக்கமாகக் கொண்டவர்கள் என்று தோன்றும் அளவுக்கு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு நடவடிக்கைக் குறிப்பில் ஏற்றப்பட்ட நிகழ்வுகளைப் பற்றியும் சுட்டிக்காட்டி அவற்றையெல்லாம் அகற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன்.

அப்போது, எந்தெந்தப் பகுதிகளை நீக்கவேண்டுமென்று எழுதிக் கொடுத்தால் பின்னர் தீர்ப்பு வழங்குவதாகத் தாங்கள் குறிப்பிட்டீர்கள்.

அதைத் தொடர்ந்து, மக்கள் மனதில் எதிர்க்கட்சி உறுப்பினர்களை முறைகேடானவர்களாகக் காட்டும் வகையில், நடவடிக்கைக் குறிப்புகள் எவ்வாறு பதியப்பட்டுள்ளன என்பதை விளக்கும் வகையில், சென்ற பேரவையில் நடந்த சில நிகழ்வுகளை இம்மனுவின் மூலமாக தங்களது மேலான கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

பேரவையைப் பொறுத்தவரை அனைத்து உறுப்பினர்களும் ஒரே மாதிரியாக நடத்தப்படவேண்டும் என்ற கோட்பாட்டினைக் காற்றில் பறக்கவிட்டு, ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும் பல வகைகளில் சலுகையளித்து, அவர்கள் அடிக்கடி குறுக்கிடவும்,

தாங்கள் நினைத்ததை அவைக்குறிப்பில் ஏற்றவும் அப்போவையில் வகை செய்யப்பட்டது. அதே நேரத்தில், எதிர்க்கட்சி உறுப்பினர்களாக இருந்த நாங்கள் உண்மையான குற்றச்சாட்டுகளைச் சொன்னால் கூட, ஆதாரம் எங்கே என்று கேட்கும் போக்கே இருந்தது. குற்றச்சாட்டுகளைக் கேட்டு, அவற்றிற்கு அரசின் சார்பில் உரிய விளக்கங்களை வழங்கும் ஜனநாயக நடைமுறை பின்பற்றப்படவில்லை. ஆதாரம் இருக்கிறது என்று நாங்கள் கூறினாலும், "அதை முன்னரேயே கொடுத்துவிட்டுப் பேசவேண்டும்" என்று கூறி, நாங்கள் பல நேரங்களில் பேசியது நீக்கப்பட்டது. அரசுக்குச் சங்கடம் விளைவிக்கும் வகையில் உள்ள பிரச்சினைகளை எதிர்க்கட்சியினர் அவையில் எழுப்பினாலே, அதற்கு ஆதாரம் கேட்டு, ஏதாவது ஒரு விதியைச் சொல்லி எங்களுக்கு அனுமதி மறுக்கபபடுவது வழக்கமாக இருந்தது. நாங்கள் வாய்ப்பு கொடுங்கள் என்று தொடர்ந்து மன்றாடினாலும், அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினையை எழுப்புதல் முறைகேடானது என்று கூறி, பல்வேறு வகைகளில் விமர்ச்சித்து, அதை நடவடிக்கைக் குறிப்பில் பதிவு செய்து, பின்னர் எங்களை வெளியேற்றுவதே வாடிக்கையாக இருந்தது.

அரசியல் ரீதியில் அரசுக்கு தர்மசங்கடம் ஏற்படுத்தும் பிரச்சினைகளை நான் அவையில் எழுப்ப முற்பட்டபோது, பெரும்பாலான சமயங்கள் முறைகேடாக நடந்ததாகத் தெரிவித்தும், காவலர்களோடு மோதுவதாகத் தெரிவித்தும பேரவைத் தலைவர் அவைக் குறிப்பில் ஏற்றியுள்ளார். உதாரணமாக, 21-4-1993 அன்று, முந்தைய நாள் தரக்குறைவான சில வார்த்தைகளைப் பயன்படுத்தி கூச்சலிட்ட ஆளுங்கட்சி உறுப்பினர் மீது நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியும், எவ்வித நடவடிக்கையும் எடுக்காது, நாங்கள் பேசியது எதையும் அவைக் குறிப்பில் பதிவு செய்யப்பெறாமல், அனைவரும் ஒருவர்பின் ஒருவராக அன்றைய பேரவைத் தலைவரால் வெளியேற்றப்பட்டோம். பேரவைத் தலைவர் நாங்கள் முறைகேடாக நடப்பதாகக் கூறுவது மட்டுமே அன்றைய பதிவேட்டுக் குறிப்புகளில் உள்ளது. அவ்வளவுபேர் நாங்கள் அவ்வளவு நேரம் விடுத்த வேண்டுகோள் எதுவும் குறிப்பில் இல்லாமல் "(குறுக்கீடு)" என்று மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல், பேரவை லாபியில் நானும், திரு. இளம்வழுதி, திரு. பி.வி. இராஜேந்திரன் ஆகியோரும் பேரவைக் காவலர்களை, எங்களை வெளியேற்றும்போது கைகளாலும், கால்களாலும் உதைத்துக் காயப்படுத்தியதாகக் கூறி, பேரவை லாபியில் நடைபெற்றதாகக் கூறப்பட்ட ஒரு சம்பவத்திற்கு காவல் துறை குற்றவியல் நடவடிக்கை





எடுக்கவேண்டுமென்ற வகையில், நமது பேரவை வரலாற்றிலேயே முதல் முறையாக, அன்றைய பேரவைத் தலைவர் ஆணையிட்டார்.

அதற்கேற்ப, அப்போது பேரவை மார்ஷலாக இருந்த திரு. தண்ணன் அவர்கள், நாங்கள் காவலர்களைத் தாக்கியதாக ஒரு மனுவை அளித்து, அதன் அடிப்படையில் அன்று நானும், திரு. இளம்வழுதி அவர்களும் கைது செய்யப்பட்டோம். உண்மையில், எங்களை வெளியேற்றும்போது பேரவைக் காவலர்கள்தான் எங்கள் மீது வன்முறையைப் பயன்படுத்தினார்கள். ஆனால், அன்றைய தலைவரோ எங்களை வெளியேற்றும்போது காவலர்களுடன் நாங்கள் மோதுவதாகக் கூறி அதை நடவடிக்கைக் குறிப்பில் ஏற்றினார். எங்களது பேச்சுக்கள் எதுவும் பதிவாக அனுமதிக்கவில்லை. எல்லாம் "(குறுக்கீடு)" என்று அடைப்புகளுக்குள் குறிக்கப்பட்டுள்ளன. இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 332 மற்றும் 34-ன் கீழ் எங்கள் மீது வழக்கு தொடரப்பட்டாலும், 3 வருடங்களுக்கு மேலாகியும் எங்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை என்பதிலிருந்தே, இந்நடவடிக்கை வேண்டுமென்றே என்னையும் மற்ற சில உறுப்பினர்களையும் கைது செய்து இழிவுபடுத்துவதற்காக, பழிவாங்குவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கையே தவிர வேறில்லை என்பது நன்கு தெரியும். மறுநாள் நானும், திரு. இளம்வழுதி அவர்களும், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது விடுவிக்கப்பட்டோம். இவ்வாறு அவைக்குள் நடந்ததாகச் சொன்ன சம்பவத்திற்குக் கூட அவை மூலம் எவ்விதத் தீர்மானமும் நிறைவேற்றாமல் அன்று நாங்கள் கிரிமனல் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டோம்.

முக்கியமான பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் நாங்கள் ஏதாவது குற்றச்சாட்டு கூறினால் அதைத் தலைவர் நீக்கிவிடுவார். தரக்குறைவாகவோ பாராளுமன்ற மரபுக்கு மாறாகவோ, தனிப்பட்ட முறையில் ஒருவர் பற்றிக் குறிப்பிட்டுப் பேசினாலோ அவற்றை நீக்குவது என்பது வழக்கம். ஆனால், சாதாரணமாக அரசின் செயல்முறைகளிலுள்ள குறைபாடுகளையும், ஊழல்களையும் சுட்டிக் காட்டினால்கூட, அல்லது சில இடங்களில் உள்ள அவலங்களை எடுத்துக் கூறினால்கூட அவையும் தேவையின்றி நீக்கப்படுவது வழக்கமாக இருந்தது.

உதாரணமாக, தனியார் கல்லூரி ஒன்றில் உள்ள நிலை குறித்து 29-4-1994 அன்று கவன ஈர்ப்பில் நான் பேசியபோது அங்கே சுற்றுச் சுவர் இல்லாததால் ஆடு மாடுகள், பன்றிகள் மேய்கின்றன என்று

குறிப்பிட்ட வாசகம் கூட நீக்கப்பட்டது. அதே நாளன்று அரசுத் திட்டங்களுக்கு உயிரோடிருப்பவர்களின் பெயர்களை வைப்பது கூடாது என்பதற்காக, மாண்புமிகு எம்.ஜி.ஆர் அவர்கள் காலத்தில் அத்தகைய ஆணை ஒன்று போடப்பட்டது என்று நான் கூறியபோது, அந்தப் பகுதி நீக்கப்பட்டது. ஆனால், அந்த ஜி.ஓ. அப்போதே விலக்கிக் கொள்ளப்பட்டது என்று பேரவைத் தலைவர் தெரிவித்தது அவைக் குறிப்பில் உள்ளது. இவ்வாறு சாதாரணமாக நான் தெரிவித்த கருத்து கூட நீக்கப்பட்டுள்ளது.

ஆனால், எங்கள் கட்சியின் மீது யாராவது குற்றச்சாட்டோ அவதூறோ கூறும்போது அதை நீக்கவேண்டுமென்று நாங்கள் கேட்டால், " நீங்கள் கூறியதும் நடவடிக்கைக் குறிப்பில் இருக்கும், அதனால் நீக்கத் தேவையில்லை" என்று தீர்ப்பளிக்கப்படும்.

உதாரணமாக, 29-4-1994 அன்று அமைச்சர் ஒருவர் எங்கள் கட்சி பற்றியும், கட்சி உறுப்பினர் பற்றியும் பயன்படுத்திய சொற்களை நாங்கள் நீக்குமாறு வேண்டுகோள் விடுத்தும் அவை நீக்கப்படவில்லை.

கட்சி சார்புக்கு ஏற்றவாறு உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது என்பதற்கு மற்றொரு எடுத்துக்காட்டைக் கூற விரும்புகிறேன். 24-9-1991 அன்று அப்போதைய முதல்வர் அவர்கள் தனது ஜாதி பெயரைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்திய போதும், அது நீக்கப்படலாம் என்று திரு. பீட்டர் அல்போன்ஸ் போன்ற உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்தும், அது நடவடிக்கைக் குறிப்பில் இருந்தால்தான் பின்வரும் சந்ததியினருக்கு எப்படி ஜாதி துவேஷம் தூண்டிவிடப்பட்டது என்பது தெரியும் என்று கூறி அது நீக்கப்படாமல் நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெற்றது.

ஆனால், அதற்கு மாறாக, 28-4-1994 அன்று பேசுகையில் தான் ஒரு அரிசனப் பெண் எம்.எல்.ஏ. என எங்கள் கட்சி உறுப்பினர் திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்கள் தெரிவித்தபோது, ஜாதிப் பெயரைச் சொல்லுதல் முறையில்லை எனக் கூறி, அது நீக்கப்பட்டது. இந்த பாரபட்சத்தை எடுத்துக் காட்டும் வகையில் "ஏற்கெனவே முதல்வர் கூட ஒரு முறை ஜாதிப் பெயரைக் கூறியுள்ளார்கள்" என்ற அவர்கள் தெரிவித்தார்கள். அவர்கள் தெரிவித்த அந்தக் கூற்றும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டது.

இதேபோல், 29-10-1993 அன்று எங்கள் எதிர்க்கட்சித் தலைவர், துணை நிதிநிலை அறிக்கையின்மீது பேசும்போது, ஆதாரம் இருக்கிறது என்று தெரிவித்தும்கூட, அவர் கூறிய ஒரு குற்றச்சாட்டு அவைக்



குறிப்பிலிருந்து நீக்கப்பட்டது. ஆதாரம் உள்ளது என அவர் கூறியதும் நீக்கப்பட்டது. இறுதியில், 'ஜனநாயக விரோதப் போக்கை எதிர்த்து வெளிநடப்புச் செய்கிறோம்' என்று வெளிநடப்புச் செய்யும்போது தெரிவித்ததுகூட, நீக்கப்பட்டு, 'வெளிநடப்புச் செய்தனர்' என்று மட்டும்தான் நடவடிக்கைக் குறிப்பில் பதியப்பட்டுள்ளது.

அதேபோன்று, ஓர் உறுப்பினர் தெரிவித்த கருத்துக்கு நாங்கள் மறுப்புத் தெரிவிக்க முற்பட்டபோது, அதேநாளன்று. "அடிக்கப்போவது போல் எழுந்து நிற்பது முறையா; 7,8 பேர் கையை ஓங்கிக் கொண்டு ஓடுகிறீர்களே" என்று எங்களுக்கு உள்நோக்கம் உள்ளதுபோல் தாமாகவே ஒரு கருத்தைத் தெரிவித்து, அன்றைய பேரவைத் தலைவர் அதைப் பதிவேட்டில் இடம்பெறச் செய்தார்.

குறிப்பாக, என்னையும் என்னைப் போன்று தங்கள் உரிமைக்குக் குரல் கொடுக்கும் சில எதிர்க்கட்சி உறுப்பினர்களையும், அப்போதைய தலைவர், பெயர் குறிப்பிட்டு, "இவ்வாறு நடப்பது முறையல்ல; நீங்கள் முறைகேடாக நடக்கிறீர்கள்; நடவடிக்கை எடுக்க வேண்டுவரும்" என்பது போன்று ஏதாவது ஒன்றைக் கூறி, ரெக்கார்டு செய்து, வெளியேற்றுவது வழக்கம். எங்கள் கருத்துக்களைக் கூற வாய்ப்புக் கேட்டாலும், அதை "முறைகேடு" என்றுதான் அவர் குறிப்பிடுவார்.

உதாரணமாக, 15-3-1995 அன்று ஒரு முக்கிய பிரச்சினைப் பற்றி எழுப்ப வேண்டுமென்று கேட்டபோது, அதற்கு அனுமதியில்லை என்று கூறி, ஒரு வரிகூட பேசவிடாமல், வாய்ப்பைப் பறித்ததையடுத்து எதிர்க்கட்சித் தலைவரும் மற்றவர்களும் வெளிநடப்புச் செய்தபின், முறைகேடாக நடப்பதாகத் தெரிவித்தார்.

4-11-1994 அன்று எதிர்க்கட்சித் தலைவர், காங்கிரஸ் கட்சியிலிருந்து விலக்கப்பட்ட உறுப்பினர்களை, எக்கட்சியையும் சாராத உறுப்பினர்களாக அறிவிக்கக்கோரி, அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் பொதுச் செயலாளர், அவர்களைக் கட்சியிலிருந்து நீக்கியது பற்றிப் பேரவைத் தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தைப் பற்றி விவரித்தபோது,. காங்கிரஸ் கட்சியின் தலைவர் அவ்வாறு தனக்கு எழுதினால்தான், அதன்மீது நடவடிக்கை எடுக்க இயலும் எனத் தெரிவித்து, அந்த உறுப்பினர்களைக் காங்கிரஸ் உறுப்பினர்களாகவே கருதமுடியும் என முடிவெடுத்தார். அதன்பின்னர் பல்வேறு காலகட்டங்களில் அவ்வுறுப்பினர்களைக் கொண்டே எங்கள் கட்சித் தலைவரையும், மற்றவர்களையும் தரக் குறைவாகப் பேசுவதற்கு

வாய்ப்பளித்தார் (உ-ம். 15-3-1995). அதுமட்டுமல்லாமல், அவ்வாறு எங்களுக்கு துரோகம் செய்தவர்களுக்கு, குறிப்பாக, வேண்டுமென்றே அந்த வருடமும், பின்னர் 1995-இலும் பொதுக் கணக்குக் குழு, அரசு உறுதிமொழிக் குழு, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு ஆகியவற்றில் தலைவர் பதவி அளிக்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல், அவையிலும் அவர்களுக்கு அடிக்கடி சம்பந்தம் இலலாத பிரச்சினைகளில்கூட கருத்துக்கூற வாய்ப்பளிக்கப்பட்டது. அவர்கள் கிட்டத்தட்ட ஆளுங்கட்சியின் ஒரு அங்கமாகவே அவைக்குள் செயல்பட்டதால், அவர்களுக்கு ஆளுங்கட்சியினரைவிட அதிகமாக சலுகைகள் காட்டப்பட்டன.

அத்தகைய உறுப்பினர்களுள் ஒருவரான திரு. கே.கே. சின்னப்பனை 30-3-1995 அன்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. எ. சம்பத் தாக்கியதைத் தான் பார்த்ததாகக் கூறி, பேரவைத் தலைவர் அவரை வெளியேற்றினார். நாங்கள் அதை மறுத்ததை ஏற்றுக்கொள்ளாததால், வெளிநடப்புச் செய்தோம். லாபியிலிருந்து கூச்சலிடுவதாகக் கூறி, எங்களைக் காவலர்களைக் கொண்டு வெளியேற்ற ஆணையிட்டபோது, காவலர்கள் எங்கள்மீது பலாத்காரத்தைப் பிரயோகித்தனர். ஆனால், பேரவைத் தலைவரோ, நாங்கள் காவலர்களைத் தாக்கியதை அவைக்குள்ளிருக்கும் தனது இருக்கையிலிருந்து பார்த்ததாகக் கூறினார். இது எந்நிலையிலும் சாத்தியம் இல்லை என்பதைத் தாங்கள் அறிவீர்கள். தங்கள் இருக்கையிலிருந்து வெளியில் நடப்பதைப் பார்க்க இயலாது என்பதைத் தலைவர் இருக்கையில் அமர்ந்திருந்தவர்களைக் கேட்டு அறிந்து கொண்டேன். உண்மையை விளக்க திரு. சம்பத் அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை. ஆனால், பிரச்சினையில் சம்பந்தம் இல்லாத ஆளுங்கட்சிக்கு ஆதரவான மற்றொரு உறுப்பினருக்கு வாய்ப்பளிக்கப்பட்டது.

31-3-1995 அன்று காவலர்கள் அளித்த புகாரின் மேல், அவர்களைத் தாக்கிய உறுப்பினர்கள் மீது, காவல் துறை கிரிமினல் நடவடிக்கை எடுக்கலாம் எனவும், காவலர்களால் தான் தாக்கப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் காவல் துறைக்கு அளித்துள்ள புகார் உண்மைக்குப் புறம்பானது; எனவே, அதன்மீது நடவடிக்கை எதுவும் தேவையில்லை எனவும் காவல் துறைக்குத் தலைவர் தெரிவித்தார். அதுமட்டுமல்லாமல், இந்நிகழ்ச்சியை முழுமையாக விளக்கிய சென்னைத் தொலைக்காட்சியின் மேலும் உரிமைப் பிரச்சினை எழுப்பி, அது உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டது.



அதேபோல், 3-5-1995 அன்று பாரதப் பிரதமரை, "செயலற்ற பிரதமர்" என அன்றைய முதல்வர் வர்ணித்ததை, நாங்கள் எதிர்த்தபோது ஆளுங்கட்சி உறுப்பினர் திரு. வி.பி.ஆர். ரமேஷ் என்னைத் தாக்கினார். இருந்தபோதிலும், ஐந்தாவது பிளாக்கிலிருந்து நான் தாவிச் சென்று நான்காவது பிளாக்கிலிருந்த அவரைத் தாக்கியதாகவும், அதைத் தான் கண்ணாரக் கண்டதாகவும் உண்மைக்குப் புறம்பாகத் தெரிவித்து, என்னையும், மைக்கை உடைத்ததாகக் கூறி, மேலும் சில உறுப்பினர்களையும் வெளியேற்றி, கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கும் கலந்து கொள்ள முடியாது என்று ஆணையிட்டார். இப்பிரச்சினை உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டது. உண்மை நிலையை நாட்டுக்கு உணர்த்திய சென்னைத் தொலைக்காட்சி, அகில இந்திய வானொலி ஆகியவை மீதும் உரிமைப் பிரச்சினைகள் கொணரப்பட்டு குழுவுக்கு அனுப்பப்பட்டது. நான் தாக்கப்பட்டதாகத் தெரிவித்து கொடுத்த மனுவும் தலைவரால் நிராகரிக்கப்பட்டது. ஒன்றிற்குப் பத்து முறை அன்றைக்கு என்னை இருக்கைக்குச் செல்லும்படி கூறி, பின்னரே நடவடிக்கை எடுத்ததாகவும் பேரவைத் தலைவர் கூறினார். ஆனால், எடுத்த எடுப்பிலேயே நான் தாக்கியதாகக் கூறி, என்னை வெளியேற்றினார் என்பது நடவடிக்கைக் குறிப்பைப் பார்த்தாலே தெரியும்.

இதற்கு மாறாக, 28-4-1995 அன்று நாங்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றிப் பேரவைத் தலைவரிடம் கேட்டுக் கொண்டிருந்தபோது, ஆளுங்கட்சி உறுப்பினரான திருமதி கவிநிலவு தர்மராஜ் அவர்கள், எங்கள் கட்சி உறுப்பினர் திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்களைத் தாக்க, எதிர்வரிசையிலிருந்து ஓடிவந்தபோது, அவர்மீது நடவடிக்கை எடுக்க, நாங்கள் கோரியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக, முறைகேடாக நடப்பதாக முத்திரையிடப்பட்டு நாங்கள் வெளியேற்றப்பட்டோம். 3-5-1995 அன்று, அந்த உறுப்பினர்மீது நடவடிக்கை எடுக்காததைச் சுட்டிக்காட்டிய போதுகூட "அவ்வுறுப்பினர் பேரவைத் தலைவரிடம் கைகூப்பி வேண்டுகோள்தான் விடுத்தாரே தவிர, அவ்வுறுப்பினர் தாக்க வரவில்லை" என்று பேரவைத் தலைவர் வாதிட்டார்.

இன்னொரு நேர்வில், 29-3-1993 அன்று நான் தெரிவித்த குற்றச்சாட்டிற்கு ஆதாரம் அளிக்க பேரவைத் தலைவரிடம் வந்த திரு. செல்லக்குமார் அவர்களை, லாபி வழியாக வந்து உறுப்பினர் திரு. தாமரைக்கனி தாக்கியபோது, அதைத் தான் பார்த்ததாகக் காட்டிக்கொள்ளாமல், அவரைக் கண்டவுடன் வெளியேற்றிவிட்டதாகத்

தலைவர் கூறியுள்ளார். ஆனால், இத்தாக்குதலைக் கண்டித்த எங்களைப் பார்த்து "காங்கிரஸ் உறுப்பினர்கள் 6,7 பேர் காவலர்களைத் தாண்டி திரு. தாமரைக்கனியை அடிக்க ஓடுவதாகத்" தெரிவித்து, அதை ரெக்கார்டு செய்துள்ளார். மேலும், அன்று என்னையும் எங்கள் கட்சியின் மற்றொரு உறுப்பினரையும் அக்கூட்டத்தொடர் முழுவதும் நீக்கிவைக்க ஆணை பிறப்பித்தார்.

மேலும், 10-2-1993 அன்று சுதந்திரப் போராட்டம், மொழிப்போராட்டம் தொடர்பாக எங்கள் கட்சி பற்றி தவறான ஒரு குற்றச்சாட்டை அமைச்சர் தெரிவித்ததற்கு மறுப்புத் தெரிவிக்க எங்களுக்கு வாய்ப்பு தரப்படவில்லை. அன்றையதினம் வெளியேறும்போது காவலர்களுடன் மோதுவதாகத் தலைவரால் குறிப்பிடப்பட்டு நடவடிக்கைக் குறிப்பில் ஏற்றப்பட்டது.

அதேபோன்று, 28-4-1994 அன்று ஊரகத் தொழில் துறை அமைச்சர் எங்கள் கட்சி உறுப்பினர்கள் பற்றி தெரிவித்த விமர்சனத்திற்கு திரு. பி.வி. இராசேந்திரன் மறுப்பு தெரிவித்தபோது, அவர் முறைகேடாக நடப்பதாகவும், பேப்பரை வீசி எறிவதாகவும் தெரிவிக்கப்பட்டு, கூட்டத் தொடர் முழுவதும் நீக்கப்பட்டார். இது திட்டமிட்டு செய்யப்பட்டது என்பதற்கு ஆதாரமாக சில நிமிடங்கள் கழித்து, பேரவைத் துணைத் தலைவராக இருந்த திரு. ச. காந்திராஜன் சிலேடையாக, "தொல்லை கொடுத்த கொசுக்கள் விரட்டியடிக்கப்பட்டுவிட்டது" என்ற வகையில் தெரிவித்தார். எனினும், இது வெளிச்சத்திற்கு வந்துவிடக் கூடாது என்பதற்காக பேரவைத் தலைவர் அதைக் கவனமாக நீக்கிவிட்டார்.

அதேபோன்று, 15-3-1995 அன்று ஆளுநர் உரையின்போது ஒரு கோயில் கொள்ளை வழக்கில் திருவட்டாறு பகுதியினுடைய காங்கிரஸ் தலைவர் ஒருவர் முதல் குற்றவாளியாக சம்பந்தப்பட்டுள்ளார் என்று அன்றைய பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் தெரிவித்தபோது, அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படவில்லை. இருப்பினும், அதையடுத்து உடனே மற்றொரு கோயில் கொள்ளை சம்பவத்தில் ஆளும்கட்சியைச் சேர்ந்த ஒருவர் சம்பந்தப்பட்டுள்ளார் என்று அப்போதைய எங்கள் கட்சி உறுப்பினர் பதில் அளித்தது மட்டும் நீக்கப்பட்டது.

ஆதாரமின்றி குற்றச்சாட்டை சொல்லக்கூடாது என்று கூறி, எங்கள் கருத்துக்களை நீக்கிய அதே பேரவைத் தலைவர், 28-4-1995 அன்று, எங்கள் கட்சித் தலைவர் ஒருவருக்கும், ஆட்டோ சங்கருக்கும் தொடர்பு உள்ளது என்ற ஆதாரமற்ற குற்றச்சாட்டைத் தானே தெரிவித்து, பதிவு செய்துள்ளார்.



10-4-1995 அன்று பேச விருப்பம் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவரைப் பார்த்து, "நீங்கள் நேற்றே வந்திருக்க வேண்டும்; இன்றைக்கு பதிலுரைதான்" என்று கூறி, அவர் கூறுவது எதுவும் பதிவு செய்யப்படவில்லை. இதைக் கண்டித்து நாங்கள் வெளியேறியபோது அன்றைய பேரவைத் தலைவர் ஒருதலைப்பட்சமாக, காழ்ப்புணர்ச்சியுடன் பின்வரும் வரிகளைப் பேசினார்:

"குரல் எழுப்புகிற உறுப்பினர்கள் அனைவரும் முறைகேட்டின் மொத்த உருவங்கள். காந்திஜியைப் பழித்த உருவங்கள், ஜவஹர்லால் நேருவைப் பழித்த உருவங்கள், ஒவ்வொன்றாக வெளியேறுகின்றன". இவ்வாறு மிகத் தரக் குறைவாக இல்லாத ஒரு பழியை எங்கள்மீது சுமத்தி, அதைத் தன் அதிகாரத்தால் குறிப்பில் ஏற்றினார். நாங்கள் தெரிவித்த மறுப்பு எதுவும் நடவடிக்கைக் குறிப்பில் இல்லாமல் வெறும் 'குறுக்கீடு' என்பது மட்டும்தான் உள்ளது.

28-2-1996 அன்று சுடுகாட்டுக் கூரை ஊழல் பற்றி நாங்கள் எழுப்ப விரும்பியபோது, அதற்கு அனுமதி மறுக்கப்பட்டு நாங்கள் பேசியது அனைத்தும் அவைக் குறிப்பில் இடம் பெறாமல் செய்யப்பட்டது. அதோடு மட்டுமல்லாமல், அன்று என்னைப் பற்றி "இது செய்தியாக வேண்டும்; அதற்குத்தான் திரு ஞானசேகரன் இவ்வாறு செய்கிறார்; சட்டமன்ற உறுப்பினராக இருப்பதற்கு எந்தவகையிலும் தகுதியற்ற ஒரு நபர் எப்படியோ அவைக்கு உள்ளே நுழைந்து விட்டார்" என்று தரக்குறைவாகவும். களங்கம் கற்பிக்கும் வகையிலும் என்னைப் பற்றிப் பேசி, என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய எனது தொகுதி மக்களைக் கேவலப்படுத்தியுள்ளார். மேலும், "எதிர்க்கட்சித் தலைவர் என்ன மேதாவியா?" என்றும் பேரவைத் தலைவர் கூறியதும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகளின் குரலை அடக்குவதில், அவற்றின் உறுப்பினர்களை காவலர்களை விட்டு வெளியேற்றி தூக்கி எறிவதில் அவர் காட்டிய அதீத ஆர்வத்தாலும், அவர்களை அவையில் பணியாற்ற விடக்கூடாது என்ற உள்நோக்கத்தாலும், அக்கூட்டத்தொடரில் முதல்முறையாக நாங்கள் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டபோதுகூட, "இரண்டாவது முறையாதலால். கூட்டத் தொடர் முழுவதும் நீக்குகிறேன்" என்று சொல்லிவிட்டு, பின்னர் சுட்டிக்காட்டியபோது, அதைத் திரும்பப் பெற்ற நிகழ்ச்சிகளும் உண்டு. உதாரணமாக, 11-4-1994, 28-4-1995 ஆகிய இரு நாட்களிலும், தான் கூறியதையே திரும்பப் பெற்றுக் கொண்டுள்ளார்.

17-3-1994 அன்று ஆளுங்கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட முன்னாள் அமைச்சர் திரு. ஜி. விசுவநாதன் அவர்கள் ஜீரோ ஹவரின் போது ஒரு பிரச்சினை பற்றிப் பேச எழுந்தபோது, அவர் ஆளுங்கட்சி உறுப்பினர்களால் தாக்கப்பட்டார். இருப்பினும், தலைவர் திரு. விசுவநாதன்தான் மற்ற உறுப்பினர்களோடு மோதுகிற சூழ்நிலைக்குச் செல்கிறார் என்று கூறி, அதைக் குறிப்பில் பதிவு செய்தார். நாங்கள் கூறிய கருத்துக்கள் எதுவும் பதிவாகவில்லை. '(குறுக்கீடு)'என்று மட்டுமே உள்ளது. அவர் தாக்கப்பட்டது பற்றி நாங்கள் எழுந்து நின்று தலைவரிடம் தெரிவிக்க முற்பட்டபோது, எந்த அசம்பாவிதமும் நிகழவில்லை என்றும், நானும், திரு. எ. சம்பத் என்ற உறுப்பினரும் மட்டும் எங்கள் இருக்கையிலேயிருந்து எழுந்து சென்று உறுப்பினர்களோடு மோதுவதைத் தான் பார்த்ததாகவும் தெரிவித்து எங்கள் இருவரையும் வெளியேற்றினார். ஒரு உறுப்பினர் தாக்கப்பட்டுள்ளார் என்று எதிர்க்கட்சித் தலைவர் கூறியது கூட ஒரு திசை திருப்பும் செயல் எனக் கூறித் தலைவர் அதையும் நீக்கிவிட்டார். மற்றபடி நாங்கள் கூறியது எதுவும் நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறவில்லை.

அதே நாளன்று ஆளுநர் உரை மீதான விவாதத்தில் எங்கள் கட்சி உறுப்பினர் திரு. ச. அழகிரி ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்ப எழுந்தபோது, அவர் முறைகேடாக நடப்பதாகவும், பேரவைத் தலைவரைப் பார்த்து அழகிரி அவர்கள் கை நீட்டி, ஒருமையில் பேசியதாகவும் கூறி அவர் வெளியேற்றப்பட்டார். அழகிரியைப் பார்த்து தலைவர் கூறியதையேதான் அவரும் திரும்பக் கூறினார். எனினும், தலைவர் பேசுவது மட்டும் குறிப்பில் உள்ளது. ஆனால் திரு. அழகிரி பேசியது நீக்கப்பட்டது. நாங்கள் கூறும் குற்றச்சாட்டுகளை நீக்கும் தலைவர் அன்று ஆளுநர் உரை விவாதத்தில் நாங்கள் வெளிநடப்பு செய்தபின் ஆளும்கட்சி உறுப்பினர்கள் எங்கள் கட்சி ஊழலை உற்பத்தி செய்யும் கட்சி என்றெல்லாம் குற்றம்சாட்டியபோதும் அவற்றையெல்லாம் நடவடிக்கைக் குறிப்பில் ஏற்ற அனுமதியளித்துள்ளார்.

'சௌத் இண்டியா ஷிப்பிங் கார்ப்பரேஷன்' என்ற நிறுவனத்தில் 'டிக்' நிறுவனத்திற்கு இருந்த பங்குகளை அரசு குறைந்த விலைக்கு விற்றதில் கிட்டத்தட்ட 50 கோடி ரூபாய் வரைக்கும் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று 28-4-1994 அன்று எங்கள் கட்சி உறுப்பினர் டாக்டர் செல்லக்குமார் தெளிவாக விளக்கியதும் நீக்கப்பட்டது. ஆதாரத்தைத் தன்னிடம் கொடுத்துவிட்டுப் பேச வேண்டும் என்று தலைவர் கேட்டபோது அப்போதே ஆதாரத்தைக் கொடுப்பதாகத்



தெரிவித்தும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. "பங்குகளை விற்றதில் தவறு நடந்தது" என்ற அவரது வாசகம் கூட நீக்கப்பட்டது. ஆதாரம் இருக்கிறது என்று அவர் கூறியும் பங்கு விற்பனை பற்றிய குற்றச்சாட்டு முழுவதும் அன்றைய நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டது. அவர் அன்று கூறிய குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் உண்மை என்பது இப்போதய விசாரணையில் தெரிய வருகிறது.

அன்றைய ஊரகத் தொழில் துறை அமைச்சர் நாங்கள் அவையினுடைய சட்ட திட்டத்திற்குக் கட்டுப்பட மாட்டோம் என்றும், எங்கள் கட்சியினுடைய சட்ட திட்டத்திற்கும் கட்டுப்பட மாட்டோம் என்றும் அவதூறாகக் கூறியதும், எங்கள் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மீது தெரிவித்த குற்றச்சாட்டும் நீக்கப்படாமல் நடவடிக்கைக் குறிப்பில் அப்படியே உள்ளன.

19-4-1993 அன்று மற்றொரு நேர்வில், எங்கள் கட்சி உறுப்பினர்கள் அறிவிப்பு கொடுத்திருந்த, பேரவைத் தலைவரை நீக்கக் கோரும் தீர்மானம் அவைமுன் வந்தபோது, அந்தத் தீர்மானத்திற்குப் பேரவையின் ஒப்புதல் பெறும் பொருட்டு எங்கள் கட்சியில் இருந்த 35 உறுப்பினர்களுக்கு மேலானவர்கள் தீர்மானத்திற்கு ஆதரவாக எழுந்து நின்றனர். அதற்குப் பிறகு எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினை பற்றிய விவாதத்தை அடுத்து தீர்மானம் எதிர்க்கட்சித் தலைவரால் முன்மொழியப்பட்டவுடனே, சிறிதுகூட அவகாசம் இல்லாமல் அன்றைய தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்த பேரவைத் துணைத் தலைவர் தீர்மானத்தை யாரும் வழிமொழியாததால் விதி 97(2)-ன் கீழ் கைவிடப்படுவதாக அவசரமாக அறிவித்து, அந்தத் தீர்மானத்தின் மீதான விவாதத்தை வரவிடாமல் தடுத்தார். பேரவைத் தலைவர் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் தொடர்பாக விதி 70(i)-ஐ ஆராய்ந்தால், 35-க்கு மேற்பட்டவர்கள் எழுந்து நின்று ஆதரவு தெரிவித்தாலே போதுமானது. தீர்மானத்தின் மீது பேசுபவர் தீர்மான வாசகங்களைப் படித்துவிட்டு அதன் மீது பேசுவார். அதனை மீண்டும் வழிமொழிய வேண்டுமென தலைமைப் பொறுப்பிலிருப்பவர் கருதினால், வழிமொழிபவர் வழிமொழியலாம் என மீண்டும் கேட்டிருக்கவேண்டும். அன்றைய பேரவைத் தலைவர் பல்வேறு காலக் கட்டங்களில் ஆளும் கட்சிக்கு ஆதரவாகவும், எதிர்க்கட்சி உறுப்பினர்களின் உரிமையைப் பறிக்கின்ற வகையிலும் அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்காமல் செயல்பட்டு வந்ததைப் பற்றி அன்றே நாங்கள் விரிவாக விவாதிக்க இருந்தோம். அதற்கு மாற்றுக் கருத்து தெரிவித்து விவாதித்து பின்னர்

வாக்கெடுப்பின்போது நங்களது நிலையை அரசு உணர்த்தியிருக்கலாம்; அன்றைய பேரவைத் தலைவரும் உணர்த்தியிருக்கலாம். அவர்களுக்கு பெரும்பான்மை இருந்தும், பேரவைத் தலைவர் பற்றிய குறிப்புகள் எதுவும் அவைக் குறிப்பில் ஏற்ற விடக்கூடாது என்ற ஒரே காரணத்திற்காக இவ்வாறு குறுக்கு வழியில் பேரவை விதியைக் கூறி எங்களது நியாயமான வாய்ப்பைத் தட்டிப் பறித்தனர். அன்று இதற்காக எவ்வளவோ போராடியும் எங்கள் கோரிக்கை ஏற்கப்படவில்லை.

ஆனால், இதற்கு மாறாக ஆளுநர் பற்றி குற்றச்சாட்டுகளும், குறிப்புகளும் நடவடிக்கைக் குறிப்பில் ஏற்றவேண்டுமென்று அன்றைய அரசு நினைத்ததால், ஆளுநரின் நடவடிக்கை பற்றி அவையில் விமர்சித்துப் பேசக்கூடாது என்ற விதி 92(7)-ஐ, விதி 287-ஐப் பயன்படுத்தி, 19-4-1995 அன்றும் 26-4-1995 அன்றும் தளர்த்தி ஆளுநரைப் பற்றிய பலத் தரக்குறைவான, கேவலமான விமர்ச்சனங்கள் பதிவுச் செய்யப்பட்டன. 26-4-1995 அன்று அன்றைய முதலமைச்சரே ஆளுநரைப் பற்றி தனிப்பட்ட முறையில் களங்கம் கற்பித்து "ஆளுநர் 1993-ல் ஆகஸ்ட் மாதத்தில் நான் ராஜ்பவன் சென்றபோது என்னிடம் தவறான முறையில் நடந்து கொண்டார்" என்று தரம் தாழ்ந்த வார்த்தைகளைப் பயன்படுத்திக் குற்றஞ்சாட்டினார். அதுமட்டுமல்லாமல், "இந்தப் பேரவையில் தேர்தெடுக்கப்பட்ட முதல்வரை ஒரு ஆள் அவமதித்துள்ளார்" என்று கூறி, பேரவைத் தலைவரும் தனது பதவிக்கும், இடத்திற்கும் சற்றும் பொருந்தாமல், ஆளுநரைப் பற்றி வசை பாடினார். பாராளுமன்ற மரபுக்கு எதிராக பதியப்பெற்ற அவையெல்லாம் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பெற வேண்டும். அது மட்டுமல்லாமல் அரசியல் சட்டவிதிப்படி மாநில அரசு நிர்வாகத்தின் தலைவராகவும், சட்டமன்றத்தின் தலைவராகவும் இருந்த ஆளுநரின் படத்தைக்கூட சட்டமன்றப் பேரவை நாட்குறிப்பிலும், அரசாங்க நாட்குறிப்பிலும் இடம் பெறாது செய்த நிலைமை இருந்தது.

மேலும், நான் பல முக்கியமான பிரச்சினைகள் குறித்து கொடுத்த தீர்மானங்கள் நிராகரிக்கப்பட்டன.

உதாரணமாக, இப்போது பெருமளவில் பேசப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்பட்டிருக்கிற இலவச வேட்டி-சேலை வழங்கும் திட்டம் பற்றி கூட 1992-லும், 1993-லும் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்து, அவையெல்லாம் நிராகரிக்கப்பட்டன. ஆளுநரைப் பற்றி அப்போதைய வருவாய்த்துறை அமைச்சர் தெரிவித்த கருத்து குறித்து நான் கொடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானம், சுகாதாரத் துறைச் செயலாளர்



வீட்டில் நடந்த சோதனை பற்றி நான் கொடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானம் மற்றும் நிலக்கரி இறக்குமதியில் நடந்த ஊழல் பற்றி நான் கொடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானம் ஆகிய இந்தத் தீர்மானங்கள் எல்லாம் நிராகரிக்கப்பட்டன.

அதேபோன்று, சென்னை மத்திய சிறையிலிருந்து 'தடா' கைதிகள் தப்பியது, வேலூர் கோட்டை முகாமிலிருந்து போராளிகள் தப்பிக்க முயன்றது, அன்றைய முதல்வர் மீது லஞ்ச ஒழிப்புச் சட்டப் பிரிவுகளின்படி நடவடிக்கை எடுக்க ஆளுநர் அனுமதி அளித்தது, கொடைக்கானல் ஓட்டல் வழக்கில் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது, திண்டிவனம் அருகில் ஆளுநருடைய வாகனம் மறிக்கப்பட்டு தாக்குதலுக்கு உட்பட்டது போன்ற பல பிரச்சினைகள் குறித்து நான் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எல்லாம் நிராகரிக்கப்பட்டன. எனினும், 18-4-1995 அன்று ஆளுநர் தாக்குதல் பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுத்திருப்பதாகத் தலைவர் தெரிவித்தபோது ஆளுநரை விவாதப் பொருள் ஆக்காமல் இப்பிரச்சினையை அவையில் எழுப்புமாறு எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தபோதும் கூட, ஆளுநரை விவாதப் பொருள் ஆக்குவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் ஒப்புதல் அளித்தார் என்ற வகையில் பேரவைத் தலைவர் கூறி, நடவடிக்கைக் குறிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்பிறகு அன்று நாங்கள் வெளிநடப்புச் செய்தோம். அடுத்த நாள் ஆளுநரை விவாதப் பொருளாக்கக் கூடாது என்று எவ்வளவோ நேரம் வாதிட்டும், நாங்கள் வெளியேறிய பின்னர், விதியைத் தளர்த்தி அன்று ஆளுநரைப் பற்றி தரக் குறைவான பல குறிப்புகள் நடவடிக்கைக் குறிப்பில் பதியப் பெற்றன.

தமிழகத்தில் சிலர் தவறான முறையில் பொருள் சேர்த்தது குறித்தும், இலவச வேட்டி-சேலை வழங்குவதில் முறைகேடு குறித்தும், மதுரை மாவட்டத்தில் சுடுகாட்டு ஊழல் குறித்தும் கொடுக்கப்பட்ட பல்வேறு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் நிராகரிக்கப்பட்டன. 28-2-1996 அன்று இதை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நாங்கள் வற்புறுத்தித் தெரிவித்தது எதுவும் அவைக் குறிப்பில் ஏறவில்லை. வெறும் '(குறுக்கீடு)', '(கூச்சல் குழப்பம்)' என்று மட்டுமே உள்ளது. அன்று ஒவ்வொருவராக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டோம். திரு. குமாரதாஸ் அவர்கள் தாம் தாக்கப்பட்டதாகக் குறிப்பிட்டபோதும்கூட, அது நடவடிக்கைக் குறிப்பில் ஏறவில்லை. 'திரு. சண்முகம் உங்கள் இருக்கைக்கு செல்லச் சொல்லி உங்களைத் தள்ளினார்' என்று பேரவைத் தலைவர் கூறுவது மட்டும் குறிப்பில் இருக்கிறது.

இவ்வாறு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்ததெல்லாம் ஏதோ ஒரு காரணம் காட்டி நீக்கப்படுவது அல்லது பதிவுசெய்யப்படாமல் தடுப்பது போன்ற நிகழ்ச்சிகள்தான் நடந்தன. இவ்வாறு, நடவடிக்கைக் குறிப்புகளைப் படிக்கிறபோது, உண்மை நிலை தெரியாமல் எங்கள் மீது தவறான எண்ணம் வரும் அளவுக்குத்தான் பத்தாவது பேரவையில் நடவடிக்கைக் குறிப்புகள் தயார் செய்யப்பட்டுள்ளன. எனவே, ஆரோக்கியமான, ஜனநாயக முறையில் வழி நடத்திச் செல்லும் தாங்கள், உங்கள் காலத்திலாவது இந்தப் பெரும் குறையை நீக்குவதற்கு பத்தாவது பேரவையின் நடவடிக்கைக் குறிப்புகளை உரியவாறு மாற்றம் செய்யுமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

மேலும், மறைந்த ஆளுநர் டாக்டர் சென்னா ரெட்டி அவர்கள் பற்றி அவையில் தெரிவிக்கப்பட்ட தரக்குறைவான வார்த்தைகளையும் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்கூட, 11-12-1996 அன்று நடந்த, ஆளுநர் மறைவையொட்டிய இரங்கல் கூட்டத்தில் இந்த வேண்டுகோளை வைத்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, 27-1-1997 அன்று அவையில் நான் கேட்டுக்கொண்டவாறு 25-3-1989 அன்றைய அச்சிட்ட நடவடிக்கைக் குறிப்புகளை, பத்தாவது பேரவையில் 26-3-1992 அன்று மாற்றி, இவையிவைதான் அன்று அவையில் உண்மையாக நடந்தது என்று கூறி, அப்பகுதிகளை இணைப்பாகச் சேர்த்து மறுபதிப்பாக வெளியிட்ட நடைமுறையைப் பின்பற்றி தாங்களும், நான் விளக்கியுள்ளவாறு எங்களைப் பற்றித் தவறாகத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை குறிப்பிலிருந்து நீக்குமாறும், நாங்கள் பல உண்மைகளைத் தெரிவித்து நீக்கப்பட்டதை நடவடிக்கைக் குறிப்பில் சேர்க்குமாறும் தங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,
(ஒம்.) சி. ஞானசேகரன், எம்.எல்.ஏ.



## இணைப்பு 2

**(224-ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)**

திரு. பரிதி இளம்வழுதி, எழும்பூர் தொகுதி பேரவை உறுப்பினர் மற்றும் பேரவைத் துணைத் தலைவர் 31-1-1997 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு அளித்த கடிதத்தின் நகல்

பெறுநர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்,
சட்டமன்றப் பேரவை,
சென்னை - 600 009.

மதிப்பிற்குரிய ஐயா,

27-1-1997 அன்று உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், கடந்த பேரவையில், மறைந்த ஆளுநர் பற்றி தெரிவிக்கப்பட்ட தரக்குறைவான குறிப்புகளை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அகற்றவேண்டும் என்றும், தன்னைப் போன்ற எதிர்க் கட்சி உறுப்பினர்கள், கடந்த பேரவையில் தாக்கப்பட்டபோதும், உண்மைக்கு மாறாக அவர்கள்தான் காவலர்களையும், மற்ற உறுப்பினர்களையும் தாக்கினார்கள் என்ற எண்ணம் ஏற்படும் வகையில் சில நாட்களின் நடவடிக்கைக் குறிப்புகள் பதிவு செய்யப்பட்டு வெளியிடப்பட்டன என்றும் தெரிவித்து, அவற்றையும் நீக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, இவ்வாறு முந்தைய அவையின் நடவடிக்கைக் குறிப்புகளை பத்தாவது பேரவையில் 26-3-1992 அன்று மாற்றிய முன்னுதாரணம் ஒன்று உள்ளது என்றும் குறிப்பிட்டார். அப்போது, எந்தெந்த பகுதிகளை நீக்கவேண்டுமென்று சொல்கிறீர்களோ அதுபற்றி எழுதிக் கொடுங்கள் என்று தாங்கள் தெரிவித்தீர்கள்.

கடந்த பேரவையில் இதுபோன்ற நடவடிக்கைகளால் நானும் நேரடியாகப் பாதிக்கப்பட்டேன் என்ற அடிப்படையில், அவையில் அன்று நான் தெரிவித்த கருத்துகளுக்கு வலு சேர்க்கும் வகையில், கடந்த பேரவையில் எதிர்க்கட்சிகளின் குரலைச் சகிக்கமுடியாத மனப்பான்மையால் எவ்வாறு நான் பாதிக்கப்பட்டேன் என்பதை எழுத்து மூலமாக விளக்கும் முகத்தான் கடந்த பேரவையில் நடைபெற்ற சில நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்களை இம்மனுவில் அளிக்க விரும்புகிறேன்.

அவையில், நியாயமான எனது தொகுதி பிரச்சினைகளைப் பற்றியும். என் கட்சியின் சார்பாக கொள்கைகளையும், என் கட்சித் தலைவர் மற்றும் கட்சியின் மீது சுமத்தப்பட்ட தவறான குற்றச்சாட்டுகளுக்கான பதிலை நான் எடுத்து வைக்க முடியாத நிலையில் தத்தளித்தேன் என்பதை பத்திரிகையாளர்கள் நன்கு அறிவர். அன்றைய ஆட்சியாளர்களுக்கு ஏற்பு இல்லாத குறைகளையும், குற்றச்சாட்டுகளையும் நான் எடுத்துக்காட்டிய போதெல்லாம், அப்பகுதிகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டன அல்லது வாய்ப்பு மறுக்கப்பட்டு பல நேர்வுகளில் நான் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டேன். மேலும், அவையில் நான் தெரிவித்த விளக்கங்கள் பதிவு செய்யப்படாமல், அவைத் தலைவர் நான் முறைகேடாக நடந்ததாகக் கூறியது மட்டுமே பல நாட்களில் பதிவு செய்யப்பட்டது. இது பொதுவாக கடந்த பேரவையில் காணப்பட்ட போக்கு என்றாலும்கூட, குறிப்பாக ஒரு சில நேர்வுகளைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

உதாரணமாக, 20-4-1993 அன்று திரு. திருநாவுக்கரசு அவர்கள் உரையாற்றிக் கொண்டிருந்தபோது ஆளும் கட்சித் தரப்பிலிருந்து ஓர் உறுப்பினர் தகாத வார்த்தை கூறியபோது பேரவை தலைவரேகூட அவ்வாறு குரல் எழுப்புவது தவறு என்று குறிப்பிட்டாலும் அவ்வுறுப்பினரை பெயர் குறிப்பிட்டு அவர் மீது நடவடிக்கை எடுக்காததைக் கண்டித்து, எதிர்க்கட்சி உறுப்பினர்களாக இருந்த நாங்கள் எங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த முயன்றோம். பேரவைத் தலைவர் அதற்கு இடமளிக்காமல் அவையை ஒத்திவைத்துச் சென்றதால், அனைவரும் அவையிலேயே அன்று இரவு தங்கி எங்கள் உணர்வை வெளிப்படுத்தினோம். மறுநாள் 21-4-1993 அன்று இதுபற்றி நாங்கள் எழுப்ப முனைந்தபோது அதற்கு வாய்ப்பளிக்காமல் எதிர்க்கட்சித் தலைவர் உட்பட எங்கள் அனைவரையும், காவலர்களைக் கொண்டு பேரவைத் தலைவர் வெளியேற்றினார். பேரவையிலிருந்து என்னை வெளியேற்றும்போது நான் காவலர்களுடன் மோதுவதாக உண்மைக்கு மாறாகத் தெரிவித்து அதைப் பதிவேட்டிலும் இடம்பெறச் செய்தார். எனினும், நான் தெரிவித்த மறுப்புகள் நடவடிக்கைக் குறிப்பில் இடம்பெறவில்லை. அவ்வளவு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களும் '(குறுக்கீடுகள்)' என்று மட்டுமே பதிவாகியுள்ளன.

மேலும், வெளியேற்றப்படும்போது மேற்குப்புற லாபியில் நானும், திரு. சி. ஞானசேகரன், திரு. பி.வி. இராஜேந்திரன் ஆகியோரும் சேர்ந்து **8 காவலர்களைத் தாக்கியதாகக் கூறி எங்கள் 3 பேர் மீது கிரிமினல்**



நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டுமென்று பேரவைத் தலைவர் கேட்டுக் கொண்டதையடுத்து, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 332 மற்றும் 34-ன் கீழ் நாங்கள் கைது செய்யப்பட்டோம். வெளியேற்றப்படும்போது நாங்கள் யாரையும் தாக்கவில்லை. மாறாக, நாங்கள்தான் தாக்கப்பட்டோம். எங்கள் நிலைமையை விளக்கிக் கூற எந்தவித வாய்ப்பும் அவையில் அளிக்கப்படவில்லை. திட்டமிட்டு எங்களைக் களங்கப்படுத்த வேண்டுமென்றும், மக்கள் முன் எங்களை இழிவுபடுத்த வேண்டுமென்றும் நமது பேரவை வரலாற்றிலேயே முதல்முறையாக அவை எல்லைக்குள் நடந்ததாகக் கூறப்பட்ட சம்பவத்திற்கு காவல் துறை மூலம் கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்றைய பேரவைத் தலைவர் உத்தரவிட்டார்.

நானும், திரு. சி. ஞானசேகரனும் 22-4-1993 அன்று நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டோம். 21-4-1993-லிருந்து 3 வருடம் கழிந்த நிலையிலும் அந்த ஆட்சி இருந்த 12-5-1996 வரையிலும் கடந்த ஆட்சியில் எங்கள்மீது குற்றப்பத்திரிகை இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. இதிலிருந்தே உண்மை எதுவும் இல்லாமல், அரசியல் நோக்கத்திற்காக இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டது என்பது தெளிவாகும். அன்று காவலர்கள்தான் எங்களைத் தாக்கினார்கள் என்று நாங்கள் கொடுத்த புகார் மீது நடவடிக்கை எடுக்கவேண்டாமென காவல் துறைக்கு பேரவைத் தலைவர் ஆணையிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

மற்றொரு சம்பவத்தில், 30-3-1995 அன்று வெளிநடப்பு செய்த காங்கிரஸ் உறுப்பினர்கள் லாபியில் காவலர்களைத் தாக்குவதாக அன்றைய பேரவைத் தலைவர் தெரிவித்து பதிவு செய்ய முற்பட்டபோது லாபியில் நடைபெற்ற சம்பவங்களை நேரிலிருந்து கண்ட நான் அவ்வாறு காவலர்கள் தாக்கப்படவில்லை என்ற உண்மையைப் பேரவையில் தெரிவித்தபோது நான் கூறியது எதுவும் பதியப்படாமல் (குறுக்கீடு) என்று மட்டுமே நடவடிக்கைக் குறிப்பில் பதிவு செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், கூச்சல்-குழப்பம் நிறைந்த அந்தச் சூழ்நிலையில் " லாபியில் சில உறுப்பினர்கள் காவலர்களைத் தாக்கியதை அவைக்குள்ளிருந்து " தான் பார்த்ததாகக் கூறி அவர்கள்மீது காவல் துறையில் புகார் கொடுப்பதாகவும் தலைவர் 31-3-1995 அன்று அறிவித்தார். லாபியில் உறுப்பினர்கள் காவலர்களைத் தாக்கியதை பேரவைத் தலைவர் இருக்கையிலிருந்து பார்ப்பது எவ்வாறு சாத்தியம் என்று புரியவில்லை.

அன்றைய பேரவைத் தலைவரின் கட்சி சார்பும், நடுநிலையின்மையும் இன்னும் பல்வேறு நேர்வுகளில் வெளிப்பட்டன.

அடிக்கடி எங்களை வெளியேற்றிவிட்டு ஒரே கூட்டத்தொடரில் இரண்டாவது முறையாக வெளியேற்றப்பட்டதால் கூட்டத் தொடர் முழுக்க நாங்கள் கலந்து கொள்ளக் கூடாது என ஆணையிடுவதும் அப்போதைய பேரவைத் தலைவரின் வழக்கமாக இருந்தது.

அவை நடவடிக்கைகளில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கலந்து கொள்ளாமல் தடுப்பதில் இருந்த ஆர்வத்தால் முதல்முறை வெளியேற்றும்போதே, அதை இரண்டாவது முறை எனக் கூறி, கூட்டத் தொடர் முழுவதும் நீக்கி வைத்தபின் யாராவது தவறை சுட்டிக்காட்டிய பின்னர் தனது தீர்ப்பினை திருத்தம் செய்துகொண்ட நேர்வுகளும் நடைபெற்றன. உதாரணமாக எனது நேர்வில்கூட **11-4-1994** அன்று அப்படி நிகழ்ந்தது.

31-12-1993 அன்று திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து அப்போது உறுப்பினராக இருந்த திரு. அ. செல்வராசன் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட கடிதத்தை நான் பேரவைத் தலைவருக்கு கொடுத்த பின்னரும், அன்று 69 சதவிகித இட ஒதுக்கீட்டுக்கு வழிவகை செய்யும் சட்டமுன்வடிவு அவையில் ஆய்வு செய்யப்பட்ட முக்கியமான விவாதத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் எனக்குப் பேச வாய்ப்பளிக்காது, அவருக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. நான் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேசுமாறு என்னைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் அனுமதியளித்துள்ளது என நான் தெரிவித்தும் அச்சட்ட முன்வடிவில் பேச எனக்கு அனுமதி அளிக்கவில்லை.

பொதுவாக சட்டமுன்வடிவின் மீது விவாதம் நடைபெறுகையில் ஒரே கட்சியின் சார்பில் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைப் பேச அனுமதிப்பது வழக்கமான ஒன்றுதான்.

என்னைப் பேச அனுமதிக்காததற்கு எதிர்ப்பு தெரிவித்து வெளிநடப்பு செய்கிறேன் என்றும், இடஒதுக்கீட்டுக் கொள்கையை எங்கள் கட்சி ஆதரிக்கிறது என்றும் கூறி நான் வெளிநடப்பு செய்தேன். எனினும் அச்சிட்ட நடவடிக்கைக் குறிப்புகளில் நான் 'வெளிநடப்பு செய்கிறேன்' என்று கூறியது மட்டுமே பதிவாகி உள்ளது. 'சட்டமுன்வடிவை ஆதரிக்கிறேன்' என்று கூறியது கூட நீக்கப்பட்டிருந்தது. எங்கள் கட்சிக் கொள்கை, அதுவும் அவர்களுக்கு ஆதரவான கருத்து கூட பதிவு செய்யப்படவில்லை. இதிலிருந்தே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மீது அப்பேரவைத் தலைவர் கொண்டிருந்த காழ்ப்புணர்ச்சி விளங்கும்.



19-3-1993 அன்று வரவு-செலவுத் திட்ட பொது விவாதத்தில் நான் பேசியபோது, அடுத்தடுத்து கிட்டத்தட்ட முதல்வர் உட்பட அனைத்து அமைச்சர்களும் மாறி மாறி 30 முறை வரை குறுக்கிட்டிருக்கிறார்கள். ஆனால் நான் 30 நிமிடம் பேசியதாகத் தலைவர் தெரிவித்தார். அப்போது என் கை, பிடித்து இழுக்கப்பட்டது. நான் இதைக் குறிப்பிட்டபோது அது பதிவாகாமல் "(திரு. இளம்வழுதி ஏதோ கூறினார்)" என்று மட்டும் அடைப்புக் குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்போதைய பேரவைத் தலைவர் "நானும் பார்த்தேன், ஏதோ கை உரசி இருக்கும்" எனக் கூறி சமாளித்துவிட்டார்.

அதேபோன்று **5-4-1994** அன்று சுகாதாரத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது ஒரு மர்ம நோயினால் பல குழந்தைகள் இறந்திருப்பதைச் சுட்டிக்காட்டி அதுபற்றிய எனது கவன ஈர்ப்பு இன்னும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்தபோது, அது எடுக்கப்படவில்லை என நான் தெரிவித்த செய்திகூட அன்றைய தினம் நீக்கப்பட்டது.

அதே நாளன்று, பஸ்ஸில் நடந்த வழிப்பறி தொடர்பான சிறப்புக் கவன ஈர்ப்பில், 'தமிழகத்தில் வழிப்பறி, கொலை, கொள்ளை போன்றவை அதிகரித்து விட்டன' என்று கூறியதை, குறிப்பிட்ட சம்பவம் பற்றி மட்டுமே பேசவேண்டும் என்று காரணம் காட்டி நீக்கினார். குறிப்பிட்டு குற்றச்சாட்டுகளைக் கூறினால், ஆதாரமின்றிப் பேசக் கூடாது, பத்திரிகைகளை வைத்துக் கொண்டு பேசக் கூடாது என்று கூறி அவை நீக்கப்படும். ஆனால், அவற்றிற்கு அமைச்சர்கள் அடிக்கடி குறுக்கிட்டு கூறும் பதில்கள் மட்டும் நடவடிக்கைக் குறிப்பில் இடம்பெறும். இதுவே வழக்கமாக இருந்து வந்துள்ளது.

11-4-1994 அன்று நெடுஞ்சாலையில் நடந்த வழிப்பறி சம்பவம் பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களாகிய நாங்கள் சட்டம்-ஒழுங்கு நிலைமை குறித்து தெரிவித்த பல கருத்துக்கள் நீக்கப்பட்டன. எனினும், அத்தகைய சம்பவங்களுக்கு காங்கிரஸ் மேலிடம்தான் காரணம் என அந்நாளைய முதல்வர் கூறியது அப்படியே நடவடிக்கைக் குறிப்பில் இடம்பெற்றுள்ளது. இதுகுறித்து ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பியபோது அனுமதிக்கப்படாமல் நான் வெளியேற்றப்பட்டேன். நான் எழுப்பிய பிரச்சினை இடம் பெறாமல் வெறும் '(குறுக்கீடு)' என்று மட்டுமே நடவடிக்கைக் குறிப்பில் உள்ளது.

பிரதான எதிர்க்கட்சியின் தலைவர் உண்ணாவிரதம் இருக்கிறார் எனக் கூறி **21-4-1994** அன்று நான் ஒரு கருத்தை அவையில் கூற

முற்பட்டபோது, அறிவிப்புக் கொடுக்காமல் பேசக் கூடாது எனக் கூறி எனக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அப்பிரச்சினை பற்றிக் குறிப்பிட நான் வாய்ப்புக் கேட்டபோது, நான் முறைகேடாக நடப்பதாகவும், அதையே வாடிக்கையாகக் கொண்டவன் என்பது போலவும்கூறி, அதை பேரவைத் தலைவர் குறிப்பில் பதிவு செய்துள்ளார். இதே பிரச்சினை பற்றி, முன்னதாக அந்த உண்ணாவிரதத்தை மிகக் கடுமையாக கொச்சைப்படுத்தி விமர்சனம் செய்து, ஒரு சட்டமுன்வடிவில் 19-4-1994 அன்று ஆளுங்கட்சிக்கு ஆதரவான ஓர் உறுப்பினர் (திரு. எஸ்.வி. சண்முகம்) பேசியது அனுமதிக்கப்பட்டு, அவை நடவடிக்கைக் குறிப்புகளில் இடம் பெற்றுள்ளது.

மேலும் 1-4-1994 அன்று ஒத்திவைப்புத் தீர்மானம் எடுக்கப்பட்டபோது முதலமைச்சர் தெரிவித்த ஒரு கருத்துக்கு நான் ஆட்சேபம் தெரிவித்தபோது அருகிலிருந்த திரு. எஸ்.வி. சண்முகம் என் கையைப் பிடித்து இழுத்துத் தாக்க முயன்றார். எனினும், பேரவைத் தலைவர் நான் அவரைத் தாக்க முயன்றதாகக் கூறி வெளியேற்றினார் ; பின்னர் மற்ற உறுப்பினர்கள் சிலர் என்னைத் தாக்கியதை, சுட்டிக்காட்டியபோது விசாரித்துக் கூறுவதாகக் கூறி மறுநாள் நான் என் விளக்கத்தைச் சொல்ல முனைந்தபோது அது பதிவாகாமல் வெளியேற்றப்பட்டேன். மேலும் நான் வெளியேறும்போது காவலர்களைத் தாக்க முற்படுவதாகவும் இட்டுக்கட்டிக் கூறி பேரவைத் தலைவர் பதிவு செய்தார். எனது விளக்கம் பதிவாகாமல் '(குறுக்கீடு)' என்று மட்டும்தான் நடவடிக்கைக் குறிப்பில் உள்ளது. ஆனால் சில நிமிடங்களுக்குப்பின் திரு. எஸ்.வி. சண்முகம் முதல் நாள் சம்பவம் பற்றித் தெரிவித்த, உண்மைக்கு மாறான கருத்து பதியப்பட்டுள்ளது.

மற்றொரு நேர்வில், 175 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு அரசு அளித்த அனுமதியை நீதிமன்றம் ரத்து செய்தது தொடர்பான ஒத்திவைப்புத் தீர்மானத்தில் 28-4-1993 அன்று பேசும்போது, 'இப்பிரச்சினை பற்றிய குற்றச்சாட்டும் ஆளுநரிடம் எங்கள் கட்சி அளித்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது' என்று நான் தெரிவித்த சாதாரண ஒரு கூற்று கூட அப்போதைய பேரவைத் தலைவரால் நீக்கப்பட்டது. ஆளுநரைக் களங்கப்படுத்தும் நோக்கம் எனக்கில்லை என நான் கூறிய விளக்கமும் எவ்விதக் காரணமும் இன்றி உடனே தலைவரால் நீக்கப்பட்டது. நடவடிக்கை குறிப்பில் "கவர்னரை இழுக்கிறார்", "கவர்னரை இழுக்கக் கூடாது (குறுக்கீடு) ஆளுநரின் நடவடிக்கைகளை இந்தப் பேரவையில் எந்த வகையிலும் இழுக்கக் கூடாது" என்று பேரவைத் தலைவர் கூறியது மட்டும் பதிவாகியுள்ளதால்,



இதனைப் படிப்பவர்கள் நான் ஏதோ ஆளுநரை விமர்சித்தது போன்று தவறான எண்ணம் கொள்ள அதிக வாய்ப்புள்ளது. அத்தகைய தோற்றம் உருவாகும் வகையில் நடவடிக்கைக் குறிப்பின் ஒரு பகுதி மட்டும் நீக்கப்பட்டுள்ளது. அதே நாளில், 'அரசு ஊழல் குற்றச்சாட்டுகளில் மூழ்கி இருக்கிறது' என்று நான் கூறியது நீக்கப்பட்டது. ஊழல் செய்துள்ளது என்று கூட நான் கூறவில்லை. 'குற்றச்சாட்டு' இருக்கிறது எனக் கூறியதே கூட நீக்கப்பட்டது.

ஆளுநரைப் பற்றிப் பேசக் கூடாது எனக் காரணங்காட்டி நான் தெரிவித்த கூற்றை நீக்கியதே பேரவைத் தலைவர் பிற்காலத்தில் அரசின் கைப்பாவையாக, 19-4-1995 அன்றும் 26-4-1995 அன்றும் பேரவை விதி 287-ஐப் போர்வையாகப் பயன்படுத்தி, ஆளுநரின் நடத்தை பற்றி விமர்சிக்கக் கூடாது என்ற விதி 92(7)-ஐத் தளர்த்தி ஆளுநர் பற்றி பல்வேறு குற்றச்சாட்டுக்களையும், அவதூறுகளையும் நடவடிக்கைக் குறிப்பில் பதிய வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

மாநில முதலமைச்சரைக் கலந்தாலோசித்து ஆளுநரை நியமிக்கும் முறையை சட்டபூர்வமாக்க, அரசமைப்புச் சட்டத்தின் 115-வது பிரிவைத் திருத்த வேண்டுமெனவும், தமிழக ஆளுநரைத் திரும்பப்பெற்று வேறு ஒருவரை, முறையாக நியமனம் செய்ய வேண்டுமெனவும், மத்திய அரசைக் கோரும் தீர்மானம் 26-4-1995 அன்று பேரவையில் முந்தைய அரசால் நிறைவேற்றப்பட்டது.

அத்தீர்மானத்தின் மீது நான் பேசுகின்றபோது, அன்றைய ஆளும் கட்சிக்கு ஆதரவாக செயல்பட்ட ஓர் உறுப்பினர் என்னைப் பார்த்து கையைக் காண்பித்து சத்தமிட்டார். அதை நான் சுட்டிக்காட்டியபோது, அந்த உறுப்பினர் அவ்வாறு செய்தது தவறு என்று குறிப்பிட்ட முன்னாள் பேரவைத் தலைவர், அதுகுறித்து நான் பேசியது அனைத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டார். தொடர்ந்து என்னைப் பேச அனுமதிக்காமல் அடுத்த உறுப்பினரை உரையாற்ற அழைத்தார். நான் இன்னும் பேசி முடிக்கவில்லையென்று கூறியும், என்னைப் பேச அனுமதிக்கவில்லை. அப்போது 'நீங்கள் முழுமையாகப் பேசவிடாததைக் கண்டித்து வெளிநடப்புச் செய்கிறேன்' என்று கூறி வெளிநடப்புச் செய்தேன். ஆனால், அச்சிடப்பட்டுள்ள அன்றைய நடவடிக்கைக் குறிப்பைப் பார்த்தால், அடைப்புக் குறிகளுக்குள் நான் வெளிநடப்புச் செய்ததாக மட்டுமே உள்ளது. வெளிநடப்பு செய்வதற்கு முன்பு நான் தெரிவித்தவை அனைத்தும் நீக்கப்பட்டுள்ளன. இவற்றைப் படிக்கும்போது, காரணம் ஏதுமில்லாமல் நான் வெளிநடப்பு

செய்துவிட்டதுபோன்ற ஒரு தோற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆனால். உண்மை என்னவெனில் முழுமையாக என் கருத்துக்களைத் தெரிவிக்க அனுமதிக்கப்படவில்லையென்பதனால் நான் வெளிநடப்புச் செய்தேன்.

**4-11-1994** அன்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானம் மற்றும் கவன ஈர்ப்பு அறிவிக்கை பற்றி தகவல் கோரியபோது, அதனை அனுமதிக்காமல் எங்களை வெளியேற்றியதோடு, காவலர்களோடு நான் மோதியது போன்ற ஒரு எண்ணத்தையும் உருவாக்கி தன் வார்த்தைகள் மூலம் நடவடிக்கைக் குறிப்பில் பதியச் செய்தார். எங்கள் 'தகவல் கோரல்' கூடப் பதிவாகாமல் '(குறுக்கீடு)' என்று மட்டுமே குறிப்பேட்டில் உள்ளது. திரு. ஜி. பழனிசாமி அவர்கள் தன் கோரிக்கையை வைக்க முனைந்தபோது அவர் "காட்டுமிராண்டித்தனமாக" நடந்து கொண்டதாகக் கூறப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

மற்றொரு நேர்வில், **8-11-1994** அன்று நான் பேசிக் கொண்டிருந்தபோதே, அடுத்த உறுப்பினரைத் தலைவர் அழைத்ததால், அமைச்சர்களின் குறுக்கீடு அதிகமாக இருந்ததைச் சுட்டிக்காட்டி "ஆளும் கட்சிக்கே அதிகமாக வாய்ப்பு கொடுக்கிறீர்கள்" என்று நான் கூறியது நீக்கப்பட்டது. நான் முடிப்பதற்குள் அடுத்த உறுப்பினரை அழைத்தது நியாயமே இல்லை என நான் கூறியவுடன் "உட்காருகிறீர்களா அல்லது வெளியேற்றவா" என்ற வகையில் தலைவர் மிரட்டினார். அதன்பின் நிகழ்ந்த வாக்குவாதத்திற்குப் பிறகு நான் வெளியேற்றப்பட்டு, அக்கூட்டத் தொடர் முழுவதும் தற்காலிகமாக நீக்கி வைக்கப்பட்டேன். இதனால், அக்கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களில், சட்டமன்ற நிகழ்ச்சிகளில் என்னால் கலந்துகொள்ள இயலவில்லை. சட்டமன்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்பது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் அடிப்படை உரிமை. ஆனால், ஏதோ ஒரு காரணங்காட்டி இருந்த ஒருசில எதிர்க்கட்சி உறுப்பினர்களை வெளியேற்றுவதும் அடுத்த முறை வெளியேற்றும்போது, இரண்டு தடவை எனக் கூறி, எஞ்சிய நாட்களுக்குத் தற்காலிகமாக நீக்கிவைப்பது என்பது வழக்கமாக இருந்தது.

**17-3-1995** அன்று நான் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் பங்குகொண்டு பேசும்போது, உப்பிலியாபுரம் மற்றும் இராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர்கள் தாக்கப்பட்டிருப்பது குறித்துப் பேசி, இத்தாக்குதல் குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என வினவியபோது, முன்னாள் பேரவைத் தலைவர் "இப்படி ஒவ்வொன்றாக



போய்க் கொண்டிருந்தால் சரியாக இருக்காது இதெல்லாம் அவைக்குறிப்பிலே இருக்காது" என்று நான் பேசிய அந்தப் பகுதியை முழுமையாக நீக்கிவிட்டார். தொடர்ந்து இது பற்றிப் பேச என்னை அனுமதிக்காது, அடுத்து உறுப்பினரையும் பேச அழைத்தார்.

இதிலிருந்து முக்கியமானப் பிரச்சினைகளைப் பற்றிப் பேச எனக்கு அனுமதி அளிக்கப்படவில்லையென்பது தெளிவாகப் புரியும். அச்சிடப்பட்ட நடவடிக்கைக் குறிப்பைப் பார்க்கும்போது நான் பேசியது முழுவதுமாக நீக்கப்பட்டிருப்பதைக் காண முடிகிறது. எனவே, முக்கியமான பிரச்சினை பற்றி நான் பேசவேயில்லையென்பது போன்ற ஒரு தோற்றம்தான் மக்களிடையே உருவாகும்.

**4-4-1995** அன்று நான், டான்சியில் நடைபெற்ற கொள்ளை பற்றி பேச முற்பட்டபோது, நான் பேசியவை நீக்கப்பட்டு, என் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றே நான் அவ்வாறு பேசுவதை அனுமதிக்க முடியாது என்று முன்னாள் பேரவைத் தலைவர் கூறியதையடுத்து, 'இங்கே இருந்தால், நீங்கள் நடவடிக்கை எடுத்துவிடுவீர்கள், நானே போகிறேன்' என்று கூறிவிட்டு வெளிநடப்புச் செய்தேன். நான் இவ்வாறு கூறியதும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. ஒரு தவறைச் சுட்டிக்காட்டி, அப்பிரச்சினை பற்றி அவையில் எழுப்பினால், அவற்றைக் கூர்ந்து கவனித்து கேட்டு உரிய விளக்கம் அளித்து நடவடிக்கை எடுப்பதற்கு மாறாக, அவற்றைப் பற்றியே கூற அனுமதிக்காமல் இருந்ததும், மீறி கூற முற்படும்போது அவற்றை அவைக்குறிப்பிலிருந்து நீக்கியதும்தான் முன்பு நடைமுறையாக இருந்தது. அன்று நான் டான்சி ஊழல் பற்றி எழுப்பிய பிரச்சினை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

அதேபோல், **28-2-1996** அன்று மதுரை சுடுகாட்டு ஊழல் பற்றி நான் பேசத் தொடங்கியபோதே அனுமதி மறுக்கப்பட்டு அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டேன். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுபவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுவதும், இல்லாவிடில் அவர்கள் வெளியேற்றப்படுவதும் ஒரு தொடர்கதையாகவே இருந்து வந்திருக்கிறது.

இவ்வாறு பல்வேறு நேர்வுகளில் அப்பேரவைத் தலைவர் ஒருதலைபட்சமாக ஜனநாயக நெறிமுறைகளுக்கு மாறாக நடந்து கொண்டுள்ளார். நான் மேலே ஒருசில உதாரணங்களின் மூலம் குறிப்பிட்டதுபோன்று பல முறை நடவடிக்கைக் குறிப்புகள் எங்களுக்குப் பாதகமாக, நாங்கள் பேசியதை இருட்டடிப்புச் செய்து பதியப்பட்டுள்ளது என்று நான் அவரிடம் முறையிட்டு நியாயம் பெற வாய்ப்பே

கிடைக்கவில்லையென்பதைத் தாங்களும் அறிவீர்கள் ; உறுப்பினர்களும் அறிவார்கள்; பத்திரிகைகளும் அறியும். நாடும் நன்கு அறியும். எனவே, நீதிக்கும், நடுநிலைமைக்கும் முரணாக, தவறு செய்வதாகக் கருதும்போது, ஆளுங்கட்சியினரேயானாலும் அதைத் தட்டிக் கேட்கும் மன வலிமைக்கு எடுத்துக்காட்டாக உள்ள தாங்கள்தான் இவ்வாறு தவறாகப் பதியப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளை முறைப்படுத்தி, தக்க மாற்றங்களைச் செய்து எனக்கு நீதி வழங்க வேண்டும்.

நான் 9, 10 மற்றும் இந்த 11-வது பேரவைகளில் தொடர்ந்து உறுப்பினராக இருந்து வருகிறேன். முந்தைய நாட்களில் அவை நடவடிக்கைக் குறிப்புகளை மாற்றுவதற்கு வேறு எங்கும் முன்னோடி (Precedent) இல்லாவிட்டாலும், சென்ற 10-வது சட்டமன்றப் பேரவைத் தலைவர் ஒரு முன்னோடி வகுத்துக் கொடுத்துள்ளார். 25-3-1989-ஆம் தேதிய நடவடிக்கைக் குறிப்புகளை, இணைப்புடன் அடிக்குறிப்போடு மீண்டும் மாற்றி மறு பதிப்பாக அச்சிட அன்றைய பேரவைத் தலைவர் 26-3-1992 அன்று ஆணையிட்டு அது நிறைவேற்றப்பட்டது. இதில் உண்மை என்னவென்றால், 25-3-1989 அன்று நடைபெற்ற சம்பவங்கள் உள்ளது உள்ளபடியே, 9-வது சட்டமன்றப் பேரவையில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது. ஆனால், 26-3-1992 அன்று ஆணையிடப்பட்டு திருத்தப்பட்ட 25-3-1989-ஆம் தேதிய நடவடிக்கைக் குறிப்பில், உண்மைக்குப் புறம்பான, ஒருதலைபட்சமான கருத்துக்களே இணைப்பாகச் சேர்க்கப்பட்டு திருத்திய வெளியீடாக அச்சிடப்பட்டுள்ளது. அவர்கள் கூறுவது போன்ற சம்பவங்கள் 9-வது பேரவையில் நடக்கவில்லை என்ற மறுப்பை 25-3-1992 அன்று நான் தெரிவித்தபோது, அனுமதியின்றிப் பேசமுடியாது எனக்கூறி வெளியேற்றப்பட்டேன். என் கருத்து பதிவு செய்யப்படவில்லை. எனினும், அதே நாளன்று செய்தி, சுற்றுலா, தமிழ்-வளர்ச்சி, பண்பாடு மானியக் கோரிக்கை விவாதத்தில் துளியும் சம்பந்தமின்றி ஆளுங்கட்சி உறுப்பினர் திரு. எம். பூராசாமி அவர்கள் 25-3-1989 அன்று முதல்வர் கலைஞர் அவர்கள் அன்றைய எதிர்க்கட்சித் தலைவரைத் தாக்கியதாக அப்பட்டமான பொய்ச் செய்தியைத் தெரிவித்தார். அவர் மேலும் தனிப்பட்ட முறையில் கேவலமாக விமர்சனம் செய்து நீக்கப்பட்டாலும், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தாக்கினார் என்பது வேண்டுமென்றே நீக்காமல் விடப்பட்டுள்ளது. இதில் வினோதம் என்னவென்றால், அவ்வுறுப்பினர் ஒன்பதாவது பேரவையில் உறுப்பினராகவே இல்லை என்பதுதான். இவ்வாறு 25 மற்றும் 26 மார்ச்



1992 அன்று உண்மைக்கு மாறான, தவறான கருத்துக்கள் நடவடிக்கைக் குறிப்பில் ஏற்றப்பட்டுள்ளன.

ஒன்பதாவது பேரவையின் அச்சிட்ட நடவடிக்கைக் குறிப்புகளை பத்தாவது பேரவையின் தலைவர் 26-3-1992 அன்று மாற்றி இணைப்புடன் வெளியிட்டது முன்னோடியாகக் கொள்ளத்தக்கதல்ல என்பதை நான் நன்கு உணர்ந்திருந்தாலும், இழைக்கப்பட்ட அநீதியைச் சீர் செய்யும் வகையில், 27-1-1997 அன்று திரு. ஞானசேகரன் அவர்கள் தெரிவித்தவாறும், நான் இம்மனுவில் சுட்டிக்காட்டியுள்ளவாறும், எங்கள் மீது தவறான அபிப்பிராயம் ஏற்படும் வகையில் உண்மைக்கு மாறாக பதியப்பட்ட கருத்துக்களை நீக்கியும், நாங்கள் கடந்த அவையில் பேசி நீக்கப்பட்ட உண்மைகளைக் குறிப்பேட்டில் சேர்த்தும் ஆணையிடுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,
(ஒ-ம்.) பரிதி இளம்வழுதி,
எம்.எல்.ஏ.,

## இணைப்பு 3

*(224-ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

On 27-1-1997 while participating in the debate on the Motion of Thanks to the Governor's Address, Hon. Member Thiru C. Gnanasekaran, representing Vellore Constituency pointed out that in the previous Assembly, denigrating references about the former Governor late Dr. M. Channa Reddy were recorded in the proceedings and requested me to expunge such portions from the Debates dated 19-4-1995 and 26-4-1995.

2. He also outlined the incidents that happened in the Western Lobby on 21-4-1993 and stated that contrary to truth it was recorded in the Official Report that Thiru Parithi Ilamvazhuthi and himself had assaulted the Watch and Ward staff and criminal action was initiated for the alleged attack inside the precincts of the House.

3. He also cited certain other incidents, which he said were recorded falsely to depict them as indulging in violence and requested that such remarks also be expunged from the Debates.

4. Thiru Parithi Ilamvazhuthi, Member from Egmore Constituency and also the Hon. Deputy Speaker supplemented the statement made by Thiru C. Gnanasekaran. He pointed out that Members belonging to the Opposition were prevented from having their say and stated that while they were assaulted by the Watch and Ward staff, the records were prepared in such a way as to show them as the assailants.

5. He also referred to some other instances and pointed out that many of their explanations and remarks were expunged and they were evicted from the House many a time.

6. Hon. Chief Minister then rose up to say that the issues raised by the two Members were big issues and that the late Dr. M. Channa Reddy was a great friend of Tamil Nadu and hailed by its people. He made no difference between Tamil Nadu and Andhra Pradesh and always considered the interests of Tamil Nadu both in his words and actions. Hence, as a mark of respect to the departed leader and to

set an example in consonance with the culture and tradition of Tamil Nadu, he would request the Chair to examine in-depth whether those derogatory portions made against the former Governor Dr. M. Channa Reddy could be expunged based on the views expressed by the two Hon. Members.

7. Regarding my query as to which rule could empower me to make such alterations, Thiru C. Gnanasekaran stated that the previous Speaker had left a precedent when he had given a ruling on 26-3-1992 altering the proceedings of the IX Assembly dated 25-3-1989.

8. Then I asked Thiru C. Gnanasekaran and Thiru Parithi Ilamvazhuthi to give it in writing, detailing the references they require to be expunged so as to enable me to give my ruling later. Accordingly, they have given the details in writing on 31-1-1997.

9. In their letters, they have mentioned several instances to support their argument that the Opposition Members were prevented from making allegations even with evidence and many a time their remarks were expunged, while at the same time, many allegations, aspersions etc. cast against them were allowed to remain in the records. They have also alleged in their letters that their refutals also have not been recorded on many occasions and have only been shown as "(Interruptions)". Further, observations were made by the then Speaker and others which depicted them in poor light as being engaged in violent behaviour and cases had also been foisted on them for instances that allegedly happened within the precincts of the House.

10. Detailing cases of selective discrimination against Opposition Members, they had requested that derogatory references against the then Governor as well as themselves which are contrary to and completely devoid of truth be expunged from the Official Report of the proceedings of the Tenth Assembly and the true statements made by them which had earlier been expunged be included.

11. They had cited the precedent of the ruling given by the previous Speaker on 26-3-1992 ordering printing of a revised edition of the proceedings dated 25-3-1989 along with 9 foot-note and an appendix



containing speeches made in the Tenth Assembly on 25th and 26th March 1992 regarding the incidents which were stated to be the happenings in the House on 25-3-1989, and his ruling thereon.

12. Before acting on their request, I had to satisfy myself first whether I have powers to expunge, alter or modify the Official Reports of proceedings of the previous House and whether the precedent quoted by them could be followed.

13. The Lok Sabha Secretariat and other State Legislatures were addressed to ascertain whether there was any provision in their Rules or precedents for effecting alteration/modification or expunction in the approved Official Report of proceedings of an earlier House by a House subsequently constituted. Replies have been received from Lok Sabha Secretariat and 25 State Assemblies. The Lok Sabha Secretariat and all other State Assemblies excepting West Bengal Legislature have stated that there is no provision in the Rules nor there a precedent for effecting such alteration or revision.

14. The West Bengal Legislative Assembly Secretariat had stated that though there is no provision in their Rules, there had been two precedents.

15. In one case, on 30-9-1986, a Motion which had not been moved had been discussed and voted upon along with similar motions on the same subject moved by other Members. The irregularity was noticed later. On 28-3-1987, i.e. in the next session of the House, a motion was therefore moved from the Chair that the proceedings of the House so far as they related to the unmoved motion be expunged. The motion was then adopted by the House and the portions relating to the unmoved motion were expunged.

16. In another case, on 28-2-1987 (Ninth Assembly), an Obituary reference was made in the House on the demise of a leader. Later, on noticing a factual error in the details given, the Speaker of the Tenth Assembly on 10-3-1988 had sought and secured consent of the House for carrying out factual correction in the proceedings dated 28-2-1987 and tendering apologies to the family of the deceased leader. In both

these cases, there were no incidents which were disputed, nor was there any accusation of partisan attitude against the Speaker of the West Bengal Legislative Assembly. There is, therefore, no similarity between this and the publication of revised edition of proceedings dated 25-3-1989 along with a foot-note and appendix containing references made in the subsequent House on 25-3-1992 and 26-3-1992 regarding the incidents which were stated to be the happenings in the House on 25-3-1989.

17. The Lok Sabha has informed that there is no precedent for alteration, modification or expunction of proceedings of an earlier House by a House subsequently constituted. When I searched for a precedent wherein a Privilege matter dealt with by the previous House has been re-considered and modified by the subsequent House, the following case reported in Kaul & Shakdher's 'Practice and Procedure of Parliament' has been brought to my notice.

"On 18th November 1977, a Motion was adopted by the House referring to the Committee of Privileges a question of breach of privilege and contempt of the House against Shrimati Indira Gandhi, former Prime Minister and others regarding obstruction, intimidation, harassment and institution of false cases by Shrimati Indira Gandhi and others against certain officials who were collecting information for answer to a certain question in the House during the previous Lok Sabha.

The Committee of Privileges were of the view that Shrimati Indira Gandhi had committed a breach of privilege and contempt of the House by causing obstruction, intimidation, harassment and institution of false cases against the concerned Officers who were collecting information for answer to a certain question in the House. The Committee recommended that Shrimati Indira Gandhi deserved punishment for the serious breach of privilege and contempt of the House committed by her but left it to the collective wisdom of the House to award such punishment as it may deem fit.

On 19th December 1978, the House adopted a motion resolving that Shrimati Indira Gandhi be committed to jail till the prorogation of the House and also be expelled from the membership of the House for the serious breach of privilege and contempt of the House committed by her.



On 7th May 1981, the Seventh Lok Sabha, however rescinded the motion adopted by the Sixth Lok Sabha on 19th December 1978 by adopting the following resolution

Whereas the Sixth Lok Sabha by a Resolution adopted on 19th December 1978, agreed with the ...recommendations and findings of the Committee (of Privileges) and on the basis thereof held Shrimati Indira Gandhi, Shri R.K. Dhawan and Shri D. Sen, guilty of breach of privilege of the House and inflicted on them the maximum penalty possible in violation of the principle of natural justice.

Now, therefore, this House resolves and declares that :

a) the said proceedings of the Committee and the House shall not constitute a precedent in the law of Parliamentary privileges ;

b) the findings of the Committee and the decision of the House are inconsistent with and violative of the well-accepted principles of the law of Parliamentary privilege and the basic safeguards assured to all and enshrined in the Constitution ; and

c) Smt. Indira Gandhi, Shri R.K. Dhawan and Shri D. Sen were innocent of the charges levelled against them.

And accordingly this House :

rescinds the resolution adopted by the Sixth Lok Sabha on the 19th December 1978."

18. Even in this case, the VII Lok Sabha had passed a resolution saying that Smt. Indira Gandhi was innocent and only rescinded the motion adopted by the VI Lok Sabha committing her to jail and disqualifying her from membership and never attempted to expunge, modify or alter the proceedings of the earlier House. Hence, it is obvious that this could not be considered as a precedent.

19. In the Tenth Assembly on 25-3-1992, Thiru T.M.Rengarajan stated that in the Official Report of the proceedings dated 25-3-1989 pertaining to the Ninth Assembly, some incidents have been wrongly

recorded and requested the Speaker to remove such portions from that day's proceedings. Thiru T.M. Rengarajan was not a Member of the Ninth Assembly. The then Speaker who ordered publication of revised edition of proceedings dated 25-3-1989 with additions, was also not a Member of the Ninth House.

20. He has quoted May's 'Parliamentary Practice' and Halsbury's 'Laws of England' in his ruling.

In my opinion, there is no need to refer those books as they apply only to British Parliament created under the British Constitution. As you are all aware, the British Constitution is an unwritten one and everything is based on precedents, practices and conventions. Even those books do not contain any provision for alteration of proceedings of an earlier House by a House subsequently constituted.

21. According to me, they are all irrelevant because as in other Legislatures in India, in the Tamil Nadu Legislative Assembly Rules also, there are specific provisions regarding Official Report of the Proceedings.

Rule 280 of the Tamil Nadu Legislative Assembly Rules clearly says that on Official Report of the proceedings of the Assembly shall be published under the supervision of the Secretary and shall be made available to every Member and specifically states that such publications shall be deemed to be under the order of Hon. Speaker under Rule 283.

Our rules do not empower any Speaker to alter/modify/expunge any part of the proceedings approved by an earlier Speaker. I would go even further and say that the same Speaker who has approved a day's proceedings cannot himself alter it later.

22. Relevant portions of proceedings are sent to Members and Ministers concerned daily and three days' time is given to return the same after making only verbal corrections, without altering the tone and tenor of the speeches. If the proceedings are not returned within 3 days, after making the editing required and after getting the orders of the Speaker as also the Deputy Speaker, final proceedings are printed, published and distributed to all the Members, Departments of



Secretariat, Universities, etc. In addition, a copy of the uncorrected version of each day's proceedings is being kept in the Legislature Library the next day to enable the Members to go through the proceedings and if they find any variation, they could very well raise it on the floor of the House, as per rules. Thus, once the proceedings are approved by the Hon. Speaker and Deputy Speaker and printed and published, alteration, modification or expunction in the Official Report could not be contemplated.

23. In a Court of Law, when a Judge has no jurisdiction and powers to try a particular case, *prima facie* it is rejected on the ground that the Court has no jurisdiction or powers and the merits of the case, however strong, are never gone into. The same analogy applies here also. When the Speaker has no powers or authority to alter/modify/expunge any portion of the previous Assembly's proceedings, it is futile to go into the merits of the case as to whether there is any justification in changing the proceedings.

24. As Speaker, I cannot include even admitted facts in the relevant proceedings now. For example, most of the Members of the X Assembly had prostrated before the Chief Minister after oath of affirmation on 1st July 1991 inside the House. Even the then Speaker and Deputy Speaker immediately after election and before occupying the Chair had also prostrated before the Chief Minister inside the House on 3-7-1991. I found this information from all newspaper reports and this fact has not been disputed by any Member, much less the then Speaker. These admitted facts have not formed part of the relevant proceedings that had been published. I can emphatically say that this is not a factual record. Still I have to hold that even in the case of admitted facts which have not been recorded in the proceedings, the succeeding Speaker cannot attempt to incorporate such facts in the proceedings already approved by the previous Speaker.

25.When Thiru Parithi Ilamvazhuthi, who was present on 25-3-1989, rose to speak on the issue on 25-3-1992, he was not allowed to speak, and the utterances made by him were recorded only as 'Interruptions' in as many as ten times and later he was sent out of the House, which could be seen from the Official Report of the proceedings.

26. Even assuming that the proceedings of the House dated 25-3-1989 did not reflect the true deliberations or incidents of the House, the Speaker of the X Assembly had no authority to alter/modify or expunge the proceedings approved by the previous Speaker Thiru. Tamizhkudimagan.

27. I am firmly of the view that the proceedings of the Legislature and Parliament which are vital and valuable for democracy should be treated with greatest respect. If subsequent Speakers are allowed to alter the proceedings approved by the previous Speaker, then all the sanctity of the proceedings of the Legislatures and Lok Sabha will come to nought.

28. As there is no provision in the Tamil Nadu Legislative Assembly Rules framed under the Constitution to alter/modify or expunge the proceedings, of an earlier House by the House subsquently constituted, I hereby order cancellation of the appendix included in the revised edition of proceedings dated 25-3-1989 which were published on the order of the previous Speaker in his ruling dated 26-3-1992.

29. Since it is practically not possible to collect all the copies of the revised publication of proceedings, dated 25-3-1989 printed with appendix as per the orders given by the then Speaker on 26-3-1992, the copies already distributed need not be withdrawn and as far as the House is concerned, I order that the appendices in all the copies of the Debates available with the Assembly Secretariat be destroyed and the asterisk marks and foot-notes printed in that revised publication also be struck off.

30. In the light of my ruling that the succeeding Speaker cannot alter the proceedings of the House which had been approved by the earlier Speaker, it may be asked whether it would be proper for me to order the destroyal of the additions made in the proceedings dated 25-3-1989. As I have said earlier, no such precedent has occured either in our Parliament or in State Legislatures. As the Speaker of this august body, I feel that Tamil Nadu should not set a bad precedent which can be quoted either



in this House or in other State Legislatures in India. It is, therefore, after good deal of consideration that I am ordering the removal of all the additions made to the proceedings dated 25-3-1989. Nobody should therefore feel that I have expunged or modified or altered anything in the proceedings of the previous House. I have no power to do so. The references made in the House on 25-3-1992 and 26-3-1992 would remain in the respective days' proceedings. I have just restored the proceedings dated 25-3-1989, which were modified contrary to the Rules, to its original state.

31. To avoid such unsavoury incidents in future, I suggest that the Rules Committee could include a provision in the Tamil Nadu Legislative Assembly Rules that proceedings once approved and published under the authority of a Speaker should not be altered/modified or expunged by the same Speaker later, much less the Speaker/Speakers who follow.

32. The Members have requested me to expunge the derogatory remarks recorded in the proceedings against the former Governor late Dr. M. Channa Reddy. As I have earlier stated, on 27-1-1997 Hon. Chief Minister requested me to examine in-depth whether the derogatory portions made against the Governor could be expunged. It is rather unfortunate and shameful to note that disparaging and indecent remarks had been made against the then Governor after suspension of the Assembly Rules on 19-4-1995 and 26-4-1995. For the first time in the history of this House, Rule 287 of the Tamil Nadu Legislative Assembly Rules was invoked to suspend Rule 92 (vii) which specifically prohibits references about the conduct of the Governor in the speeches made in the House. Though initially I intended to quote a few lines just to indicate the level to which this august House had been pushed to in the last few years, I refrained from that as I do not want those derogatory remarks to be recorded once again.

33. The Governor, being the Head of the State under Article 154 of the Constitution of India, has got powers under Articles 174, 175 and 176 to summon, prorogue and dissolve the Legislature and the right to address and send messages to the House. He makes a special

address to the House at the commencement of the first session after each general election and at the commencement of the first session of each year. He is a part of the Legislature.

34. Though the Governor and the Chief Minister may not have cordial relations, the institution of Governor has to be shown all respect and honour. I am not prepared to discuss the difference of opinion between the then Chief Minister and the Governor. But, I am sorry to say that the Legislative Assembly Secretariat which is supposed to be neutral and headed by a Speaker who should be neutral and non-political during his tenure, had systematically ignored and insulted the Governor on so many occasions. Whatever be the difference between the Governor and the Executive, the Legislature should be neutral. The Speaker should not take sides with the Executive either inside the House or in the administration of the Secretariat. But in the last Assembly, the Speaker has not only accorded permission to relax the Tamil Nadu Legislative Assembly Rules to accuse the Governor inside the House, but even administratively allowed many violations to take place. With regard to Legislative Assembly Secretariat, I understand that in at least 19 cases promotion files have not been sent to Governor deliberately, even though the Tamil Nadu Legislative Assembly Secretariat Service Rules specifically provide that for such posts the approval of the Governor is necessary and orders on promotion were issued. If I take administrative action, many of the Officers and staff would be reverted. But, I do not want to do so on humanitarian grounds.

35. To cap it all, the most unfortunate and tragic aspect of the then Speaker's action is that he had ordered removal of the photograph of the Governor from the Legislature Diary of 1993 after its binding. In the subsequent years (1994, 1995 & 1996) also, the photographs did not find a place in the Legislature Diaries though it is the usual custom to include the photograph of the Governor in the Government and Legislature Diaries. The non-inclusion of the Governor's Photograph in the Legislature Diary was a totally irresponsible and vindictive action.

36. **As Speaker of the subsequent House, I have no powers to alter/modify or expunge the proceedings which had been approved by the previous Speaker and I cannot, therefore, order expunction**



**of such proceedings even though they contain disparaging remarks made against the Governor.**

37. **The only redressal would be, for the House, to pass a resolution, if it so desires, expressing its disapproval, condemnation and regret for the recording of indecent and denigrating references against the Governor. It may also say that the previous House has caused irreparable damage to the image of our Assembly which is one of the model Assemblies in this country.**

38. **To obviate recurrence of such unconstitutional, unethical and indecent debates and recordings against the Governor in future, another Rule should be incorporated in the Tamil Nadu Legislative Assembly Rules stating that " Under no circumstances the conduct of the Governor who is the Head of the State and also part of the House, be discussed in the House by relaxing Rule 92 (vii)".**

39. Hon. Members also requested that the relevant portions depicting them in poor light as being engaged in violent behaviour be suitably altered. I find from the debates and other records that in an attempt to establish the above-mentioned allegation, criminal cases have been foisted against them u/s 332 r/w Sec. 34 IPC for the alleged attack on the Watch and Ward staff in the Western Lobby on 21-4-1993. But I found that no concrete case has been made out against them. Even if the then Speaker believed that a criminal act has been committed through the assault on the Watch and Ward staff, it was perfectly within his powers to initiate action against them as the alleged incident had happened within the walls of the House or the same could have been done by passing a motion in the House or, at least the matter could have been referred to the Privileges Committee of the House for its decision about the nature of punishment for the alleged incident, if proved. But the then Speaker had surrendered his authority to the Executive by asking the Commissioner of Police to take action on an incident alleged to have happened in the House. The two members were arrested immediately in the evening and when they were taken

[1997 ஏப்ரல் 29

before the Magistrate, though the Members did not apply for bail the Magistrate had let them off saying that there was no material to remand them. This was an insult to the House and the Speaker himself. Naturally, it makes one believe that the case had been foisted to sully the image of the Opposition Members. It is interesting to note that charge-sheets had not been filed even after a lapse of three years though the same Government was in power. This was the first occasion in the Assembly when the power to proceed against the members for actions inside the House was surrendered to the Police Department.

40. It is really regrettable to note that a complaint made on the direction of the then Speaker of the House has been treated with contempt by a Judicial Magistrate and the learned Judge rightly did so saying that there was no evidence to support the complaint.

**41. From the evidence available and based on my experience as a criminal lawyer for the past 40 years, I find that no case has been made out against Thiru. C. Gnanasekaran and Thiru. Parithi Ilamvazhuthi and they were falsely implicated and that they are innocent of the criminal cases attributed to them on the complaint given to the Police at the instance of the then Speaker.**

42. Similarly, on 31-3-1995, the then Speaker had given another ruling that he had forwarded to the Officials of the Police Department the complaint from the Watch and Ward staff that they have been attacked by Opposition Members in the Western Lobby of the House on 30-3-1995.

For taking action even on visitors who throw pamphlets and shout from the Gallery, a motion is adopted. But in these two cases, involving Members of the House, no motion had been passed before handing over the complaint to the Police Department for criminal action. The Members were not given an opportunity to defend themselves. This itself would show that there is no basis for the alleged incident. The Speaker had said that he himself witnessed from his Chair, the attack in the lobby. I cannot imagine how he could possibly see anything that had happened in the Western lobby from this Chair.



1997 ஏப்ரல் 29]

43. I learnt that only F.I.R. has been filed and charge-sheet has not been filed. Hence, I have no views to offer.

44. The Hon. Members have also requested expunction of the derogatory references made against them which are contrary to truth and inclusion of some portions which have been deliberately expunged to suppress the views of the Opposition Members.

45. I found from the Debates and other records of the House that the allegations made by the Members indeed have basis. In many cases, the words spoken by the Opposition Members have been selectively expunged while references against them were allowed to be on the record.

For example, in the Debates, dated 28-4-1994, I found that reference made by Tmt. A.S. Ponnammal about her caste and even her statement that earlier such a reference by the then Chief Minister had been allowed to remain in the records, were expunged. But the then Chief Minister's mention about her caste on 24-9-1991 still remains on record.

Similarly on 15-3-1995, an allegation by a Minister against an Opposition Party remains on record while a similar allegation against the ruling party made as a retort had been promptly expunged. Similarly, on perusal of the Debates dated 19-4-1993, 21-4-1993, 11-4-1994, 4-11-1994, 15-3-1995, 10-4-1995, 2-5-1995, 3-5-1995 and 28-2-1996, to name a few, reveals that references and refutals made by the Opposition Members have only been indicated as "(Interruptions)".

Particularly in the proceedings dated 21-4-1993, while the Speaker's statements have been recorded in 10 printed pages continuously, the views offered by the Opposition Members have just been recorded as '(Interruptions)' in as many as 110 places. However, on several days many derogatory references about Opposition Members had been uttered and recorded not only by the Members but by the Speaker himself.

**46. Though the allegations made by the Members have basis, I cannot concede their reasonable request for expunging the**

**derogatory remarks made against them contrary to truth and for including some portions deliberately expunged to suppress the views of Opposition Members. Because as I have stated earlier, I have no powers under our Rules to alter/modify or expunge any proceedings which had been approved by the previous Speaker.**

47. I would like to recall what I have said after my election as Speaker on 23-5-1996. I have stated :

" I am the custodian of the House. I am the first servant of the House. So, whatever view the House expresses will be my view. I have no sky-high powers; my power is limited to this roof only. I will utilise this power to conduct the House in a proper way".

48. The letters given by both the Hon. Members will form part of today's proceedings. Though I have given my ruling in Tamil, the English version of the same will also be part of today's proceedings.

216835

D

V211,31 N97

N97.35.2